
# லெனின்

## தேசியப் பொருளாதாரத்தில் சோஷலிஸ்டு நிர்மாணத்தைப் பற்றிய பிரச்சினைகள்



C047

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

## வி. இ. லெனின்

# தேசியப் பொருளாதாரத்தில் சோஷலிஸ்டு நிர்மாணத்தைப் பற்றிய பிரச்சினைகள்

கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

C 047
N. C. B. H.
MADRAS-98
Rs 3-00-

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1984

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{0101020000-292}{014(01)-84}$ 333—84

# பொருளடக்கம்


பதிப்பாளர் குறிப்பு . . . . . . . . . . 5

அரசும் புரட்சியும். அரசைப் பற்றிய மார்க்சியத் தத்துவமும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும் என்னும் நூலிலிருந்து. . . . . . . . . . . . . . . . 7

தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய நிலம் பற்றிய அறிக்கை. 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8) . . . . . . . . . . . . . 10

நிலம் பற்றிய அரசாணை. . . . . . . . 11

நிலம் பற்றிய விவசாயிகள் கட்டளை . . . . . 12

போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது? . . 17

சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் 32

ருஷ்யாவின் சோவியத் குடியரசினது சர்வதேச நிலைமையும் சோஷலிசப் புரட்சியின் அடிப்படைப் பணிகளும். . . . . . . . . . . . . . 32

இத்தருணத்துக்குரிய பொதுவான கோஷம் . . 38

முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் புதிய கட்டம். . . . . . . . . . 40

நாடு தழுவிய அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்குமான போராட்டத்தின் முக்கியத்துவம். . . . . . . . . . . . . . . 54

உழைப்பின் உற்பத்தித் திறனை உயரச் செய்தல். . . . . . . . . . . . . . . 59

போட்டியின் ஒழுங்கமைப்பு. . . . . . . . 64

“இசைவான ஒழுங்கமைப்பும்” சர்வாதிகாரமும். . . . . . . . . . . . . . . 69

சோவியத் ஒழுங்கமைப்பின் வளர்ச்சி. . . . 83

முடிவுரை. . . . . . . . . . . . . . 88

''இடதுசாரி'' சிறுபிள்ளைத் தனமும் குட்டி முதலாளித்துவ மனோபாவமும் என்னும் நூலிலிருந்து . . . . . . . . . . . . . . . . . 92
3 . . . . . . . . . . . . . . . . . . 92
4 . . . . . . . . . . . . . . . . . . 101
5 . . . . . . . . . . . . . . . . . . 106
தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை. 1918 மே 26 . . . . . . . . . . . 121
மாபெரும் தொடக்கம். (போர்முனையல்லாத உட்பகுதிகளில் தொழிலாளர்களின் தீரம். ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' குறித்து). . . . . . . . . . 133
விவசாயக் கம்யூன்கள் மற்றும் விவசாய ஆர்ட்டல்களின் முதலாவது காங்கிரசில் ஆற்றிய உரை. 1919 டிசம்பர் 4 . . . . . . . . 172
இணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டம் குறித்து . . . . . . . . . . . . . . . . . 187
ரு.க.க.(போ.)இன் பத்தாவது காங்கிரசில் ஆற்றிய உபரி தானிய சுவீகரிப்பு முறைக்குப் பதிலாக பண்ட வடிவிலான வரியை மாற்றீடு செய்வது குறித்த அறிக்கை. 1921 மார்ச் 15 என்பதிலிருந்து. . . . . . . . . . . . . . . . 201
தற்போதும் சோஷலிசத்தின் முழுநிறை வெற்றிக்குப் பிற்பாடும் தங்கத்தின் முக்கியத்துவம் . . . . . . . . . . . . . . . . . 205
கூட்டுறவு குறித்து . . . . . . . . . . . . . 218
1 . . . . . . . . . . . . . . . . . . 218
2 . . . . . . . . . . . . . . . . . . 224
பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . . 229
பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . . 241

## பதிப்பாளர் குறிப்பு

இந்தத் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள படைப்பு களில் வி.இ. லெனின், ருஷ்ய சோஷலிசப் புரட்சியின் முதல் ஆண்டுகளின் அனுபவத்தின் அடிப்படையில் முக்கியப் போக்குகளை நிர்ணயித்து சோவியத் நாட்டின் தேசியப் பொருளாதாரத்தைச் சோஷலிச வளர்ச்சிப் பாதைக்கு மாற்றும் மகத்தான கடமையை நிறைவேற்றும் வழிமுறை களைச் சுட்டிக்காட்டினார்; இந்தக் கடமை 1917ஆம் ஆண்டு அக்டோபர் 25ஆம் தேதிக்குப் பின் மனித குல வரலாற்றி லேயே முதன்முதலாக நடைமுறை ரீதியான கடமையாக ருஷ்யாவில் முன்வைக்கப்பட்டது.

விஞ்ஞானச் சோஷலிசத்தின் ஸ்தாபகர்களான கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும், மனிதனை மனிதன் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவச் சமுதாய-பொருளாதார அமைப்பின் அழிவின் இன்றியமை யாமையையும் சோஷலிசத்தை நோக்கிய மாற்றத்தின் தவிர்க்க இயலாத் தன்மையையும் 19ஆம் நூற்றுண்டிலேயே நிரூபித்தனர். இது விஞ்ஞான நுட்பத்துடன் நிலைநாட்டப் பட்டது. ''சோஷலிஸ்டு மறு சீரமைப்பை நோக்கிச் செயல் படும் நோக்கத்துடன் நாம் ஆட்சி அதிகாரத்தை மேற் கொண்ட போது நாம் இதை அறிந்திருந்தோம். ஆனால் நமக்கு மாற்றங்களின் வடிவங்கள் பற்றியோ ஸ்தூலமான மறு சீரமைப்பின் வளர்ச்சி விகிதம் பற்றியோ தெரிந் திருக்க முடியாது. இந்த விஷயத்தில் கூட்டு அனுபவம், லட் சோப லட்சம் பேரின் அனுபவம் மட்டுமே நமக்கு நிர்ணய மான வழிகாட்டுதலை வழங்க முடியும். நமது பணிக்கு, சோஷலிசத்தை நிர்மாணிக்கும் பணிக்கு நிலப்பிரபுத்துவச் சமுதாயத்திலும் முதலாளித்துவச் சமுதாயத்திலும் வர

லாற்றைப் படைத்தவர்களான அந்த உயர் பகுதிகளைச் சேர்ந்த நூறு பேர், நூறாயிரம் பேர்களின் அனுபவம் போதுமானதல்ல என்பதே இதற்குக் குறிப்பான காரணமாகும்'' 1918ல் என்றார் லெனின்.

லட்சக் கணக்கானோரின் அனுபவத்தைப் பொதுமைப் படுத்தி சோஷலிசக் கட்டுமானத்தின் மிகக் கடினமான சிக்கலான பிரச்சினைகளுக்கான மிகச் சரியான தீர்வுகளைக் கண்டு பிடித்தார் என்பதில்தான் லெனினின் மகத்தான சாதனை அடங்கியுள்ளது—இந்தத் தீர்மானங்கள் எவ்வளவு சரியானவை என்பது அடுத்து வந்த சரித்திர வளர்ச்சிப் போக்கு முழுவதாலும் சோவியத் யூனியனின் தேசியப் பொருளாதாரத்தின் துரித வளர்ச்சியாலும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் எல்லாத் துறைகளிலும் சோவியத் மக்களின் மகத்தான சாதனைகளாலும் மற்ற சோஷலிச நாடுகளின் வெற்றிகரமான சோஷலிசப் பொருளாதாரத்தின் கட்டுமானத்தாலும் மெய்ப்பிக்கப்பட்டது.

இந்தத் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள லெனினின் கட்டுரைகளும் உரைகளும் பரவலான பிரச்சினைகளை உள்ளடக்கியுள்ளன. அவை, தொழில் துறையைத் தேசியமயமாக்கி நிர்வகித்தல், பிரபல நிலம் பற்றிய அரசாணையில் இடம் பெற்றிருந்த விவசாயப் பிரச்சினையைக் குறித்த தீர்வின் அடிப்படை, விவசாயத் துறையைப் பொதுவுடைமையாக்கும் வழிகளும் வாய்ப்புகளும், தேசியப் பொருளாதாரத் திட்டமிடலின் பிரச்சினைகள், புதிய சோஷலிச உழைப்புக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தல், சோஷலிசப் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்தல் மற்றும் இது போன்ற பல பிரச்சினைகளாகும். மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிய எல்லாப் படைப்புகளையும் இந்தத் தொகுப்பு நூலில் சேர்க்க இயலவில்லை—இதற்கு ஒன்றல்ல, பல நூல்களை வெளியிட வேண்டியிருக்கும்—ஆனால் சோஷலிசப் பொருளாதாரக் கட்டுமானத்தின் முக்கியக் கோட்பாடுகளும் முறைகளும் வடிவமைக்கப்பட்ட எல்லா முக்கியப் படைப்புகளையும் இந்நூலில் வாசகர்கள் காணலாம்.

எல்லாப் படைப்புகளும் காலவரிசைப்படி இடம் பெற்றுள்ளன.

# அரசும் புரட்சியும்

## அரசைப் பற்றிய மார்க்சியத் தத்துவமும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும்[1]

### என்னும் நூலிலிருந்து

...நாம் கற்பனவாதிகள் அல்ல. நிர்வாகம் அனைத்தையும், கீழ்ப்படிதல் அனைத்தையும் உடனடியாகவே விட்டொழித்து விடலாமென நாம் ''கனவு காணவில்லை''. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குள்ள கடமைகளைப் புரிந்து கொள்ளாததே இந்த அராஜகவாதக் கனவுகளுக்கு அடிப் படை. இவை மார்க்சியத்துக்கு முற்றிலும் புறம்பானவை. உண்மையில் மக்கள் வேறு விதமானோராய் மாறுகிற வரை சோஷலிசப் புரட்சியை ஒத்திப் போடுவதற்கே இவை வகை செய்கின்றன. இல்லை, மக்கள் தற்போது இருக்கும் இதே நிலையிலேயே, கீழ்ப்படிதலையும், மேற்பார்வையையும், ''போர்மன்களையும் கணக்கர்களையும்'' விட்டொழிக்க முடியாதவர்களாக மக்கள் இருக்கும் இந்த நிலையிலேயே, நாம் சோஷலிசப் புரட்சி நடத்த விரும்புகிறோம்.

ஆனால் கீழ்ப்படிதல் என்பது சுரண்டப்படுபவர்கள் உழைப்பாளர்கள் ஆகிய அனைவரின் ஆயுதமேந்திய முன்னணிப் படைக்கு, அதாவது பாட்டாளி வர்க்கத்துக்குக் கீழ்ப்படிதலாய் இருத்தல் வேண்டும். அரசாங்க அதிகாரிகளது தனிவகை ''நாட்டாண்மையை'' ''போர்மன்கள், கணக்கர்கள்'' இவர்களது எளிய பணிகளாய் மாற்றுவதற்கு உடனடியாகவே, இத்தருணமே தொடங்கிவிட முடியும், தொடங்கவும் வேண்டும்; இந்த எளிய பணிகள் ஏற்கெனவே சராசரி நகரவாசியின் ஆற்றலுக்கு முற்றிலும் உட்பட்டவையே ஆனதால், ''தொழிலாளர்களுக்குரிய சம்பளம்'' பெற்று இவற்றைத் திறம்படச் செய்ய முடியும்.

தொழிலாளர்களாகிய நாம் முதலாளித்துவம் ஏற்கெனவே தோற்றுவித்திருப்பதன் அடிப்படையிலே பெருவீதப் பொருளுற்பத்தியை ஒழுங்கமைத்து நிறுவுவோம்; தொழிலாளர்களான நம்முடைய சொந்த அனுபவத்தை ஆதாரமாய்க் கொண்டும் ஆயுதமேந்திய தொழிலாளர்

களது அரசு அதிகாரத்தின் துணையுடன் கண்டிப்பான, உருக்கு உறுதி கொண்ட கட்டுப்பாட்டை நிலைநாட்டியும் இதனைச் செய்திடுவோம்; அரசு அதிகாரிகளுடைய பாத்திரத்தைப் பொறுப்புள்ள, விலக்கப்படக் கூடிய, சாதாரணச் சம்பளம் பெறும் ''போர்மன்களும், கணக்கர்களுமாய்'' இருந்து (எல்லாவகைகளையும் ரகங்களையும் தரங்களையும் சேர்ந்த தொழில்நுட்ப ஊழியர்களது உதவியுடன்தான்) நமது உத்தரவுகளை நிறைவேற்றுவது மட்டுமான பாத்திரமாய்க் குறைத்து விடுவோம்; இதுவே நமக்குரிய பாட்டாளி வர்க்கக் கடமை; பாட்டாளி வர்க்கப் புரட்சியைச் சித்தி பெறச் செய்வதில் இதுவே நாம் செய்யத் தொடங்கக் கூடியதும், செய்யத் தொடங்க வேண்டியதும் ஆகும். பெருவீதப் பொருளுற்பத்தியின் அடிப்படையிலான இத்தகைய ஒரு துவக்கம் ஏற்படுமாயின், அதுவே அதிகார வர்க்கம் அனைத்தும் படிப்படியாய் ''உலர்ந்து உதிர்ந்து விடுவதற்கு'' இட்டுச் செல்லும்; மேலும் மேலும் எளிதாகி வரும் கண் காணிப்பு, கணக்கு வைப்பு வேலைகள் கிரமப்படி ஒவ்வொரு வராலும் செய்யப்பட்டு, பிறகு நிலையான பழக்கமாகி, முடிவில் மக்களில் ஒரு தனிப் பகுதியோருக்குரிய தனி வகை வேலைகளாய் இருக்கும் நிலை மறைந்தொழிந்துவிடும்படியான ஒழுங்கு முறை—மேற்கோள் குறிகளிட்டுக் காட்டப்பட வேண்டியில்லாத ஒழுங்கு முறை, கூலியுழைப்பு அடிமை முறையின் சாயல் இம்மியும் இல்லாத ஒழுங்கு முறை—படிப் படியாய்த் தோற்றுவிக்கப்படுவதற்கு இட்டுச் செல்லும்.

கடந்த நூற்றுண்டின் எழுபதாம் ஆண்டுகளில் வேடிக்கையான ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி ஒருவர் அஞ்சல் பணித் துறையை சோஷலிசப் பொருளாதார அமைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாய்க் குறிப்பிட்டார். இது மிகவும் சரிதான். தற்போது அஞ்சல் பணித் துறை அரசு-முதலாளித்துவ ஏகபோக முறையில் அமைந்த தொழிலாய் இருந்து வருகிறது. ஏகாதிபத்தியமானது எல்லா டிரஸ்டுகளையுமே இதையொத்த நிறுவனங்களாகப் படிப்படியாய் மாற்றி வருகிறது. இவற்றில் அதே முதலாளித்துவ அதிகார வர்க்கம் தான், அளவு மீறிய வேலைப் பளுவுக்கும் பட்டினிக்கும் இலக்காகி அவதியுறும் ''சாதாரண'' உழைப்பாளி மக்களுக்கு மேலானதாய் நிற்கிறது. ஆனுல் சமூக நிர்வாகத்தின் கட்டமைவு ஏற்கெனவே இவற்றில் தயாராய் இருக்கிறது.

முதலாளிகளை நாம் வீழ்த்தி இந்தச் சுரண்டலாளர்களுடைய எதிர்ப்பை ஆயுதமேந்திய தொழிலாளர்களது இரும்புக் கரம் கொண்டு நசுக்கி, தற்கால அரசின் அதிகார வர்க்கப் பொறியமைவை நொறுக்கியதும், உன்னத முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்தக் கட்டமைவு, ''புல்லுருவியிடமிருந்து'' விடுவிக்கப்பட்டு நம் கைக்குக் கிட்டிவிடும். ஒன்றுபட்ட தொழிலாளர்கள் தாமே இந்தக் கட்டமைவைத் திறம் பட இயங்கச் செய்ய முடியும். இத்தொழிலாளர்கள் தொழில்நுட்ப நிபுணர்களையும் போர்மன்களையும் கணக்கர்களையும் சம்பளத்துக்கு அமர்த்திக் கொள்வார்கள்; அவர்கள் எல்லோருக்கும், பொதுவாய் ''அரசு'' அதிகாரிகள் எல்லோருக்கும் எப்படியோ அதே போல, தொழிலாளர்களுக்குரிய சம்பளங்களையே தருவார்கள். எல்லா டிரஸ்டுகள் சம்பந்தமாகவும் உடனடியாகவே நிறைவேற்றப்படக் கூடிய ஸ்தூலமான, நடைமுறைப் பணியாகும் இது. இந்தப் பணி நிறைவேற்றப்பட்டதும் உழைப்பாளி மக்கள் சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுவார்கள். ஏற்கெனவே கம்யூனது[2] நடைமுறையில் செய்யத் தொடங்கியதை (குறிப்பாய், அரசை அமைத்திடுவது சம்பந்தமாய்) கணக்கில் எடுத்துக் கொண்டு வகுக்கப் பெற்ற பணி இது.

பொருளாதாரம் அனைத்தையுமே அஞ்சல் பணித் துறையைப் போல ஒழுங்கமைத்து, தொழில்நுட்ப நிபுணர்கள், போர்மன்கள், கணக்கர்கள், மற்றும் எல்லா அதிகாரிகளும் ''தொழிலாளருக்குரிய சம்பளத்துக்கு'' அதிகமல்லாத சம்பளம் பெறுமாறு செய்து, அனைத்தையுமே ஆயுதமேந்திய பாட்டாளி வர்க்கத்தின் கண்காணிப்பிலும் தலைமையிலும் வைக்க வேண்டும்—இதுவே நமது உடனடிக் குறிக்கோள். இதுவே நமக்குத் தேவையான அரசும் பொருளாதார அடித்தளமும். நாடாளுமன்ற முறையை ஒழித்து, பிரதிநிதித்துவ உறுப்புக்களை விடாமல் பாதுகாக்கப் போவது இதுவே. இந்த உறுப்புக்களை முதலாளி வர்க்கம் ஆழ்த்திய இழிநிலையிலிருந்து உழைப்பாளி வர்க்கங்களை விடுவிக்கப் போவது இதுவே....

1917 ஆகஸ்ட்—செப்டெம்பரில் எழுதப்பட்டது

நூல் திரட்டு, ஐந்தாம் ருஷ்யன் பதிப்பு, தொகுதி 33, பக்கங்கள் 49-50

# தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய நிலம் பற்றிய அறிக்கை 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8)[3]

நிலப் பிரச்சினையைத் தெட்டத்தெளிவாக முன்வைக்க வேண்டியது எவ்வளவு முக்கியமானது என்பதை புரட்சி நிரூபித்து விட்டது, நிதர்சனப்படுத்திக் காட்டி விட்டது என்று நாம் நிலைநாட்டுகிறோம். இரண்டாவது, அக்டோபர் புரட்சி[4], ஆயுதமேந்திய எழுச்சி வெடித்ததானது விவசாயி களிடம் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக நிரூபிக்கிறது. வீழ்த்தப்பட்ட அரசாங்கமும் மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் சமரசப்படுத்தும் கட்சிகளும்[5] பல்வேறு சாக்குப் போக்கு களால் நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தொடர்ந்து ஒத்திப் போட்டதன் மூலம் பெரும் குற்றம் இழைத்து விட் டன; இதன் மூலம் நாட்டில் பொருளாதாரக் குழப்பத்தை யும் விவசாயிகளின் கலகத்தையும் கொண்டுவந்து விட்டன. நாட்டுப் புறத்தில் கலவரம் மற்றும் அராஜகம் பற்றி அவை பேசுவதில் பொய் தொனிக்கிறது; அது பேடித்தனமானது, ஏமாற்றும் தன்மையுள்ளது. அறிவான நடவடிக்கை களால் கலவரங்களும் அராஜகமும் எங்கேயாவது எப்போ தாவது ஏற்பட்டது உண்டா? அரசாங்கம் அறிவுடன் செயல் பட்டிருக்குமானால், அதன் நடவடிக்கைகள் ஏழை விவசாயி களின் தேவைகளை நிறைவு செய்திருக்குமானால், விவசாயி மக்கள் திரளின் மத்தியில் அமைதி இன்மை ஏற்பட்டிருக் குமா? அவ்க்சேன்தியெவ், டான் சோவியத்துக்கள் அங்கீ கரித்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எல்லாம் விவசாயி களின் நலன்களுக்கு விரோதமாக இருந்தன; அவர்களைக் கலகம் செய்ய நிர்ப்பந்தித்தன.

கலகத்தைத் தூண்டிவிட்ட பிறகு அரசாங்கம் கலவரம் பற்றியும் அராஜகம் குறித்தும் கூக்குரல் இடுகிறது. அவற்

றுக்கு அதுவே பொறுப்பாளி. இக்கலகத்தை இரத்தம் சிந்தியும் இரும்பு போன்ற அடக்குமுறையாலும் நசுக்க இருந்தது. ஆனால் புரட்சிகரப் படையாளிகள், கடற்படையினர் மற்றும் தொழிலாளரின் ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியால் அதுவே வெள்ளத்திலடித்துச் செல்லப்பட்டது. தொழிலாளர், விவசாயிகளது புரட்சியின் அரசாங்கத்தின் முதல் கடமை நிலப் பிரச்சினைக்கு நிச்சயமாயும் தீர்வு காண்பதாகும். இது பெருமளவிலான ஏழை விவசாயி மக்கள் திரளை அமைதிப்படுத்தும், திருப்திப்படுத்தும். உங்கள் சோவியத் அரசாங்கம் பிறப்பிக்க வேண்டிய அரசாணையின் ஷரத்துக்களைப் படிக்கிறேன். இந்த அரசாணையின் ஒரு ஷரத்தில் விவசாயிகள் பிரதிநிதிகளின் வட்டார சோவியத்துக்களின் 242 கட்டளைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட நிலக் கமிட்டிகளுக்கான கட்டளை உருவகம் பெற்றுள்ளது.

## நிலம் பற்றிய அரசாணை

*1) நிலவுடைமை தனி உரிமை எவ்விதமான இழப்பீடும் இன்றி உடனே ஒழிக்கப்படுகிறது.*

*2) நிலப்பிரபுக்களின் நிலங்கள், மன்னர் குடும்ப உறுப்பினர்களின் நிலங்கள், மடங்கள் சமய நிறுவனங்களுக்கு உரியதான எல்லா நிலங்களும் அவற்றின் எல்லாக் கால் நடைகள், விவசாயக் கருவிகள், கட்டடங்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட சகலமும் சகிதம் வோலஸ்து நிலக் கமிட்டிகள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் உயேஸ்து சோவியத்துக்கள் வசம் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுவது வரையில்[6] ஒப்படைக்கப்படும்.*

*3) இது முதல் கொண்டு மக்கள் முழுமைக்கும் சொந்தமாகிவிட்ட பறிமுதல் செய்யப்பட்ட உடைமைகளுக்குச் சேதம் விளைப்பது கடும் குற்றம் என்று பிரகடனம் செய்யப்படுகிறது; இது புரட்சிகர நீதிமன்றங்களின் தண்டனைக்கு உட்படும். நிலப்பிரபுக்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்படும் பொழுது மிகவும் கண்டிப்பான ஒழுங்கைக் கடைப்பிடிக்கவும் எந்த நிலங்கள் எந்த அளவுக்குப் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்கவும் பறிமுதல் செய்யப்பட்ட எல்லாச் சொத்துக்களையும் பற்றிய ஒரு விள்க்கமான விவரப் பட்டியல் தயாரிக்கவும் மக்*

களுக்கு உடைமை மாற்றம் செய்யப்பட்டதான எல்லா நிலங்களையும் அவற்றின் கட்டடங்கள், கருவிகள், கால்நடைகள், விளைபொருள் இருப்பு அனைத்தையும் மிகவும் கண்டிப்பாக புரட்சிகரமான வழியில் பாதுகாப்பதற்கும் விவசாயிகள் பிரதிநிதிகளின் உயேஸ்து சோவியத்துக்கள் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

4) 242 வட்டார விவசாயிகள் கட்டளைகளின் அடிப்படையில் **இஸ்வேஸ்தியா வ்ஸேரொசிய்ஸ்கவோ சவேத்தா க்ரெஸ்தியான்ஸ்கிஹ் தெப்புத்தாத்தவ்** என்னும் பத்திரிகையின்[7] ஆசிரியர் குழுவினர்களால் தொகுக்கப்பட்ட, இந்தப் பத்திரிகையின் 88வது இதழில் (பெத்ரோகிராத், 1917 ஆகஸ்ட் 19) வெளியிடப்பட்டுள்ள பின்வரும் விவசாயிகள் கட்டளை, நிலச் சீர்திருத்தம் பற்றி அரசியல் நிர்ணய சபை இறுதி முடிவு எடுக்கும் வரை இந்த மாபெரும் நிலச் சீர்திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான வழி காட்டியாக எல்லா இடங்களிலும் பயன்பட வேண்டும்.

## நிலம் பற்றிய விவசாயிகள் கட்டளை

''நிலப் பிரச்சினை அதன் முழு அளவில் பொதுஜன அரசியல் நிர்ணய சபையின் மூலம் மட்டுமே தீர்க்கப்பட முடியும்.

''நிலப் பிரச்சினைக்கு உரிய மிகவும் நியாயமான தீர்வு பின்வருமாறு:

''1) நிலவுடைமை தனி உரிமை என்றென்றைக்குமாக ஒழிக்கப்படும்; நிலத்தை விற்கவோ, வாங்கவோ, குத்தகைக்கு விடவோ, அடகு வைக்கவோ அல்லது வேறு வழிகளில் பராதீனப்படுத்தவோ முடியாது.

''அரசு, மன்னர், மன்னர் குடும்ப உறுப்பினர்கள், மடம், சமய நிறுவனம், ஆலை, தலைமுறை,[8] தனியார், பொது, விவசாயிகள் ஆகிய எதற்குச் சொந்தமாக இருந்தாலும் சரி தனி, பொது விவசாயி ஆகியோருக்குக் கட்டுப்பட்ட உடைமையாக இருந்தாலும் சரி எல்லா நிலமும் இழப்பீடு எதுவும் இன்றிப் பறிமுதல் செய்யப்படும்; அனைத்து மக்களின் உடைமையாகப் பிரகடனம் செய்யப்படும்; அது பாடுபடும் மக்களுக்குச் சொந்தமாகும்.

''இந்த உடைமைப் புரட்சியால் பாதிக்கப்படும் நபர்கள் புதிய வாழ்க்கை நிலைமைகளுக்குத் தகவமைத்துக் கொள்வதற்கு அவசியமான காலம் வரை மட்டுமே பொது உதவிக்கு உரியவர்கள் என்று கருதப்படுவார்கள்.

''2) கனிஜ மூலம், எண்ணெய், நிலக்கரி, உப்பு இத்தியாதி சுரங்கச் செல்வம் அனைத்தும், அரசு முக்கியத்துவ

முடைய எல்லாக் காடுகளும் நீர் ஆதாரங்களும் அரசின் முற்ற முழுதான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும். சிறிய நீரோடைகள், ஏரிகள், காடுகள் ஆகியவை கம்யூன்களின் பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும்; இவற்றை வட்டார ஸ்தல சுயாட்சி அமைப்புகள் நிர்வாகம் செய்யும்.

''3) உயர் மட்டமான விஞ்ஞான முறை சாகுபடி நடத்தப்பட்டு வரும்—பழத் தோட்டங்கள், தோட்டப் பண்ணைகள், விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள், வெப்ப மூடு தோட்டங்கள் போன்ற நிலங்கள் பங்கிடப்பட மாட்டா, மாறாக மாதிரிப் பண்ணைகளாக மாற்றப்படும். இவை அரசு அல்லது கம்யூன்களின் முற்ற முழுதான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும். இது இத்தகைய நிலங்களின் அளவு, முக்கியத்துவம் ஆகியவற்றைச் சார்ந்து இருக்கும்.

''நகரங்களிலும் கிராமங்களிலும் பழத் தோட்டங்கள், காய்கறித் தோட்டங்களைக் கொண்ட குடும்ப நிலம் அவற்றின் இப்போதைய சொந்தக்காரர்களின் பயன்பாட்டுக்கே ஒதுக்கப்படும். இந்தக் குடும்ப நிலங்களின் அளவும் அவைகளைப் பயன்படுத்துவதற்காக வசூலிக்கப்படும் வரியின் அளவும் சட்டத்தால் வரையறுக்கப்படும்.

''4) பொலிகுதிரைப் பண்ணைகள், அரசாங்கத்துக்கும் தனியாருக்கும் சொந்தமான மரபுவழிக் கால்நடைகள், கோழிப் பண்ணைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு மக்கள் முழுமையின் உடைமையாக்கப்படும். இத்தகைய பண்ணைகளின் அளவு மற்றும் முக்கியத்துவத்துக்கும் ஏற்ப அரசு அல்லது கம்யூனின் முற்ற முழுதான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும்.

''இழப்பீடு பற்றிய பிரச்சினை அரசியல் நிர்ணய சபையால் பரிசீலிக்கப்படும்.

''5) பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களில் இருந்து எல்லாக் கால்நடைகளும் விவசாயக் கருவிகளும் அவற்றின் அளவு மற்றும் முக்கியத்துவத்தைச் சார்ந்து அரசு அல்லது கம்யூனின் முற்ற முழுமையான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும்; இதற்கு இழப்பீடு எதுவும் செலுத்தப்பட மாட்டாது.

''ஆகச் சொற்பமான நிலம் வைத்திருக்கும் விவசாயிகளின் விவசாயக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட மாட்டா.

''6) நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை ருஷ்ய அரசின் எல்லாக் குடிமக்களுக்கும் (ஆண், பெண் என்ற பாகுபாடின்றி) நிலத்தைத் தமது சொந்த உழைப்பு, தமது குடும்பத்தாரின் உதவி அல்லது பங்காளி சேர்த்துக் கொண்டு பயிர் செய்ய விரும்பும் அனைவருக்கும் வழங்கப்படும். ஆனால் அவர்கள் அதில் பயிர் செய்ய முடியும் காலம் வரை மட்டுமே வழங்கப்படும். தொழிலாளர்களைக் கூலிக்கு அமர்த்துவது அனுமதிக்கப்பட மாட்டாது.

''கிராமக் கம்யூன் உறுப்பினர் ஒருவர் இரண்டாண்டு காலம் வரையில் தற்காலிக உடல்நலமின்மையால் ஏலாமல் இருக்கும் பட்சத்தில் இந்தக் காலத்தில் கிராமக் கம்யூன், அவர் மீண்டும் வேலை செய்ய முடியும் வரையில் கூட்டாக இந்த நிலத்தில் பயிர் செய்யும்.

''முதுமை அல்லது உடல்நலமின்மையால் நிரந்தரமாக ஏலாது போய் நிலத்தில் தாமே பயிர் செய்ய முடியாமல் போய்விட்ட விவசாயிகள் அந்த நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையை இழந்து விடுவார்கள்; இதற்குப் பதிலாக, அரசிடம் இருந்து பென்ஷன் பெறுவார்கள்.

''7) நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை சமத்துவ அடிப்படையில் இருக்கும். வட்டார நிலைமைகளுக்கு ஏற்ப, உழைப்புத் தரம் அல்லது பிழைப்பூதியத் தரத்தைப் பொருத்து[9] உழைக்கும் மக்களிடையே நிலம் பகிர்ந்தளிக்கப்படும்.

''நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையின் வடிவங்களில் அறவே எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. ஒவ்வொரு தனிப்பட்ட கிராமம் அல்லது குடியிருப்பும் செய்யும் முடிவுப்படி இவை குடும்ப நிலம், பண்ணை நிலம், கம்யூன் நிலம் அல்லது கூட்டுறவு நிலம் எதுவாகவாயினும் இருக்கலாம்.

''8) பராதீனப்படுத்தப்படும் நிலம் அனைத்தும் தேசிய நிலச் சேமத்தில் அடங்கும். விவசாயிகளிடையே இதைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பை சமூக அந்தஸ்து வேறுபாடுகள் எதுவும் இல்லாத, ஜனநாயக முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கிராம மற்றும் நகரக் கம்யூன்கள் முதல் மத்திய வட்டார அமைப்புகள் வரை வட்டார மற்றும் மத்திய ஸ்தல சுயாட்சி அமைப்புகள் நிறைவேற்றுகின்றன.

''இந்த நில சேமம், மக்கள் தொகைப் பெருக்கம், உற்பத்தித் திறன் அதிகரிப்பு, சாகுபடியில் விஞ்ஞானத் தரத்தின் ஏற்றம் ஆகியவற்றைச் சார்ந்து அடிக்கடி மறுபங்கீடு செய்யப்படும்.

''ஒதுக்கப்பட்ட நிலங்களின் வரம்புகள் மாற்றப்படும் போது ஒதுக்கப்பட்ட நிலத்தின் மையப் பகுதி அப்படியே இருக்கும்.

''கம்யூனை விட்டு விலகும் உறுப்பினர்களின் நிலம் நிலச் சேமத்தில் மீண்டும் போய்ச் சேரும்; இத்தகைய நிலங்களைப் பயன்படுத்த அவ்வாறு விலகிச் சென்ற உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்களுக்கோ அல்லது அவர்கள் நியமனம் செய்த நபர்களுக்கோ சாதகமான உரிமை வழங்கப்படும்.

''நிலச் சேமத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலம் திருப்பித் தரப்பட்ட பொழுது முழுதும் பயன்படுத்தப்படாத அளவுக்கு நிலத்தில் போடப்பட்ட கனி உரம் மற்றும் இதர மேம்பாடுகளுக்கான செலவு ஈடு செய்யப்படும்.

''ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் கிடைத்துள்ள சேம நிலம் வட்டார மக்களின் தேவைக்குப் போதாமல் இருக்குமானல் உபரியாக இருக்கும் மக்கள் வேறிடத்தில் குடியிருத்தப்படுவர்.

''இந்த மறுகுடியிருத்தலை ஏற்பாடு செய்யும் பொறுப்பை அரசு ஏற்கும்; இதற்காக வேண்டிய செலவுகளையும் கருவிகளை வழங்குவதற்கான செலவுகளையும் அது ஏற்றுக் கொள்ளும்.

''மறுகுடியிருத்தல் பின்வரும் வரிசைக் கிரமத்தில் இருக்கும்: மறுகுடியிருப்பை விரும்பும் நிலமற்ற விவசாயிகள், பிறகு விஷமத் தனமான வழக்கங்களைக் கொண்ட கம்யூன் உறுப்பினர்கள், துறந்தோடிகள் இத்தியாதி—இறுதியாக இது சீட்டுக் குலுக்கியோ அல்லது உடன்பாட்டின் மூலமோ செய்யப்படும்.''

இந்தக் கட்டளையின் உள்ளடக்கம் முழுவதும், அகில ருஷ்யாவிலுமுள்ள மிகப் பெரும்பான்மையான வர்க்க உணர்வுடைய விவசாயிகளின் சித்தத்தை வெளியிடுகிறது என்ற முறையில் இடைக்காலச் சட்டமாகப் பிரகடனம் செய்யப்படுகிறது. இது அரசியல் நிர்ணய சபை கூட்டப்படும் வரையில் சாத்தியமான அளவுக்கு உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்படும். இதன் சில ஷரத்துக்கள் விவசாயிகள் பிரதிநிதிகளின் உயேஸ்து சோவியத்துக்கள் நிர்ணயிப்பது போன்று உரிய முறையில் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

5) சாதாரண விவசாயிகள் மற்றும் சாதாரண கசாக்குகளின்[10] நிலங்கள் பறிமுதல் செய்யப்பட மாட்டா.

---

இந்த அரசாணையும் கட்டளையும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களால் உருவரை செய்யப்பட்டதாகக் குரல்கள் எழுப்பப்படுகின்றன. அதனல் என்ன? யார் உருவரை செய்தால் தான் என்ன? ஒரு ஜனநாயக அரசாங்கம் என்ற முறையில் நாம் அதோடு வேறுபட்டாலும் கூட மக்கள் திரளின் முடிவைப் புறக்கணிக்க முடியாது. அனுபவம் என்ற நெருப்பில், இந்த அரசாணையை நடைமுறையில் பயன்படுத்தி வட்டாரங்களில் இதை நிறைவேற்றுவது மூலம் உண்மை எங்கே காணக் கிடக்கிறது என்பதை விவசாயிகள் தாமாகவே உணர்வார்கள். விவசாயிகள் தொடர்ந்து சோஷலிஸ்டு-புரட்சியாளர்களைப் பின்பற்றிய போதிலும் இந்தக் கட்சிக்கு அவர்கள் அரசியல் நிர்ணய சபையில்

ஓட்டுக்களில் பெரும்பான்மையைத் தந்த போதிலும்—அதனுல் என்ன? என்றே நாம் கூறுவோம். அனுபவம் சிறந்த ஆசான். அது யார் சரி என்பதைப் புலப்படுத்தும். விவசாயிகள் இப்பிரச்சினைக்கு ஒரு முனையில் இருந்து தீர்வு காணட்டும், நாம் இன்னெரு முனையில் இருந்து தீர்வு காணுவோம். புரட்சிகரப் படைப்பாற்றல் பணியின் பொதுவான நீரோட்டத்திலும் புதிய அரசு வடிவங்களை விரிவிளக்கம் செய்வதிலும் அனுபவம் நம்மை ஒன்றுசேரும்படிக் கட்டாயப்படுத்தும். நாம் அனுபவத்தால் வழி நடத்தப்பட வேண்டும்; மக்கள் திரளின் படைப்பாற்றல் திறன்களுக்கு முழுமையான சுதந்திரத்தை அனுமதிக்க வேண்டும். ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியால் வீழ்த்தப்பட்ட பழைய அரசாங்கம் பழைய, மாறுதல் அற்ற ஜாராட்சி அதிகார வர்க்கத்தின் உதவியுடன் நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றது. ஆனல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மாருக அதிகார வர்க்கம் விவசாயிகளை எதிர்த்துப் போராடியது. நமது புரட்சியின் எட்டு மாதங்களில் விவசாயிகள் சிலவற்றை அறிந்து கொண்டிருக்கிருர்கள்; நிலப் பிரச்சினைகள் அனைத்துக்கும் அவர்களே தீர்வு காண விரும்புகிருர்கள். எனவே இந்த நகல் சட்டத்திற்கான எல்லாத் திருத்தங்களையும் நாம் எதிர்க்கிறோம். இதில் விவரங்களை நாங்கள் விரும்பவில்லை; நாம் எழுதுவது ஓர் அரசாணை, ஒரு செயல் வேலைத்திட்டம் அல்ல. ருஷ்யா மிகவும் பரந்தது; அதில் வட்டார நிலைமைகள் வேறுபடுகின்றன. நாம் செய்வதை விடவும் சிறப்பாகவும் சரியாகவும் விவசாயிகள் தாமே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் இதை நமது உணர்வில் செய்கிருர்களா அல்லது சோஷலிஸ்டு-புரட்சியாளர் வேலைத்திட்டத்தின் உணர்வில் செய்கிருர்களா என்பது இங்கு முக்கியம் அல்ல. நாட்டுப் புறத்தில் நிலவுடைமையாளர்கள் இல்லை, எல்லாப் பிரச்சினைகளையும் அவர்கள் தாமே தீர்க்க வேண்டும், தாமே தமது வாழ்க்கையை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விவசாயிகளுக்கு உறுதியான உத்தரவாதம் தரப்பட வேண்டும். (பலத்த கரவொலி.)

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 23-27

# போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது?

முதலாளித்துவப் போட்டி, தனியார் முன்முயற்சி மற்றும் முதலாளிகள் மற்றும் முதலாளித்துவ அமைப்பு முறையின் இதர நேர்த்தியான நற்பண்புகளையும் வரப்பிரசாதங்களையும் பற்றிப் புகழ்ந்து முதலாளித்துவ நூலாசிரியர்கள் எழுதியிருக்கிறுர்கள். இந்த நற்பண்புகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள மறுப்பதாயும் ''மானுட இயல்பைப்'' புரிந்து கொள்வதில் அசட்டை செய்வதாயும் சோஷலிஸ்டுகள் மீது குற்றம் சாட்டப்படுகிறது. ஆனுல் உண்மையில் முதலாளித்துவம் நீண்ட காலம் முன்பே சிறுவீத சுயேச்சையான பண்ட உற்பத்தியைப் பெருவீத, மிகப் பெருவீத ஆலை உற்பத்தி, கூட்டுப்பங்கு நிறுவனங்கள், சிண்டிக்கேட்டுகள் மற்றும் இதர ஏகபோகங்களால் பதிலீடு செய்து விட்டது. சிறுவீதப் பண்ட உற்பத்தி முறையின் கீழ் முதலாளித்துவப் போட்டி மூலம் செயல்திட்பம், ஊக்கம், துணிச்சலான முன்முயற்சி ஆகியவை கணிசமான அளவுக்கு வளர வாய்ப்பு இருந்தது. ஆனுல் இத்தகைய பெருவீத முதலாளித்துவத்தின் கீழ் முதலாளித்துவப் போட்டி என்பதன் பொருள் மக்கள் திரளின், அதன் மிகப் பெரும் பெரும்பான்மையின், நூறு உழைப்பாளிகளில் தொண்ணூற்றென்பது பேரின் செயல்திட்பம், ஊக்கம், துணிச்சலான முன்முயற்சி ஆகியவற்றை நம்பற்கரிய முறையில் கொடுமையாக ஒடுக்குவது என்பதாகும்; மேலும் முதலாளித்துவப் போட்டியானது நிதி மோசடி, தனிச் சலுகை, சமுதாய ஏணியின் உயர் படியில் இருப்போரிடம் கொத்தடிமைத்தனம் ஆகியவற்ருல் பதிலீடு செய்யப்பட்டு விட்டது.

சோஷலிசம் போட்டியை அவித்து மறைத்து விடுவதில்லை; மாருக, அதை உண்மையிலேயே விரிவான அள

விலும் வெகுஜன அளவிலும் செயல்படுத்தவும், உழைக்கும் மக்களை அவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தவும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவும் ஆயிரம் கோடி மக்கள் மூலம் முதலாளித்துவத்தால் நசுக்கப்பட்டு அடக்கப்பட்டு நெரிக்கப்பட்டு விட்ட மக்களிடம் அமோகமாக இருந்த அந்தத் தனி ஆற்றல்களை வெளிக்காட்டவும் உரியதான செயல் துறையில் அவர்களை உள்ளபடியே ஈர்ப்பதற்குமான வாய்ப்பினை சோஷலிசம் முதல் தடவையாகப் படைத்துரு வாக்குகிறது.

இப்போது ஒரு சோஷலிஸ்டு அரசாங்கம் ஆட்சியில் இருப்பதால் நமது பணி நேசப் போட்டியை ஒழுங்கமைப் பதாகும்.

முதலாளி வர்க்கத்தினை அண்டிவாழ்வோரும் மற்றும் கெஞ்சிப் பிழைப்போரும் சோஷலிசத்தை ஒரே மாதிரி யான, பழகிப் படிந்து போன, சலிப்பூட்டுகிற, கவர்ச்சி யற்ற பாசறை அமைப்பு என்று வருணித்தார்கள். பண மூட்டைகளின் அடிவருடிகளும் சுரண்டலாளரிடம் இச்சகம் பேசுவோருமான முதலாளித்துவ அறிவுத் துறை கனவான் கள் சோஷலிசத்தை மக்களைக் ''கிலியூட்டுவதற்கான'' ஒரு பூச்சாண்டியாகப் பயன்படுத்தினார்கள்; மக்களோ முத லாளித்துவத்தின் கீழ் கடுஞ்சிறை வாசம், பாசறைபாணிக் கட்டுப்பாடு, கடுமையான சலிப்புத் தரும் உழைப்பு, கொடிய வறுமையும் அரைப்பட்டினியுமான வாழ்க்கை என்ற கதிக்கு ஆளாக்கப்பட்டிருந்தார்கள். இந்தக் கடுஞ் சிறை வாசத்தில் இருந்து மக்களை விமோசனப்படுத்துவதற் கான முதல் நடவடிக்கை நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தல், தொழிலாளர் கண்காணிப்பைக் கொண்டுவருதல் மற்றும் வங்கிகளைத் தேசவுடைமையாக்கு வதும் ஆகும். அடுத்த நடவடிக்கைகள் ஆலைகளை தேச வுடைமையாக்குதல், மக்கள் தொகை முழுவதையும் நுகர் வாளர் சங்கங்களில் கட்டாயமாக ஒழுங்கமைத்தல்—இந்தச் சங்கங்கள் அதே சமயம் விளைபொருட்களின் விற்பனைச் சங்கங்களாக இருக்கும்—தானியம் மற்றும் இதர அவசியப் பொருள் வர்த்தகத்தினை அரசு ஏகபோகமாக்குதல்.

ஊக்கம், நேசப் போட்டி, துணிச்சலான முன்முயற்சி ஆகியவற்றை உண்மையிலேயே பேரளவில் வெளிக்காட்டு வதற்கான வாய்ப்பு இப்போதுதான் உருவாக்கப்பட்டுள்ளது.

முதலாளியை வெளியேற்றியுள்ள அல்லது மெய்யான தொழிலாளர் கண்காணிப்பு மூலம் மட்டுப்படுத்தியுள்ள ஒவ்வொரு ஆலையும், நிலவுடைமைச் சுரண்டலாளர் ஒழிக்கப்பட்டு அவரது நிலம் பறிமுதல் செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமமும் இப்போதுதான் உழைக்கும் மனிதன் தனது சிறப்பாற்றல்களை வெளிப்படுத்தவும், முதுகைச் சற்றே நிமிர்த்தவும், முழு ஆகிருதியுடன் எழுச்சியுற்று நிற்கவும், தான் ஒரு மானுடஜீவி என்று உணரவுமான ஒரு துறையாக விளங்குகிறது. நூற்றுண்டுகளாகப் பிறருக்குப் பாடுபட்டும் சுரண்டலாளருக்காகக் கட்டாய உழைப்பைச் செய்தும் வந்த பிறகு முதல் தடவையாகத் தனக்காகவே உழைப்பது என்பது சாத்தியமாகியுள்ளது; மேலும், ஒருவர் தனது வேலையில் நவீனத் தொழில்நுட்பத்தின் மற்றும் கலாசாரத்தின் சகல சாதனைகளையும் ஈடுபடுத்துவதைச் சாத்தியமாக்குகிறது.

கட்டாயத்தின் கீழ் உழைப்பது என்பதில் இருந்து தனக்காகவே உழைப்பது என்னும் நிலைக்கு மனித குல வரலாற்றில் ஏற்பட்ட இந்த மகத்தான மாற்றம், பிணக்கு, இடர்ப்பாடுகள், மோதல்கள், வேரூன்றி விட்ட புல்லுருவிகள் மற்றும் அவர்களை அண்டிப்பிழைப்போருக்கு எதிரான பலப் பிரயோகம் இன்றி நிகழ முடியாது. இந்த விஷயத்தில் எந்தத் தொழிலாளிக்கும் எவ்விதப் பிரமைகளும் கிடையாது. கொடிய வறுமையாலும் சுரண்டலாளர்களுக்குப் பல்லாண்டுகள் புரிந்த அடிமை உழைப்பு மூலமும் அவர்களிடமிருந்து பெற்ற எண்ணற்ற வசைகள் மற்றும் அவமானம் மூலமும் வயிரமடைந்த தொழிலாளர்களும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் அந்தச் சுரண்டலாளர்களின் எதிர்ப்பைத் தகர்ப்பதற்கு அதிகக் காலம் பிடிக்கும் என்பதை உணர்கிறுர்கள். இந்தத் தொழிலாளர்களும் விவசாயிகளும் நோவயா ழீஸ்ன் ஆதரவாளர்கள்[11] அல்லது இதர சகதியைச் சேர்ந்த அறிவுத் துறை கனவான்களின் உணர்ச்சிப் பசப்புப் பிரமைகளால் கிஞ்சிற்றும் பீடிக்கப்படவில்லை. இந்தக் கனவான்கள் முதலாளிகளை ''கண்டனம் செய்து'' தொண்டை கம்மக் ''கூக்குரலிட்டவர்கள்'', அவர்களை எதிர்த்து ''பாவலா காட்டியவர்கள்''. ஆனுல் செயல்களுக்கு வரும் போது, அச்சுறுத்தல்களைச் செயல்படுத்த வரும் போது, முதலாளி

களை அகற்றும் வேலையை நடைமுறையில் நிறைவேற்ற வரும் போது கண்ணீர் விட்டுக் கரைந்து அடிபட்ட நாய்க் குட்டிகளைப் போல நடந்து கொள்வார்கள்.

கட்டாயத்தின் கீழ் உழைப்பது என்பதில் இருந்து தனக்காகவே உழைப்பது என்ற நிலைக்கு, பிரம்மாண்டமான, தேசிய (ஓரளவுக்கு சர்வதேசிய, உலக) வீதத்தில் உழைப்பைத் திட்டமிட்டு ஒழுங்கமைக்கும் நிலைக்கு ஏற்படும் மகத்தான மாற்றத்துக்கு—சுரண்டலாளர் எதிர்ப்பை ஒடுக்குவதற்கான ''ராணுவ'' நடவடிக்கைகளுடன்—பாட்டாளி வர்க்கமும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் எடுக்கும் மிகப் பெரிய ஒழுங்கமைப்பும் அமைப்பாளருக்குரிய முயற்சியும் தேவை. இந்த ஒழுங்கமைப்புப் பணி, நேற்றைய அடிமையுடைமையாளர்களையும் (முதலாளிகளையும்) முதலாளித்துவ அறிவுத் துறையைச் சேர்ந்த அவர்களது அடிவருடிக் கூட்டத்தையும் தாட்சண்யமின்றி ராணுவ முறைகளால் ஒடுக்கும் பணியுடன் பின்னிப் பிணைந்து ஓர் உருவமாகச் சமைந்துள்ளது. நேற்றைய அடிமையுடைமையாளர்களும் அவர்களது அறிவுத் துறைக் கையாட்களும் ''நாங்கள் எப்போதும் அமைப்பாளர்களாயும் தலைவர்களாயும் இருந்தவர்கள்; நாங்கள் நாட்டாண்மை செய்தவர்கள்; தொடர்ந்து அவ்வாறே செய்ய விரும்புகிறோம்; 'சாமான்ய மக்களுக்கு', தொழிலாளர் விவசாயிகளுக்கு நாங்கள் கீழ்ப்படிய மறுக்கிறோம்; நாங்கள் அவர்களுக்கு அடிப்பட மாட்டோம்; பண மூட்டைகளின் தனியுரிமைகளையும் மக்கள் மீதான மூலதனத்தின் ஆட்சியையும் பாதுகாப்பதற்காக அறிவை ஆயுதமாக மாற்றுவோம்'' என்று கூறுகிறார்கள், நினைக்கிறார்கள்.

இவ்வாறுதான் முதலாளிகளும் முதலாளித்துவ அறிவுஜீவிகளும் கூறுகிறார்கள், நினைக்கிறார்கள், செய்கிறார்கள். சுயநலத்தின் கருத்து நிலையில் இருந்து பார்த்தால், அவர்களது நடத்தை புரிந்து கொள்ளக் கூடியதேயாகும்: பிரபுத்துவ நிலவுடைமையாளர்களை அண்டிவாழ்பவர்களும் கெஞ்சிப் பிழைப்பவர்களும் பாதிரிகளும் எழுதுகோலர்களும் கோகல் சித்திரித்த அதிகார வர்க்கத்தினரும் பெலீன்ஸ்கியைப் பகைத்த ''அறிவுஜீவிகளும்'' கூட பண்ணை அடிமை முறையில் இருந்து விட்டுப் பிரிவது ''கடினம்'' என்று கண்டனர். ஆனால் சுரண்டலாளர் மற்றும் அவர்களது அறிவுத் துறை ஏவலாட்களின் லட்சியம் கவைக்குதவாதது. தொழி

லாளரும் விவசாயிகளும் அன்னுர்களின் எதிர்ப்பைத்
தகர்க்கத் தொடங்குகின்றனர். துரதிருஷ்டவசமாக, இன்னும்
போதியளவு உறுதியாகவும் வைராக்கியமாகவும் தாட்சண்ய
மின்றியும் செயல்படவில்லை. ஆனுல் அதை அவர்கள்
தகர்த்தெறிவது திண்ணம்.

உழைக்கும் மக்கள் மீது சோஷலிஸ்டுப் புரட்சியால்
சுமத்தப்படும் ஒழுங்கமைப்புப் பணிகளை—உலக வரலாற்றுப்
பொருளில் மகத்தான, உண்மையிலேயே வீரம் செறிந்த
தான பணிகளை—''சாமான்ய மக்களும்'' ''சாமான்ய''
தொழிலாளரும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் செய்து
சமாளிக்க முடியாது என்று ''அவர்கள்'' கருதுகிறுர்கள்.
தமக்குத்தாமே தேறுதல் சொல்லிக் கொள்வதற்கு முதலாளி
களுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் வழக்கமாகச் சேவை
புரியப் பழகிவிட்ட அறிவுஜீவிகள்: ''நாங்கள் இல்லாமல்
உங்களால் முடியாது'' என்று கூறுகிறுர்கள். ஆனுல் அவர்
களது திமிரான வன்கூற்று வீண் முயற்சியாகும்: கல்வி கற்ற
மனிதர்கள் மக்களின் பக்கம், உழைப்பாளி மக்களின் பக்
கம் ஏற்கெனவே வந்து கொண்டு இருக்கிறுர்கள்; மூலதனத்
தின் ஏவலாட்களது எதிர்ப்பைத் தகர்க்க உதவி புரிகிறுர்
கள். விவசாயிகள் மற்றும் தொழிலாளி வர்க்கத்தின்
மத்தியில் பல ஆற்றல் மிகுந்த ஒழுங்கமைப்பாளர்கள்
உள்ளனர். அவர்கள் தம்மைத் தாமே உணர்ந்து
கொள்ளவும் மாபெரும் ஜீவாதாரமான படைப்பாற்றல்
பணியினை நோக்கி விழிப்புற்று முழு முயற்சி செய்யவும்
தமது சொந்த சக்திகளைக் கொண்டு சோஷலிஸ்டு சமூக
அமைப்பை கட்டும் பணியினை நிறைவேற்றவும் இப்பொழுது
தான் தொடங்கியிருக்கிறுர்கள்.

இன்றுள்ள முக்கியமான கடமைகளில் ஒன்று—ஒருவேளை,
ஆக முக்கியமான கடமை—தொழிலாளரின், பொதுவாக
எல்லா உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் சுயேச்சையான
முன்முயற்சியை வளர்ப்பது, படைப்பாற்றல் முறையிலான
ஒழுங்கமைப்பு வேலையில் அதை சாத்தியமான அளவுக்கு
விரிவாக வளர்ப்பது என்பதேயாகும். ''உயர்ந்த வர்க்கங்
கள்'' என்று அழைக்கப்படுபவர்கள் மட்டுமே, செல்வந்தர்
கள் மட்டுமே, செல்வந்தர் பள்ளிகளில் பயின்றவர்கள் மட்
டுமே அரசை நிர்வாகம் செய்யவும் சோஷலிஸ்டுச் சமுதாயத்
தின் ஒழுங்கமைப்பு வேலையை நெறியாக்கம் செய்யவும்

வல்லவர்கள் என்றதான பழைய, அபத்தமான, காட்டுத்தனமான, வெறுக்கத்தக்க, அருவருப்பான தப்பெண்ணத்தை எதுவும் செய்து நாம் உடைத்தெறிய வேண்டும்.

இந்தத் தப்பெண்ணம் அழிகேடான மாமூல், மரத்துப் போன மனப்பாங்கு, அடிமைத் தனமான பழக்கங்கள் ஆகியவற்றாலும், இதற்கும் மேல் முதலாளிகளின் மோசமான சுயநலத்தாலும் வளர்க்கப்பட்டது. முதலாளிகளின் நலன் கொள்ளை செய்து ஆதிக்கம் செலுத்துவதும் ஆதிக்கம் செலுத்திக் கொள்ளை செய்வதும் ஆகும். இல்லை. தமக்கு அறிவின் சக்தி அவசியம் என்பதைத் தொழிலாளர்கள் ஒரு கணமும் மறக்க மாட்டார்கள். தொழிலாளர்கள் இப்போது குறிப்பாயும் அறிவைப் பெறுவதில் அசாதாரணமான ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதைப் பற்றி பாட்டாளிகளின் மத்தியில் தவறான கருத்துக்கள் இல்லை, இருக்கவும் முடியாது என்பதை இது புலப்படுத்துகிறது. படிக்கவும் எழுதவும் தெரிந்த, மக்களை எடை போடத் தெரிந்த, நடைமுறை அனுபவம் பெற்றுள்ள ஒவ்வொரு சாமான்ய தொழிலாளியும் விவசாயியும் அமைப்பாளர் வேலையைச் செய்யும் திறனுடையவராவார். முதலாளித்துவ அறிவு ஜீவிகள் யாரைப் பற்றி அத்தகைய ஆணவத்தோடும் வெறுப்போடும் பேசுகிறார்களோ அந்த ''சாமான்ய மக்கள்'' மத்தியில் இத்தகைய பல ஆடவரும் மகளிரும் உள்ளனர். தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகள் மத்தியில் நிலவும் இது போன்ற செழுமையான ஆற்றல், இது வரை பயன்படுத்தப் படாத ஆதார சக்தியாகும்.

தொழிலாளர் மற்றும் விவசாயிகள் இன்னும் ''பயந்தவர்களாக'' உள்ளனர்; அவர்கள் தாமே இப்போது ஆளும் வர்க்கம் என்ற கருத்துக்கு இன்னும் வழக்கப்பட்டு விடவில்லை; அவர்கள் இன்னும் போதியளவு உறுதிப்பாடு அடையவில்லை. தமது வாழ்க்கை முழுவதும் அடிக்குப் பயந்து வேலை செய்தும் வறுமையாலும் பட்டினியாலும் கட்டாயப்படுத்தப்பட்டும் வந்த லட்சோப லட்சம் மக்கள் உள்ளங்களில் இந்தப் பண்புகளைப் புரட்சியால் ஒரே வீச்சில் புகுத்த முடியாது. ஆனால் 1917 அக்டோபர் புரட்சி வலுவானது, நிலைத்து நிற்கக் கூடியது, வெல்லற்கரியது. காரணம் அது இந்தப் பண்புகளை எழுப்பியுள்ளது, பழைய தடைகள் எல்லாவற்றையும் தகர்க்கிறது, தேய்ந்து போன

தளைகளை அகற்றுகிறது, உழைக்கும் மக்களைப் புது வாழ்வினை சுயேச்சையாகப் படைத்துருவாக்கும் பாதையில் தலைமை தாங்கி நடத்திச் செல்கிறது.

கணக்குப் பதிவு, கண்காணிப்பு—இதுவே தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் ஒவ்வொரு சோவியத்தின், ஒவ்வொரு நுகர்வாளர் சங்கத்தின், ஒவ்வொரு வழங்கீடு ஒன்றியம் அல்லது கமிட்டியின், ஒவ்வொரு ஆலைக் கமிட்டியின் அல்லது பொதுவாகத் தொழிலாளர் கண்காணிப்பு அமைப்பின் பிரதான பொருளாதாரப் பணியாகும்.

உழைப்பின் அளவையும் உற்பத்தி சாதனங்களையும் பழைய வழக்கப்படி ஓர் அடிமையின் நோக்கு நிலையில் இருந்து கருதிப் பார்ப்பதை எதிர்த்து நாம் போராட வேண்டும். அந்த அடிமையின் ஏகக் குறிக்கோள் உழைப்பின் கடுமையைச் சற்றே குறைப்பது அல்லது முதலாளி வர்க்கத்திடமிருந்து குறைந்த பட்சம் ஏதோ சில சிறு சலுகை பெறுவது என்பதாக இருந்தது. முன்னேறிய வர்க்க உணர்வுடைய தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தை ஏற்கெனவே தொடங்கி விட்டார்கள். அவர்கள் புதிதாக வந்தவர்களுக்கு உறுதியான எதிர்ப்புக் காட்டி வருகின்றார்கள். இந்தப் புதியவர்கள் ஆலை உலகத்தை நோக்கி போரின் போது பிரத்தியேகமாயும் பெருந்தொகையில் திரண்டு வந்தார்கள். அவர்கள் இப்போது மக்களது உடைமைக்குள் வந்துவிட்ட மக்கள் ஆலைகளைப் பழைய முறையிலேயே நடத்த விரும்புகிறார்கள். அவர்களது ஒரே நோக்கம் ''சாத்தியமான அளவு பெரிய லாபத்தைத் திரட்டிக் கொண்டு பிறகு வெளியேறுவது'' என்பதே. இந்தப் போராட்டத்தில் முன்னேறிய தொழிலாளர் பக்கம் ஆதரவாக வர்க்க உணர்வுள்ள, நேர்மையான, சிந்திக்கிற விவசாயிகளும் உழைக்கும் மக்களும் சேருவார்கள்.

உயர் அரசு அதிகாரம் என்ற முறையில் தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களாலோ, அல்லது அந்த ஆட்சி அதிகாரத்தின் நெறிமுறைகள் அல்லது ஆணையுரிமையின் பேரிலோ கணக்கு வைத்தலும் கண்காணித்தலும் நடத்தப்படும் பட்சத்தில்—இது விரிந்து பரந்த பொதுவான சர்வப்பொது கணக்கு வைத்தலும் கண்காணிப்புமாகும், செய்யப்பட்ட உழைப்பு

மற்றும் உற்பத்தியான பொருட்களின் வினியோகம் மீதான கணக்கு வைத்தலும் கண்காணிப்புமாகும்—இது பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டு உறுதிப்பட்ட பிற கான சோஷலிஸ்டு மாற்றத்தின் சாரமாகும்.

சோஷலிசத்தை நோக்கி மாறிச் செல்வதற்கு இன்றி யமையாது தேவைப்படும் கணக்கு வைத்தலையும் கண் காணிப்பையும் மக்கள் திரளால் மட்டுமே செயல்படுத்த முடியும். தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் பெருந்திரள் செல்வந்தர், கயவாளிகள், சோம்பேறிகள் மற்றும் போக்கிரிகள் விஷயத்தில் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பில் சுயவிருப்பமான மனச்சான்று பூர்வமான ஒத்துழைப்பைத் தோற்றுவிக்க வேண்டும். இந்த ஒத்துழைப்பு புரட்சிகர ஊக்கம் கொண்டதாக இருத்தல் வேண்டும். இதனால் மட்டுமே, முதலாளித்துவத்திடமிருந்து சோஷலிசம் மரபாகப் பெற்றதான சாபக்கேடான முதலாளித்துவ சமூக அமைப்பின் மீதமிச்சங்களை, மனித குலத்தின் கசடுகளை, இந்தப் படு. மோசமாக சிதிலப்பட்டுத் தேய்ந்து போன உறுப்புக்களை, இந்தத் தொத்து நோயை, பிளேக் நோயை, சீழ்ப்புண்ணைவென்று ஒழிக்க முடியும்.

தொழிலாளர்களே விவசாயிகளே, உழைக்கும் சுரண்டப் படும் மக்களே! நிலம், வங்கிகள் மற்றும் ஆலைகள் இப் போது மக்கள் அனைவரின் சொத்துக்களாகி விட்டன! நீங்கள் நீங்களே பொருட்களின் உற்பத்தி மற்றும் வினியோகம் குறித்துக் கணக்கு வைக்கவும் கண்காணிப்புச் செய்யவும் வேலை தொடங்க வேண்டும். இது மட்டுமே சோஷலிசத்தின் வெற்றிக்கான பாதை, அதன் வெற்றிக்கான ஒரே உத்தர வாதம்! எல்லாச் சுரண்டலையும் எல்லா வறுமையையும் எல்லா ஏழ்மையையும் எதிர்த்து வெல்வதற்கான ஒரே உத் தரவாதம்! எல்லோருடைய தேவைகளையும் திருப்தி செய் வதற்குப் போதுமான ரொட்டி, இரும்பு, வெட்டு மரம், கம்பளி, பருத்தி மற்றும் மென்சணல் ருஷ்யாவில் இருக்கின் றன. ஆனால் இதற்கு உழைப்பும் அதன் விளைபொருட்களும் சரியானபடி வினியோகிக்கப்பட வேண்டும். இந்த வினி யோகத்தின் மீது அனைத்து மக்களின் காரியகரமான நடைமுறை கண்காணிப்பு நிலைநாட்டப்பட வேண்டும். மக்களின் விரோதிகளான செல்வந்தர், அவர்களை அண்டி

வாழ்பவர்கள், கயவர், சோம்பேறிகள், போக்கிரிகளை அரசியலில் மட்டுமின்றி, அன்றுடப் பொருளாதார வாழ்விலும் தோற்கடிக்க வேண்டும்.

இந்த மக்களின் விரோதிகளுக்கு, சோஷலிசத்தின் விரோதிகளுக்கு, உழைக்கும் மக்களின் விரோதிகளுக்கு எவ்விதக் கருணையும் காட்டக் கூடாது. செல்வந்தர் மற்றும் அவர்களை அண்டிவாழ்வோர், முதலாளித்துவ அறிவுஜீவிகளை எதிர்த்து அவர்களை அழிக்கும் வரைப் போர்; கயவர், சோம்பேறிகள், போக்கிரிகளை எதிர்த்துப் போர்! அவர்கள் அனைவரும் ஒரே இனம், முதலாளித்துவத்தின் கான்முளைகள், பிரபுக்குல மற்றும் முதலாளித்துவ சமூக அமைப்பின் ஈற்றுக்கள். இந்த சமூக அமைப்பில் விரல் விட்டு எண்ணத்தக்க சிலர் மக்களைக் கொள்ளையடிக்கிறார்கள், அவமதிக்கிறார்கள். இந்த சமூக அமைப்பின் வறுமையும் இன்மையும் ஆயிரம் ஆயிரம் பேர்களைப் போக்கிரித் தனம், ஊழல் மற்றும் கயமைப் பாதையில் போகும்படி நிர்ப்பந்தித்து அவர்கள் தமது மானுடச் சாயல்கள் அனைத்தையும் இழக்கும்படிச் செய்கிறது. இந்த சமூக அமைப்பு, உழைக்கும் மனிதனிடம், ஏமாற்றுதல் மூலமாவது சுரண்டலில் இருந்து தப்பிக்கவும், அதிலிருந்து விடுபடவும், ஒரு கணமேனும் சரி விருப்பமற்ற உழைப்பில் இருந்து தப்பிக்கவும், சாத்தியமான எந்த வழியிலாவது, எதைச் செய்தும் குறைந்த பட்சம் ஒரு துண்டு ரொட்டியாவது பெற்று பட்டினி கிடக்காமல் தானும் தனது சுற்றமும் பசி வேதனையைச் சற்றே தணித்துக் கொள்ளவும் வேண்டும் என்ற விருப்பத்தைத் தவிர்க்க முடியாத வகையில் வளர்க்கிறது.

செல்வந்தரும் கயவாளிகளும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே ஆவர். அவர்கள் முதலாளித்துவம் வளர்த்த **புல்லுருவிகளின்** இரண்டு பிரதான வகை இனங்களே. அவர்கள் சோஷலிசத்தின் பிரதான விரோதிகள். இந்த விரோதிகளை மக்கள் அனைவரின் விசேஷக் கவனக் கண்காணிப்பின் கீழ் வைக்க வேண்டும். சோஷலிஸ்டு சமூக அமைப்பின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைச் சிறிதளவு மீறினாலும் கூட அவர்கள் தாட்சண்யமின்றித் தண்டிக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தில் பலவீனத்தின் வெளிப்பாடோ, தயக்கமோ, உணர்ச்சிப் பசப்போ எதுவும் சோஷலிசத்துக்கு எதிரான அளப்பரிய பாதகச் செயலாகும்.

இந்தப் புல்லுருவிகளை சோஷலிஸ்டு சமூக அமைப்புக்குத் தீங்கற்றவர்களாக மாற்ற வேண்டுமானால், அனைத்து மக்களும் லட்சோப லட்சம் தொழிலாளர்களும் விவசாயிகளும் சுயவிருப்பத்தோடும் ஊக்கத்தோடும் புரட்சிகர உற்சாகத்தோடும் பங்கேற்கும் முறையில், செய்யப்பட்ட உழைப்பு, பொருட்களின் உற்பத்தி மற்றும் வினியோகம் குறித்த கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் நாம் ஒழுங்கமைத்தல் வேண்டும். நேர்மையான, அறிவுடைய, திறமையுள்ள ஒவ்வொரு தொழிலாளி மற்றும் விவசாயியின் ஆற்றலுக்குள் முற்றும் அடங்கியதான கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் ஒழுங்கமைக்கும் பொருட்டு நாம் அவர்களது ஒழுங்கமைக்கும் தனி ஆற்றல்களை எழுச்சியுறச் செய்ய வேண்டும். இந்தத் தனி ஆற்றல் அவர்கள் மத்தியில் காணப்படுகிறது. அவர்கள் மத்தியில் ஸ்தாபனத் துறையிலான சாதனைகள் விஷயத்திலான நேசப் போட்டியை எழுச்சியுற வைத்து தேசிய அளவில் ஒழுங்கமைக்க வேண்டும். படித்த மனிதனின் அவசியமான அறிவுரைக்கும் ''படித்தவர்'' மத்தியில் மிக வழக்கமாக நிலவும் மடிமை மீதான ''சாமான்ய'' தொழிலாளி மற்றும் விவசாயி மேற்கொள்ளும் அவசியமான கண்காணிப்புக்கும் இடையிலான வேறுபாட்டைத் தொழிலாளரும் விவசாயிகளும் தெளிவாகக் காணுமாறு செய்தல் வேண்டும்.

இந்த மடிமை, இந்தக் கவனம் இன்மை, துப்புரவு இன்மை, காலத்திட்பம் இன்மை, அமைதி இழந்த அவசரக் கோலம், செயலுக்குப் பதில் விவாதத்தையும் வேலைக்குப் பதில் பேச்சையும் மாற்றீடு செய்யும் விருப்பம், எதையும் முழுமையாகச் செய்து தீர்க்காமல் உலகிலுள்ள சகலத்தையும் எடுத்துச் செய்வதற்கான விருப்பம் ஆகியவை ''படித்தவர்களின் இனப்'' பண்புகளாகும். இதற்குக் காரணம் அவர்கள் இயல்பாகவே மோசமானவர்கள் என்பது அல்ல; அவர்களது தீய சித்தமும் அல்ல. இதற்குக் காரணம் அவர்களது வாழ்க்கையின் பழக்கங்கள், அவர்களது வேலை நிலைமைகள், சோர்வடைதல், மூளை உழைப்பை உடல் உழைப்பில் இருந்து சகஜங்கெட்ட நிலையில் பிரிவினை செய்தல் ஆகிய இத்தியாதிகள் அனைத்துமாகும்.

நமது புரட்சியின் பிழைகள், குறைபாடுகள் மற்றும் தவறுகளின் இடையில், நமது மத்தியில் இருக்கும் அறிவு

ஜீவிகளின்—தற்போது தவிர்க்கவியலாத—இந்த வருந்தத் தகுந்த இனப் பண்புகளின் விளைவாக ஏற்பட்ட பிழைகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன; அதோடு அறிவு ஜீவிகளின் ஒழுங்கமைக்கும் வேலை மீது தொழிலாளர்களின் மேற்பார்வை போதியளவு இல்லாததும் இப்பிழைகளின் பாற்படும்.

தொழிலாளர்களும் விவசாயிகளும் இன்னும் ''பயந்த நிலையில்'' இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பயத்தை ஒழிக்க வேண்டும், அதை அவர்கள் நிச்சயமாயும் ஒழிப்பார்கள். படித்த நபர்கள், அறிவுஜீவிகள் மற்றும் நிபுணர்களின் அறிவுரைகள், நெறிமுறைகளை நாம் தவிர்க்க முடியாது. நல்லறிவுடைய ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் இதை முற்றிலும் நன்றாகப் புரிந்து கொள்கிறார். தொழிலாளர், விவசாயிகள் சார்பில் இருந்து போதிய கவனமோ, தோழமை பூர்வமான மரியாதையோ குறைந்து விட்டதாக நமது மத்தியில் உள்ள அறிவுஜீவிகள் புகார் செய்ய முடியாது. ஆனால் அறிவுரைகள், நெறிமுறைகள் என்பன ஒரு விஷயம், நடைமுறையில் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பு இன்னொரு விஷயம் ஆகும். மிகப் பெரும்பாலும் அறிவாளிகள் அருமையான அறிவுரைகளையும் நெறிமுறைகளையும் தருகின்றனர். ஆனால் சொற்களைச் செயலாகப் பெயர்க்கும் காரியத்தில் நடைமுறைக் கண்காணிப்பைச் செயல்படுத்துவதில் இந்த அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகளை நிறைவேற்றுவதில் அவர்கள் படு மோசமாக, அபத்தமான முறையில், வெட்கக்கேடான அளவில் ''வாய்ப்பு இழந்தவர்கள்'', ஆற்றல் அற்றவர்கள் என்பதை நிதர்சனப்படுத்தி விடுகிறார்கள்.

இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் ''மக்கள்'' மத்தியில் இருந்தும், ஆலைத் தொழிலாளர் மற்றும் உழைக்கும் விவசாயிகள் இடையில் இருந்தும் வரும் நடைமுறை அமைப்பாளர்களின் உதவியும் தலைமைப் பாத்திரமும் வேண்டாம் என்று ஒழிப்பது அறவே சாத்தியமல்ல. ''பானைகள் செய்வது கடவுள்கள் அல்ல'' — இந்த உண்மையைத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது மனங்களில் நன்றாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இப்போதைய முழு விவகாரமும் நடைமுறை வேலையே என்பதை அவர்

கள் புரிந்து கொள்ள வேண்டும். தத்துவம் நடைமுறையாக மாற்றப்படும், நடைமுறையால் உயிர்க்களை ஊட்டப்படும், நடைமுறையால் சரிபார்க்கப்படும், நடைமுறையால் சோதிக்கப்படும் அந்த வரலாற்றுத் தருணம் வந்து விட்டது. இப்பொழுது, ''மெய்யான இயக்கத்தின் ஒவ்வொரு படியும் ஒரு டஜன் வேலைத் திட்டங்களை விடவும் அதிக முக்கியமானது''[12] என்ற மார்க்சின் சொற்கள் குறிப்பாயும் மெய்மையாகின்றன. செல்வந்தர்களையும் கயவாளிகளையும் நடைமுறையில் மெய்யாகவே மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்தி, முழுமையாக அகத்தே பதிவு செய்து, அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சோஷலிசம் பற்றிய அருமையான ஒரு டஜன் வாதங்களை விடவும் மதிப்புடையதாகும். ஏனெனில் ''தத்துவம், எனது நண்பரே, நரை கண்டது, ஆனால் வாழ்க்கையின் கற்பகத்தரு பசுமையானது''.[13]

தொழிலாளர், விவசாயிகளிடையிலான நடைமுறை அமைப்பாளர்களிடையே நேசப் போட்டி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அறிவாளிகள் மிகவும் விரும்பிச் செய்ய முனையும் மாறா நிலைப்படி உருவடிவங்களை நிலைநாட்டவும் மேலிருந்து ஒரே மாதிரித் தன்மையைத் திணிக்கவும் செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் எதிர்த்துப் போரிட வேண்டும். மாறா நிலைப்படி உருவடிவங்களுக்கும் மேலே இருந்து திணிக்கப்படும் ஒரே மாதிரித் தன்மைக்கும், ஜனநாயக மற்றும் சோஷலிஸ்டு மத்தியத்துவத்துக்கும் இடையே பொதுவான அம்சம் எதுவுமே கிடையாது. விவரங்களில், பிரத்தியேக வட்டார இயல்புகளில், அணுகும் முறைகளில், கண்காணிப்பைச் செயல்படுத்தும் முறைகளில், புல்லுருவிகளை (செல்வந்தர், கயவர்கள், அக்கறையற்ற உணர்ச்சி வெறி பிடித்த அறிவாளிகள், இத்தியாதி) அழித்தொழித்து அவர்களைத் தீங்கற்றவர்கள் ஆக்குவதற்கான வழிகளில் பல்வகைத் தன்மை இருப்பதால் தலையாய கூறுகளின், அடிப்படைகளின், சாரத்தின் ஒற்றுமை கலைபடவில்லை, மாறாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அடி மட்டத்தில் இருந்து வரும் முன்முயற்சி, சுயேச்சைப் போக்கு, செயல் சுதந்திரம் மற்றும் ஊக்கத்தை எவ்வாறு மாறா நிலைப்படி உருக்களில் இருந்து விடுபட்ட சுயவிருப்பமான மத்தியத்துவத்தோடு இணைப்பது என்பதற்கு பாரிஸ் கம்யூன் ஒரு மகத்தான உதாரணத்தினை வழங்

கியது. நமது சோவியத்துக்கள் அதே பாரம்பரியத்தைப் பின்பற்றுகின்றன. ஆனால் அவை இன்னும் ''பயந்தவையாக உள்ளன''; அவை இன்னும் தமது தொடக்க நிலை கடந்து முன்னேறவில்லை; சோஷலிச அமைப்பைக் கட்டுவது என்ற தமது புதிய மகத்தான படைப்பாற்றல் பணியில் இன்னும் ''ஒரு பிடிப்புப் பெறவில்லை''. சோவியத்துக்கள் மேலும் துணிவுடன் செயல்படத் தொடங்க வேண்டும்; மேலும் அதிக முன்முயற்சியைத் தோற்றுவிக்க வேண்டும். எல்லா ''கம்யூன்களும்''— ஆலைகள், கிராமங்கள், நுகர்வாளர் சங்கங்கள், வழங்கீடுக் கமிட்டிகள்—செய்யப்பட்ட உழைப்பு மற்றும் உற்பத்தியான பொருட்களின் வினியோகம் மீதான கணக்கு வைக்கும் கண்காணிக்கும் நடைமுறை அமைப்பாளர்களாக ஒன்றுக்கொன்று நேசப் போட்டியிட வேண்டும். இந்தக் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பு வேலைத் திட்டம் எளிதானது, தெளிவானது, எல்லோருக்கும் புரியக் கூடியது: எல்லோருக்கும் ரொட்டி, எல்லோருக்கும் சீரான காலணி நல்ல உடை, எல்லோருக்கும் குளிருக்கு அடக்கமான இருப்பிடங்கள்; எல்லோரும் மனச் சாட்சிப் படி வேலை செய்ய வேண்டும்; (தமது வேலையைத் தட்டிக் கழிப்பவன் உட்பட) கயவாளி ஒருவன் கூட சுதந்திரமாக இருக்க அனுமதிக்கக் கூடாது, அவன் சிறையிலடைக்கப்பட வேண்டும் அல்லது மிகவும் கடுமையான வகைப்பட்ட கட்டாய உழைப்புத் தண்டனை அனுபவிக்கவிட வேண்டும்; சோஷலிசத்தின் சட்டங்கள், விதிமுறைகளை மீறும் எந்த ஒரு செல்வந்தனும் கயவாளி அடைந்த கதியில் இருந்து தப்பிவிட அனுமதிக்கக் கூடாது, நீதிப்படிச் செல்வந்தனுக்கும் அதே கதிதான் ஏற்பட வேண்டும். ''வேலை செய்யாதவனுக்கு உணவில்லை''—இதுவே சோஷலிசத்தின் நடைமுறைக் கட்டளையாகும். இவ்வாறுதான் காரியங்கள் நடைமுறையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். நமது தொழிலாளர், விவசாயி அமைப்பாளர்கள், ''கம்யூன்கள்'' பெருமிதம் கொள்ள வேண்டிய நமது நடைமுறை வெற்றிகள் இவையே. இது குறிப்பாயும் அறிவாளிகளிடையிலான அமைப்பாளர்களுக்குப் பொருந்தியதாகும் (குறிப்பாயும், காரணம் அவர்கள் தமது பொதுவான கட்டளைகள் மற்றும் தீர்மானங்கள் பற்றி மிகவும் அதிகமாக, அளவுக்கு

மேல் மிகவும் அதிகமாகப் பெருமிதம் கொள்ளும் வழக்க முடையவர்கள்).

கணக்கு வைக்கவும் செல்வந்தர், கயவாளிகள் மற்றும் சோம்பேறிகளைக் கண்காணிக்கவும் ஆயிரக் கணக்கான நடைமுறை வடிவங்களும் முறைகளும் வகுக்கப்பட வேண்டும்; கம்யூன்களாலேயே, நகரத்திலும் நாட்டுப் புறத்திலுமான சிறிய அலகுகள் மூலமே நடைமுறையில் சோதிக்கப்பட வேண்டும். பல்வகைத் தன்மை இங்கு பயனுறுதித் தன்மைக்கு உத்தரவாதமாக, தனியொரு பொது நோக்கத்தைச் சாதனையாக்குவதற்கான வெற்றிக்கு வாக்குறுதியாக, ருஷ்யா என்னும் நிலப்பரப்பில் கயவாளிகள், செல்வந்தராகிய மூட்டைப் பூச்சிகள், இத்தியாதி எல்லா கேடு சூழ் பூச்சி புழுக்களை அகற்றிச் சுத்தப்படுத்தும் சாதனமாக விளங்குகிறது. ஓர் இடத்தில் பத்துச் செல்வந்தர்கள், ஒரு டஜன் கயவாளிகள், வேலைக்கு மட்டம் போடும் (போக்கிரிகளைப் போல பெத்ரோகிராதில், குறிப்பாகக் கட்சி அச்சகங்களில், வேலைக்கு மட்டமடிக்கும் அச்சுக் கோப்போர் தோரணையில்) அரை டஜன் தொழிலாளர் சிறையில் தள்ளப் படுவர். இன்னொரு இடத்தில் அவர்கள் கக்கூசுகளைக் கழுவும் படி ஏவப்படுவர். மூன்றாவது இடத்தில் அவர்கள் தண்டனைக் காலம் முடிந்து வந்த பின் ''மஞ்சள் சீட்டுகள்'' வழங்கப்பட்டு அவர்கள் திருந்தும் வரை தீங்கு விளைவிக்கும் நபர்கள் என்பதாக எல்லோரும் கண்காணிக்கும்படி வைக்கப் பட்டிருப்பர். நாலாவது இடத்தில் சோம்பேறிகளில் பத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே சுடப்படுவர். ஐந்தாவது இடத்தில் கலவையான முறைகள் கையாளப்படும்; தற்காலிக விடுதலை மூலம் திருந்தக் கூடியவர்களான செல்வந்தர், முதலாளித்துவ அறிவுஜீவிகள், கயவாளிகள், போக்கிரிகள் விரைவில் திருந்திக் கொள்வதற்கு உரிய வாய்ப்பு அளிக்கப் படுவர். எந்த அளவுக்கு அதிகமாகப் பல்வகைத் தன்மை இருக்குமோ அந்த அளவுக்கு நமது பொது அனுபவம் மேலும் சிறப்பாகவும் அதிகச் செழுமையாகவும் இருக்கும்; சோஷலிசத்தின் வெற்றி மேலும் உறுதியானதாயும் அதிக துரிதமானதாயும் விளங்கும்; நடைமுறையால்—நடைமுறையால் மட்டுமே வகுக்க முடியும்—போராட்டத்துக்கான சிறந்த முறைகளையும் வழிகளையும் மேலும் எளிதாக வகுக்க முடியும்.

பட்டினியால் வாடும் மக்கள் இல்லாத, வேலையின்றித் திண்டாடுவோர் இல்லாத, சோம்பேறிச் செல்வந்தர் இல்லாத, அறிவுஜீவிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் முதலாளி வர்க்கத்தின் வெறுக்கத்தக்க அடிவருடிகளும் நாசவேலை செய்வோரும் இல்லாத எந்தக் கம்யூன், எந்தப் பெரு நகர வட்டாரம், எந்த ஆலை அல்லது எந்தக் கிராமம் இருக்கிறது? தொழிலாளர் உற்பத்தித் திறனை உயர்த்தவும், ஏழைகளுக்கு நல்ல புதிய வீடுகள் கட்டித் தரவும், செல்வந்தர் வீடுகளில் ஏழைகளைக் குடி வைக்கவும், ஒவ்வொரு ஏழைக் குடும்பத்தின் ஒவ்வொரு குழந்தைக்கும் முறையாக ஒரு பாட்டில் பால் வழங்கவும் எங்கே பெரும் பணி ஆற்றப்பட்டுள்ளது? இந்த அம்சங்களில்தான் கம்யூன்கள், குடிவாழ் கூட்டுக்கள், உற்பத்தியாளர்-நுகர்வாளர் சங்கங்கள், இணைப்புகள், தொழிலாளர்கள் படையாளர்கள் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் ஆகியவற்றுக்கிடையே நேசப் போட்டி வளர வேண்டும். இந்தப் பணியில் நடைமுறையில் தொண்டாற்ற தனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் முன்வர வேண்டும், அரசு நிர்வாகத்தில் வேலை செய்ய அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். மக்கள் மத்தியில் ஏராளமான தனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கேவலம் அடக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். தமது ஆற்றல்களைப் பயன்படுத்த அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்களே, அவர்கள் மட்டுமே மக்களின் ஆதரவுடன் ருஷ்யாவைப் பாதுகாக்க முடியும், சோஷலிச லட்சியத்தைப் பாதுகாக்க முடியும்.

*1917 டிசம்பர் 24—27*
*(1918 ஜனவரி 6—9)ல்*
*எழுதப்பட்டது*

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 195-205

# சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்[14]

## ருஷ்யாவின் சோவியத் குடியரசினது சர்வதேச நிலைமையும் சோஷலிசப் புரட்சியின் அடிப்படைப் பணிகளும்

*அடையப் பெற்றிருக்கும் சமாதானம்*[15]*, அளவு மீறிய கடுஞ்சுமையை இருத்துவதாகவும் அளவு மீறி நிலையற்றதாகவும் இருப்பினும், இந்தச் சமாதானத்தின் விளைவாய் ருஷ்யாவின் சோவியத் குடியரசு சிறிது காலத்துக்கு அதன் முயற்சிகளை சோஷலிசப் புரட்சியின் மிகவும் முக்கியமான, மிகவும் கடினமான பணியில், அதாவது ஒழுங்கமைத்திடும் பணியில் ஒருங்கிணைத்து ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டுள்ளது.*

*மாஸ்கோவில் 1918 மார்ச் 15ல் நடைபெற்ற சோவியத்துக்களின் விசேஷக் காங்கிரசால் ஏற்கப்பட்ட தீர்மானத்தின் நான்காவது பாராவில் (பிரிவு 4), உழைப்பாளி மக்களது சுயகட்டுப்பாட்டைப் பற்றியும் குழப்பத்தையும் சீர்குலைவையும் எதிர்த்து ஈவிரக்கமின்றி நடத்தப்பட வேண்டிய போராட்டத்தைப் பற்றியும் கூறும் அந்தப் பாராவில் (அல்லது பிரிவில்), இந்தப் பணியானது உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமாகிய மக்கள் எல்லோர்க்கும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வகுத்தளிக்கப்பட்டது.*

*ருஷ்யாவின் சோவியத் குடியரசு பெற்றிருக்கும் இந்தச் சமாதானம் நிலையற்றதாக இருப்பதற்கு, இராணுவ நடவடிக்கைகளைத் திரும்பவும் மேற்கொள்ள இக்குடியரசு தற்போது நினைக்கிறது என்பதல்ல காரணம், இல்லவே இல்லை— முதலாளித்துவ எதிர்ப்புரட்சியாளர்களையும் அவர்களது அடிவருடிகளையும் (மென்ஷிவிக்குகளையும் ஏனையோரையும்) தவிர்த்து புத்தி சுவாதீனமுள்ள எந்த அரசியல்வாதியும் இப்படிச் செய்ய நினைக்கவில்லை. பிரம்மாண்ட இராணுவப் படைகளைத் தம் கையில் வைத்துக் கொண்டு ருஷ்யாவின் எல்லைகளை ஒட்டி மேற்கிலும் கிழக்கிலும் இருந்து வரும் ஏகாதிபத்திய அரசுகளில் இராணுவக் கட்சியானது,*

ருஷ்யாவின் தற்காலிகமான பலவீனத்தைக் கண்டு மயங்கி மதியிழந்தும், சோஷலிசத்தை வெறுப்போடும் கொள்ளை யடிப்பதில் ஆவல் கொண்டோருமான முதலாளிகளால் தூண்டி விடப்பட்டும், எத்தருணத்திலும் ஆதிக்க நிலை பெற்றுவிடக் கூடுமென்பதுதான் இந்தச் சமாதானத்தின் நிலையின்மைக்குக் காரணமாகும்.

இந்நிலைமைகளில் சமாதானத்துக்கு நமக்குள்ள மெய் யான—காகிதத்திலானதல்ல—ஒரே உத்தரவாதம், ஏகாதி பத்திய அரசுகளிடையிலான பகைமையேதான். இந்தப் பகைமை மிதமிஞ்சிய வரம்புகளை எட்டியுள்ளது; ஒரு புறத் தில் மேற்கில் மக்களிடையே ஏகாதிபத்தியப் படுகொலை திரும்பவும் துவக்கப்பட்டிருப்பதிலும் மறு புறத்தில் பசிபிக் மாகடலிலும் பசிபிக் கரையிலும் ஜப்பானுக்கும் அமெரிக் காவுக்குமிடையே மேலாதிக்கத்துக்கான ஏகாதிபத்தியப் போட்டாபோட்டி மிதமிஞ்சி கடுமையாகியிருப்பதிலும் இந்தப் பகைமை தெளிவாகவே புலப்படுகிறது.

பாதுகாப்புக்கு நம்பகமில்லாத இத்தகைய காப்பு அரணைக் கொண்டுள்ள நமது சோவியத் சோஷலிசக் குடி யரசு மிதமிஞ்சிய அளவுக்கு நிலையற்றதும், நிச்சயமாகவே நெருக்கடியானதுமான சர்வதேச நிலையில் இருக்கிறது என் பது கூறாமலே விளங்குவதாகும். சூழ்நிலைமைகளின் இணைப் பினுல் நமக்கு வரப் பெற்றிருக்கும் இந்த இடைநேர அமைதியினைப் பயன்படுத்திக் கொண்டு, யுத்தத்தால் ருஷ் யாவின் சமுதாய உறுப்பமைவு அனைத்துக்கும் ஏற்பட்டுள்ள மிகக் கடுமையான காயங்களை ஆற்றிக் கொள்வதற்கும் பொருளாதாரத்தைப் புத்தெழுச்சி பெறச் செய்வதற்கும் நாம் உச்சபட்சமான அளவுக்கு சகல முயற்சிகளையும் எடுத் தாக வேண்டும். இதைச் செய்யாமல் நமது நாட்டின் தற் காப்பு ஆற்றலில் மெய்யான ஏற்றம் ஏற்படுவது பற்றிச் சிந்திக்கவே முடியாது.

மேற்கில் சோஷலிசப் புரட்சியானது மிகப் பல கார ணங்களால் தாமதப்படுத்தப்பட்டு விட்டது; நம்மை எதிர்நோக்கும் ஒழுங்கமைப்புப் பணியினை எந்த அளவுக்கு நாம் நிறைவேற்றுகிறோமோ, அந்த அளவுக்குத்தான் மேற் கில் சோஷலிசப் புரட்சிக்கு நாம் பயனுள்ள உதவி அளிக்கக் கூடியோராய் இருக்க முடியும் என்பதும் கூறாமலே விளங்குவதாகும்.

நம்மை எதிர்நோக்கும் முதற்பெரும் பணியாகிய இந்த ஒழுங்கமைப்புப் பணி வெற்றிகரமாய் நிறைவேற்றப்படுவதற்கு அடிப்படையான ஒரு நிபந்தனை என்னவெனில் மக்களின் அரசியல் தலைவர்களும், அதாவது ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்)[16] உறுப்பினர்களும், அவர்களைத் தொடர்ந்து உழைப்பாளிப் பெருந்திரள் மக்களது வர்க்க உணர்வு படைத்த பிரதிநிதிகள் எல்லோரும் இத்துறையில் முந்தைய முதலாளித்துவப் புரட்சிகளுக்கும் தற்போதைய சோஷலிசப் புரட்சிக்குமுள்ள அடிநிலை வேறுபாட்டை முழு அளவுக்கு உணர்ந்து கொண்டாக வேண்டும்.

முதலாளித்துவப் புரட்சிகளில் பெருந்திரளான உழைப்பாளி மக்களது தலையாய பணி, பிரபுத்துவத்தையும் முடியரசையும் மத்திய கால நிலைமைகளையும் ஒழித்திடுவதென்ற எதிர்நிலையான அல்லது அழித்தல் வழிப்பட்ட வேலையை நிறைவேற்றுவதாகவே இருந்தது. புதிய சமுதாயத்தை ஒழுங்கமைத்திடுவதென்ற நேர்நிலையான அல்லது ஆக்கவழிப்பட்ட வேலையானது மக்களில் சொத்துடைத்த முதலாளித்துவச் சிறுபான்மையோரால் செய்து முடிக்கப் பெற்றது. தொழிலாளர்கள், ஏழை விவசாயிகளின் எதிர்ப்பை மீறி இந்தச் சிறுபான்மையோர் இப்பணியை ஒப்பளவுக்கு எளிதாகவே செய்து முடித்தனர்; மூலதனத்தால் சுரண்டப்பட்ட மக்கள் சிதறுண்டும் கல்வியறிவில்லாதோராகவும் இருந்ததால் அந்தக் காலத்தில் இவர்களது எதிர்ப்பு மிகவும் பலவீனமாயிருந்தது மட்டுமல்ல இதற்குக் காரணம், தன்னியல்பாய் வளர்ந்து விரிவடைந்து வரும் தேசிய மற்றும் சர்வதேசியச் சந்தையே அராஜக முறையில் அமைந்த முதலாளித்துவ சமுதாயத்தின் பிரதான ஒழுங்கமைப்புச் சக்தி என்பதும் இதற்குக் காரணம்.

ஆனால் ஒவ்வொரு சோஷலிசப் புரட்சியிலும்—ஆகவே ருஷ்யாவில் 1917 அக்டோபர் 25ல் நாம் ஆரம்பித்த சோஷலிசப் புரட்சியிலும்—கோடிக் கணக்கான மக்களது வாழ்வுக்குத் தேவையான பண்டங்களின் திட்டமிட்ட உற்பத்திக்கும் வினியோகத்துக்கும் விரிந்து இயங்கும்படியான புதிய ஒழுங்கமைப்பு உறவுமுறைகளுக்குரிய அளவு கடந்த சிக்கலும் நுண்ணயமும் வாய்ந்த அமைப்பினை நிறுவும் நேர்நிலையான அல்லது ஆக்க வழிப்பட்ட வேலைதான் பாட்

டாளி வர்க்கத்துக்கும் அது தலைமை தாங்கும் ஏழை விவசாயிகளுக்குமான தலையாய பணியாய் இருக்கிறது. மக்களில் பெருவாரியானோரும், யாவருக்கும் முதலாய் உழைப்பாளி மக்களில் பெருவாரியானோரும், வரலாற்றின் படைப்பாளர்களாய் சுயேச்சையான ஆக்க வேலையில் ஈடு படும் போது மட்டும்தான் இத்தகைய ஒரு புரட்சி வெற்றி கரமாக நடத்தப்பட முடியும். பாட்டாளி வர்க்கத்தினரும் ஏழை விவசாயிகளும் போதிய அளவில் வர்க்க உணர்வை யும் கோட்பாட்டில் பற்றுறுதியையும் தன்னலங்கருதாத் தியாக உணர்ச்சியையும் விடாமுயற்சியையும் வெளிப்படுத் தும் போது மட்டும்தான் சோஷலிசப் புரட்சியின் வெற்றி திண்ணமாக முடியும். உழைப்போரும் ஒடுக்கப்படுவோரு மான மக்கள் புதிய சமுதாயத்தைக் கட்டியமைத்திடும் சுயேச்சைப் பணியில் செயல் முனைப்போடு பங்கு கொள் வதற்கு வாய்ப்பு அளித்திடும் சோவியத் வடிவிலான ஒரு புது வகை அரசை உருவாக்கியதன் மூலம் நாம் இந்தக் கடினமான பிரச்சினையில் ஒரு சிறு பகுதிக்கு மட்டுமே தீர்வு கண்டுள்ளோம். பிரதான இடர்ப்பாடு பொருளாதாரத் துறையில் அடங்கியிருக்கிறது, அதாவது பண்டங்களது உற் பத்தியிலும் வினியோகத்திலும் மிகவும் கண்டிப்பான சர்வ வியாபகமான கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் புகுத்தி, உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதிலும் பொருளுற்பத்தியை நடைமுறையில் சமூகமயமாக்குவதிலும் அடங்கியிருக்கிறது.

---

ருஷ்யாவில் இன்று ஆளும் கட்சியாய் இருக்கும் போல்ஷி விக்குகளின் கட்சியின் வளர்ச்சியானது, வரலாற்றில் தற் போது நாம் வந்தடைந்திருக்கும் திருப்பத்தின் தன்மை யைப் பளிச்செனப் புலப்படுத்திக் காட்டுகிறது. இந்தத் திருப்பம்தான் தற்போதைய அரசியல் நிலைமையின் தனி இயல்பாகும்; இதுதான் சோவியத் ஆட்சியதிகாரத்தின் புதிய திசையமைவினை, அதாவது புதிய பணிகள் புதிய முறையில் முன்வைக்கப்படுவதை அவசியமாக்குகிறது.

வருங்காலக் கட்சி ஒவ்வொன்றும் தனது வேலைத்திட்ட மும் போர்த்தந்திரமும் பிழையற்றவை என்பதில் பெரும் பாலான மக்களுக்குத் திட நம்பிக்கையை அளிப்பதுதான்

அக்கட்சிக்குரிய முதலாவது பணியாகும். இந்தப் பணிதான் ஜார் காலத்திலும் மற்றும் செர்னோவ்களும் த்ஸெரெத்தேலிகளும் கேரென்ஸ்கிகள் குறித்தும் கிஷ்கீன்கள் குறித்தும் கடைப்பிடித்த சமரசவாதக் கொள்கையின் காலத்திலும் முன்னணியில் நின்றது. இப்போது இந்தப் பணி பிரதானமாய் நிறைவேற்றப்பட்டு விட்டது; ஏனெனில் அண்மையில் மாஸ்கோவில் கூடிய சோவியத்துக்களின் காங்கிரஸ் யாரும் மறுக்க முடியாதபடி நிரூபித்துக் காட்டியது போல, ருஷ்யாவின் தொழிலாளர்களிலும் விவசாயிகளிலும் பெரும்பான்மையோர் தெட்டத்தெளிவாயும் போல்ஷிவிக்குகள் தரப்பிலேயே இருக்கிறார்கள். ஆயினும் இப்பணி எவ்வகையிலும் பூரணமாய் நிறைவேற்றப்பட்டு விடவில்லை என்பது மெய்தான் (எக்காலத்திலும் இது பூரணமாய் நிறைவேற்றப்படுதல் சாத்தியமன்று).

அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதும் சுரண்டுவோரது எதிர்ப்பை நசுக்குவதும் தான் நமது கட்சியை எதிர்நோக்கிய இரண்டாவது பணி. இந்தப் பணியும் எவ்வகையிலும் பூரணமாய் நிறைவேற்றப்பட்டு விடவில்லை; இது கவனியாது புறக்கணிக்கப்பட முடியாத ஒன்று. ஏனெனில் ஒரு புறத்தில் முடியரசுவாதிகளும் காடேட்டுகளும்[17], மறு புறத்தில் இவர்களது கூட்டாளிகளும் அடிவருடிகளுமான மென்ஷிவிக்குகளும் வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் சோவியத் ஆட்சியதிகாரத்தைக் கவிழ்க்கும் பொருட்டு ஒன்றுபடுவதற்காகத் தொடர்ந்து முயன்று வருகிறார்கள். ஆயினும் சுரண்டுவோரது எதிர்ப்பை நசுக்குவதென்னும் பணி 1917 அக்டோபர் 25க்கும் (குத்து மதிப்பாய்) 1918 பிப்ரவரிக்கும் அல்லது பொகயேவ்ஸ்கி சரணடைந்ததற்கும் இடைப்பட்ட காலத்தில் பிரதானமாய் நிறைவேற்றி முடிக்கப் பெற்றுள்ளது.

இப்போது மூன்றாவது பணி ஒன்று, அதாவது ருஷ்யாவின் நிர்வாகத்தை ஒழுங்கமைத்திடும் பணி, உடனடிப் பணியாக முன்னிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. தற்போதைய நிலைமையின் தனி இயல்பாய் அமைந்திடும் ஒரு பணி இது. 1917 அக்டோபர் 25ஆம் நாளுக்கு மறு தினமே நாம் இந்தப் பணியை முன்வைத்து இதைச் சமாளிக்க முற்பட்டது மெய்தான். ஆனால் இதுகாறும் சுரண்டுவோரது எதிர்ப்பு பகிரங்க உள்நாட்டுப் போரின் வடிவை ஏற்று

வந்ததால், இந்த நிர்வாகப் பணி இது வரை பிரதானமான, மையமான பணி ஆக முடியவில்லை.

இப்போது இது பிரதானமான, மையமான பணி ஆகியுள்ளது. போல்ஷிவிக்குகளின் கட்சியினரான நாம் ருஷ்யா திட நம்பிக்கை பெறச் செய்து விட்டோம். ருஷ்யாவை நாம் செல்வந்தர்களிடமிருந்து ஏழைகளுக்காக, சுரண்டுவோரிடமிருந்து உழைப்பாளி மக்களுக்காக வென்று கொண்டு விட்டோம். இப்போது நாம் ருஷ்யாவை நிர்வகித்தாக வேண்டும். மக்களைத் திட நம்பிக்கை பெறச் செய்தல், சுரண்டுவோரை ஆயுத பலங்கொண்டு நசுக்குதல் என்கிற தலையாய பணியிலிருந்து நிர்வாகம் என்கிற தலையாய பணிக்கு மாறிச் செல்லுதலின் பிரத்தியேக இயல்புகளைப் புரிந்து கொள்வதில்தான் தற்போதைய சூழ்நிலையின் தனித் தன்மை அனைத்தும், இடர்ப்பாடு அனைத்தும் அடங்கியுள்ளது.

மனித வரலாற்றிலேயே முதன்முதலாய் ஒரு சோஷலிஸ்டுக் கட்சி ஆட்சியதிகாரத்தை வெற்றி கொள்வதும் சுரண்டுவோரை நசுக்குவதுமாகிய பணியினைப் பிரதானமாய் நிறைவேற்றி முடித்துவிட்டு நிர்வாகம் எனும் பணியினை நேரடியாக அணுக முற்பட்டிருக்கிறது. சோஷலிசப் புரட்சியின் இந்த மெத்தக் கடினமான (மிகவும் மன நிறைவு தருவதான) பணியினை நாம் சிறப்புடன் நிறைவேற்றி முடிப்பவர்கள் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். வெற்றிகரமாய் நிர்வகிக்கும் பொருட்டு நாம் மக்களுக்கு திட நம்பிக்கை அளிக்க வல்லோராய் இருப்பதோடு அன்னியில், உள்நாட்டுப் போரில் வெற்றி பெற வல்லோராய் இருப்பதோடு அன்னியில், நடைமுறை ஒழுங்கமைப்பு வேலையைச் செய்ய வல்லோராயும் இருக்க வேண்டுமென்பதை நாம் பூரணமாய் உணர்ந்து கொண்டாக வேண்டும். இது மிக மிகக் கடினமான பணி, ஏனெனில் கோடானு கோடி மக்களது வாழ்க்கையின் மிகமிக ஆழ வேரூன்றியுள்ள அடிப்படைகளை, பொருளாதார அடிப்படைகளை ஒரு புதிய வழியில் ஒழுங்கமைத்திடும் பணி இது. அதே போது இது மிகவும் மன நிறைவு தரும் பணி, ஏனெனில் இந்தப் பணி (முதன்மையான, பிரதான உருவரைகளில்) நிறைவேற்றி முடிக்கப் பெற்ற பிறகுதான் ருஷ்யாவானது ஒரு சோவியத் குடியரசு மட்டுமன்றி, ஒரு சோஷலிசக் குடியரசும் ஆகி விட்டது என்று கூற முடியும்.

அளவு மீறிய கடுஞ் சுமையாகவும் நிலையற்றதாகவும் அமைந்த சமாதானத்தால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் மேலே நாம் பார்வையிட்ட எதார்த்தச் சூழ்நிலை, யுத்தமும் முதலாளி வர்க்கத்தின் ஆட்சியும் (கேரென்ஸ்கியாலும் அவரை ஆதரித்த மென்ஷிவிக்குகளாலும் வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களாலும் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது) நமக்கு விட்டுச் சென்ற பயங்கர அழிவு நிலையும் வேலையின்மையும் பஞ்சமும் உழைப்பாளி மக்களின் பரவலான பகுதியோரிடத்தே தவிர்க்க முடியாதவாறு மட்டுமீறிய களைப்பையும் வலிவிழந்த ஒடுங்கிய நிலையையுங் கூட ஏற்படுத்தியிருக்கின்றன. இம்மக்கள் பகுதியோர் சற்றே ஓய்வு இடைநேரம் வேண்டுமென விடாப்பிடியாகக் கோருகிறார்கள், நிலைமைகளால் நிர்ப்பந்திக்கப்பட்டு இவ்வாறு கோருகிறார்கள். போராலும் முதலாளித்துவ ஆட்சியாலும் அழிக்கப்பட்ட உற்பத்திச் சக்திகளை மீட்டமைத்தல், போராலும் போரில் ஏற்பட்ட தோல்வியாலும் லாப வெறியாலும் சுரண்டுவோரது கவிழ்க்கப்பட்ட ஆட்சியை மீட்டமைப்பதற்காக முதலாளி வர்க்கம் செய்யும் முயற்சிகளாலும் உண்டான காயங்களை ஆற்றுதல், நாட்டின் பொருளாதாரத்தைப் புத்தாக்கம் பெறச் செய்தல், சர்வசாதாரணமான வாழ்க்கை முறைக்கு நம்பகமான பாதுகாப்பு அளித்தல்—இவை தாம் இன்றைய தினத்துக்குரிய பணி. இது முரணுரையாகத் தோன்றலாம், ஆனாலும் இதுவேதான் உண்மை: மேலே சுட்டிக் காட்டப் பெற்ற எதார்த்த நிலைமைகளைக் கருதிப் பார்க்கும் போது பொது வாழ்வினை நிலைநிறுத்துவது சம்பந்தமான இந்தச் சர்வசாதாரணமான, மிகப் பெரும் அளவுக்குச் சர்வசாதாரணமான பிரச்சினைகளுக்கு—முதலாளி வர்க்கத்தினரும் மென்ஷிவிக்குகளும் வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் காட்டும் எதிர்ப்பை மீறி—நடைமுறையில் தீர்வு காணப்படும் போது மட்டும்தான், ருஷ்யாவில் சோஷலிசத்தை அடைவதற்கான மாற்றம் நடந்தேறும்படி தற்போதைய தருணத்தில் சோவியத் அமைப்பால் உத்தரவாதம் செய்ய முடியும், இதில் எந்த ஐயப்பாட்டுக்கும் இடமில்லை. தற்போதுள்ள சூழ்நிலையின் பிரத்தியேக இயல்புகளின் காரணமாகவும், நிலச்

சமுதாயவுடைமைச் சட்டத்தையும் தொழிலாளர் கண் காணிப்புச் சட்டத்தையும் இன்ன பிறவற்றையும் பெற்றுள்ள சோவியத் ஆட்சியதிகாரம் இருந்து வருவதன் காரணமாகவும், இந்த மிகமிகச் சர்வசாதாரணமான பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வு காண்பதும் சோஷலிசத்தின் திசையிலான முன்னேற்றத்தின் ஆரம்பக் கட்டங்களுக்குரிய அமைப்புத் துறை இடர்ப்பாடுகளை வென்று அகற்றி முன் செல்லுதலும் தற்போது ஒரே சித்திரத்தின் இரு அம்சங்களாகும்.

முறையான, நேர்மையான ரொக்கக் கணக்கு வைத்து வர வேண்டும், சிக்கனமாய் நிர்வகிக்க வேண்டும், சோம்பலாய் இருக்கலாகாது, திருடக் கூடாது, கண்டிப்பான உழைப்புக் கட்டுப்பாட்டை அனுசரிக்க வேண்டும் — முதலாளி வர்க்கம் சுரண்டும் வர்க்கம் என்ற முறையில் தனது ஆட்சியை மூடி மறைப்பதற்காக இவற்றைப் பயன்படுத்திய போது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தால் நியாயமாகவே வெறுத்து ஒதுக்கப்பட்டவையான இந்தக் கோஷங்கள் தாம் இப்போது, முதலாளி வர்க்கம் வீழ்த்தப்பட்டுவிட்ட பின், இத்தருணத்துக்குரிய முதன்மையான உடனடிக் கோஷங்களாகி வருகின்றன. ஒரு புறத்தில், இந்தக் கோஷங்கள் உழைப்பாளி மக்கள் பெருந்திரளினரால் நடைமுறையில் செயல்படுத்தப்படுவதானது, ஏகாதிபத்தியப் போராலும் ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களாலும் (கேரென்ஸ்கியின் தலைமையிலானவர்கள்) அனேகமாக மடிந்தொழியும் அளவுக்குச் சித்திரவதை செய்யப்பட்டிருக்கும் ஒரு நாடு விமோசனமடைவதற்குரிய ஒரே நிபந்தனையாகும்; மறு புறத்தில், இந்தக் கோஷங்கள் சோவியத் அரசால், அதன் வழி முறைகளின்படி, அதன் சட்டங்களது அடிப்படையில் நடைமுறையில் செயல்படுத்தப்படுவதானது சோஷலிசத்தின் இறுதி வெற்றிக்கு அவசியமானதும் போதுமானதும் ஆகிய நிபந்தனையாகும். "பழம் பல்லவியான", "அற்பமான" இந்தக் கோஷங்களை முன்னிலையில் வைப்பதாவது என்று இக்கருத்தை ஏளனமாக வெறுத்து ஒதுக்குகிறார்களே, அவர்கள் இதைத்தான் துல்லியமாயும் புரிந்து கொள்ளத் தவறி விடுகிறார்கள். சிறு விவசாயிகளது நாடான ஒன்றில்—இந்நாடு ஜாராட்சியை வீழ்த்தி ஓராண்டே ஆகிறது, கேரென்ஸ்கிகளிடமிருந்து தன்னை விடு

வித்துக் கொண்டு ஆறு மாதங்களுக்கும் குறைவான காலமே ஆகிறது—நீடித்ததும் பிற்போக்கானதுமான போர் ஒவ்வொன்றையும் தொடர்ந்து எழும் கொடுமை மற்றும் காட்டு மிராண்டித் தனத்தால் கடுமையாக்கப்பட்ட தன்னியல்பான அராஜகத்தில் பெருமளவு எஞ்சியிருப்பது இயற்கையே; பெருமளவிலான விரக்தியும் இலக்கற்ற மனக் கசப்பும் மிகுதியாகவே ஏற்பட்டுள்ளன. இவற்றுடன் முதலாளி வர்க்கத்தினரது அடிவருடிகள் (மென்ஷிவிக்குகள், வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், முதலானோர்) பின்பற்றி வரும் ஆத்திரமூட்டித் தூண்டி விடும் கொள்கையையும் சேர்த்துக் கொண்டோமானால், மக்களது மனப்பாங்கில் முழு அளவிலான மாற்றத்தை உண்டாக்கி, ஒழுங்கும் கட்டுப்பாடும் வாய்ந்த உழைப்புக்குரிய சரியான பாதைக்கு அவர்களை இட்டுவர ஆகச் சிறந்த மிக அதிகமான வர்க்க உணர்வுடைய தொழிலாளர்களும் விவசாயிகளும் எத்தகைய நீடித்த விடாப்பிடியான முயற்சிகளை எடுத்தாக வேண்டுமென்பது முற்றிலும் தெளிவாகும். பெருந்திரளான ஏழை மக்களால் (பாட்டாளிகளாலும் அரைப் பாட்டாளிகளாலும்) உண்டாக்கப் பெறும் மாற்றத்தால் தான் முதலாளி வர்க்கத்தார் மீதும் இன்னும் குறிப்பாய் மேலும் பிடிவாதமானோரும் எண்ணிக்கையில் அதிகமானோருமாகிய விவசாய முதலாளி வர்க்கத்தார் மீதும் ஆன வெற்றியை நிறைவு பெறச் செய்ய முடியும்.

## முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் புதிய கட்டம்

நமது நாட்டில் முதலாளி வர்க்கம் வெற்றி கொள்ளப் பட்டிருக்கிறது; ஆனால் இன்னும் அது வேரறுக்கப்படவில்லை, இன்னும் அது அழிக்கப்படவில்லை, அறவே தகர்க்கப் படக்கூட இல்லை. எனவேதான் நாம் முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் மேலும் உயர்வான ஒரு புதிய வடிவத்தை எதிர்நோக்குகிறோம்; மேலும் தொடர்ந்து முதலாளிகளை உடைமை நீக்கம் செய்யும் மிக எளிய பணியிலிருந்து, முதலாளி வர்க்கம் நிலவுவதை அல்லது இது மீண்டும் உதித்தெழுவதைச் சாத்தியமற்றதாக்கி விடும் நிலைமைகளைத் தோற்றுவிப்பதென்ற மிகவும் அதிக

சிக்கல் வாய்ந்த, கடினமான பணிக்கு மாறிச் செல்வதற்கான போராட்டமாகும் இது. இந்தப் பணி முந்தியதைக் காட்டிலும் அளவு கடந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பது தெளிவு; இந்தப் பணி நிறைவேற்றி முடிக்கப்படாத வரை சோஷலிசம் சாத்தியமன்று.

மேற்கு ஐரோப்பியப் புரட்சிகளின் அளவுகோலைக் கொண்டு நமது புரட்சியை அளவிடுவோமாயின், 1793லும் 1871லும் வந்தடையப் பெற்ற நிலையினைத் தற்போது நாம் ஏறத்தாழ வந்தடைந்திருப்பது தெரிய வரும். இந்த நிலைக்கு நாம் உயர்ந்துள்ளது குறித்தும் ஒரு விதத்தில் நிச்சயமாகவே இன்னும் கொஞ்சம் அதிகமாய் முன்னேறியிருப்பது குறித்தும்—அதாவது, மிக உயர்ந்த மாதிரி அரசான சோவியத் ஆட்சியதிகாரத்தை ருஷ்யாவெங்கும் ஆணை பிறப்பித்துப் புகுத்தியுள்ளோம் என்பது குறித்தும் —நியாயமாகவே நாம் பெருமை கொள்ளலாம். ஆயினும் இதுகாறும் சாதிக்கப் பெற்றுள்ளவை குறித்து எவ்விதத்திலும் நாம் திருப்தி கொண்டுவிட முடியாது; ஏனெனில் இப்போதுதான் நாம் சோஷலிசத்துக்கு மாறிச் செல்ல தொடங்கியிருக்கிறோம், இந்தத் திசையில் தீர்மானகரமான காரியத்தை நாம் இன்னமும் செய்தாகவில்லை.

பண்டங்களது உற்பத்தியிலும் வினியோகத்திலும் நாடு தழுவிய அளவில் மிகவும் கறாரான கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதுதான் தீர்மானகரமான காரியமாகும். ஆயினும், முதலாளி வர்க்கத்தினரிடமிருந்து நாம் எடுத்துக் கொண்ட நிறுவனங்களிலும் பொருளாதாரக் கிளைகளிலும் துறைகளிலும் கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் நாம் இன்னமும் புகுத்தியாகவில்லை; இது செய்யப்படாத வரை, சோஷலிசத்தைப் புகுத்துவதற்குத் தேவையான இரண்டாவதும், முதலாவதைப் போல் அதே அளவுக்கு அத்தியாவசியமானதுமாகிய பொருள்வகை நிபந்தனையைச் சாதிப்பது குறித்து—அதாவது, உழைப்பின் உற்பத்தித் திறனை தேச அளவில் உயர்த்துவதென்ற நிபந்தனையைச் சாதிப்பது குறித்து—நினைப்பதற்கே வழியில்லை.

ஆதலால்தான், மூலதனத்தை எதிர்த்துத் தொடர்ந்து தாக்குதல் நடத்துவது என்னும் எளிய சூத்திரத்தைக் கொண்டு தற்போது நம்முன்னுள்ள பணியினை வரையறுக்க

இயலவில்லை. மூலதனம் முற்றாக ஒழித்துக் கட்டப்படவில்லை என்பது மெய்தான் என்ற போதிலும், உழைப்பாளி மக்களது இந்தப் பகைவனை எதிர்த்துத் தொடர்ந்து தாக்குவது நிச்சயம் அவசியமே என்ற போதிலும், இம்மாதிரியான ஒரு சூத்திரம் கறாரானதல்ல, ஸ்தூலமானதல்ல; தற்போதைய சூழ்நிலையின் தனியியல்பைக் கணக்கிலெடுத்துக் கொள்வதாய் இல்லை — வருங்காலத்தில் தொடர்ந்து வெற்றிகரமாய் முன்னேறிச் செல்லும் பொருட்டு இப்போது நமது தாக்குதலைத் ''தற்காலிகமாய் நிறுத்தி வைப்பது'' அவசியமாய் இருக்கும் என்ற தனியியல்பைக் கணக்கிலெடுத்துக் கொள்வதாய் இல்லை.

ஓர் ஒப்புமை மூலம் இதனை விளக்கலாம்: மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தில் நாம் வந்தடைந்திருக்கும் நிலையானது, வெற்றிகர சேனை ஒன்று பகைவனது பிரதேசத்தில் உதாரணமாக ஒரு பாதியையோ மூன்றில் இரு பகுதியையோ பிடித்துக் கொண்ட பின் தனது படைகளை அணி திரட்டுதல், ஆயுத தளவாட இருப்புகளை அதிகரித்துக் கொள்ளுதல், போக்குவரத்து வசதிகளைச் சீராக்கி மேலும் உறுதியாக்கிக் கொள்ளுதல், புதிய கிடங்குகளை அமைத்தல், புதிய சேமப் படைகளைக் கொண்டு வருதல் முதலானவற்றைச் செய்து முடிக்கும் பொருட்டு மேலே முன்னேறிச் செல்வதைச் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்க வேண்டி வரும் நிலைக்கு ஒப்பானதாகும். வெற்றிகர சேனையானது மேற்கண்ட நிலைமைகளில் தனது தாக்குதலை நிறுத்தி வைப்பது அவசியமாவது எதன் பொருட்டெனில், பகைவனது பிரதேசத்தின் எஞ்சிய பகுதியையும் பிடிக்கும் பொருட்டுதான், அதாவது முழுநிறை வெற்றி பெறும் பொருட்டுதான். இத்தருணத்தில் எதார்த்த நிலவரங்கள் மூலதனத்துக்கு எதிரான தாக்குதல் இவ்விதம் ''தற்காலிகமாய் நிறுத்தப்படுவதை'' நெறியாணை செய்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுகிறவர்கள் தற்போதுள்ள அரசியல் நிலைமை குறித்து எதையுமே புரிந்து கொள்ளத் தவறுகிறவர்களே ஆவர்.

மூலதனத்துக்கு எதிரான தாக்குதல் ''தற்காலிகமாய் நிறுத்தப்பட'' வேண்டுமென்று மேற்கோள் குறிகளிட்டே, அதாவது உருவக முறையிலேயே குறிப்பிட வேண்டும்; இது

கூறுமலே விளங்கும் ஒன்று. சாதாரண யுத்தத்தில் தாக்குதலை நிறுத்தும்படிப் பொதுவான உத்தரவு பிறப்பிக்க முடியும்; முன்னேறுதல் மெய்யாகவே நிறுத்தப்பட முடியும். ஆனால் மூலதனத்துக்கு எதிரான யுத்தத்தில் முன்னேறுதல் நிறுத்தப்பட முடியாதது; மூலதனம் தொடர்ந்து மேலும் உடைமை நீக்கம் செய்யப்படுதலை நாம் கைவிடுவது என்பது நினைக்கவே முடியாத காரியம். நமது பொருளாதார, அரசியல் வேலைகளின் ஈர்ப்பு மையம் இடம் பெயருதல் குறித்தே இங்கு நாம் விவாதிக்கிறோம். உடைமை பறிப்போர் நேரடியாகவே உடைமை நீக்கம் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் இதுகாறும் முன்னணியில் இருந்தன. முதலாளிகள் ஏற்கெனவே உடைமை நீக்கம் செய்யப்பட்டுவிட்ட அந்த நிறுவனங்களிலும் மற்றும் ஏனைய எல்லா நிறுவனங்களிலும் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்யும் பணி இப்போது முன்னணிக்கு விரைகிறது.

இதுகாறும் நாம் செய்து வந்த அதே வேகத்தில் இனியும் தொடர்ந்து மூலதனத்தை உடைமை நீக்கம் செய்வதெனத் தீர்மானித்தோமாயின், நிச்சயம் நாம் தோல்வியுறவே செய்வோம்; ஏனெனில் பாட்டாளி வர்க்கக் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதற்கான நமது வேலையானது, ''உடைமை பறிப்போர் உடைமை நீக்கம் செய்யப்படும்'' நேரடி வேலையிலிருந்து பின்தங்கி விட்டது என்பது தெளிவாகவே தெரிகிறது — சிந்தனையுள்ள ஒவ்வொருவருக்கும் தெளிவாகவே தெரிகிறது. கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் ஒழுங்குபடுத்துவதில் இப்போது நாம் நமது முயற்சிகள் அனைத்தையும் ஒருமுனைப்படுத்துவோமாயின், இந்தப் பிரச்சினைக்கு நம்மால் தீர்வு காண முடியும்; இழக்க நேர்ந்த நேரத்தை ஈடுசெய்து கொள்ள முடியும்; மூலதனத்துக்கு எதிரான நமது ''போராட்டத்தில்'' நாம் முழுநிறை வெற்றி பெறுவோம்.

ஆனால் இழக்க நேர்ந்த நேரத்தை ஈடுசெய்து கொண்டாக வேண்டுமென நாம் ஒத்துக் கொள்வது ஏதோ பிழை புரிந்து விட்டதாய் ஒத்துக் கொள்வதற்குச் சமமாகாதா? இல்லவே இல்லை. இன்னொரு ராணுவ உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். குதிரைப் படைகளைக் கொண்டே பகைவனைத் தோற்கடித்துப் பின்னால் தள்ள முடியுமாயின், இது செய்யப்படவே வேண்டும். ஆனால் குறிப்பிட்ட ஒரு

வரம்பு வரையில்தான் இதனை வெற்றிகரமாகச் செய்ய முடியுமாயின், அப்போது அந்த வரம்பை வந்தடைந்ததும் கன பீரங்கிகளைக் கொண்டுவருவது அவசியமாகி விடலாம், இப்படி நேர்வது முற்றிலும் சாத்தியமே. கன பீரங்கிகளைக் கொண்டுவருவதில் இழக்க நேர்ந்த காலத்தை இப்போது சரிசெய்து கொண்டாக வேண்டுமென ஒத்துக் கொள்வதன் மூலம் வெற்றிகரமான குதிரைப் படைத் தாக்குதல் தவறானது என்று நாம் ஒத்துக் கொண்டுவிடவில்லை.

மூலதனத்தின் மீது ''செங்காவலர்'' தாக்குதல் தொடுத்த தற்காக முதலாளி வர்க்கத்தின் அடிவருடிகள் அடிக்கடி நம்மைக் கண்டனம் செய்தனர். இந்தக் கண்டனம் அபத்த மானது; பண மூட்டைகளின் அடிவருடிகளால் மட்டுமே செய்யப்படத் தக்கது. ஏனெனில் மூலதனத்தின் மீது ''செங் காவலர்'' தாக்குதல் தொடுப்பது ஒரு காலத்தில் சூழ்நிலை மைகளின் காரணமாய் அத்தியாவசியமாய் இருந்தது. முத லாவதாக, அந்தக் காலத்தில் மூலதனமானது கேரென்ஸ்கி மூலமும் கிரஸ்னேவ், சாவின்கவ், கோட்ஸ் மூலமும் (கெகெச்கோரி இப்போதுங்கூட இம்மாதிரியான எதிர்ப்பு காட்டி வருகிறார்) தூத்தவ், பொகயேவ்ஸ்கி மூலமும் ராணுவ எதிர்ப்பைத் தோற்றுவித்தது. இராணுவ எதிர்ப்பை ராணுவ வழியிலே அல்லாமல் வேறு எவ்விதத்திலும் முறி யடிக்க முடியாது. உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்களைச் சுரண்டலாளர்களது ஆதிக்கத்திலிருந்து விடு விக்கும் உன்னதமான, தலையாய வரலாற்று இலட்சியத்துக் காகச் செங்காவலர்கள் போராடினர்.

இரண்டாவதாக, அந்தக் காலத்தில் நம்மால் அடக்கி நசுக்கும் முறைகளுக்குப் பதிலாய் நிர்வாக முறைகளை முன் னணிக்குக் கொண்டுவர முடியவில்லை; ஏனெனில் நிர்வாகக் கலையானது அனுபவத்தின் வாயிலாகப் பெறப்படுவதே அன்றி இயல்பார்ந்த ஒன்றல்ல. அந்தக் காலத்தில் நாம் இந்த அனுபவம் இல்லாதோராய் இருந்தோம். இப்போது நாம் இதனை அடைந்திருக்கிறோம். மூன்றாவதாக, அறிவிய லின், தொழில்நுட்பத்தின் பல்வேறு துறைகளிலுமான நிபுணர்கள் அந்தக் காலத்தில் நம் வசம் இருக்கவில்லை; ஏனெனில் அந்நிபுணர்கள் பொகயேவ்ஸ்கிகளது அணிகளில் சேர்ந்து போராடிக் கொண்டிருந்தார்கள், அல்லது நாச வேலையின் மூலம் முறையாகவும் விடாப்பிடியாகவும் சாத்து

வீக எதிர்ப்பைத் தோற்றுவிக்க இயலும் நிலையில் இருந்தார்கள். இப்போது நாம் இந்த நாச வேலையைத் தகர்த்து விட்டோம். மூலதனத்தின் மீது ''செங்காவலர்'' தாக்குதல் வெற்றி கண்டது, வாகை சூடியது; மூலதனத்தின் ராணுவ எதிர்ப்பையும் நாச வேலை மூலமான அதன் எதிர்ப்பையும் நாம் தகர்த்திட்டோம்.

அப்படியானல், மூலதனத்தின் மீது ''செங்காவலர்'' தாக்குதல் **எப்போதுமே எல்லாச்** சூழ்நிலைமைகளிலும் சரியானதுதான் என்று பொருள் படுமா? மூலதனத்தை எதிர்த்துப் போராட நமக்கு வேறு வழி இல்லை என்ரு அர்த்தம்? இவ்வாறு நினைப்பது சிறுபிள்ளைத் தனமாகும். குதிரைப் படையின் துணை கொண்டு நாம் வெற்றியடைந்தோம்; ஆனல் நம்மிடம் கன பீரங்கிகளும் இருக்கின்றன. அடக்கி நசுக்கும் முறைகள் மூலம் நாம் வெற்றியடைந்தோம்; நிர்வாக முறைகள் மூலமும் நம்மால் வெற்றியடைய முடியும். பகைவனை எதிர்த்துப் போராடுவதற்கான நமது முறைகளைச் சூழ்நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப எப்படி மாற்றிக் கொள்வதென்று நாம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். சாவின்கவ்களையும் கெகெச்கோரிகளையும் ஏனைய எல்லா நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ எதிர்ப்புரட்சியாளர்களையும் ''செங்காவலர்'' முறையில் நசுக்கியடக்குவதைக் கணப் பொழுதுக்கும் நாம் கைவிட்டுவிடப் போவதில்லை. ஆனல் செங்காவலர் தாக்குதல்கள் தேவையாயிருந்த காலக் கூறு முடிவடைந்துவிட்ட (வெற்றிகர முடிவை அடைந்துவிட்ட) ஒரு நேரத்தில், எவ்வகையான முதலாளி வர்க்கமும் எழுச்சியுற்று வளருவதைத் தடுக்கும் பொருட்டு நிலத்தைத் திரும்பவும் உழுவதற்காகப் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரமானது முதலாளித்துவ நிபுணர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய காலக் கூறு வந்து சேர்ந்திருக்கும் ஒரு நேரத்தில் ''செங்காவலர்'' முறைகளை முன்னணியில் வைக்கும் அளவுக்கு நாம் முட்டாள் தனமாய் இருக்கப் போவதில்லை.

இது ஒரு தனியியல்பு வாய்ந்த சகாப்தம், அல்லது வளர்ச்சிக் கட்டம் என்பது இன்னும் பொருத்தமாயிருக்கும். மூலதனத்தை அறவே தோற்கடிக்கும் பொருட்டு நமது போராட்டத்தின் வடிவங்களை நாம் இந்தக் கட்டத்

தின் தனியியல்பு வாய்ந்த நிலைமைகளுக்குத் தகவமைத்துக் கொள்ளக் கூடியோராய் இருத்தல் வேண்டும்.

அறிவியல், தொழில்நுட்பம், அனுபவம் ஆகியவற்றின் பல்வேறு துறைகளையும் சேர்ந்த நிபுணர்களது வழிகாட்டலின்றி சோஷலிசத்துக்கு மாறிச் செல்லுதல் சாத்தியமன்று; ஏனென்றால் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் (முதலாளித்துவத்தால் சாதிக்கப் பெற்றுள்ளதன் அடிப்படையில்) முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் இன்னும் மேலான நிலைக்கு உணர்வு பூர்வமாய் பெருமளவிலான முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென சோஷலிசம் கோருகிறது. இந்த முன்னேற்றத்தைச் சோஷலிசமானது தனக்கே உரிய வழியில், தனக்கே உரிய முறைகளில் — அல்லது இதையே மேலும் ஸ்தூலமான வடிவில் சொல்வதெனில், சோவியத் முறைகளில்—சாதனை பெறச் செய்தாக வேண்டும். நிபுணர்களாக இருப்போர், அவர்களை நிபுணர்களாகச் செய்த சமூகச் சுற்றுச்சார்பு அனைத்தின் காரணமாய் தவிர்க்க முடியாதபடிப் பிரதானமாயும் முதலாளித்துவ இயல்பு வாய்ந்தோராய் இருக்கின்றனர். நமது பாட்டாளி வர்க்கமானது ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டதும் தேச அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஒழுங்கமைப்புக்கும் ஏற்பாடு செய்யும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கண்டிருந்தால் (போரின் காரணமாகவும் ருஷ்யாவின் பின்தங்கிய நிலையின் காரணமாகவும் இது சாத்தியமற்றதாகி விட்டது), நாம் நாச வேலையைத் தகர்த்து விட்ட பின்னர் இந்த முதலாளித்துவ நிபுணர்களைச் சர்வவியாபகமான கணக்குப் பதிவின் மூலமும் கண்காணிப்பின் மூலமும் பூரணமாக நமக்குக் கீழ்ப்படியுமாறு செய்திருக்கலாம். பொதுவாகக் கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் புகுத்துவதில் கணிசமான ''தாமதம்'' ஏற்பட்டு விட்டதனால், நாச வேலையை நாம் வெற்றி கொண்டுங்கூட, இன்னும் நாம் முதலாளித்துவ நிபுணர்களை நமது செயலாட்சியின் கீழ் வரச் செய்வதற்கான நிலைமைகளைத் தோற்றுவித்தாகவில்லை. நாச வேலையினரில் பெருந்திரளானோர் ''வேலைக்கு வருகிறார்கள்''; ஆனால் சிறந்த ஒழுங்கமைப்பாளர்களையும் உயர்படியிலுள்ள நிபுணர்களையும் அரசானது, ஒன்று பழைய வழியில், முதலாளித்துவ வழியில் (அதாவது, உயர்ந்த சம்பளங்கள் கொடுத்து) உப

யோகித்துக் கொள்ள முடியும், அல்லது புதிய வழியில், பாட்டாளி வர்க்க வழியில் (அதாவது, கீழிருந்து தேச அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்குமான நிலைமை களைத் தோற்றுவித்து தவிர்க்க முடியாத வகையில் தானு கவே இவ்விதம் நிபுணர்களைக் கீழ்ப்படியச் செய்து நமது வேலைகளில் அவர்களை அமர்த்தி) உபயோகித்துக் கொள்ள முடியும்.

இப்போது நாம் பழைய, முதலாளித்துவ வழியை மேற் கொண்டு உயர்படியிலுள்ள முதலாளித்துவ நிபுணர்களது ''சேவைக்காக'' மிக உயர்ந்த விலை கொடுக்க உடன்பட் டாக வேண்டியிருக்கிறது. இந்த விவகாரம் குறித்து பரிச் சயமுள்ளவர்கள் எல்லோரும் இதனைச் சரியாகக் கணித் திருக்கிறார்கள்; ஆனால் பாட்டாளி வர்க்க அரசால் இந்த நடவடிக்கை ஏற்கப்படுவதின் உட்பொருள் குறித்து எல் லோரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இந்த நடவடிக்கை ஒரு சமரசமே என்பது தெளிவு; எல்லாச் சம்பளங்களும் சராசரித் தொழிலாளிச் சம்பளங்களுக்குச் சரிமட்டமாகக் குறைக்கப்பட வேண்டுமெனக் கோரி தன்னல நாட்டத்தைச் சொல்லளவில் அல்ல, செயலில் எதிர்த்துப் போராட வேண்டுமென வற்புறுத்துவதுமான பாரிஸ் கம்யூன்[18] கோட்பாடுகளிலிருந்தும் எல்லா பாட்டாளி வர்க்க அரசின் கோட்பாடுகளிலிருந்தும் விலகிச் செல்லுதலே ஆகும்.

தவிரவும், இந்த நடவடிக்கை மூலதனத்துக்கு எதிரான தாக்குதல் ஒரு குறிப்பிட்ட துறையில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நிறுத்தி வைக்கப்படுவதை உணர்த்துவது (ஏனெனில் மூலதனம் ஒரு பணத் தொகை அல்ல, மாறுக ஒரு திட்டவட்டமான சமூக உறவாகும்) மட்டுமன்றி, உயர்ந்த சம்பளங்களைச் சராசரித் தொழிலாளிச் சம்பளங் களுக்குச் சரிமட்டமாகக் குறைத்திடும் கொள்கையை[19] ஆரம்பம் தொட்டே பிரகடனம் செய்தும் பின்பற்றியும் வந் துள்ள நமது சோஷலிஸ்டு சோவியத் அரசாட்சி ஓரடி பின் னேக்கி எடுத்து வைப்பதையும் உணர்த்தும் என்பது தெளிவு.

முதலாளி வர்க்கத்தின் அடிவருடிகள், முக்கியமாய் மென்ஷிவிக்குகளையும் நோவயா ழீஸ்ன் ஆதரவாளர்களையும் வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களையும் போன்ற சில்லரைப் பேர்வழிகள், ஓரடி பின்னேக்கி எடுத்து வைக்கிறோம் என்ற நமது குறை ஏற்புக் குறித்துக் கொக்

கரிப்பார்கள் என்பது மெய்தான். ஆனால் இவர்களது கொக்கரிப்புப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. நமது தவறுகளையும் பலவீனங்களையும் மூடி மறைக்காமல் நாம் சோஷலிசத்தை அடைவதற்கான மிகமிகக் கடினமான புதிய பாதையின் பிரத்தியேக இயல்புகளை ஆராய்ந்தாக வேண்டும்; செய்யாமல் விட்டு வைக்கப்பட்டவற்றைத் தாமதமின்றி செய்து முடிக்க முயல வேண்டும். மிதமிஞ்சிய உயர்ந்த சம்பளங்கள் மூலம் முதலாளித்துவ நிபுணர்களை ஈடுபடுத்திக் கொள்வது பாரிஸ் கம்யூனின் கோட்பாடுகளிலிருந்து விலகிச் செல்லுதலாகும் என்பதை மக்களிடமிருந்து மூடி மறைப்பது முதலாளித்துவ அரசியலாளர்களது இழிநிலைக்குச் சரிந்து விடுவதும் மக்களை ஏமாற்றுவதுமே ஆகும். எதற்காக, ஏன் நாம் ஓரடி பின்னேக்கி எடுத்து வைக்கிறேம் என்பதை ஒளிவுமறைவின்றி விளக்கிச் சொல்லி, இழந்த நேரத்தைச் சரி செய்வதற்குக் கிடைக்கக் கூடிய வழிமுறைகள் என்னவென்று இதன் பிறகு பகிரங்கமாய் விவாதிப்போமாயின், அதன் பொருள் மக்களுக்குப் போதனையளிக்கிறேம், அனுபவத்திலிருந்து கற்றறிந்து கொள்கிறேம், சோஷலிசத்தை எப்படிக் கட்டியமைப்பதென்று மக்களுடன் சேர்ந்து பயின்று கொள்கிறேம் என்பதாகும். வெற்றியாளர் சிற்சில தவறுகளைப் புரிந்திராத, பகுதியளவிலான பின்னடைவுகளுக்கு ஆட்படாத, தற்காலிகமாக எதையேனும் விட்டுக் கொடுக்கவும் சில இடங்களில் பின்வாங்கவும் நேர்ந்திராத வெற்றிகரமான ராணுவப் போர்ச் செயல் எதையும் வரலாற்றில் காண்பது அரிது. முதலாளித்துவத்தை எதிர்த்து நாம் நடத்தி வரும் ''போர்ச் செயல்'' மிகமிகக் கடினமான ராணுவப் போர்ச் செயலையும் விட பத்து லட்சம் மடங்கு அதிகக் கடினமானது; பகுதியளவிலான குறிப்பிட்ட ஒரு பின்வாங்குதலுக்காக மனச் சோர்வுக்கு இடந்தருவது மடமையாகும், வெட்கக்கேடாகும்.

இப்போது நாம் நடைமுறைக் கண்ணேட்டத்திலிருந்து இந்தப் பிரச்சினையை விவாதிக்கலாம். முடியுமான முழு வேகத்தில் பொருளாதாரப் புத்தாக்கத்தை அடைவதற்கான திசையிலே மக்களது உழைப்பை நெறியாண்மை புரியும் பொருட்டு ருஷ்யாவின் சோவியத் குடியரசுக்கு அறிவியல், தொழில்நுட்பம், நடைமுறை அனுபவம் ஆகிய

வற்றின் பல்வேறு துறைகளிலும் ஆன முதல் தரமான விஞ்ஞானிகள், நிபுணர்கள் ஆயிரம் பேர் தேவைப்படுவதாக வைத்துக் கொள்வோம். இந்த ''முதல்தரத் தாரகைகளுக்கு'' ஆண்டு தோறும் தலைக்கு 25,000 ரூபிள் வீதம் தர வேண்டியிருப்பதாக வைத்துக் கொள்வோம்—தொழிலாளர்களிடம் ஊழல் மலிந்து விட்டதாய் யாவரிலும் பலமாகக் கூச்சலிடுவோரில் பெரும்பாலானோர் முதலாளித்துவ நெறிமுறைகளால் படுமோசமாகச் சீரழிக்கப்பட்டு ஊழலில் மூழ்கியவர்களே ஆவர். இந்த மொத்தத் தொகை (2,50,00,000 ரூபிள்) இரட்டிப்பாக்கப்பட வேண்டுமென வைத்துக் கொள்வோம் (மிகவும் முக்கியமான ஒழுங்கமைப்புப் பணிகளும் தொழில்நுட்பப் பணிகளும் குறிப்பிடத்தக்க வெற்றியோடும் வேகத்தோடும் நிறைவேற்றப்படுகையில் போனசுகள் அளிக்க வேண்டியிருப்பதாகக் கொண்டால்); அல்லது நான்கு மடங்காகவுங்கூட அதிகமாக்கப்பட வேண்டுமென வைத்துக் கொள்வோம் (மேலும் அதிகமாக அவசியப்படும் அயல் நாட்டு நிபுணர்கள் சில நூறு பேரை நாம் வருவித்து ஈடுபடுத்த வேண்டியிருப்பதாகக் கொண்டால்). மக்களது உழைப்பை நவீன விஞ்ஞான, தொழில் நுட்ப வழிகளில் திருத்தியமைத்து ஒழுங்கு செய்வதற்காக சோவியத் குடியரசு ஐந்து அல்லது பத்து கோடி ரூபிள் வருடாந்தரச் செலவை ஏற்க நேர்வது அளவு மீறியதாகவோ, பெரும் சுமையாகவோ இருக்குமா என்பதே கேள்வி. நிச்சயமாய் அப்படி ஒன்றும் இருக்காது. வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்களிலும் விவசாயிகளிலும் மிகப் பெருவாரியானோர் இந்தச் செலவை ஆமோதிக்கவே செய்வார்கள்; ஏனெனில் நமது பின்தங்கிய நிலை காரணமாய் நாம் பல நூறு கோடிக் கணக்கில் இழக்கிறோம் என்பதும் முதலாளித்துவப் படிப்பாளிப் பகுதியின் ''தாரகைகள்'' எல்லோரையும் நமது வேலைகளில் சுய விருப்புடன் பங்கு கொள்ளுமாறு தூண்டும்படி, அந்த அளவு ஒழுங்கமைப்பையும் கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் நாம் இன்னமும் வந்தடையவில்லை என்பதும் நடைமுறை அனுபவத்தின் வாயிலாய் அவர்களுக்குத் தெரியும்.

இந்தப் பிரச்சினைக்கு மற்றொரு பக்கம் உண்டென்பது கூறாமலே விளங்கும். உயர்ந்த சம்பளங்கள் ஊழல்படுத்துகிறவை என்பது மறுக்க முடியாதது. இந்தப் புன்மைக்கு

சோவியத் அதிகாரிகள் மட்டுமல்ல (முக்கியமாய், புரட்சி யானது அதிவேகமாய் நடந்தேறியதால் சிற்சில சாகசக் காரர்களும் கயவர்களும் அதிகாரப் பதவிகளில் புகுவதைத் தடுக்க முடியவில்லை; இவர்களும் மற்றும் தகாத அல்லது நேர்மையற்ற கமிசார்கள் பலரும்... அரசு நிதிகளை மோசடி செய்வதில் ''முதல் தர நபர்களாய்'' விளங்கத் தயங்க மாட்டார்கள்) தொழிலாளர் பெருந்திரளினரும் இதற்கு இலக்காகி விடுவார். ஆனால் முதலாளித்துவம் நமக்கு விட்டுச் சென்றுள்ள இந்தத் தீமையை உடனடியாக ஒழித்துக் கட்டிவிட முடியாது; நம்மை ஒழுங்கமைத்துக் கொள்வதன் மூலம்தான், நமது அணிகளில் கட்டுப்பாட்டைக் கடுமை யாக்கிக் கொள்வதன் மூலம்தான், ''முதலாளித்துவம் விட்டுச் சென்றுள்ள ஆஸ்தியைப் பாதுகாத்து வருவோரும்'' ''முதலாளித்துவ மரபுகளைப் பின்பற்றி வருவோருமான'' எல்லோரையும், அதாவது சோம்பேறிகளையும் புல்லுருவி களையும் அரசு நிதிகளை (இப்போது எல்லா நிலங்களும் எல்லா ஆலைகளும் எல்லா ரயில்பாதைகளும் சோவியத் குடியரசின் ''அரசு நிதிகள்'' ஆகும்) கையாடுவோரையும் நமது அணிகளிலிருந்து களையெடுப்பதன் மூலமும்தான் சோவியத் குடியரசை ஐந்து கோடி அல்லது பத்து கோடி ரூபிள் வருடாந்தரக் ''கப்பம்'' (நாடு தழுவிய கணக்குப் பதிவு மற்றும் கண்காணிப்பைக் கீழ் மட்டத்தில் இருந்து ஒழுங்கமைப்பதிலான நமது பின்தங்கிய நிலைமைக்குச் செலுத்தும் கப்பம்) செலுத்தும் கடப்பாட்டிலிருந்து நாம் விடுவிக்க முடியும்—சிந்தனையுள்ள நேர்மையான ஒவ்வொரு தொழிலாளியும் ஏழை விவசாயியும் இதில் நம்முடன் உடன்படுவார், இதனை ஒத்துக் கொள்வார். வர்க்க உணர்வு படைத்த முன்னேறிய தொழிலாளர்களும் ஏழை விவசாயி களும் சோவியத் நிறுவனங்களின் துணை கொண்டு கட்டுப் பாடு மிக்கவர்களாகி, தம்மை ஒருங்கிணைத்துக் கொண்டு, ஓராண்டில் சக்தி வாய்ந்த உழைப்புக் கட்டுப்பாட்டினைத் தோற்றுவிப்பார்களாயின், பிறகு ஓராண்டில் நாம் இந்தக் ''கப்பத்தை'' உதறியெறிந்து விடலாம்; இதற்கும் முன்பே கூட நாம் இதனைக் குறைத்துக் கொள்ள முடியும்... நமது தொழிலாளர்கள், விவசாயிகளது உழைப்புக் கட்டுப்பாட் டிலும் ஒழுங்கமைப்பிலும் நாம் சாதிக்கும் வெற்றிகளுக்குத் தகுந்த விகிதத்தில் இதனைக் குறைத்துக் கொள்ள முடி

யும். தொழிலாளர்களும் விவசாயிகளுமான நாம் முதலாளித்துவ நிபுணர்களை நமக்குக் கற்றுத் தரும்படி வைத்து சிறந்த உழைப்புக் கட்டுப்பாட்டையும் மிக நவீன உழைப்பு நுட்பத்தையும் எவ்வளவு சீக்கிரமாகக் கற்றறிந்து கொள்கிறோமோ, அவ்வளவு சீக்கிரமாய் இந்த நிபுணர்களுக்குச் செலுத்த வேண்டிய ''கப்பத்திலிருந்து'' நம்மைநாமே விடுவித்துக் கொள்வோம்.

பாட்டாளி வர்க்கத்தின் மேற்பார்வையில் பொருளுற்பத்திக்கும் வினியோகத்துக்கும் நாடு தழுவிய அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதற்கான நமது வேலை, உடைமை பறிப்போரை நேரடியாக உடைமை நீக்கம் செய்வதற்கான நமது வேலையிலிருந்து வெகுவாகப் பின்தங்கி விட்டது. தற்போதைய நிலைமையின் பிரத்தியேக இயல்புகளையும் இவற்றிலிருந்து பெறப்படும் சோவியத் அரசாங்கப் பணிகளையும் புரிந்து கொள்வதற்கு இந்த முன்கூற்று அடிப்படையான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முதலாளி வர்க்கத்துக்கு எதிரான நமது போராட்டத்தின் ஈர்ப்பு மையம் இத்தகைய கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதை நோக்கி இடம் பெயர்ந்து வருகிறது. இதனைத் துவக்க நிலையாகக் கொண்டால்தான், வங்கிகளை நாட்டுடைமை ஆக்குவதும் அயல் நாட்டு வாணிபத்தை ஏகபோகமாக்குவதும் பணப் புழக்கத்தை அரசின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவருவதும் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் திருப்திகரமாய் இருக்கக் கூடிய சொத்து மற்றும் வருமான வரியை அமுலுக்குக் கொண்டுவருவதும் கட்டாய உழைப்புச் சேவையைப் புகுத்துவதுமாகிய துறைகளில் பொருளாதார, நிதிக் கொள்கையின் உடனடிப் பணிகளைச் சரிவர நிர்ணயிக்க முடியும்.

இந்தத் துறைகளில் (மிகமிக முக்கிய துறைகள் இவை) சோஷலிசச் சீர்திருத்தங்களைப் புகுத்துவதில் நாம் வெகுவாகப் பின்தங்கியிருக்கிறோம்; கணக்குப் பதிவும் கண்காணிப்பும் பொதுவாகப் போதுமான அளவுக்கு ஏற்பாடு செய்யப்படாததுதான் இதற்குரிய காரணமாகும். இது மிகக் கடினமான பணிகளில் ஒன்றாகும் என்பதைக் கூறத் தேவையில்லை. யுத்தத்தால் உண்டான அழிவின் காரணமாய் நீண்ட காலப் போக்கிலேதான் இந்தப் பணியைச் செய்து முடிக்க

முடியும். இங்கேதான் முதலாளி வர்க்கத்தினர்—குறிப்பாயும், பெருமளவில் இருக்கும் குட்டி முதலாளித்துவ, விவசாய முதலாளித்துவப் பகுதியினர்—ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டு வரும் கண்காணிப்பைச் சீர்குலைத்தும் உதாரணமாகத் தானிய ஏகபோகத்தைச் சீர்குலைத்தும் இலாபக் கொள்ளைக்கும் ஊகவாணிபத்துக்குமான வசதி நிலைகளைக் கைப்பற்றியும் மிகக் கடுமையாய்ப் போராடுகின்றனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் பிறப்பித்துள்ள அரசாணைகளின்படிச் செய்யப்பட வேண்டிய காரியங்களைப் போதிய அளவில் நிறைவு செய்யாமல் பின்தங்கியிருக்கிறோம். ஏற்கெனவே சட்டமாகியுள்ள (ஆனால் இன்னும் எதார்த்த நடைமுறையாகாமல் இருந்து வரும்) சீர்திருத்தங்களின் அடிப்படைகளைக் காரியக் கண்ணோட்டத்துடன் நடைமுறையில் சித்தி பெறச் செய்வதில் எல்லா முயற்சிகளையும் ஒருசேர ஈடுபடுத்துவதுதான் தற்போதைய தலைமையான பணியாகும்.

வங்கிகளை நாட்டுடைமையாக்குதலைத் தொடர்ந்து நடத்திச் செல்லும் பொருட்டும் சோஷலிசத்தின் கீழ் பொதுக் கணக்குப் பதிவின் கணு மையங்களாக வங்கிகளை மாற்றுவதை நோக்கி உறுதியாக முன்செல்லும் பொருட்டும் மக்கள் வங்கியின் கிளைகளது எண்ணிக்கையை அதிகமாக்குவதிலும், வைப்புத் தொகைகளைக் கவர்ந்து இழுப்பதிலும், பொது மக்கள் வைப்புத் தொகைகள் செலுத்துவதையும் திருப்பியெடுப்பதையும் சுலபமாக்குவதிலும், நீள் வரிசைகளில் காத்திருக்க நேர்வதை ஒழித்திடுவதிலும், இலஞ்சம் வாங்குவோரையும் மோசடிக்காரர்களையும் பிடிப்பதிலும் சுடுவதிலும், இன்ன பிறவற்றிலும் முதலாவதாகவும் முக்கியமாகவும் நாம் மெய்யான வெற்றி பெற்றாக வேண்டும். முதலில் ஆக எளியவற்றை மெய்யாகவே செய்து முடித்தாக வேண்டும்; கிடைக்கக் கூடியவற்றைச் சரிவர ஒழுங்கு செய்தாக வேண்டும்; பிறகு அதிக சிக்கலான காரியங்களைச் செய்வதற்குத் தயாராக வேண்டும்.

ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் (தானியத்திலும் தோலிலும் பிறவற்றிலும்) அரசு ஏகபோகங்களை உறுதியாக நிலைபெறச் செய்தும் மேம்படுத்தியும் வர வேண்டும்; இவ்வாறு செய்வது மூலம் அயல் நாட்டு வாணிபத்தை அரசு ஏகபோகமாக்குவதற்குத் தயார் செய்தாக வேண்டும். இந்த

ஏகபோகம் இல்லையேல், ''கப்பம்'' செலுத்துவதன் மூலம் அன்னிய மூலதனத்திடமிருந்து ''நம்மை விடுவித்துக் கொள்ள'' முடியாது. சோஷலிசத்தைக் கட்டியமைப்பதற்கான சாத்தியப்பாடு, குறிப்பிட்ட ஓர் இடைக் காலகட்டத்துக்கு அன்னிய மூலதனத்துக்குக் குறிப்பிட்ட அளவிலான ''கப்பம்'' செலுத்துவதன் மூலம் நமது உள்நாட்டுப் பொருளாதாரச் சுயேச்சை நிலையைப் பாதுகாத்துக் கொள்கிறோமா என்பதையே முற்றிலும் சார்ந்திருக்கிறது.

பொதுவாக வரிகளையும், குறிப்பாக சொத்து, வருமான வரியையும் வசூலிப்பதிலும் நாம் வெகுவாகப் பின்தங்கி வருகிறோம். முதலாளி வர்க்கத்தாருக்கு இழப்பீட்டுத் தொகைகள் விதிப்பதானது—கோட்பாட்டு அளவில் இது முற்றிலும் அனுமதிக்கக் கூடியதும் பாட்டாளி வர்க்கத்தால் ஆமோதிக்கப்படத்தக்கதுமான நடவடிக்கையே—இத்துறையில் இன்னமும் நாம் நிர்வாக வழி முறைகளைக் காட்டிலும் அதிகமாய் போர்நடப்பு வழி முறைகளுக்குத்தான் (ருஷ்யாவைச் செல்வந்தர்களிடமிருந்து ஏழையெளியோருக்கு வென்று கொள்வதற்கானவை) அருகாமையில் இருக்கிறோம் என்பதையே காட்டுகிறது. ஆனால் மேலும் வலிமை வாய்ந்தோராகும் பொருட்டும் மேலும் உறுதியாகக் காலூன்றி நிற்கும் பொருட்டும் பின்கூறிய முறைகளையே நாம் கடைப்பிடிக்க வேண்டும்; முதலாளி வர்க்கத்தாருக்கு விதிக்கப்படும் இழப்பீட்டுத் தொகைகளுக்குப் பதிலாய் நாம் தொடர்ச்சியாகவும் முறையாகவும் சொத்து, வருமான வரி வசூலிப்பைக் கைக்கொள்ள வேண்டும். இந்த வரி வசூலிப்பு பாட்டாளி வர்க்க அரசுக்கு மேலும் கூடுதலான வரவு கிடைக்கச் செய்யும்; நம் தரப்பில் மேலும் சிறப்பான ஒழுங்கமைப்பினையும், மேலும் சிறப்பான கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் இது கோருகின்றது.

கட்டாய உழைப்புச் சேவையைப் புகுத்துவதிலும் நாம் கால தாமதம் செய்திருப்பதானது, தற்போது முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் பணி சரி நுட்பமாயும் தயாரிப்பு-ஒழுங்கமைப்பு வேலையேதான் என்பதைக் காட்டுகிறது. இந்த வேலை ஒரு புறத்தில் நமது சாதனைகளை முடிவாக உறுதி பெறச் செய்யும்; மறு புறத்தில், மூலதனத்தைச் ''சூழ்ந்து கொள்வதற்கும்'' அதைச் ''சரணடையும்படி''

பலவந்தம் செய்வதற்குமான பணித் திட்டத்துக்குத் தயார் செய்யும் பொருட்டு இது அவசியமாகும். உடனடியாக நாம் கட்டாய உழைப்புச் சேவையைப் புகுத்த முற்பட்டாக வேண்டும்; ஆனால் ஒவ்வொரு படியையும் நடைமுறை அனுபவத்தைக் கொண்டு சோதித்துப் பார்த்தும் செல்வந்தர்களுக்குக் கட்டாய உழைப்புச் சேவையை முதற்கண் புகுத்தியும்தான் படிப்படியாகவும் சுற்றிலும் கவனித்து எச்சரிக்கையோடும் இதனைச் செய்ய வேண்டும். நாட்டுப் புற முதலாளி வர்க்கத்தார் உட்பட முதலாளி வர்க்கத்தார் ஒவ்வொருவருக்கும் வேலைப் பதிவு, நுகர்வாளர் வரவு செலவுப் பதிவுக் கையேட்டுப் புத்தகங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதானது, பகைவனை முழு அளவுக்குச் ''சூழ்ந்து கொள்வதை'' நோக்கியும் பண்டங்களின் உற்பத்தியிலும் வினியோகத்திலும் மெய்யாகவே மக்கள் பாணி கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் நிறுவுவதை நோக்கியும் எடுக்கப்படும் ஒரு முக்கிய நடவடிக்கையாக இருக்கும்.

### நாடு தழுவிய அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்குமான போராட்டத்தின் முக்கியத்துவம்

மக்களை ஒடுக்குவதற்கும் சூறையாடுவதற்குமான உறுப்பாகப் பல நூறு ஆண்டுகளாய் இருந்து வந்திருக்கும் அரசானது, அதனுடன் சம்பந்தப்பட்டவை யாவற்றின் மீதும் மக்களுக்குள்ள கட்டுக்கடங்காத பகைமையையும் சந்தேகத்தையும் நமக்கு மரபாக விட்டுச் சென்றிருக்கிறது. இவற்றை எதிர்த்து நின்று சமாளிப்பது மிகவும் கடினமாகும்; சோவியத் அரசாட்சி ஒன்றால் மட்டுமே இதனைச் செய்ய முடியும். இதனாலுங்கூட இதனைச் செய்து முடிக்க மிகுந்த காலமும் பேரளவான விடாமுயற்சியும் தேவையாய் இருக்கும். கணக்குப் பதிவு, கண்காணிப்புப் பிரச்சினையில்—முதலாளி வர்க்கம் வீழ்த்தப்பட்டதும் மறு தினமே சோஷலிசப் புரட்சியை எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினையாகிய இதில்—மேற்கூறிய ''மரபு'' மிகவும் குறிப்பான அளவுக்குக் கடுமையாக இருந்து வருவது புலப்படுகிறது. பிரபுக்களும் முதலாளி வர்க்கத்தினரும் வீழ்த்தப்பட்டிருப்பதால் மக்கள் முதன் முதலாய் இப்போது தாம் சுதந்திர

மடைந்திருப்பதை உணருகிருர்கள். பண்டங்களின் உற்பத்தியிலும் வினியோகத்திலும் விரிவான அரசுக் கணக்குப் பதிவும் கண்காணிப்பும் இல்லையேல் உழைப்பாளி மக்களது ஆட்சியதிகாரத்தையும் உழைப்பாளி மக்களது சுதந்திரத்தையும் கட்டிக்காக்க முடியாது, திரும்பவும் முதலாளித்துவ ஆதிக்கத்துக்குள் வருவது தவிர்க்க முடியாதது என்பதை இம்மக்கள் புரிந்து கொள்வதற்கும் —புத்தகங்களிலிருந்தல்ல, தமது சொந்த சோவியத் அனுபவத்திலிருந்து புரிந்து கொள்வதற்கும் — உணர்வதற்கும் தவிர்க்க முடியாதபடிச் சிறிதளவு காலம் ஆகத்தான் செய்யும்.

முதலாளி வர்க்கத்தின், குறிப்பாகக் குட்டி முதலாளித்துவப் பகுதியோரின் பழக்கவழக்கங்கள், மரபுகள் எல்லாம் அரசுக் கண்காணிப்பை எதிர்ப்பனவாகவும் ''புனிதமான தனியார் சொத்தும்'' ''புனிதமான'' தனியார் தொழில் முயற்சியும் கேடின்றிப் பாதுகாக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறவையாகவும் இருக்கின்றன. அராஜகவாதமும் அராஜக-சிண்டிக்கலிசமும் முதலாளித்துவப் போக்குகளாகுமென்ற மார்க்சிய ஆராய்ச்சியுரை எவ்வளவு சரியானது என்பதும் சோஷலிசத்துக்கும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கும் கம்யூனிசத்துக்கும் எப்படி இவை சிறிதும் ஒவ்வாதவாறு நேர்முரணனவை என்பதும் என்றையும் விட இப்போது நமக்குத் தெளிவாக விளங்குகின்றன. சோவியத், அரசுக் கண்காணிப்பு, கணக்குப் பதிவு என்னும் கருத்தினை மக்கள் மனத்தில் பதிய வைப்பதற்காகவும் இந்தக் கருத்தினை நடைமுறைச் செயலாக்குவதற்காகவும் போராடுவது, உணவையும் உடைகளையும் கொள்முதல் செய்தல் ''தனியாரது'' விவகாரமாகுமென்றும் வாங்குதலும் விற்றலும் ''என்னை மட்டுமே பொறுத்த நடவடிக்கையாகுமென்றும்'' கருதுமாறு மக்களுக்குக் கற்று தந்த கேடுகெட்ட அந்தப் பழங்காலத்திலிருந்து துண்டித்துக் கொள்வதற்காகப் போராடுவது உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெரும் போராட்டமாகும்; சோஷலிஸ்டு உணர்வுக்கும் முதலாளித்துவ-அராஜகவாதத் தன்னியல்புக்கும் இடையிலான போராட்டமாகும்.

தொழிலாளர்கள் மூலமான கண்காணிப்பை நாம் சட்டமாக இயற்றியுள்ளோம்; ஆனல் இந்தச் சட்டம் இப்

போதுதான் செயல்பட ஆரம்பித்திருக்கிறது, பாட்டாளி வர்க்கத்தின் விரிவான பகுதியோரின் மனத்துள் இப்போது தான் ஊடுருவத் தலைப்பட்டிருக்கிறது. பண்டங்களது உற்பத்தியிலும் வினியோகத்திலும் கணக்குப் பதிவும் கண்காணிப்பும் இல்லையேல், அது சோஷலிசத்தின் மூலக் கருத்துக்கள் மடிந்தொழிவதைக் குறிப்பதாகும் என்பதை, அரசு நிதிகள் களவாடப்படுதலைக் குறிப்பதாகும் என்பதை (ஏனெனில் எல்லாச் சொத்துக்களும் அரசுக்கு உரியவை; இந்த அரசானது உழைப்பாளி மக்களில் பெருவாரியானோருக்கு ஆட்சியதிகாரம் உரியதாயுள்ள சோவியத் அரசாகும்) போதிய அளவுக்கு நமது கிளர்ச்சிப் பிரசாரத்தில் நாம் விளக்கிக் கூறுவதில்லை; கணக்குப் பதிவிலும் கண்காணிப்பிலும் கருத்தின்றி இருப்பது ஜெர்மானிய, ருஷ்யக் கர்னீலவ்களுக்கு நேரடியாக உதவுவதும் உடந்தையாய் இருப்பதுமே ஆகுமென்பதையும் கணக்குப் பதிவு, கண்காணிப்புப் பணியைச் சமாளிக்க நாம் தவறும் போது மட்டுமே தான் இந்தக் கர்னீலவ்களால் உழைப்பாளி மக்களது ஆட்சியதிகாரத்தைக் கவிழ்க்க முடியுமென்பதையும் இவர்கள் நாட்டுப் புற முதலாளி வர்க்கத்தார் அனைவரின் உதவியோடும் காடேட்டுகள், மென்ஷிவிக்குகள், வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஆகியோரது உதவியோடும் ''பதுங்கிக் காத்திருக்கிறார்கள்'', நம்மைத் தாக்குவதற்கு எப்போது தக்க தருணம் வருமெனக் காத்துக் கொண்டிருக்கிறார்களென்பதையும் போதிய அளவுக்கு நாம் விளக்கிக் கூறுவதில்லை; முன்னேறிய தொழிலாளர்களும் விவசாயிகளும் இதைப் பற்றி போதிய அளவுக்குச் சிந்திக்காமலும் பேசாமலும் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் கண்காணிப்பு நடைமுறை உண்மையாகும் வரை, முன்னேறிய தொழிலாளர்கள் இந்தக் கண்காணிப்பை மீறுவோருக்கும் கண்காணிப்பு விவகாரங்களில் கருத்தில்லாதோருக்கும் எதிராய் வெற்றிகரமான, ஈவிரக்கமில்லாத போராட்டத்துக்கு ஏற்பாடு செய்து இதனை நடத்தி முடிக்கும் வரை, சோஷலிசத்தை நோக்கி முதலாவது படியிலிருந்து (தொழிலாளர்கள் கண்காணிப்பிலிருந்து) இரண்டாவது படிக்குச் செல்வது, அதாவது உற்பத்தியைத் தொழிலாளர்கள் ஒழுங்கமைத்திடுவதற்குச் செல்வது, முடியாத காரியம்.

வலைப்பின்னல் போல் அமைந்த உற்பத்தியாளர்-நுகர்

வாளர் கம்யூன்களாகவே சோஷலிச அரசு எழ முடியும். இந்தக் கம்யூன்கள் தமது உற்பத்தியையும் நுகர்வையும் மனச்சாட்சி பூர்வமாகக் கணக்குப் பதிவு செய்யும், உழைப்புச் செலவைச் சிக்கனம் செய்யும், உழைப்பின் உற்பத்தித் திறனை இடையறாது உயர்த்தும்; இவ்விதம் இவை வேலை நேரத்தை ஏழு மணியாகவும் ஆறு மணியாகவும் இன்னுங்கூட குறைவாகவும் குறைத்துச் செல்வதற்கு வகை செய்யும். **தானியத்தின், தானிய உற்பத்தியின்** (பிற்பாடு ஏனைய எல்லா அவசியப் பண்டங்களினதும்) மிகக் கறாரான, நாடு தழுவிய அளவிலான, விரிவான கணக்குப் பதிவும் கண்காணிப்பும் நடந்தேறினாலன்றி, எதையும் சாதித்துவிட முடியாது. பண்டங்களது வினியோகத்தின் கணிசமான அளவிலான கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் நாம் மாறிச் செல்வதற்கு உதவி புரியக் கூடிய வெகுஜன நிறுவனங்களை, அதாவது நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங்களை முதலாளித்துவம் நமக்கு விட்டுச் சென்றுள்ளது. முன்னேறிய நாடுகளில் இருப்பது போல் ருஷ்யாவில் இந்தச் சங்கங்கள் அவ்வளவு நன்றாய் வளர்ச்சியடைந்திருக்கவில்லை என்றாலுங்கூட, இவை ஒரு கோடிக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டவை. சில நாட்களுக்கு முன்பு பிறப்பிக்கப்பட்ட நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய அரசாணை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த புலப்பாடாகும்; இது தற்போதைய சோவியத் சோஷலிசக் குடியரசின் விசேஷ நிலையையும் பிரத்தியேகப் பணிகளையும் பளிச்செனத் தெரியும்படி படம் பிடித்துக் காட்டுவதாகும்.

இந்த அரசாணை முதலாளித்துவக் கூட்டுறவுச் சங்கங்களோடும் இன்னமும் முதலாளித்துவக் கண்ணோட்டத்தையே அனுசரித்து வரும் தொழிலாளர்களது கூட்டுறவுச் சங்கங்களோடும் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடாகும். இது ஓர் உடன்பாடு அல்லது சமரசமே ஆகும்; ஏனெனில் முதலாவதாக, மேற்கூறிய நிலையங்களின் பிரதிநிதிகள் இந்த அரசாணையை விவாதிப்பதில் பங்கு கொண்டதோடன்றி, உண்மையில் இந்த விவகாரத்தை முடிவு செய்வதிலும் தீர்மானகரமான பங்கு வகித்தனர்; இந்நிலையங்களால் கடுமையாக எதிர்க்கப்பட்ட அரசாணையின் பகுதிகள் கைவிடப்பட்டன. இரண்டாவதாக, சமரசத்தின் சாரம் என்னவெனில், நுழைவுக் கட்டணம் இல்லாமலே கூட்டுறவுச்

சங்கங்களில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டு மென்ற கோட்பாட்டினை (இது ஒன்றே முரணற்ற பாட்டாளி வர்க்கக் கோட்பாடு) சோவியத் அரசாங்கம் கைவிட்டுள்ளது; குறிப்பிட்ட வட்டாரத்தில் மக்கள் அனைவரையும் ஒரேயொரு கூட்டுறவுச் சங்கத்தில் ஒன்றுபடச் செய்வதென்ற கருத்தினையும் சோவியத் அரசாங்கம் கைவிட்டுள்ளது. இதுதான் சோஷலிசக் கோட்பாடு, வர்க்கங்களை ஒழித்திடும் பணிக்கு உகந்த கோட்பாடு—இந்தக் கோட்பாட்டுக்கு முரணாய் ''தொழிலாளி வர்க்கக் கூட்டுறவுச் சங்கங்கள்'' (இங்கே இவை ''வர்க்கச்'' சங்கங்களாகத் தம்மைக் கூறிக் கொள்கின்றன என்றால், முதலாளிகளது வர்க்க நலன்களுக்கு இவை தம்மைக் கீழ்ப்படுத்திக் கொள்வதுதான் அதற்குரிய காரணம்) தொடர்ந்து நிலவுவதற்கு அவற்றுக்கு உரிமை அளிக்கப்பட்டது. முடிவில், முதலாளி வர்க்கத்தினரைக் கூட்டுறவுச் சங்கங்களது நிர்வாகக் குழுக்களிலிருந்து அறவே வெளியேற்றிவிட வேண்டுமென்ற சோவியத் அரசாங்க யோசனையும் வெகுவாய் மாற்றப்பட்டது; தனியார் முதலாளித்துவ வாணிப, தொழில் நிலையங்களது உடைமையாளர்கள் மட்டும்தான் நிர்வாகக் குழுக்களில் இடம் பெறலாகாதெனத் தடை விதிக்கப்பட்டனர்.

பாட்டாளி வர்க்கமானது சோவியத் ஆட்சியதிகாரத்தின் மூலம் செயல்பட்டு தேச அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்திருந்தால், அல்லது இத்தகைய கண்காணிப்புக்குரிய அடிப்படையையேனும் அமைத்திருந்தால், இம்மாதிரியான சமரசங்களைச் செய்வது அவசியமாய் இருந்திருக்காது. சோவியத்துக்களது உணவு இலாகாக்களின் மூலம், சோவியத்துக்களின் கீழ் உள்ள வழங்கீட்டு நிறுவனங்களின் மூலம் பாட்டாளி வர்க்க நிர்வாகத்தில் அமைந்த ஒரே கூட்டுறவுச் சங்கத்தில் தேச மக்களை நாம் ஒழுங்கமைத்திருப்போம். முதலாளித்துவக் கூட்டுறவுச் சங்கங்களின் உதவியில்லாமலே நாம் இதைச் செய்திருப்போம்; தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முதலாளித்துவக் கூட்டுறவுச் சங்கங்களை முழு அளவில் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டு இரண்டையும் ஒன்றாக இணைத்து நிர்வாகம் அனைத்தையும் செல்வந்தர்களது நுகர்வினை மேற்பார்வையிடுதலையும் தமது சொந்தக் கரங்களில் எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, முதலாளித்துவச்

சங்கங்களுடன் கூட அவற்றின் பக்கத்தில் நிலவும் தொழிலாளர் சங்கங்களாய் இருந்து வரும்படி ஏவிவிடும் முழுக்க முழுக்க முதலாளித்துவத் தன்மையதான கோட்பாட்டுக்கு எவ்விதத்திலும் விட்டுக் கொடுக்காமலே இதைச் செய்திருப்போம்.

முதலாளித்துவக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இம்மாதிரி உடன்பாடு செய்து கொள்கையில் சோவியத் ஆட்சியதிகாரம் தற்போதைய வளர்ச்சிக் கட்டத்தில் தனது போர்த்தந்திரக் குறிக்கோள்களையும் தனக்குரிய விசேஷ செயல்முறைகளையும் பின்வருமாறு ஸ்தூல முறையில் வரையறுத்துக் கூறியது: முதலாளித்துவ நபர்களை நெறியாண்மை செய்தும், அவர்களைப் பயன்படுத்தியும், சிற்சில வழிகளில் ஓரளவுக்கு அவர்களுக்கு சலுகைகள் தந்தும் மேலும் முன்னேற்றம் ஏற்படுவதற்கான நிலைமைகளைத் தோற்றுவிப்போம்; இந்த முன்னேற்றம் முதலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மெதுவானதாய் இருப்பினும், மேலும் திடமானதாய், போக்குவரத்தின் அடித்தளமும் வழிகளும் மேலும் உறுதி வாய்ந்தனவாய், வென்று கொள்ளப் பட்டுள்ள நிலைகள் மேலும் நல்லபடி வலுவூட்டப் பெற்றனவாய் இருக்கும். சோஷலிசக் கட்டுமானத் துறையில் சோவியத்துக்கள் தமது வெற்றிகளை ஏனைய பலவற்றுக்கும் இடையில் இப்போது தெளிவான, எளிய, நடைமுறைத் தரங்களைக் கொண்டு—அதாவது, எத்தனைக் குடிவாழ் கூட்டுக்களில் (கம்யூன்கள் அல்லது கிராமங்கள், வீட்டுத் தொகுதிகள் முதலானவை) கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப் பட்டுள்ளன, எந்த அளவுக்கு அவற்றின் வளர்ச்சி அனைத்து மக்களையும் தழுவும் நிலையை வந்தடைந்திருக்கிறது என்பவற்றைக் கொண்டு—அளவிட முடியும் (அளவிடவும் வேண்டும்).

## உழைப்பின் உற்பத்தித் திறனை உயரச் செய்தல்

ஒவ்வொரு சோஷலிசப் புரட்சியிலும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் பிரச்சினைக்குப் பாட்டாளி வர்க்கம் தீர்வு கண்டுவிட்ட பிறகு, உடைமை பறிப்போரை உடைமை நீக்கம் செய்து அவர்களது எதிர்ப்பை நசுக்கும் பணி பிரதானமாய் எந்த அளவுக்குச் செய்து முடிக்கப்பட்டுள்

ளதோ அதற்கு ஏற்ப, முதலாளித்துவத்தை விட மேலான ஒரு சமூக அமைப்பினைத் தோற்றுவிக்கும் அடிப்படை பணி—அதாவது, உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதும் இது சம்பந்தமாகவும் (இதன் பொருட்டும்) உழைப்பின் மேலும் சிறப்பான ஒழுங்கமைப்பினை உறுதி செய்து கொள்வதுமாகிய பணி—இன்றியமையாதவாறு முன்னணிக்கு வருகிறது. கேரென்ஸ்கியிலிருந்து கர்னீலவ் வரையில் சுரண்டலாளர்கள் மீது பெறப்பட்ட வெற்றிகளின் விளைவாய் நமது சோவியத் ஆட்சியதிகாரம் இந்தப் பணியினை நேரடியாய் அணுகவும் முழு முனைப்புடன் இதனை ஏற்றுச் சமாளிக்கவும் முடியும்படியான நிலையினை வந்தடைந்திருக்கிறது. மத்திய அரசு அதிகாரத்தைச் சில நாட்களில் எடுத்துக் கொண்டு விடுவதும் சுரண்டுவோரது ராணுவ எதிர்ப்பை (மற்றும் நாச வேலையை) ஒரு பெரிய நாட்டின் பற்பல பகுதிகளிலுங்கூட சில வாரங்களில் நசுக்குவதும் சாத்தியமாய் இருக்கையில், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் பிரச்சினைக்குத் தலையாய தீர்வு காண்பதற்கு எப்படியும் (முக்கியமாய், மிகவும் கொடூரமான படுநாசப் போருக்குப் பிற்பாடு) சில ஆண்டுகள் தேவையாய் இருக்குமென்பது உடனே இப்போது தெளிவாகத் தெரிகின்றது. இந்தப் பணி நீடித்து நடைபெற வேண்டிய ஒன்றாய் இருப்பதற்கு நிச்சயமாய் எதார்த்தப் புறநிலைமைகளே காரணம்.

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு யாவற்றுக்கும் முதலாய்த் தேவைப்படுவது என்னவெனில், பெருவீதத் தொழில் துறையின் பொருளாயத அடிப்படை உறுதியாக்கப்பட வேண்டும் என்பதுதான்; அதாவது, எரிபொருள், இரும்பு, பொறியியல், இரசாயனத் தொழில்கள் வளர்ச்சி பெற வேண்டும் என்பதுதான். ருஷ்யாவின் சோவியத் குடியரசு சாதகமான நிலையினைப் பெற்றிருக்கிறது: பிரேஸ்த் சமாதானத்துக்குப் பிற்பாடும்கூட, பிரம்மாண்ட அளவில் கனி வளங்களும் (உராலில்), மேற்கு சைபீரியாவிலும் (நிலக்கரி) காக்கஸசிலும் தென்-கிழக்கு ருஷ்யாவிலும் (எண்ணெய்) மத்திய ருஷ்யாவிலும் (பீட் கரி) ஆன எரிபொருள்களும், பேரளவான மரச் செல்வமும், நீர் ஆற்றலும், இரசாயனத் தொழிலுக்கான மூலப் பொருட்களும் (கராபுகஸ்), இன்ன பிறவும் அதனிடம் உள்ளன. நவீனத் தொழில்நுட்ப முறைகளைக் கொண்டு இந்த இயற்கைச்

செல்வாதாரங்கள் வளர்த்துப் பயன்படுத்தப்படுகையில் எந் நாளும் கண்டிராதவாறு உற்பத்திச் சக்திகள் முன்னேறு வதற்கு அடித்தளம் நிறுவப்படும்.

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு அவசி யமான இன்னொரு நிபந்தனை, முதலாவதாக மக்கள் பெருந் திரளினரது கல்வி, கலாசார நிலையை உயர்த்துவதாகும். தற்போது இது மிகவும் விரைவாய் நடந்தேறி வருகிறது; முதலாளித்துவ மாறு நடைமுறையால் கண்ணவிந்து போன வர்களால் இந்த உண்மையைப் பார்க்க முடியவில்லை; சோவியத் ஒழுங்கமைப்பு வடிவத்தின் விளைவாய் மக்களது ''கீழ் மட்டங்களில்'' அறிவொளிக்கும் முன்முயற்சிக்குமான ஊக்கம் தற்போது எப்படி ஓங்கி வருகிறதென்பதை இவர் களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இரண்டாவதாக, உழைப்பாளி மக்களது கட்டுப்பாட்டையும் அவர்களது தேர்ச்சித் திறனையும் உழைப்பின் பயன் திறனையும் வேகத் தையும் அதன் சிறந்த ஒழுங்கமைப்பையும் உயர்த்துவது பொருளாதாரத்தைப் புத்துயிர் பெற்றெழச் செய்வதற் குரிய ஒரு நிபந்தனையாகும்.

முதலாளி வர்க்கத்தினரின் மிரட்டலுக்குப் பணிந்துவிடும் ஆட்களையோ, சொந்த நோக்கம் கருதி முதலாளி வர்க்கத் தாருக்கு ஊழியம் புரிவோரையோ நம்புவோமாயின், இத்துறையில் நிலைமை மிகவும் மோசமாய் இருக்கிறது, நம்பிக்கைக்கு இடமில்லாதபடிப் படுமோசமாகவுங்கூட இருக்கிறது எனலாம். பழைய அமைப்பின் ஆதரவாளர் கள் குழப்பமென்றும் அராஜகமென்றும் இன்ன பலவாறுக வும் கூப்பாடு போடாத புரட்சி ஏதும் இருந்ததில்லை, இருக் கவும் முடியாது என்பதை இந்த ஆட்கள் புரிந்து கொள்ள வில்லை. முன்பின் கண்டிராத காட்டுத் தனமான ஒடுக்கு முறை ஆதிக்கத்தை இப்போதுதான் தூக்கியெறிந்துள்ள மக்களிடத்தே கொந்தளிப்பும் குமுறலும் இயற்கையாகவே ஆழமாகவும் பரவலாகவும் இருக்கின்றன. மக்களால் உழைப்புக் கட்டுப்பாட்டுக்கான புதிய கோட்பாடுகள் வகுக்கப்படுதல் மிக நீண்ட நெடிய நிகழ்ச்சிப் போக்காகும். நிலப்பிரபுக்கள் மீதும் முதலாளி வர்க்கத்தார் மீதும் முழு நிறை வெற்றி பெறப்படும் வரை இந்த நிகழ்ச்சிப் போக்கு ஆரம்பமாவது கூட சாத்தியமன்று.

ஆனல் நாம் நம்பிக்கைக்கு இடமில்லா இந்த விரக்

திக்கு (இது பெரும்பாலும் புரட்டான விரக்தி) சிறிதும் அடிபணியலாகாது—இது (தமது பழைய தனியுரிமைகளைப் பாதுகாக்க வழியில்லையெனக் கண்டு விரக்தி கொண்டுள்ளவர்களாகிய) முதலாளி வர்க்கத்தாராலும் முதலாளித்துவ அறிவுத் துறையினராலும் பரப்பப்பட்டு வருவதாகும்; அதே போது நாம் அப்பட்டமாகத் தெரியும் தீமையை எந்நிலையிலும் மூடி மறைக்கலாகாது. மாறாக, இதனை நாம் அம்பலம் செய்வோம்; இதை எதிர்த்துப் போராடுவதற்கான சோவியத் முறைகளைத் தீவிரப்படுத்திச் செல்வோம். தன்னியல்பான குட்டி முதலாளித்துவ அராஜகத்தின் மீது, கேரென்ஸ்கியமும் கர்னீலவியமும் மீட்டமைக்கப்படுதல் சாத்தியமாவதற்கு மெய்யான உத்தரவாதமாய் அமையும் இதன் மீது, பாட்டாளி வர்க்கத்தின் உணர்வு பூர்வமான கட்டுப்பாடு வெற்றி பெருமல் சோஷலிசத்தின் வெற்றி நினைக்கவே முடியாதது.

ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் அதிக வர்க்க உணர்வு படைத்த முன்னணிப் படை உழைப்பின் கட்டுப்பாட்டை உயர்த்திடும் பணியினை தனக்குரிய பணியாய் ஏற்கெனவே வகுத்துக் கொண்டு விட்டது. உதாரணமாய், உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டியும் தொழிற் சங்கங்களது மத்தியக் கவுன்சிலும் தேவையான சட்டங்களையும் அரசாணைகளையும் வரைய முற்பட்டுள்ளன. இந்த வேலை ஆதரவளிக்கப்பட்டு முழு வேகத்தில் நடந்தேறும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும். வேலைவீத ஊதியப் பிரச்சினையை[20] எழுப்பி அதை நாம் நடைமுறையில் அனுசரித்துச் சோதனை செய்து பார்க்க வேண்டும்; டெய்லர் முறையில்[21] விஞ்ஞான வழியில் அமைந்தவற்றிலும் முற்போக்கானவற்றிலும் பலவற்றைக் கையாளும் பிரச்சினையை நாம் எழுப்பியாக வேண்டும்; கூலி அளவுகள் முடிக்கப் பெறும் பண்டங்களின் மொத்த அளவுக்கு, அல்லது ரயில்வேக்களாலும் நீர் வழிப் போக்குவரத்து அமைப்பாலும் பிறவற்றாலும் செய்யப்படும் வேலையின் அளவுக்கு ஏற்ப அமையும்படிச் செய்தாக வேண்டும்.

முன்னேறிய நாடுகளைச் சேர்ந்தோருடன் ஒப்பிடுகையில் ருஷ்யத் தொழிலாளி மோசமான தொழிலாளி. ஜார் ஆட்சியின் கீழ், பண்ணையடிமை முறையின் எச்சங்கள் விடாப்பிடியாக இருந்த நிலையில் இது வேறு எவ்வாறும் இருப்

பதற்கில்லை. வேலை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்—இது தான், இதன் முழு வீச்சிலும், சோவியத் அரசாங்கம் மக்களுக்கு வகுத்து முன்வைக்க வேண்டிய பணி. இத்துறையில் முதலாளித்துவத்தின் தேர்ந்த முடிபாகிய டெய்லர் முறையானது, முதலாளித்துவ முன்னேற்றம் அனைத்தையும் போல், முதலாளித்துவச் சுரண்டலின் நேர்த்தி நயம் வாய்ந்த மிருகத் தனத்தோடு கூட, வேலையின் போது நிகழும் இயந்திரவியல் அசைவுகளைப் பகுத்தாய்வதிலும் தேவையற்றவையும் தாறுமாறானவையுமான அசைவுகளை நீக்குவதிலும் சரியான வேலை முறைகளை ஆய்ந்தறிந்து வகுத்திடுவதிலும் கணக்குப்பதிவுக்கும் கண்காணிப்புக்குமான சிறந்த அமைப்பைப் புகுத்துவதிலும் இன்ன பிறவற்றிலுமான பெரிய பல விஞ்ஞான சாதனைகளும் இணைந்து அமைந்ததாகும். இத்துறையில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கண்டிருக்கும் சாதனைகளில் மதிப்பு வாய்ந்தவை யாவற்றையும் சோவியத் குடியரசு எப்பாடுபட்டேனும் தெரிந்தெடுத்துக் கையாண்டாக வேண்டும். சோவியத் ஆட்சியதிகாரத்தையும் சோவியத் நிர்வாக ஒழுங்கமைப்பையும் முதலாளித்துவத்தின் மிக நவீன சாதனைகளுடன் சேர்த்து இணைத்துக் கொள்வதில் நாம் காணும் வெற்றியையே பொறுத்திருக்கிறது, சோஷலிசத்தைக் கட்டியமைப்பதற்கான சாத்தியப்பாடு. ருஷ்யாவில் நாம் டெய்லர் முறையின் ஆய்வுக்கும் போதனைக்கும் ஏற்பாடு செய்து இதனை ஒழுங்காய்க் கையாண்டு பார்த்து நமக்கு உரித்தான நோக்கங்களுக்குத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். அதே போது, உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காகப் பாடுபடுகையில், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய இடைக் காலத்தின் பிரத்தியேக இயல்புகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த இடைக் காலத்தில் ஒரு புறத்தில் போட்டிக்கான சோஷலிச ஒழுங்கமைப்புக்குரிய அடித்தளங்கள் நிறுவப்படுவதும், மறு புறத்தில் கோழைத் தனமான பாட்டாளி வர்க்க அரசாங்கத்தின் நடைமுறையால் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் எனும் கோஷத்துக்கு இழுக்கு நேர்ந்துவிடாது இருக்கும் பொருட்டு, பலவந்தத்தைப் பயன்படுத்துவதும் அவசியமாகும்.

சோஷலிஸ்டுகள் போட்டியின் முக்கியத்துவத்தை மறுக்கிறார்கள் என்பதான கூற்று, சோஷலிசம் குறித்து முதலாளி வர்க்கத்தார் முனைந்து பரப்பி வரும் அபத்தங்களில் ஒன்று. உண்மை என்னவெனில், சோஷலிசம் மட்டும்தான் வர்க்கங்களை ஒழிப்பதன் வாயிலாகவும் இவ்விதம் மக்களது அடிமை நிலையை ஒழிப்பதன் வாயிலாகவும் மெய்யாகவே வெகுஜன அளவில் போட்டி நடைபெறுவதற்கு முதன்முதலாகப் பாதையைத் திறந்து விடுகிறது. சோவியத் ஒழுங்கமைப்புதான், முதலாளித்துவக் குடியரசின் சம்பிரதாய ஜனநாயகத்திலிருந்து மாறி நிர்வாகத்தில் உழைப்பாளி மக்கள் திரள் மெய்யாகவே பங்கெடுத்துக் கொள்ளும் நிலை வந்தடையப் பெறுவதை உறுதி செய்வதன் மூலம் போட்டியினை முதன்முதலாய் விரிந்தமைந்த அடித்தளத்தின் மீது அமர்த்துகின்றது. பொருளாதாரத் துறையைக் காட்டிலும் அரசியல் துறையில் இதற்கு ஏற்பாடு செய்வது மிகவும் சுலபம். ஆனால் சோஷலிசத்தின் வெற்றிக்குப் பொருளாதாரத் துறைதான் முக்கியத்துவம் மிக்கது.

எடுத்துக்காட்டாய், போட்டியின் ஒழுங்கமைப்புக்குரிய ஒரு சாதனமாகிய தகவல் வெளியீட்டை எடுத்துக் கொள்வோம். முதலாளித்துவக் குடியரசு புற வடிவ அளவில் மட்டுமே தகவல் வெளியீட்டுக்கு வகை செய்கிறது. நடைமுறையில் அது பத்திரிகைத் துறையை மூலதனத்துக்குக் கீழ்ப்படுத்துகிறது; பரபரப்பு உண்டாக்கும்படியான அரசியல் குப்பைக் கூளங்களைக் கொண்டு ''கும்பலுக்கு'' வேடிக்கை காட்டுகிறது; ஆலைகளிலும் வாணிப நடவடிக்கைகளிலும் ஒப்பந்தங்களிலும் பிறவற்றிலும் என்ன நடைபெறுகிறதென்பதைப் ''புனிதமான சொத்துரிமையைப்'' பாதுகாக்கும் ''வாணிப இரகசியங்கள்'' என்னும் திரைக்குப் பின்னால் மூடி மறைக்கிறது. சோவியத் ஆட்சியதிகாரம் வாணிப இரகசியங்களை ஒழித்துள்ளது; அது புதிய பாதையை மேற்கொண்டுள்ளது. ஆனால் பொருளாதாரப் போட்டிக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு தகவல் வெளியீட்டைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நாம் அனேகமாய் ஏதும் செய்தாகவில்லை. முழுக்க முழுக்க பொய்யும் பித்தலாட்டமும் துடுக்கான அவதூறும் பரப்பும் முதலாளித்துவப்

பத்திரிகைத் துறையை இரக்கம் காட்டாமல் நசுக்கி, அதே போது அரசியல் பரபரப்பையும் அற்ப விவகாரங்களையும் கொண்டு வேடிக்கை காட்டி மக்களை ஏமாற்றுமல், அன்றாடப் பொருளாதார வாழ்க்கை சம்பந்தமான பிரச்சினைகளை மக்களது தீர்ப்புக்குச் சமர்ப்பித்து இந்தப் பிரச்சினைகளைக் கருத்தார்ந்த முறையில் ஆராய்வதற்கு அவர்களுக்கு உதவும்படியான பத்திரிகைத் துறையைத் தோற்றுவிப்பதற்காக நாம் இடையருது பாடுபட முற்பட்டாக வேண்டும். ஒவ்வோர் ஆலையும் ஒவ்வொரு கிராமமும் உற்பத்தியாளர்-நுகர்வாளர் கம்யூனுகும். இவை பொதுவான சோவியத் சட்டங்களைத் தமது சொந்த வழியில் செயல் படுத்த உரிமை பெற்றவையும் கடமைப்பட்டவையும் ஆகும் (''தமது சொந்த வழியில்'' என்பது இந்தச் சட்டங்களை மீறிச் செல்லலாம் என்ற அர்த்தத்தில் அல்ல, பல்வேறு வடிவங்களில் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற அர்த்தத்தில்); பண்டங்களது உற்பத்தியிலும் வினியோகத்திலும் கணக்குப் பதிவுப் பிரச்சினைக்குத் தமது சொந்த வழியில் தீர்வு காண்பது அவற்றின் உரிமையும் கடமையும் ஆகும். முதலாளித்துவத்தில் இது தனிப்பட்ட முதலாளி, நிலப்பிரபு அல்லது குலாக்கின்[22] ''சொந்த விவகாரமாய்'' இருந்தது. சோஷலிச அமைப்பில் இது மிக முக்கிய அரசு விவகாரமே அன்றி தனியாரது சொந்த விவகாரமல்ல.

கம்யூன்களுக்கு இடையே போட்டிக்கு ஏற்பாடு செய்தல், தானியம், துணிமணி, பிற பொருட்களது உற்பத்திச் செயல்முறையில் கணக்குப் பதிவையும் தகவல் வெளியீட்டையும் கைக்கொள்ளுதல், வறண்டவையும் உயிரற்றவையும் அதிகார வர்க்கத் தன்மையவையுமாகிய கணக்குகளை உயிர்த் துடிப்புள்ள உதாரணங்களாக, எதிர்த்து அடிப்பனவாகச் சிலவும் கவர்ந்து இழுப்பனவாக ஏனையவும் அமைந்த உதாரணங்களாக மாற்றிடுதல்—மிகப் பெரியது, கடினமானது என்றுலும் பெரும் பயன் அளிக்கவல்லதான இந்தப் பணியினை அனேகமாய் இன்னமும் நாம் துவக்கியாகவில்லை. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் தனிப்பட்ட ஓர் உதாரணத்தின் முக்கியத்துவம், எடுத்துக்காட்டாய் ஒரு கூட்டுறவுத் தொழிற்கூடத்தினுடைய உதாரணத்தின் முக்கியத்துவம் தவிர்க்க வொண்ணுதவாறு வரம்

பிட்டுப் பெரிதும் தடுக்கப்படுகிறது; குட்டி முதலாளித்துவப் பிரமைகள் கொண்டவர்களால் மட்டும்தான் உயர் பண்பு வாய்ந்த நிலையங்களது உதாரணத்தின் மூலம் முதலாளித்துவத்தைச் ''சரிசெய்துவிடலாம்'' என்று கனவு காண முடியும். அரசியல் அதிகாரமானது பாட்டாளி வர்க்கத்துக்கு மாறிய பிறகு, உடைமை பறிப்போர் உடைமை நீக்கம் செய்யப்பட்ட பிறகு நிலைமை தீவிரமாய் மாறுகின்றது; முதன்மையான சோஷலிஸ்டுகள் அடிக்கடி குறிப்பிட்டிருப்பது போல், உதாரணத்தின் சக்தியானது முதன் முதலாய் மக்கள் திரளை வயப்படுத்த முடிகின்றது. முன் மாதிரியான கம்யூன்கள் கல்வி போதம் அளிப்பனவாய், போதனாசிரியர்களாகப் பயன்பட வேண்டும், பயன்படவும் செய்யும்; பின்தங்கிய கம்யூன்கள் உயர்வதற்கு இவை உதவி புரியும். பத்திரிகைகள் சோஷலிசக் கட்டுமானக் கருவியாகச் சேவையாற்ற வேண்டும்; முன்மாதிரியான கம்யூன்கள் காணும் வெற்றிகளை அவற்றின் முழு விவரங்களில் விளம்பரப்படுத்த வேண்டும்; இந்த வெற்றிகளுக்குரிய காரணங்களையும் இந்தக் கம்யூன்கள் கையாளும் நிர்வாக முறைகளையும் அவை ஆய்ந்தறிய வேண்டும்; அதே போது ''முதலாளித்துவ மரபுகளில்'', அதாவது அராஜகத்திலும் சோம்பலிலும் ஒழுங்கின்மையிலும் இலாபக் கொள்ளையிலும் தொடர்ந்து திளைத்திடும் கம்யூன்களைக் ''கறுப்புப் பட்டியலுக்கு'' உரியனவாய் அறிவிக்க வேண்டும். முதலாளித்துவச் சமுதாயத்தில் புள்ளியியலானது முற்றிலும் ''அரசாங்கப் பணியாளருக்கு'' அல்லது குறுகிய துறைகளிலான நிபுணர்களுக்கு உரித்தான விவகாரமாய் இருந்துள்ளது. நாம் புள்ளியியலை மக்களிடம் எடுத்துச் சென்று அவர்களிடையே பிரபலமாக்க வேண்டும். இதன் மூலம் உழைப்பாளி மக்கள் தாமே எவ்வளவு நேரம், எப்படி வேலை செய்ய வேண்டும், எவ்வளவு நேரம், எப்படி ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவதற்கும் படிப்படியாகக் கற்றுக் கொள்வதற்கும் வகை செய்யலாம். இவ்விதம் பல்வேறு கம்யூன்களது தொழிற் பலன்களின் ஒப்பீடானது பொது வாய் எல்லோரது கருத்துக்கும் ஆய்வுக்கும் உரியதாகும் படியும் மிகச் சிறந்தனவாய் இருக்கும் கம்யூன்கள் உடனடியாகப் பரிசு பெறும்படியும் (வேலை நேரத்தை குறைப்பது, ஊதியத்தை உயர்த்துவது, கலாசார அல்லது கலாரசனை

வசதிகள் அல்லது செல்வங்களை அவற்றுக்குக் கிடைக்கச் செய்தல், முதலான வழிகளில்) செய்யலாம்.

புதிய வர்க்கம் ஒன்று சமுதாயத்தின் தலைவனாகவும் வழிகாட்டியாகவும் வரலாற்று அரங்கினுள் பிரவேசிக்கும் போது, ஒரு புறத்தில் வன்மை மிக்க ''ஆட்டத்துக்கும்'' அதிர்ச்சிகளுக்கும் போராட்டத்துக்கும் புயலுக்குமான காலம் ஒன்றும், மறு புறத்தில் திடமற்ற முயற்சிகளுக்கும் பரிசோதனைகளுக்கும் புதிய எதார்த்த நிலைமைக்கு இசைவான புதிய முறைகளைத் தேர்வு செய்வதில் ஊசலாட்டத்துக்கும் தயக்கத்துக்குமான காலம் ஒன்றும் தவிர்க்க முடியாதவை. அந்திமக் காலம் எய்திய பிரபுத்துவக் கோமான்கள், தம்மைத் தோற்கடித்துத் தமது இடத்தில் அமர்ந்து கொண்ட முதலாளி வர்க்கத்தினர் மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள்—சதிகள் மூலமும் கலகத்துக்கும் மீட்சிக்குமான முயற்சிகள் மூலமும் மட்டுமின்றி, கோமான்களும் பெருமான்களும் பிரபுக்களும் மேதகைகளும் பல நூறு ஆண்டுகளாய்ப் பயின்று பெற்றிருந்த பயிற்சி இல்லாமலே அரசின் ''புனிதமான பீடத்தைக்'' கைக்கொள்ளத் துணிந்த ''புதுப்பவிஷாளர்களும்'' ''அகம்பாவிகளும்'' தேர்ச்சித் திறனில்லாதோராகவும் நயமற்றோராகவும் இருந்தது குறித்தும் அவர்களது தவறுகள் குறித்தும் எள்ளி நகையாடுவதன் மூலமும் வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள். இதே போலவே தான், கர்னீலவ்களும் கேரென்ஸ்கிகளும் கோட்ஸ்களும் மார்த்தவ்களும் முதலாளித்துவ மோசடி அல்லது முதலாளித்துவ ஐயுறவுவாதி வீரர்கள் எல்லோரும், ஆட்சியதிகாரத்தைக் கைக்கொள்ளும்படியான ''துணிச்சலைப்'' பெற்றுவிட்ட ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்கிறார்கள்.

ஒரு புதிய சமூக வர்க்கமானது, அதுவும் இதுகாறும் ஒடுக்கப்பட்டும் வறுமையாலும் அறியாமையாலும் நசுக்கப்பட்டும் வந்திருக்கும் ஒரு வர்க்கமானது, தனது புதிய நிலையில் பழக்கம் பெற்று சூழ்நிலையைப் புரிந்து கொண்டு தனது வேலையை ஒழுங்கமைக்கவும் தனது சொந்த ஒழுங்கமைப்பாளர்களை வளர்த்து முன்கொண்டு வரவும் வாரங்களல்ல, நீண்ட பல மாதங்களும் ஆண்டுகளும் தேவைப்படவே செய்யும். புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்கும் கட்சியானது, பத்து லட்சக் கணக்கிலும்

கோடிக் கணக்கிலுமான குடிமக்களைக் கொண்ட பெரிய நிறுவன ஒழுங்கமைப்பு முயற்சிகளுக்கு வேண்டிய அனுபவத்தையும் பழக்கங்களையும் பெறுதிருப்பது புரிந்து கொள்ளக் கூடியதே; அனேகமாய் முற்றிலும் கிளர்ச்சியாளர்களுக்கு உரித்தான பழைய பழக்கங்களை உருமாற்றித் திருத்தியமைத்துக் கொள்வது மிக நீண்டதொரு நிகழ்ச்சிப் போக்கு. ஆனால் இது முடியாத காரியமன்று: மாறுதல் அவசியமென்று தெளிவாக உணர்ந்து ஏற்கப்பட்டதும் மாறுதலை உண்டாக்க வேண்டுமென்ற உறுதியான வைராக்கியமும் கடினமான பெரியதொரு குறிக்கோளுக்காகப் பாடுபடுவதில் விடாமுயற்சியும் பெறப்பட்டதும் நாம் நிச்சயம் இந்தக் காரியத்தைச் செய்யத்தான் போகிறோம். ''மக்கள்'' இடத்தே, அதாவது தொழிலாளர்களிடத்தும் ஏனையோரது உழைப்பைச் சுரண்டாத விவசாயிகளிடத்தும் நிறுவன ஒழுங்கமைப்பு ஆற்றல் பெரிய அளவில் இருக்கிறது. ஆற்றல் படைத்த ஆயிரக் கணக்கான இம்மக்களை மூலதனமானது நசுக்கியது; அவர்களது ஆற்றலை அழித்து அவர்களைக் குப்பை மேட்டில் ஒதுக்கிற்று. இம்மக்களைக் கண்டுபிடித்து, இவர்களுக்கு ஊக்கமளித்து, எழுந்து காலூன்றி நிற்க வைத்து, இவர்களை வளர்த்து உயரச் செய்வதற்கு இன்னும் நம்மால் முடியவில்லை. முழு முனைப்பான புரட்சிகர ஆர்வத்துடன்—இது இல்லாமல் வெற்றிகரப் புரட்சிகள் எவையும் சாத்தியமன்று—நாம் இவ்வேலையில் இறங்குவோமாயின், இதனைச் செய்யக் கற்றுக் கொள்வோம்.

கேடுகெட்ட கசடு மேல் மட்டத்துக்கு வராமல், எதற்கும் துணிந்த அயோக்கியர்களும் கயவர்களும், வாய்வீச்சுக்காரர்களும் கும்மாளிகளும் அனுபவமில்லாதவர்களாகிய புதியன புனையும் முன்னோடிகளுடன் ஒட்டிக் கொள்ளாமல், அசட்டுக் குழப்படியும் களேபரமும் இல்லாமல், தனிப்பட்ட ''தலைவர்கள்'' ஒருங்கே இருபது காரியங்களைச் செய்ய முயன்று எதையும் நிறைவு செய்யாது விட்டு வைக்காமல், ஆழமும் வலிவும் மிக்க எந்த வெகுஜன இயக்கமும் வரலாற்றில் நடைபெற்றதில்லை. பெரிய பழைய மரத்தை வெட்டுகையில் அதிகப்படியாய்ச் சீவியெறியப்படும் ஒவ்வொரு சில்லு குறித்தும், முதலாளித்துவச் சமுதாயத்தின் வளர்ப்பு நாய்கள்—பெலரூசவிலிருந்து மார்த்தவ் வரையிலான யாவரும்—கீச்சிட்டுக் குரைக்கட்டும். பாட்டாளி

வர்க்க யானையைப் பார்த்துக் குரைப்பதற்கு அல்லாமல் வேறு எதற்காக இருக்கின்றனவாம் இந்த வளர்ப்பு நாய்கள்? அவர்கள் குரைக்கட்டும். நாம் நமது வழியில் செல்வோம்; மெய்யான ஒழுங்கமைப்பாளர்களை, நிதானமும் காரியக் கண்ணோட்டமும் கொண்டவர்களை, சோஷலிசத்தின் பால் பற்றுறுதியும் அதே போது களேபரமின்றி (குழப்படியையும் களேபரத்தையும் மீறி) பெரிய எண்ணிக்கையிலானோரை முறையாகவும் ஒருங்கிணைந்தும் சோவியத் நிறுவனத்தின் கட்டுக்கோப்பினுள் வேலை செய்ய வைக்கும் ஆற்றலும் ஒருங்கே பெற்றிருப்போரைச் சோதித்துப் பார்த்துக் கண்டு பிடிப்பதற்காகக் கூடுமான அளவுக்குக் கவனமாகவும் பொறுமையாகவும் நாம் முயற்சி செய்வோம். இம்மாதிரியானவர்கள் மட்டும்தான், எளிய பணிகளிலிருந்து மேலும் கடின பணிகளுக்கு மாற்றப்பட்டுப் பத்துப் பன்னிரண்டு தரம்சோதித்துப் பார்க்கப்பட்ட பிற்பாடு, மக்களது உழைப்பின் தலைவர்களுக்கும் நிர்வாகத் தலைவர்களுக்குமாகிய பொறுப்புள்ள பதவிகளுக்கு உயர்த்தப்பட வேண்டும். இதைச் செய்ய இன்னும் நாம் கற்றுக் கொண்டாகவில்லை; ஆனால் இதனை நாம் கற்றுக் கொள்வோம்.

## ''இசைவான ஒழுங்கமைப்பும்'' சர்வாதிகாரமும்

அண்மையில் நடைபெற்ற சோவியத்துக்களது (மாஸ்கோ) காங்கிரஸ் ஏற்றுக் கொண்ட தீர்மானம், ''இசைவான ஒழுங்கமைப்பை'' நிறுவுவதையும் கட்டுப்பாட்டினைக் கடுமையாக்குவதையும் இத்தருணத்துக்குரிய முதன்மையான பணியாக முன்வைத்தது. இந்த மாதிரியான தீர்மானங்களுக்கு எல்லோரும் இப்பொழுது தயங்காது ''வாக்கு அளிக்கிறார்கள்'', ''உடன்பட்டு ஆதரவளிக்கிறார்கள்''; ஆனால் இம்மாதிரியான தீர்மானங்களைச் செயல்படுத்துவதற்குப் பலவந்தம்—சர்வாதிகாரத்தின் வடிவிலான பலவந்தம்—தேவைப்படுவது குறித்து சாதாரணமாய் இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. எனினும் பலவந்தம் இல்லாமல், சர்வாதிகாரம் இல்லாமல் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்ல முடியுமெனக் கொள்வது முழு முட்டாள் தனமும் அசட்டுக் கற்பனாவாதமுமே ஆகும். குட்டி முதலாளித்துவ-ஜனநாயகவாதமும் அராஜகவாத

முமாகிய இந்த அபத்தத்தை நெடுங்காலத்துக்கு முன்பே மார்க்சின் தத்துவம் மிகவும் திட்டவட்டமாய் எதிர்த்தது. 1917—1918ஆம் ஆண்டுகளது ருஷ்யாவானது இது பற்றிய மார்க்ஸ் தத்துவம் பிழையற்றதே என்பதை அவ்வளவு பளிச்சென்றும் கண்கூடாகவும் பிரமாதமாகவும் உறுதி செய்து காட்டியிருப்பதால், அறவே மதி மழுங்கியோரால் தான் அல்லது உண்மையிடமிருந்து ஓடிச் செல்வதென்று பிடிவாத முடிவுக்கு வந்து விட்டோரால்தான் இது குறித்து எந்தத் தப்பபிப்பிராயமும் கொண்டிருக்க முடியும். கர்னீலவின் சர்வாதிகாரம் (முதலாளித்துவக் கவெனியாக்கின் ருஷ்ய ரகமாய் இவரைக் கொள்வோமாயின்), இல்லேயேல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்—இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும்; வரலாற்றிலே மிகக் கொடிய யுத்தங்களில் ஒன்றுல் உண்டான படுபாதகச் சேதங்களுக்கிடையே கடுந்திருப்பங்களின் ஊடே மட்டுமீறிய வேகத்தில் வளர்ச்சியுற்று வரும் ஒரு நாட்டுக்கு இதன்றி வேறு எதுவும் சாத்தியமன்று. நடுப் பாதை ஒன்று இருப்பதாகச் சொல்லி முன்வைக்கப்படும் எந்தத் தீர்வும், மக்களே ஏமாற்றுவதற்காக முதலாளித்துவ வர்க்கம் கையாளும் ஏமாற்ருகவோ—முதலாளித்துவ வர்க்கத்தினர் உண்மையைச் சொல்லத் துணியவில்லே, தமக்கு கர்னீலவ் தேவைப்படுகிருரெனக் கூறத் துணியவில்லே என்பதால்—அல்லது ஜனநாயகத்தின் ஒற்றுமையென்றும் ஜனநாயகச் சர்வாதிகாரமென்றும் பொது ஜனநாயக முன்னணியென்றும் இன்ன பிற அபத்தமும் பேசி வரும் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின்—செர்னேவ்கள், த்ஸெரெத் தேலிகள், மார்த்தவ்கள் ஆகியோரின் — மதியீனத்தை வெளிக்காட்டுவதாகவோ இருக்கின்றது. நடுப் பாதை சாத்தியமல்ல என்று 1917—1918 ருஷ்யப் புரட்சியின் முன்னேற்றத்திலிருந்துங்கூட போதனே பெருதவர்கள், கடைத்தேற வழியற்றவர்களாகக் கைவிடப்பட வேண்டியவர்களே.

மறு புறத்தில், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கான ஒவ்வொரு மாறுதல் கட்டத்திலும் சர்வாதிகாரமானது இரு பிரதான காரணங்களால் அல்லது இரு பிரதான மார்க்கங்களில் அத்தியாவசியமாகி விடுவதைப் புரிந்து கொள்வது கடினமன்று. முதலாவதாக, சுரண்டுவோரது எதிர்ப்பை இரக்கமின்றி நசுக்காமல் முதலாளித்

துவத்தைத் தோற்கடித்து இல்லாதொழித்திட முடியாது. சுரண்டுவோரது செல்வத்தையும், ஒழுங்கமைப்பினாலும் அறிவாலும் அவர்களுக்குக் கிடைக்கப் பெறும் அனுகூலங்களையும் எடுத்தயெடுப்பிலே அவர்களிடமிருந்து பறித்துவிட முடியாது; ஆகவே அவர்கள் தமது வெறுப்புக்குரிய ஏழைகளது ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக தவிர்க்க முடியாதவாறு ஓரளவு நீண்ட காலத்துக்கு முயலவே செய்வர். இரண்டாவதாக, பெரிய புரட்சி ஒவ்வொன்றும்—குறிப்பாக, ஒரு சோஷலிசப் புரட்சி—வெளியிலிருந்தான போர் ஏதும் இல்லாமற் போனாலும் உள்ளிருந்தான போர், அதாவது உள்நாட்டு போர் இல்லாமல் நடைபெறுவது நினைக்கவே முடியாதது. உள்நாட்டுப் போர் வெளியிலிருந்தான போரைவிடவும் அதிக நாசம் விளைவிப்பது; ஆயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலுமானோரை ஊசலாடச் செய்து ஒரு தரப்பிலிருந்து இன்னொன்றுக்குத் துறந்தோட வைப்பது; மிதமிஞ்சிய தெளிவின்மையையும் சமநிலையின்மையையும் குழப்பத்தையும் குறிப்பது. இத்தகைய ஆழ்ந்த புரட்சியின் போது பழைய சமுதாயத்தின் சிதைவுக் கூறுகள் யாவும் நிச்சயம் ''தம்மை வெளிப்படுத்திக் கொண்டே'' ஆக வேண்டும். தவிர்க்கவொண்ணாதபடி இந்தச் சிதைவுக் கூறுகள் ஏராளமாகவே இருக்கின்றன; இவை பிரதானமாய் குட்டி முதலாளித்துவப் பகுதிகளுடன் சம்பந்தப்பட்டவையாகும் (ஏனெனில் ஒவ்வொரு யுத்தமும் ஒவ்வொரு நெருக்கடியும் முதலில் குட்டி முதலாளித்துவப் பகுதியோரையே நாசத்துக்கு உள்ளாக்கி அழித்திடுகின்றன). குற்றச் செயல், போக்கிரித் தனம், லஞ்ச ஊழல், கொள்ளை லாப வெறி மற்றும் எல்லா விதமான முறைகேடுகளையும் பெருகச் செய்வதன் மூலம் அல்லாமல் வேறு எவ்வழியிலும் இந்தச் சிதைவுக் கூறுகள் ''தம்மை வெளிப்படுத்திக் கொள்ள'' முடிவதில்லை. இந்தக் கேடுகளை அடக்குவதற்கு அவகாசம் வேண்டும், இரும்புக் கரம் வேண்டும்.

மக்கள் உள்ளுணர்ச்சி மூலம் இதனை உணர்ந்து கொண்டு திருடர்களை அந்தந்த இடத்திலேயே சுட்டுக் கொன்று, பயன் தரத்தக்க மன உறுதியை வெளிப்படுத்தாத பெரும் புரட்சி வரலாற்றில் ஒன்றுகூட இருந்ததில்லை. மக்களை இறுக்கமான நிலையில் தொடர்ந்து இருக்கச் செய்து சிதைவுக் கூறுகளை இரக்கமின்றி அடக்குவதற்கான

பலத்தை அவர்களுக்கு அளித்திட்ட அவர்களது புரட்சிகர ஆர்வம் அதிக காலத்துக்கு நீடிக்காமற் போனதுதான் முந்திய புரட்சிகளது துர்ப்பாக்கியமாய் அமைந்து விட்டது. மக்களது புரட்சிகர ஆர்வம் இப்படி நிலையற்றதாய் போன தற்குரிய சமூக, அதாவது வர்க்கக் காரணம் பாட்டாளி வர்க்கத்தின் பலவீனம்தான். பாட்டாளி வர்க்கம் ஒன்று மட்டுமே (எண்ணிக்கையில் அது போதுமானதாகவும் போதிய வர்க்க உணர்வு படைத்ததாகவும் கட்டுப் பாடு வாய்ந்ததாகவும் இருக்குமாயின்) உழைப்போரும் சுரண்டப்படுவோருமாகிய மக்களில் பெரும்பான்மையோரை (மேலும் எளிய முறையிலும் ஜனரஞ்சகமாகவும் சொல் வதெனில் ஏழையெளியோரில் பெரும்பான்மையோரை) தன் தரப்புக்குக் கவர்ந்து இழுத்துக் கொள்ளவும் சுரண்டுவோர் எல்லோரையும் மற்றும் சிதைவுக் கூறுகள் யாவற்றையும் அறவே அடக்குவதற்குப் போதுமான காலத்துக்கு ஆட்சி யதிகாரத்தை இழக்காமல் வைத்துக் கொள்ளவும் வல்ல தாய் இருக்கின்றது.

மார்க்ஸ் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்ற அவரது இரத்தினச் சுருக்கமான, கூர்மையான, அடக்க மான, பொருட்செறிவு வாய்ந்த சூத்திரத்தை வகுத்து அளித்த போது எல்லாப் புரட்சிகளுக்கும் உரிய இந்த வரலாற்று அனுபவத்தைத்தான், இந்த உலக-வரலாற்று—பொருளாதார, அரசியல்—படிப்பினையைத்தான் அவர் தொகுத்துக் கூறினர். இந்த உலக-வரலாற்றுப் பணியை ருஷ்யப் புரட்சி அணுகிய முறை பிழையற்றதாகும் என் பது, ருஷ்யாவின் எல்லா மக்கள் இனத்தோரிடையிலும் மொழியினரிடையிலும் சோவியத் வடிவிலான ஒழுங் கமைப்பு கண்டிருக்கும் வெற்றிகர முன்னேற்றத்தால் நிரூபித்துக் காட்டப் பெற்றுள்ளது. சோவியத் ஆட்சியதிகார மானது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின், முன்னேறிய வர்க்கத்தினுடைய சர்வாதிகாரத்தின் ஓர் ஒழுங்கமைப்பு வடிவமே அன்றி வேறல்ல; உழைப்போரும் சுரண்டப்படு வோருமான கோடானு கோடியான மக்களை, பாட்டாளி வர்க்கத்தின் கட்டுப்பாடு வாய்ந்த, வர்க்க உணர்வு கொண்ட முன்னணிப் படையினைத் தமது சொந்த அனுபவத் தின் வாயிலாய் உறுதியாய் நம்பத்தக்க தமது தலைவனாகக் கருதக் கற்றறிந்து கொள்ளும் இம்மக்களை ஒரு புதிய

ஜனநாயகவாதத்துக்கு, அரசின் நிர்வாகத்தில் சுயேச்சை யான பங்கு கொள்ளும் நிலைக்கு உயரச் செய்யும் முன் னேறிய வர்க்கத்தினுடைய சர்வாதிகாரத்தின் ஒரு வடி வமே அன்றி வேறல்ல.

ஆனால் சர்வாதிகாரம் என்பது ஒரு பெருஞ்சொல்; பெருஞ்சொற்களைக் கவனமின்றிக் கையாளக் கூடாது. சர்வாதிகாரமானது இரும்பின் உறுதி வாய்ந்த ஆட்சியாகும்; சுரண்டுவோரும் போக்கிரிகளுமான இரு சாராரையும் அடக்குவதில் புரட்சிகரத் துணிவும் விரைவும் இரக்கமின் மையும் கொண்டதான ஆட்சியாகும். ஆனால் நமது ஆட்சி அளவு மீறி இதமானதாய் இருக்கின்றது; அடிக்கடி இரும்பைக் காட்டிலும் அதிகமாய்ப் பழப்பாகையே ஒத்ததாய் இருக்கிறது. முதலாளித்துவ, குட்டி முத லாளித்துவச் சக்திகள் இரு வழிகளில் சோவியத் ஆட்சி யதிகாரத்தை எதிர்த்துப் போராடுகின்றன என்பதைக் கண மும் நாம் மறக்கலாகாது. ஒரு புறத்தில், இவை வெளி யிலிருந்து செயல்படுகின்றன; சாவின்கவ்கள், கோட்ஸ்கள், கெகெச்கோரிகள், கர்னீலவ்கள் ஆகியோரது செயல்முறை கள் மூலமும் சதிகள், கலகங்கள் மூலமும் அவர்களது இழி வான ''சித்தாந்தப்'' பிரதிபலிப்பாகிய காடேட்டுகள், வலது சாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், மென்ஷிவிக்குகளது பத்திரிகைகளில் பெருக்கெடுக்கும் பொய்கள், அவதூறுகள் மூலமும் செயல்படுகின்றன. மறு புறத்தில், இந்த சக்திகள் உள்ளிருந்து செயல்படுகின்றன; லஞ்சமளிக்கும் பொருட் டும் கட்டுப்பாட்டுக் குலைவினையும் கண்டிப்பின்மையையும் குழப்பத்தையும் அதிகமாக்கும் பொருட்டும் சிதைவின் ஒவ் வொரு வெளிப்பாட்டையும் ஒவ்வொரு பலவீனத்தையும் பயன்படுத்திக் கொள்கின்றன. முதலாளித்துவத்தை ராணுவ வழியில் முழு அளவுக்கு நசுக்கும் நிலையை நெருங்கிச் செல்லச் செல்ல, குட்டி முதலாளித்துவ அராஜகச் சக்தி கள் மேலும் மேலும் அபாயகரமானதாகிச் செல்கின்றன. இந்தச் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தை முற்றிலும் பிரசாரத்தின், கிளர்ச்சியின் துணை கொண்டே, போட்டிக்கு ஏற்பாடு செய்வதன் மூலமும் ஒழுங்கமைப்பாளர்களைத் தேர்வு செய்து எடுப்பதன் மூலமுமே நடத்திச் செல்வது முடியாததாகும்; பலவந்தத்தின் மூலமாகவும் இந்தப் போராட்டம் நடத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் அடிப்படைப் பணி ராணுவ முறையில் அடக்குதல் அல்லாமல் நிர்வாகம் புரிதலாய் ஆகும் போது அடக்குதல், வலுக்கட்டாயம் செய்தலின் இம்மாதிரி வெளிப்பாடானது அந்தந்த இடத்திலேயே சுட்டுக் கொல்வதாய் இல்லாமல் நீதி மன்றத்தின் மூலம் விசாரணை நடத்துவதாய் ஆகி விடுகிறது. இத்துறையிலும் 1917 அக்டோபர் 25க்குப் பிற்பாடு புரட்சிகர மக்கள் திரளினர் சரியான பாதையையே மேற்கொண்டனர்; முதலாளித்துவ அதிகார வர்க்க நீதிமன்றங்களைக் கலைக்கும் அரசாணைகள் பிறப்பிக்கப்படும் முன்னரே கூட தமது சொந்தத் தொழிலாளர்கள், விவசாயிகளது நீதிமன்றங்களை நிறுவிக் கொண்டதன் மூலம் புரட்சியின் செயல் திறனைக் கண்கூடாய் மெய்ப்பித்துக் காட்டினர். ஆனால் நமது புரட்சிகர, மக்கள் நீதிமன்றங்கள் நம்ப முடியாதபடி அளவு கடந்து பலவீனமாய் இருக்கின்றன. நீதிமன்றங்களிடம் மக்களுக்குள்ள போக்கு அதிகார முறையிலானவற்றிடமும் அன்னியமானவற்றிடமும் இருக்கும்படியான போக்காகவே, நிலப்பிரபுக்களின், முதலாளி வர்க்கத்தின் ஒடுக்கு முறையிலிருந்து வரப்பெற்ற போக்காகவே இருந்து வருவதை இன்னும் நாம் அகற்றியாகவில்லை என்பதாகத் தெரிகிறது. நீதிமன்றங்கள் ஏழை மக்களை, இவர்களில் ஒவ்வொருவரையும், அரசு நிர்வாக வேலையில் அணி திரளச் செய்யும் உறுப்பாகும் (ஏனெனில் நீதிமன்றங்கள் புரியும் வேலை அரசு நிர்வாகத்துக்குரிய பணிகளில் ஒன்றாகும்) என்பது, நீதிமன்றங்கள் பாட்டாளி வர்க்கத்தாரது, ஏழை விவசாயிகளது **ஆட்சியதிகாரத்துக்கான ஓர்** உறுப்பாகும் என்பது, **கட்டுப்பாட்டைப் போதிப்பதற்கு** நீதிமன்றங்கள் சாதனமாகும் என்பது போதிய அளவுக்கு இன்னமும் உணரப்பட்டாகவில்லை. தற்போது பட்டினியும் வேலையின்மையுமே ருஷ்யாவின் தலையாய துர்ப்பாக்கியங்கள் என்றால், விட்டுவிட்டுச் செய்யப்படும் திடீர்பிரயத்தனங்களால் இந்தத் துர்ப்பாக்கியங்களைச் சமாளித்துவிட முடியாது; விரிந்தமைந்த அனைத்தும் அடங்கும்படி வியாபகமாய் நாடு தழுவிய அளவில் நிலவும் ஒழுங்கமைப்பையும் கட்டுப்பாட்டையும் நிறுவி, இவ்விதம் மக்களுக்கு வேண்டிய உணவின் உற்பத்தியையும் தொழில் துறைக்கு வேண்டிய உணவின் (எரிபொருளின்) உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்வதன் மூலமும் இவை தேவைப்படும் இடங்களுக்கு

இவற்றைக் காலம் தாழ்த்தாது கொண்டு போய்ச் சேர்ப்பதன் மூலமும் இவற்றை ஒழுங்காய் வினியோகிப்பதன் மூலமும்தான் இந்தத் துர்ப்பாக்கியங்களைச் சமாளித்திட முடியும் என்ற தெட்டத்தெளிவான எளிய உண்மை போதிய அளவுக்கு இன்னமும் உணர்ந்து ஏற்கப்பட்டாக வில்லை. ஆகவே, எந்த ஆலையிலும் எந்த நிலையத்திலும் எந்த விவகாரத்திலும் உழைப்புக் கட்டுப்பாட்டை மீறுகின்ற ஆட்கள்தான் பஞ்சத்தாலும் வேலையின்மையாலும் ஏற்படும் துன்பங்களுக்குப் பொறுப்பாளிகளாவர் என்பதும் குற்றவாளிகளைக் கண்டறிந்து விசாரணைக்குக் கொண்டுவந்து தயவு தாட்சண்யமின்றி அவர்களைத் தண்டிக்க நமக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்பதும் முழு அளவுக்குப் புரிந்து கொள்ளப்படவில்லை. குட்டி முதலாளித்துவ அராஜகத்தை எதிர்த்து இப்போது நாம் மிகவும் விடாப்பிடியான போராட்டம் நடத்தியாக வேண்டும்; ஒரு புறத்தில் பஞ்சம், வேலையின்மைக்கும், மறு புறத்தில் ஒழுங்கமைப்பு, கட்டுப்பாட்டு விவகாரங்களில் பொதுவாக இருந்து வரும் கண்டிப்பின்மைக்கும் இடையிலுள்ள பொருளாதார, அரசியல் தொடர்பினை உணரத் தவறுவதில் — சிறு உடைமையாளரது கண்ணோட்டமானது, அதாவது என் கைக்கு எட்டியவற்றை எல்லாம் எனக்கே உரியனவாய் வாரிக் கொள்ள வேண்டும், ஏனையோர் எக்கேடு கெட்டாலும் கவலையில்லை என்பதான கண்ணோட்டமானது விடாப்பிடியாக நீடித்து நிலவுவதில்—இந்தக் குட்டி முதலாளித்துவ அராஜகம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

பெருவீத முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்ட கூட்டமைப்பின் பொருளாதாரப் பிணைப்புகளை மிக எடுப்பாய் உருவகப்படுத்துவதாகக் கொள்ளக் கூடிய ரயில் போக்குவரத்துப் பணித் துறையில் குட்டி முதலாளித்துவக் கண்டிப்பின்மைக்கான கூறுக்கும் பாட்டாளி வர்க்க ஒழுங்கமைப்புக்கும் இடையிலான போராட்டம் குறிப்பிடத் தக்கத் தெளிவுடன் புலப்படுகிறது. ''நிர்வாகப்'' பணியினர் நாச வேலையினரையும் லஞ்ச ஊழியர்களையும் ஏராளமாகத் தோற்றுவிக்க, பாட்டாளி வர்க்கப் பிரிவினரில் சிறந்த பகுதியோர் கட்டுப்பாட்டுக்காகப் போராடுகின்றனர். ஆனால் இரு பகுதியோரிடையிலும் ஊசலாட்டக்காரர்களும் ''பலவீன'' ஆட்களும் பலர் இருக்கவே செய்கின்றார்கள்;

கொள்ளை இலாபம், லஞ்சம், தனிப்பட்ட ஆதாயம் ஆகியவற்றின் ''கவர்ச்சியை'' இவர்களால் எதிர்த்து நிற்க முடிவதில்லை; முழுப் பொறியமைவையும் கேடுறச் செய்து இவர்கள் தனிப்பட்ட முறையில் ஆதாயம் பெறுகிறார்கள்; ஆனால் பஞ்சத்தின் மீதும் வேலையின்மை மீதும் வெற்றி பெறுதல் இப்பொறியமைவு ஒழுங்காய் இயங்குவதையே பொறுத்திருக்கிறது.

இரயில்வேக்களின் நிர்வாகம் குறித்து அண்மையில் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை மையமாகக் கொண்டு வளர்ந்திருக்கும் போராட்டம் குறிப்பிடத்தக்கதாகும். இந்த அரசாணை தனிப்பட்ட நிர்வாகிகளுக்குச் சர்வாதிகாரம் (அல்லது ''வரம்பில்லா'' அதிகாரம்) அளித்திடுகிறது. குட்டி முதலாளித்துவக் கண்டிப்பின்மை குறித்து உணர்வுள்ள பிரதிநிதிகள் (பெரும் பகுதியோர் இவ்வுணர்வு இல்லாதோராகவும் இருக்கலாம்) இவ்விதம் தனியாட்களுக்கு ''வரம்பில்லா'' அதிகாரம் (அதாவது, சர்வாதிகாரம்) அளிக்கப்பட்டிருப்பதானது, கூட்டுமைக் கோட்பாட்டிலிருந்து, ஜனநாயகவாதத்திலிருந்து, சோவியத் ஆட்சியதிகாரத்தின் கோட்பாடுகளிலிருந்து விலகிச் செல்வதைக் குறிப்பதாய்க் கருத விரும்புகிறார்கள். சர்வாதிகாரம் அளித்திடும் இந்த அரசாணைக்கு எதிராய் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களிடையே,[23] இங்குமங்குமாக, திட்டவட்டமான காலித்தனம் வாய்ந்த கிளர்ச்சி, அதாவது கீழ்த் தரமான உணர்ச்சிகளையும் சிறு உடைமையாளருக்குரிய ''கைக்கு எட்டியவை யாவற்றையும் வாரிக் கொள்ளும்'' ஆவலையும் தூண்டிவிடும்படியான கிளர்ச்சி வளர்த்து உருவாக்கப்பட்டிருக்கிறது. பிரச்சினையானது மெய்யாகவே மிகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகியுள்ளது. முதலாவதாக, கோட்பாடு சம்பந்தமான பிரச்சினை: அதாவது, தனியாட்களை வரம்பில்லா அதிகாரமுள்ள சர்வாதிகாரிகளை நியமிப்பது பொதுவாக சோவியத் ஆட்சியதிகாரத்தின் அடிப்படை கோட்பாடுகளுக்கு இசைவானதா? இரண்டாவதாக, இந்தச் செயல்—இந்த முன்மாதிரி என்பதாக வேண்டுமானாலும் சொல்லுங்கள்—தற்போதைய ஸ்தூல நிலைமையில் ஆட்சியதிகாரத்துக்குள்ள விசேஷப் பணிகளுடன் கொண்டிருக்கும் உறவு என்ன? இந்த இரு

பிரச்சினைகளையும் நாம் தீர்க்கமாய்ப் பரிசீலித்தாக வேண்டும்.

புரட்சி இயக்கங்களது வரலாற்றில் தனியாட்களது சர்வாதிகாரம் புரட்சிகர வர்க்கங்களது சர்வாதிகாரத்தின் வெளிப்பாடாக, சாதனமாக, செயல்வழியாக அடிக்கடி இருந்ததை வரலாற்றின் மறுக்க முடியாத அனுபவம் தெளிவு படுத்திக் காட்டியுள்ளது. தனியாட்களது சர்வாதிகாரம் சந்தேகத்துக்கு இடமின்றி முதலாளித்துவ ஜனநாயகவாதத் துக்கு இசைவானதாகவே இருந்தது. ஆனல் சோவியத் அமைப்பை நிந்தனை செய்வோரும் அவர்களது குட்டி முதலாளித்துவக் கையாட்களும் இந்த விவகாரத்தில் எப்போதுமே செப்பிடுவித்தைப் புரிகிருர்கள்: ஒரு புறத்தில், சோவியத் அமைப்பு அபத்தமானதென்றும் அராஜகத் தன்மையதென்றும் காட்டு மிராண்டித் தனமானதென்றும் கூறுகிருர்கள்; சோவியத்துக்கள் உயர் வடிவிலான ஜனநாயகவாதமாகும் என்பதோடு ஜனநாயகவாதத்தின் சோஷலிச வடிவத்துக்கான துவக்க நிலையுமாகும் என்பதை நிரூபிக்கும் நமது வரலாற்று உதாரணங்கள் யாவற்றையும் தத்துவார்த்த வாதங்களையும் பற்றி ஒன்றும் சொல்லாமலே கவனமாய் ஒதுங்கிச் செல்கிருர்கள்; மறு புறத்தில், முதலாளித்துவ ஜனநாயகவாதத்தை விட உயர்ந்த ஜனநாயகவாதத்தை நம்மிடமிருந்து கோரி, உங்களது போல்ஷிவிக்குகளின் (அதாவது, முதலாளித்துவமாய் இராது சோஷலிசமாய் இருக்கும்) சோவியத் ஜனநாயகவாதத்துக்குத் தனியாள் சர்வாதிகாரம் நிச்சயமாயும் ஒவ்வாததெனச் சொல்கிருர்கள்.

படுகேவலமான வாதங்கள் இவை. நாம் அராஜகவாதிகளாக இல்லாத வரை, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்கு அரசு, அதாவது பலவந்தம் அவசியம் என்பதை ஒத்துக் கொண்டாக வேண்டும். அந்தந்தப் புரட்சிகர வர்க்கமும் கண்டிருக்கும் வளர்ச்சியின் நிலையாலும் மற்றும், உதாரணமாய், நீண்டதொரு பிற்போக்குப் போர் விட்டுச் சென்றிருப்பவற்றையும் முதலாளி வர்க்கத்தினரும் குட்டி முதலாளித்துவப் பகுதியோரும் காட்டும் எதிர்ப்பின் வடிவங்களையும் போன்ற விசேஷ சூழ்நிலைமைகளாலும் இந்தப் பலவந்தத்தின் வடிவம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே சோவியத் (அதாவது, சோஷலிச)

ஜனநாயகவாதத்துக்கும் தனியாட்கள் செலுத்தும் சர்வாதிகாரத்துக்கும் இடையே நிச்சயமாயும் முரண்பாடு ஏதுமில்லை. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கும் முதலாளித்துவச் சர்வாதிகாரத்துக்குமுள்ள வேறுபாடு என்னவெனில், முன்னது சுரண்டப்படும் பெரும்பான்மையோரது நலன்களுக்காக வேண்டி சுரண்டும் சிறுபான்மையோரைத் தாக்குகிறது என்பதும் இச்சர்வாதிகாரம்—தனியாட்கள் மூலமானதே இதுவும் — உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமான மக்களால் மட்டுமின்றி, இம்மக்களை வரலாறு படைக்கும் செயலில் இறங்கும்படித் தட்டியெழுப்பி ஊக்குவிக்கும்படியான முறையில் கட்டப் பெற்றுள்ள நிறுவனங்களாலும் செலுத்தப்படுகிறது என்பதும் தான் (சோவியத் நிறுவனங்கள் இவ்வகைப்பட்டவையே).

தற்போதைய தருணத்தின் பிரத்தியேகப் பணிகளின் நோக்கு நிலையிலிருந்து தனியாள் சர்வாதிகாரத் தன்மையதான அதிகாரங்களின் முக்கியத்துவத்தைப் பற்றிய இரண்டாவது பிரச்சினையைப் பொறுத்தவரை, பெருவீத இயந்திரத் தொழில் துறையானது—இதுவேதான் சோஷலிசத்தின் பொருள்வகை ஆதாரம், பொருளுற்பத்தி ஆதாரம், சோஷலிசத்தின் அடிப்படை—முழுமையான, கண்டிப்பான சித்த ஒற்றுமை வேண்டுமெனக் கோருகிறது; நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் பத்தாயிரக் கணக்கிலுமானவர்களது கூட்டு உழைப்பினை நெறியாண்மை புரிவது இந்தச் சித்த ஒற்றுமையே. தொழில்நுட்ப வழியிலும் பொருளாதார வழியிலும் வரலாற்று வழியிலும் இது அவசியமென்பது கண்கூடு; சோஷலிசம் குறித்துச் சிந்தனை செய்தவர்கள் எல்லோரும் இதனை சோஷலிசத்துக்குரிய நிபந்தனைகளில் ஒன்றுகுமென எப்போதுமே கருதி வந்துள்ளனர். ஆனால் கண்டிப்பான சித்த ஒற்றுமையை உறுதி செய்து கொள்வது எப்படி? ஆயிரக் கணக்கானோர் தமது சித்தத்தை ஒருவரது சித்தத்துக்குக் கீழ்படுத்திக் கொள்வதே இதற்குரிய வழி.

பொது வேலையில் பங்கு கொள்வோரிடம் குறைவற்ற முழுநிறை வர்க்க உணர்வும் கட்டுப்பாடும் இருக்குமாயின், இவ்வாறு கீழ்ப்படுத்திக் கொள்ளுதல் வாத்தியக் குழுவின் இயக்குனரது இதமான தலைமையைப் போன்றதாய் இருக்கும். குறைவற்ற முழுநிறைக் கட்டுப்பாடும் வர்க்க உணர்வும்

இல்லாத போது இது சர்வாதிகாரத்தின் கடுமையான வடிவங்களை ஏற்கலாம். ஆனால் இது எப்படி இருப்பதாயினும், பெருவீத இயந்திரத் தொழில் துறையின் பாணியில் ஒழுங்கமைக்கப் பெற்ற வேலை முறைகள் வெற்றி பெறுவதற்குத் தனியொருவரது சித்தத்துக்கு மறு பேச்சின்றிக் கீழ்ப்படிதல் முழுக்க முழுக்க அவசியமாகும். இரயில்வேக்களில் இது மேலும் இரண்டு, மூன்று மடங்குக்கு அவசியமாகும். ஓர் அரசியல் பணியிலிருந்து மேலெழுந்த வாரியான பார்வைக்குச் சிறிதும் இதை ஒத்ததாய் இராத இன்னொன்றுக்கு மாறிச் செல்ல வேண்டியிருப்பதில்தான் தற்போதைய நிலைமையின் தற்படைப்பு இயல்பு அனைத்தும் அடங்கியிருக்கிறது. வலுக்கட்டாயத்துக்கு உட்பட்டு மக்கள் கீழ்ப்படிய வேண்டியிருந்த மிகப் பழைமையான, வலிமை மிக்கதான, பெருஞ்சுமையாய் வருத்திய விலங்குகளை இப்போதுதான் புரட்சி தகர்த்திருக்கிறது. இது நடைபெற்றது நேற்று. ஆனால் இன்று இதே புரட்சி உழைப்பின் தலைவர்களது தனியொரு சித்தத்துக்கு மறு பேச்சின்றிப் பணியும்படி மக்களிடம் கோருகிறது—தான் வளர்ச்சியுற்று உறுதி பெறுவதன் நலன்களை முன்னிட்டே, சோஷலிசத்தின் நலன்களை முன்னிட்டே இது இவ்வாறு கோருகிறது. இம்மாதிரியான ஒரு மாற்றத்தினை ஒரே மூச்சில் நடந்தேறச் செய்துவிட முடியாதுதான். மிகவும் கடுமையாய் ஆட்டிக் குலுக்கப்பட்டு, அதிர்ச்சிகளுக்கு உள்ளாகி, பழைய வழிமுறைகளுக்குத் திருப்பி விடப்பட்டு, மக்களுக்குத் தலைமை தாங்கி அவர்களைப் புதிய வழிமுறைகளுக்கு இட்டுச் செல்லும் பாட்டாளி வர்க்க முன்னணிப் படையானது பேரளவான பிரயத்தனங்களை எடுக்கும்படி ஆகி—இவை யாவற்றின் விளைவாகவே இது சாதிக்கப்பட முடியும். நோவயா ழீஸ்ன் அல்லது வ்பெரியோத், தியேலோ நரோதா அல்லது நாஷ் வெக்கின்[24] அற்பத்தனமான, பித்தம் தலைக்கேறிய உணர்ச்சி ஆவேசத்துக்கு உள்ளாகி விடுவோர் இதெல்லாம் குறித்து சிந்திக்க முற்படுவதில்லை.

உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமான மக்கள் திரளினரது சராசரியான, சாதாரணப் பிரதிநிதியின் மனோபாவத்தை எடுத்துக் கொள்ளுங்கள், சமுதாயத்தில் அவரது வாழ்வின் புறநிலைப் பொருளாயத நிலைமைகளுடன் அதை ஒப்பிட்டுப் பாருங்கள். அக்டோபர் புரட்சிக்கு முன்பு சொத்துடைத்தவையாகிய சுரண்டும் வர்க்கங்கள் ஒரேயொரு தரந்

கூட அவருக்காக மெய்யான எந்தத் தியாகமும் புரிந்து அவரது நன்மைக்காக எதனையும் கைவிடக் கண்டதில்லை அவர்; அவருக்கு அளிக்கப்படுமெனத் திரும்பத் திரும்ப வாக்களிக்கப்பட்ட நிலத்தையும் சுதந்திரத்தையும் இவ்வர்க்கங்கள் அவருக்கு அளிக்கவோ, சமாதானம் கிடைக்கச் செய்யவோ, ''பேரரசு'' நலன்களையோ பேரரசு இரகசிய ஒப்பந்தங்களது நலன்களையோ அவை தியாகம் புரிந்தோ, மூலதனத்தையும் இலாபங்களையும் தியாகம் புரிந்தோ பார்த்ததில்லை அவர். 1917 அக்டோபர் 25க்குப் பிற்பாடுதான்—பலப்பிரயோகம் மூலம் இதை அவர் எடுத்துக் கொண்டு தாம் எடுத்துக் கொண்டதைப் பலப்பிரயோகம் மூலம் கேரென்ஸ்கிகள், கோட்ஸ்கள், கெகெச்கோரிகள், தூத்தவ்கள், கர்னீலவ்கள் ஆகியோரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்ததே, அதன் பிறகே—அவர் இதெல்லாம் நடைபெறக் கண்டார். இயற்கையாகவே சிறிது காலத்துக்கு அவரது கவனமெல்லாம், சிந்தனைகள் யாவும், ஆன்மிக பலம் அனைத்தும் நிம்மதியாக மூச்சு விடுவதில், முதுகை நிமிர்த்திக் கொள்வதில், தோள்களை நேராக்கிக் கொள்வதில் குவியலாயின; இப்போது வீழ்த்தப்பட்டுவிட்ட சுரண்டலாளர்களால் எப்போதுமே அவருக்கு இல்லாதபடி மறுக்கப்பட்டு வந்தவையும் தயாராய் இப்போது எதிரே இருந்தவையுமான வாழ்வின் பேறுகளைப் பெறுவதில் குவியலாயின. கிடைப்பவற்றை இப்படிச் சும்மா ''எடுத்துக்'' கொண்டுவிட, பற்றிக் கொண்டுவிட, வாரிக் கொண்டுவிட முடியாது, இப்படிச் செய்தால் கூடுதலான சீர்குலைவுக்கும் நாசத்துக்கும் கர்னீலவ்கள் திரும்பி வருவதற்கும்தான் வழிவகுக்கப்படும் என்பதைச் சாதாரண உழைப்பாளி தனக்குத் தானே கண்டு கொள்வதற்கும் ஐயமற தெரிந்து கொள்வதற்கும் மட்டுமின்றி, இதனை உணர்ந்து கொள்வதற்கும் சிறிதளவு காலம் தேவையாகவே இருக்கும். சாதாரண உழைப்பாளர்களின் வாழ்க்கை நிலைமைகளிலும் (ஆகவே மனோபாவத்திலும்) இதற்கு இசைவான மாறுதல் இப்போதுதான் ஏற்பட ஆரம்பித்திருக்கிறது. நமது பணி அனைத்தும், சுரண்டப்படுவோரின் விடுதலை நாட்டத்துக்கும் முயற்சிகளுக்கும் வர்க்க உணர்வு படைத்த பிரதிநிதியாகிய கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகளின்) பணி அனைத்தும், இந்த மாறுதலை உணர்ந்தறிந்து போற்றுவதுதான், இது அவசியமென்று

புரிந்து கொள்வதுதான்; ஓய்ந்து போன மக்களுக்கு, விடுபட்டு வெளிவருவதற்காகக் களைப்புற்ற நிலையில் மீள் வழியைத் தேடி வரும் இவர்களுக்குத் தலைமை தாங்கி சரியான பாதையில், உழைப்புக் கட்டுப்பாட்டுப் பாதையில், வேலை நிலைமைகளைப் பற்றிப் பொதுக் கூட்டங்களில் விவாதிக்கும் பணியினை வேலை செய்யும் போது சோவியத் தலைவரது, சர்வாதிகாரியினது சித்தத்துக்கு மறு பேச்சின்றிக் கீழ்ப்படியும் பணியுடன் ஒருமுகப்படுத்துவதற்கான பாதையில் இட்டுச் செல்வதுதான்.

''பொதுக் கூட்டப் பித்து''—குட்டி உடைமையான தன்னலவாதத்தின் வெடிப்புகளையும் பொருளின்மையையும் குழப்பத்தையும் மட்டுமே பார்க்கக் கூடிய முதலாளி வர்க்கத்தாருக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் நோவயா ழீஸ்ன் ஆதரவாளர்களுக்கும் இது கேலிக்குரியதாய் இருக்கிறது; இன்றுங்கூட அடிக்கடி குரோதக் கண்டனக் கூச்சலுக்குரியதாய் இருக்கிறது. ஆனால் ஒடுக்கப்பட்ட பெருந்திரளினர் பொதுக் கூட்டங்களில் கூடி விவாதங்கள் நடத்தாமல் சுரண்டலாளர்களால் பலவந்தமாய் அவர்கள் மீது திணிக்கப்பட்ட கட்டுப்பாட்டிலிருந்து உணர்வு பூர்வமான, மனமுவந்த கட்டுப்பாட்டுக்கு ஒருபோதும் மாறி வந்திருக்க முடியாது. பொதுக் கூட்டங்களில் பகிரங்கமாக விவாதித்தல் உழைப்பாளி மக்களது மெய்யான ஜனநாயகவாதமாகும்; முதுகை நிமிர்த்திக் கொள்வதற்கு, விழித்தெழுந்து புது வாழ்வினுள் பிரவேசிப்பதற்கு அவர்களுக்குரிய வழியாகும்; அவர்கள் தாமே விரியன் பாம்புகளை (சுரண்டலாளர்களும் ஏகாதிபத்தியவாதிகளும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளுமானோரை) அகற்றிச் சுத்தம் செய்திருக்கும் பாதையில், தமக்கு அன்னியமான பிரபுத்துவ, முதலாளித்துவ ஆட்சிக்குரிய கோட்பாடுகள் அல்லாத தமது சொந்த சோவியத் ஆட்சிக்குரிய கோட்பாடுகளின் அடிப்படையில் தமக்குரிய முறையில் தமக்காக தாமே அமைக்கக் கற்றுக் கொள்ள விரும்பும் பாதையில் முதலாவது அடிகளை எடுத்து வைத்து நடப்பதற்கு அவர்களுக்குரிய வழியாகும். உழைப்புக் கட்டுப்பாட்டின் மேலான வடிவங்களுக்கு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கான அவசியத்தை உணர்வு பூர்வமாய் ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு, வேலையின் போது சோவியத் ஆட்சியதிகாரத்தின் தனிப்பட்ட பிரதிநிதிகளது உத்தரவுகளுக்கு மறு பேச்

*சின்றிப் பணியும் நிலைக்கு திடமான முறையில் மாறிச் செல்வது சாத்தியமாகும் பொருட்டு சுரண்டலாளர்கள் மீது உழைப்பாளர்களுக்குக் கிட்டிய அந்த அக்டோபர் வெற்றி துல்லியமாயும் தேவைப்பட்டது; உழைப்பாளி மக்கள் புதிய வாழ்க்கை நிலைமைகளையும் புதிய பணிகளையும் முதற்கண் தாமே விவாதிப்பதற்கான ஒரு வரலாற்றுக் காலக் கூறு முழுதும் தேவைப்பட்டது.*

*இந்த மாற்றம் இப்போது ஆரம்பமாகியுள்ளது.*

*புரட்சியின் முதலாவது பணியை நாம் வெற்றிகரமாய்ச் செய்து முடித்திருக்கிறோம்; உழைப்பாளி மக்கள் பெருந்திரளினர் இந்தப் பணியின் வெற்றிக்கான அடிப்படை நிபந்தனையை எப்படி தம்முன் பரிணமிக்கச் செய்து கொண்டார்கள் என்பதை நாம் கண்டோம்: சுரண்டலாளர்களைக் கவிழ்க்கும் பொருட்டு இவர்களுக்கு எதிராய் அவர்கள் தம் முயற்சிகளை ஒன்றுபடுத்திக் கொண்டார்கள். **1905** அக்டோபர், **1917** பிப்ரவரி, அக்டோபர் ஆகியவை போன்ற கட்டங்கள்*[25] *உலக-வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.*

*புரட்சியின் இரண்டாவது பணியையும் நாம் வெற்றிகரமாய்ச் செய்து முடித்துள்ளோம்: சுரண்டலாளர்கள்அழுத்திக் கீழே இருத்தி வைத்திருந்தார்களே, சமுதாயத்தின் அந்தக் ''கீழ்மட்ட அணிகளை'' விழிப்புறச் செய்து அவர்களை உயர் மட்டத்துக்கு உயர்த்துவதே இந்தப் பணி. **1917** அக்டோபர் **25**க்குப் பிற்பாடுதான் இவர்கள் சுரண்டலாளர்களை வீழ்த்துவதற்கும் நிலவரங்களை மதிப்பிட்டு தமக்குரிய வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு ஆரம்பிப்பதற்கும் முழுநிறை சுதந்திரம் பெற்றனர். மிக அதிகமாய் ஒடுக்கப்பட்டு, மிதிக்கப்பட்டு வந்தோர், உழைப்பாளி மக்களில் மிகக் குறைவாய்க் கல்வி போதம் பெற்றிருந்த பெருந்திரளினர் பொதுக் கூட்டங்களில் பகிரங்கமாய் விவாதித்தல், இவர்கள் போல்ஷிவிக்குகளின் பக்கம் வருதல், தமது சொந்த சோவியத் நிறுவனங்களை எங்கும் நிறுவிக் கொள்ளுதல்—புரட்சியின் இரண்டாவது பெரிய கட்டமாகும் இது.*

*மூன்றாவது கட்டம் இப்போது ஆரம்பமாகிறது. நமக்கு நாமே வென்று கொண்டவற்றை, நாமே நேரில் ஆணையிட்டும் சட்டம் இயற்றியும் விவாதித்தும் திட்டமிட்டும் இருப்பவற்றை நாம் உறுதி பெறச் செய்தாக வேண்டும்;* **அன்றாட உழைப்புக் கட்டுப்பாட்டின்** *நிலையான வடிவங்களில் இவை*

யாவற்றையும் உறுதி பெறச் செய்தாக வேண்டும். இது மிக மிகக் கடினமானது என்றாலும் மன நிறைவு தரும் பணியாகும்; ஏனெனில் இது செய்து முடிக்கப்படும் போது மட்டுமே நமக்கு சோஷலிச அமைப்பு கிடைக்கப் பெறும். உழைப்பாளி மக்களது பொதுக் கூட்ட ஜனநாயகவாதத்தை —கொந்தளித்துப் பொங்கியெழுவதும் வசந்த வெள்ளமென கரை புரண்டு செல்வதுமான இதனை—வேலையின் போதான இரும்புக் கட்டுப்பாட்டுடன், வேலை செய்கையில் சோவியத் தலைவனின், தனியாளின் சித்தத்துக்கு **மறு பேச்சின்றிப் பணிவதுடன்** இணைப்பதற்கு நாம் கற்றுக் கொண்டாக வேண்டும்.

இதை இன்னும் நாம் கற்றுக் கொண்டாகவில்லை.

இதை நாம் கற்றுக் கொள்வோம்.

முதலாளித்துவச் சுரண்டலின் மீட்டமைப்பு நேற்று நம்மை அச்சுறுத்தியது; கர்னீலவ்கள், கோட்ஸ்கள், தூத்தவ்கள், கெகெச்கோரிகள், பொகயேவ்ஸ்கிகள் ஆகியோர் இந்த மீட்டமைப்பை உருவகப்படுத்துவோராய் இருந்தனர். இவர்கள் மீது நாம் வெற்றி பெற்றி விட்டோம். இந்த மீட்டமைப்பு, இதே மீட்டமைப்பு இன்று இன்னொரு வடிவத்தில் நம்மை அச்சுறுத்துகிறது; குட்டி முதலாளித்துவ கண்டிப்பின்மையின், அராஜகத்தின் கூறினது வடிவில், அல்லது ''இது என் வேலையல்ல'' என்று கூறும் சிறு உடைமையாளரது மனோபாவத்தின் வடிவில், பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டை எதிர்த்து இந்தக் கூறு தினசரி நடத்தும் அற்பமானவையாயினும் எண்ணிலடங்காத மோதல்கள், தாக்குதல்களின் வடிவில் நம்மை அச்சுறுத்துகிறது. இந்தக் குட்டி முதலாளித்துவ அராஜகக் கூறினை நாம் தோற்கடித்தாக வேண்டும், தோற்கடிக்கவும் போகிறோம்.

## சோவியத் ஒழுங்கமைப்பின் வளர்ச்சி

இன்று ஸ்தூலமாய்ச் செயல்படுத்தப்பட்டு வரும் வடிவில் சோவியத், அதாவது **பாட்டாளி வர்க்க** ஜனநாயகவாதத்தின், சோஷலிசத் தன்மை முதலில் உழைப்போரும் ஒடுக்கப்பட்டோருமான மக்களே தேர்ந்தெடுக்கும் உரிமையுள்ளோராய் இருப்பதிலும் முதலாளி வர்க்கத்தினர் விலக்கப்பட்டுள்ளதிலும் காணக்கிடக்கிறது; இரண்டாவதாக, தேர்தல்களின் எல்லா அதிகார வர்க்க முறைமைகளும் தடை

வரம்புகளும் ஒழிக்கப்பட்டிருப்பதிலும் மக்கள் தாமே தேர்தல்களின் கிரமத்தையும் காலத்தையும் நிர்ணயித்துக் கொள்வதிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்] உ எவரையும் திருப்பியழைக்கப் பூரண உரிமையுடையோராய் இருப்பதிலும் அது காணக்கிடக்கிறது; மூன்றுவதாக, உழைப்பாளி மக்களின் முன்னணிப் படையின், அதாவது பெருவீதத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பாட்டாளி வர்க்கத்தின் சிறந்த வெகுஜன ஒழுங்கமைப்பு உருவாக்கப்படுவதில் அது காணக்கிடக்கிறது. இந்த வெகுஜன ஒழுங்கமைப்பு பாட்டாளி வர்க்கம் சுரண்டப்படுவோரான பெருந்திரளான மக்களுக்குத் தலைமை தாங்கி அழைத்துச் செல்லவும் சுயேச்சையான அரசியல் செயற்பாட்டில் அவர்களை ஈடுபடும்படி ஈர்க்கவும் அவர்களுடைய சொந்த அனுபவத்தின் வாயிலாகவே அரசியல் வழியில் அவர்களுக்குப் போதமளிக்கவும் வகை செய்கிறது. மக்கள் அனைவரும் நிர்வாகக் கலையைக் கற்கவும் நிர்வகிக்கத் தொடங்கவும் இவ்வாறு முதன்முதலாய் முற்படுகிறார்கள்.

இவைதாம் இப்பொழுது ருஷ்யாவில் செயல்படுத்தப்படும் ஜனநாயகவாதத்தின் தலையாய சிறப்பியல்புகள். இந்த ஜனநாயகவாதம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததாகும்; முதலாளித்துவ வழியில் ஜனநாயகவாதம் திரித்துப் புரட்டப்படுவதிலிருந்து முறித்துக் கொள்வதாகும்; சோஷலிச ஜனநாயகவாதத்துக்கும் அரசு உலர்ந்து உதிரத் தொடங்குவதற்குரிய நிலைமைகளுக்கும் மாறிச் செல்வதற்குரிய கட்டமாகும்.

ஒழுங்கைக் குலைக்கும் குட்டி முதலாளித்துவக் கூறு (பாட்டாளி வர்க்கப் புரட்சி ஒவ்வொன்றிலும் தவிர்க்க முடியாதவாறு ஓரளவுக்கு இது தோன்றவே செய்கிறது; நமது நாட்டின் குட்டி முதலாளித்துவத் தன்மையின் காரணமாகவும் அதன் பிற்பட்ட நிலையின் காரணமாகவும் பிற்போக்குப் போரின் விளைவுகள் காரணமாகவும் நமது புரட்சியில் இந்தக் கூறு மிகவும் குறிப்பிடத்தக்கவாறு தோற்றமளிக்கிறது) சோவியத்துக்களிலும் தன் முத்திரையைப் பதிக்காது இருக்க முடியாதென்பது கூறாமலே விளங்கும்.

சோவியத்துக்களின், சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஒழுங்கமைப்பை வளர்த்திடுவதற்காக நாம் அயராது பாடுபட வேண்டும். சோவியத்துக்களின் உறுப்பினர்களை ''நாடாளுமன்றத்தினராகவோ'', இல்லையேல் அதிகார வர்க்கத்த

வர்களாகவோ மாறச் செய்திடும் குட்டி முதலாளித்துவப் போக்கு இருந்து வருகிறது. சோவியத்துக்களின் எல்லா உறுப்பினர்களையும் நிர்வாகத்தின் நடைமுறை வேலைகளில் ஈடுபடும்படிக் கவர்ந்திழுத்து நாம் இந்தப் போக்கை எதிர்த்துப் போராட வேண்டும். பல இடங்களில் சோவியத் துக்களின் இலாகாக்கள் படிப்படியாய்க் கமிசாரகங்களுடன் இணைந்து வருகின்றன. ஏழை மக்கள் அனைவரையும் நடை முறை நிர்வாகப் பணியில் ஈடுபடும்படிக் கவர்ந்திழுப்பதே நமது நோக்கம். இத்திசையில் எடுக்கப்படும் எல்லா நட வடிக்கைகளும்—எவ்வளவுக்கு எவ்வளவு பல திறப்பட்டன வாய் இருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது —கவனமாய்ப் பதிவு செய்யப்பட்டு, ஆராயப்பட்டு, முறைப் படுத்தப்பட்டு, மேலும் விரிவான அனுபவத்தால் சோதிக்கப் பெற்று, சட்ட வடிவமளிக்கப்பட வேண்டும். உழைப் பாளர் ஒவ்வொருவரும் பயன் விளைவுள்ள உழைப்பில் தமக் குரிய எட்டு மணி நேரப் பணியைச் செய்து முடித்த பின் சம்பளம் இல்லாமலே அரசுப் பொறுப்புகள் ஆற்றும்படி உறுதி செய்து கொள்வதே நமது நோக்கம். இந்த நிலைக்கு மாறிச் செல்வது மிகவும் கடினமே. ஆயினும் இவ்விதம் மாறிச் செல்வதன் மூலம்தான் சோஷலிசம் இறுதியாய் உறுதி பெறுமாறு உத்தரவாதம் செய்ய முடியும். இந்த மாற்றத்திலுள்ள புதுமையின் காரணமாகவும் இடர்ப்பாட் டின் காரணமாகவும் அபரிமிதமான பல நடவடிக்கைகள்— தட்டுத்தடுமாறியவாறு எனலாம் — எடுக்கப்படும்படியும் ஏராளமான தவறுகள் இழைக்கப்படும்படியும் ஊசலாடும் படியும் நேரிடும்; இது இயற்கையே இவை இல்லாமல் குறிப் பிடத்தக்க எந்த முன்னேற்றமும் சாத்தியமன்று. தம்மை சோஷலிஸ்டுகளாய்க் கருதிக் கொள்ள விரும்புகிறவர்கள் பலருக்கும் தற்போதைய நிலை விபரீதமானதாய்த் தோன்றக் காரணம் என்னவெனில், அவர்கள் கருத்தியலாகவே முத லாளித்துவத்தை சோஷலிசத்திடமிருந்து வேறுபடுத்திப் பார்த்துப் பழகியவர்கள்; இவை இரண்டுக்குமிடையே ஆழ்ந்த முறையில் அவர்கள் ''பாய்ச்சல்'' எனும் சொல்லை வைத்துப் பொருத்துகிறவர்கள் (இவர்களில் சிலர் எங்கெல் சின் நூல்களில் தாம் படித்த சில சிறு பகுதிகளை நினைவு படுத்திக் கொண்டு மேலும் ஆழ்ந்த முறையில் ''அவசியத்தின் ஆட்சியரங்கிலிருந்து சுதந்திரத்தின் ஆட்சியரங்கிற்குப்

பாயுதல்''[26] என்னும் தொடரைச் சேர்த்துக் கொள்கிற வர்கள்). சோஷலிஸ்டுகள் எனப்படுவோரான இவர்களில் பெரும்பான்மையோர் சோஷலிசத்தைப் பற்றி ''புத்தகங் களில் படித்திருக்கிறார்கள்'', ஆனால் இது குறித்து கருத் தாழமுள்ள முறையில் சிந்தித்தவர்கள் அல்ல; சோஷலிசத் தின் போதனாசிரியர்கள் ''பாய்ச்சல்'' என்று கூறிய போது உலக வரலாற்று அளவிலான திருப்பங்களையே மனதிற் கொண்டிருந்தனர், இவ்வகைப்பட்ட திருப்பங்கள் பத்தாண்டு களுக்கும் அதற்கும் அதிகமான காலங்களுக்கும்கூட நீடிப் பவை என்பதை இவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. அவக்கேடான ''அறிவுத் துறையினர்'' மத்தியிலிருந்து ஒப் பாரி பாடுவோர் இயற்கையாகவே இக்காலங்களில் எண் ணற்றவர்கள் தோன்றுகின்றனர்: அரசியல் நிர்ணய சபை[27] குறித்து சிலர் கண்ணீர் வடிக்கின்றனர்; முதலாளித்துவக் கட்டுப்பாடு மறைந்து விட்டதே என்று புலம்புகின்றனர் வேறு சிலர்; முதலாளித்துவ அமைப்பு மாண்டு விட்டதே என்கின்றனர் இன்னும் சிலர்; உயர் பண்பாட்டுக்குரிய நிலப் பிரபுக்கள் போய்விட்டார்களே என்றும் ஏகாதிபத்தியப் பேரரசுவாதக் கொள்கை மறைந்து விட்டதே என்றும் இன்ன பலவாறாகவும் மற்றும் சிலர் அழுது புலம்புகின்றனர்.

பழமையின் உடைபட்ட ஏராளமான துண்டுகள் சில நேரங்களில் புதுமையின் மூலக் கருக்களைக் காட்டிலும் (இவை எப்பொழுதும் உடனடியாகவே கண்ணுக்குப் புலப்பட்டு விடக் கூடியவை அல்ல) வேகமாய்க் குவிந்து விடுவதானது, வளர்ச்சியின் தொடரிணைப்பு அல்லது சங்கிலியில் மிக முக்கிய அலகைக் கண்டறிந்து கொள்ளும் ஆற்றலை அவசியமாக்கி விடுகின்றன என்பதில்தான் மாபெரும் பாய்ச்சல்களது சகாப்தத்தில் மெய்யாகவே நாட்டத்துக்குரிய அம்சம் அடங்கி யுள்ளது. உடைபட்ட இத்துண்டுகளைக் கூடுமான அளவுக்கு அதிகமாய்க் குவித்திடுவதே, அதாவது பழைய நிறுவனங் களில் கூடுமான அளவுக்கு அதிகமானவற்றைத் தகர்த்திடு வதே புரட்சியின் வெற்றிக்கு மிகவும் முக்கியமாகி விடும் தருணங்கள் வரலாற்றில் தோன்றுகின்றன. போதுமான அள வுக்குத் தகர்த்தாகி விட்டது, இனி உடைபட்ட துண்டுகளைத் துடைத்தெறிந்துவிட்டுச் சுத்தப்படுத்தும் ''சோபையில் லாப்'' பணியே (குட்டி முதலாளித்துவப் புரட்சியாளர் களுக்குச் ''சலிப்பூட்டும்'' பணியே) அடுத்தபடியாய் நடை

பெற வேண்டியதாகிவிடும் தருணங்களும் வருகின்றன. தகர்ந்த கற்கூளங்கள் இன்னும் சரிவர அகற்றப்படாத நிலத்தில் இடிபாடுகளுக்கு மத்தியில் வளர்ந்து கொண்டிருக்கும் புதிய அமைப்பின் மூலக் கருக்களைக் கவனமாய்ப் பேணிக்காக்க வேண்டியது மிக முக்கிய பணியாகிவிடும் தருணங்களும் வருகின்றன.

பொதுப்பட புரட்சியாளரும் சோஷலிஸ்டு ஆதரவாளரும் ஆகவோ, கம்யூனிஸ்டாகவோ இருந்தால் மட்டும் போதாது. குறிப்பிட்ட ஒவ்வொரு தருணத்திலும் சங்கிலியில் எந்த ஓர் இணைப்பை உங்கள் முழு பலத்தையும் கொண்டு பற்றிக் கொண்டால் முழுச் சங்கிலியையும் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளவும் அடுத்த இணைப்புக்கு மாறிச் செல்வதற்குத் திடமான முறையில் தயாரிப்பு செய்யவும் முடியும் என்பதை நீங்கள் கண்டு கொள்ளும் ஆற்றலுடையவராய் இருக்க வேண்டும். வரலாற்று நிகழ்ச்சிகளின் சங்கிலியில் இணைப்புகளின் வரிசையும் அவற்றின் வடிவமும் அவை ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும் முறையும் ஒன்றுக்கொன்று அவை வேறுபடும் விதமும் கொல்லுப் பட்டறையாளரால் செய்யப்பட்ட சாதாரண சங்கிலியில் இருப்பதைப் போல் அவ்வளவு எளிதாகவும் அவ்வளவு அர்த்தமற்றவையாகவும் இருப்பதில்லை.

சோவியத்துக்களுக்கும் ''மக்களுக்கும்''—உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களையே இங்கு குறிப்பிடுகிறோம்—இடையிலுள்ள இணைப்பின் உறுதியும் இந்த இணைப்பின் நெகிழ்வும் குழைவும் ஒழுங்கமைப்பின் சோவியத் வடிவம் அதிகார வர்க்க வழியில் திரித்துப் புரட்டப்படுவதற்கு எதிரான போராட்டத்துக்குரிய உத்தரவாதமாகும். உலகில் மிகவும் ஜனநாயகவாதமான முதலாளித்துவக் குடியரசுகளிலுங்கூட ஏழை மக்கள் முதலாளித்துவ நாடாளுமன்றத்தைத் ''தமது'' மன்றமாய்க் கருதுவதில்லை. ஆனல் சோவியத்துக்களைப் பெருந்திரளான தொழிலாளர்களும் விவசாயிகளும் தமக்கு அன்னியமானவையாகக் கருதாது ''தமது'' அமைப்புகள் என்றே கருதுகின்றனர். ஷெய்டெமன் அல்லது ஏறத்தாழ அவரை ஒத்த மார்த்தவ் ரகத்தைச் சேர்ந்த நவீன ''சமூக-ஜனநாயகவாதிகள்'' சோவியத்துக்கள் என்றதும் மிரண்டோடுகின்றனர்; கனவான்களது முதலாளித்துவ நாடாளுமன்றத்தால் அல்லது அரசியல் நிர்ணய சபையினுல்

கவரப்படுகின்றனர்—அறுபது ஆண்டுகளுக்கு முன்பு துர்கேனெவ் மிதவாத முடியரசுவாதப் பிரபுக்களது அரசியலமைப்புச் சட்டத்தால் கவரப்பட்டாரே அது போல; தப்ரலியூபவ், செர்னிஷேவ்ஸ்கி ஆகியோரது விவசாயி ஜனநாயகவாதம் என்றதும் மிரண்டோடினரே அது போல.

சோவியத்துக்கள் ''மக்களுக்கு'', உழைப்பாளி மக்களுக்கு நெருங்கியவை; இந்த நெருக்கம்தான் திருப்பியழைத்தல், அடியிலிருந்து கண்காணிப்பு செய்வதற்கான ஏனைய வழி முறைகள் ஆகிய விசேஷ வடிவங்களைத் தோற்றுவிக்கிறது; இப்பொழுது இவ்வடிவங்களை நாம் மிகவும் கண்ணுங் கருத்துமாய் வளர்த்துச் செல்ல வேண்டும். உதாரணமாய், பொதுக் கல்விக் கவுன்சில்கள், இத்துறையில் சோவியத் அதிகாரிகளின் செயற்பாடுகள் குறித்து விவாதிக்கவும் கண்காணிப்பு செலுத்தவும் அவ்வப்பொழுது கூட்டப்படும் சோவியத் வாக்காளர்கள், அவர்களது பிரதிநிதிகளின் மாநாடுகள் முழு ஆதரவுக்கும் பரிவுக்கும் உரித்தானவை. சோவியத்துக்களை இறுகிக் கெட்டியான, தனித்தொதுங்கிய அமைப்புகளாக்குவதைக் காட்டிலும் மடமை வேறு எதுவும் இல்லை. நாம் கடுமையான உறுதியான ஆட்சியதிகாரத்தையும், குறிப்பிட்ட வேலைத் துறைகளில், முற்றிலும் செயலாக்கப் பணிகளின் குறிப்பிட்ட கூறுகளில், குறிப்பிட்ட வேலையில் தனியாட்களது சர்வாதிகாரத்தையும் எவ்வளவுக்கு எவ்வளவு வைராக்கியமாய் இப்பொழுது நாம் ஆதரித்து நிற்க வேண்டியிருக்கிறதோ, சோவியத் ஆட்சியதிகாரத்தின் கோட்பாடுகளைத் திரித்துப் புரட்டுவதற்கான சாத்தியப்பாட்டுக்குள்ள ஒவ்வொரு சாயலையும் எதிர்த்து நிற்பதற்காகவும் அயராது மீண்டும் மீண்டும் அதிகார வர்க்கத்தைக் களைந்தெறிவதற்காகவும் அடியிலிருந்து கண்காணிப்பு செலுத்துவதற்குரிய வடிவங்களும் முறைகளும் அவ்வளவுக்கு அவ்வளவு பலதிறப்பட்டனவாய் இருக்க வேண்டும்.

## முடிவுரை

சர்வதேச விவகாரங்களில் அசாதாரணமாய்க் கடினமான, சிக்கலான, அபாயகரமான நிலைமை; சாமர்த்திய உபாயங்களும் பின்வாங்குதலும் இன்றியமையாதனவாகிவிடுதல்; வேதனை வாய்ந்த மந்த கதியில் மேலைய நாடுகளில்

முதிர்ச்சியுற்று வரும் புரட்சியின் புதிய திடீர் வெடிப்புக்களுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ள ஒரு காலகட்டம்; உள்நாட்டில் மந்த கதியிலான கட்டுமானத்துக்கும் தயவு தாட்சண்யமின்றிக் கண்டிப்புடன் ''இறுக்கிப் பிடித்தலுக்கும்''—குட்டி முதலாளித்துவக் கண்டிப்பின்மையும் அராஜகமுமாகிய அபாயகரமான கூறினை எதிர்த்து கடுமையான பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாடு புரிந்திடும் விடாப்பிடியான போராட்டத்துக்குமான காலகட்டம்—சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து, இவைதாம் சோஷலிசப் புரட்சியில் இப்போது நாம் இருந்து வரும் இந்த விசேஷக் கட்டத்தின் சிறப்பியல்புகள். வரலாற்று நிகழ்ச்சிகளின் சங்கிலியில் இந்த இணைப்பைத்தான் தற்போது நமது முழு பலத்தையும் கொண்டு பற்றிக் கொள்ள வேண்டும், அப்போதுதான் அடுத்த இணைப்புக்கு மாறிச் செல்லுமுன் நம்மை எதிர்நோக்கும் பணிகளைச் செய்து முடிக்கும் ஆற்றலுடையோராக நாம் இருக்க முடியும்; தனிப்பெரும் சுடரொளியால், சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிகளது சுடரொளியால் நாம் இந்த அடுத்த இணைப்பை நோக்கிக் கவர்ந்திழுக்கப்படுகிறோம்.

தற்போதைய கட்டத்தின் பிரத்தியேக நிலைமைகளிலிருந்து, அதாவது சாமர்த்திய உபாயங்கள், பின்வாங்குதல், காத்திருத்தல், மந்த கதியில் கட்டியமைத்துச் செல்லுதல், தயவுதாட்சண்யமின்றிக் கண்டிப்புடன் இறுக்கிப் பிடித்தல், கடுங்கட்டுப்பாட்டை நிலைநிறுத்தல், கண்டிப்பின்மையைத் தகர்த்திடல்... ஆகியவற்றிலிருந்து பெறப்படும் கோஷங்களைப் ''புரட்சிகரமானது'' எனப்படும் சாதாரணமான அன்றாடக் கருத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க முயலுங்கள். இதைக் கேட்டதும் ''புரட்சியாளர்கள்'' சிலர் புனித ஆவேசம் கொண்டு சீற்றமடைவது குறித்தும் நாம் அக்டோபர் புரட்சியின் பாரம்பரியங்களை மறந்து விடுவதாகவும் முதலாளித்துவ நிபுணர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதாகவும் முதலாளித்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்வதாகவும் குட்டி முதலாளித்துவத் தன்மையினராகவும் சீர்திருத்தவாதிகளாகவும் இருப்பதாகவும் மற்றும் பலவாறாகவும் ''இடிமுழக்கமிட்டு'' நம் மீது வசைமாரி பொழிய முற்படுவது குறித்தும் ஆச்சரியப்படவா வேண்டும்?

பரிதாபத்துக்குரிய இந்தப் ''புரட்சியாளர்களது'' துர

திருஷ்ட நிலை என்னவெனில், இவர்களில் உலகிலே உன்னத மான அடிநோக்கங்களால் உந்தப்படுவோராகவும் சோஷலிச இலட்சியத்துக்கு முழு விசுவாசம் செலுத்துவோராகவும் இருப்போருங்கூட தனி நிலைமையைப் புரிந்து கொள்ளத் தவறி விடுகிறார்கள்—பெரு நாசம் விளைவித்த பிற்போக்கு யுத்தத்தால் குதறிக் குலைக்கப்பட்டிருப்பதும் அதிகமாய் முன்னேறிய நாடுகளைக் காட்டிலும் நெடுங்காலம் முன்னதாகவே சோஷலிசப் புரட்சியை ஆரம்பித்து விட்டதுமாகிய ஒரு பிற்பட்ட நாடு தவிர்க்க வொண்ணுதவாறு கடக்க வேண்டியிருக்கும் குறிப்பிடத்தக்க அளவுக்குக் ''கசப்பான'' நிலைமையைப் புரிந்து கொள்ளத் தவறி விடுகிறார்கள்; கடினமான ஒரு மாற்றத்தின் கடினமான தருணங்களில் தக்க மனவுரம் இல்லாதவர்களாய் இருக்கிறார்கள். இயற்கையாகவே இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்தான் நமது கட்சிக்கு எதிரான இந்த வகைப்பட்ட ''அதிகார பூர்வ'' எதிர்த்தரப்பினராகச் செயல்படுகிறார்கள். கோஷ்டி, வர்க்க ரகங்களினுள் தனிப்பட்ட விதிவிலக்குகள் இருக்கத்தான் செய்கின்றன, எப்போதும் இருக்கவே செய்யும். ஆனால் சமூக ரகங்கள் நிலவி வருகிறவை. முழுக்க முழுக்க பாட்டாளி வர்க்கத்தவராய் இருப்போரைக் காட்டிலும் சிறு உடைமையாளராய் இருப்போர் வெகுவாய் மிகுதியாயுள்ள நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளருக்கும் குட்டி முதலாளித்துவப் புரட்சியாளருக்கும் இடையிலுள்ள வேறுபாடு தவிர்க்க வொண்ணுதவாறு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது, அவ்வப்போது மிகவும் கடுமையாகவே வெளிப்படுத்திக் கொள்கிறது. நிகழ்ச்சிகளது ஒவ்வொரு திருப்பத்தின் போதும் குட்டி முதலாளித்துவப் புரட்சியாளர் தடுமாறவும் ஊசலாடவும் செய்கிறார்: 1917 மார்ச் மாதத்தில் ஆர்வமிக்க புரட்சியாளராய் இருக்கிறார்; மே மாதத்தில் ''கூட்டணி ஆட்சியைப்'' புகழ்கிறார்; ஜூலை மாதத்தில் போல்ஷிவிக்குகளை வெறுக்கிறார் (அல்லது அவர்களது ''சாகசவாதம்'' குறித்து வருந்துகிறார்); அக்டோபர் இறுதியில் அச்சத்துடன் அவர்களிடமிருந்து விலகி ஒதுங்குகிறார்; டிசம்பரில் அவர்களை ஆதரிக்கிறார்; முடிவில் 1918 மார்ச், ஏப்ரல் மாதங்களில் இப்படிப்பட்ட ரகத்தினர் பெருவாரியான சந்தர்ப்பங்களில் இறுமாப்போடும் ஏளனத்தோடும் முகத்தைத் திருப்பிக் கொண்டு கூறுகின்றனர்: '' 'கூட்டிணைவான' வேலை,

நடைமுறைக் காரியப் பாங்கு, படிப்படியான மாற்றம் இவற்றுக்குப் புகழ் மாலை பாடுவோரில் ஒருவனல்ல நான்''.

இம்மாதிரியான ரகத்தினருக்குச் சமூகத் தோற்றுவாய் சிறு உடைமையாளரே—போரின் பயங்கரங்களாலும் திடுமென உண்டாகும் அழிவாலும் முன்பின் கண்டிராப் பஞ்சத்தின், நாசத்தின் கொடுந்துன்பங்களாலும் வதைக்கப்பட்டு வெறித் தனமாய்ச் சீற்றம் கொண்டவரும், கரையேறுவதற்கு, விமோசனத்துக்கு வழி தேடிப் பித்து கொண்ட நிலையில் அங்குமிங்கும் ஓடுகிறவரும், ஒரு நிமிடம் பாட்டாளி வர்க்கத்திடம் நம்பிக்கை கொண்டு அதை ஆதரிப்பவரும், மறு கணம் நம்பிக்கை இழந்து பரிதவிக்கிறவருமான சிறு உடைமையாளர் இவர். இம்மாதிரியான சமூக அடித்தளத்தின் மீது சோஷலிசத்தை அமைத்திட முடியாதென்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும், மறவாதபடி நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். மிகக் கடினமானதும் கடுமை வாய்ந்ததும் அபாயம் மிக்கதுமாகிய கட்டங்களிலுங்கூட தைரியம் இழக்காமல், விரக்திக்கு இடந்தராமல், தனக்குரிய பாதையிலிருந்து பிறழாமல் தொடர்ந்து செல்லும் வர்க்கம்தான் உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்களுக்குத் தலைமை தாங்க வல்லதாகிய ஒரே வர்க்கம். ஆவேச உணர்ச்சித் துடிப்புகளால் நமக்கு எந்தப் பயனும் இல்லை. பாட்டாளி வர்க்கத்தின் உருக்குப் பட்டாளங்களது ஒரே சீரான முன்னேற்றமே நமக்கு வேண்டும்.

*1918 ஏப்ரல் 13க்கும் 26க்கும்*
*இடையே எழுதப்பட்டது*

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கங்கள் 165-208

## "இடதுசாரி" சிறுபிள்ளைத் தனமும் குட்டி முதலாளித்துவ மனோபாவமும்

### என்னும் நூலிலிருந்து

. . . . . . . . .

### 3

உள்நாட்டுத் துறையில் நமது "இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்"[28] அனுபவிக்கும் துர்ப்பாக்கியங்களைப் பார்ப்போம். தற்கால நிலைமை பற்றிய ஆய்வுரைகளில் பின்வரும் வாதங்களைச் சிரிக்காமல் படிப்பது என்பது கஷ்டமான விஷயம்:

"...சமுதாய உடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கையைப் பின்பற்றினால் மட்டுமே மீதமிருக்கும் உற்பத்திச் சாதனங்களை முறையாகப் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்க முடியும்"... "முதலாளி வர்க்கத்துக்கும் அதன் குட்டி முதலாளித்துவ அறிவுஜீவி இயல்பான கையாட்களுக்கும் பணிவதற்காக அல்ல, மாறாக முதலாளி வர்க்கத்தை முறியடித்துத் துரத்துவதற்காக, நாச வேலையை முற்றாக ஒழிப்பதற்காக...".

அன்புக்குரிய "இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்", எவ்வளவு உறுதியோடு இருக்கிறார்கள்; ஆனால்... சிறிதேனும் சிந்தனையைக் காட்டவில்லையே! "சமுதாய உடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கையைப் பின்பற்றுவது" என்பதற்கு அர்த்தம் என்ன?

தேசவுடைமையாக்குவது அல்லது பறிமுதல் செய்வது என்ற பிரச்சினை பற்றி ஒருவன் உறுதியுள்ளவனாகவோ இல்லாதவனாகவோ இருக்கக் கூடும். ஆனால் விவகாரம் என்னவென்றால், தேசவுடைமை நிலையிலிருந்து, பறிமுதல் நிலையிலிருந்து சமுதாயவுடைமை நிலைக்கு மாறுவதற்கு அதிகபட்சமான "மனவுறுதி" இருந்தால் மட்டும் போதாது. நம் "இடதுசாரிகளின்" துரதிருஷ்டம் என்னவெனில், "சமுதாய உடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கை" என்கிற வெகுளித் தனமான சிறுபிள்ளைத் தனமான சொற்றொடர் மூலமாகப் பிரச்சினையின் கடும் சிக்கலை,

''தற்கால'' நிலைமையின் கடும் சிக்கலைப் புரிந்து கொள்ளத் தவறியதைக் காட்டிக் கொள்கிறார்கள். நம் ''இடதுசாரி களின்'' துரதிருஷ்டம் என்னவெனில், ''தற்கால நிலைமை யின்'' சாராம்சத்தை — பறிமுதல் செய்கிற நிலையிலிருந்து (இதை நிறைவேற்றுவதற்கு ஓர் அரசியல்வாதியிடம் எல்லா வற்றிற்கும் மேலாக உறுதி இருக்க வேண்டும்) சமுதாய உடைமை நிலைக்கு (இதை நிறைவேற்றுவதற்கு ஒரு புரட்சி யாளரிடம் வேறொரு குணம் வேண்டியிருக்கிறது) மாறிச் செல்வதை—தவற விட்டு விட்டார்கள்.

நேற்றைய தினம் சாத்தியமான அளவுக்கு உறுதியுடன் தேசவுடைமையாக்குவதும் பறிமுதல் செய்வதும் முதலாளி வர்க்கத்தை வீழ்த்தி நசுக்குவதும் நாச வேலையை ஒழிப் பதும்[29] அத்தருணத்திய பிரதான கடமையாக இருந்தது. இன்றைய தினம் கணக்கிட்டுப் பார்க்க முடியாத அளவுக்கு நாம் தேசவுடைமையாக்கினோம், பறிமுதல் செய்தோம், அடித்து வீழ்த்தினோம், ஒழித்தோம் என்பதை ஒரு குருடன் மட்டுமே பார்க்கத் தவறியிருக்க முடியும். சமுதாயவுடைமை நிலைக்கும் சாதாரணமான பறிமுதலுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், ''உறுதியை'' மட்டும் கொண்டு—கணக் கிட்டு முறையாக வினியோகம் செய்யும் திறன் இல்லாமலே —பறிமுதலை நிறைவேற்றிவிட முடியும், ஆனால் சமுதாயவுடை மையாக்கத்தை இந்தத் திறனில்லாமல் கொண்டுவர முடியாது.

வரலாற்று ரீதியான நமது சேவை என்னவெனில், நேற்றைய தினம் (நாளைக்கும் கூடத்தான்) பறிமுதல் செய் வதிலேயும் முதலாளி வர்க்கத்தை வீழ்த்துவதிலேயும் நாச வேலையை ஒழிப்பதிலேயும் நாம் உறுதியோடு இருந்தோம். அதைப் பற்றி இப்போது ''தற்கால நிலைமை பற்றிய ஆய் வுரைகளில்'' எழுதுவது சென்ற காலத்தின் மீது பார்வையைப் பதித்துக் கொண்டு எதிர் காலத்துக்கு மாறிச் செல்வதைப் புரிந்து கொள்ளத் தவறுவதாகும்.

...''நாச வேலையை முற்றாக ஒழிப்பது''.... எத்தகைய கடமையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்! நம் நாச வேலைக் காரர்கள் போதிய அளவுக்கு ''ஒழிக்கப்பட்டிருக்கிறார்கள்''. நம்மிடம் இல்லாமலிருப்பது முற்றிலும் வேறொன்றாகும்: எந்த நாச வேலைக்காரர்களிடம் வேலை வாங்குவது, எந்த இடத்தில் அவர்களை வைப்பது என்பது பற்றிய ஒரு முறை யான கணிப்பு நம்மிடம் இல்லை; உதாரணத்துக்குச் சொன்

ஞல், நமது சேவகத்துக்குள் இப்போது வந்து கொண்டிருக்கும் ஒரு நூறு நாச வேலைக்காரர்களை ஒரு போல்ஷிவிக்குகளின் தலைவன் அல்லது கண்காணிப்பவன் மேற்பார்வையிடச் செய்வதற்குத் தேவையான முறையிலே நமது சொந்த சக்திகளின் ஒழுங்கமைப்பு நமக்கில்லை. விவகாரங்கள் இவ்வாறு இருக்க, ''சமுதாய உடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கை'', ''முறியடித்துத் துரத்துவது'', ''முற்ருக ஒழிப்பது'' போன்ற வாய்ச்சொற்களை வீசுவது இலக்கைத் தவற விடுவதாகும். முறியடித்துத் துரத்துவது, ஒழிப்பது, முதலியவை மட்டும் சோஷலிசத்துக்குப் போதாது என்பதைப் பார்க்காமலிருப்பது குட்டி முதலாளித்துவப் புரட்சியாளரின் குறிப்பண்பாகும். ஒரு பெரிய உடைமையாளன் மேல் ஆத்திரப்படுகிற சிறு உடைமையாளனுக்கு அது போதும். ஆனுல் எந்தப் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளரும் என்றைக்கும் இப்படிப்பட்ட தவறு செய்ய மாட்டான்.

நாம் மேற்கோள் காட்டிய சொற்கள் அடக்கச் சிரிப்பை உண்டாக்குகின்றன என்று சொன்னுல், ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' செய்துள்ள பின்வரும் கண்டுபிடிப்பு அட்டகாசமான வெடிச் சிரிப்பைத்தான் நமக்கு உண்டாக்கும். அவர்கள் கருத்துப்படி, ''போல்ஷிவிக்கு வலதுசாரித் திரிபின்'' கீழ் சோவியத் குடியரசை ''அரசு முதலாளித்துவத்தை நோக்கிச் செல்கிற பரிணும வளர்ச்சி'' பயமுறுத்திக் கொண்டிருக்கிறதாம். இந்தத் தடவை அவர்கள் நம்மை உண்மையிலேயே பயப்படுத்தி விட்டார்கள்! எவ்வளவு உற்சாகத்தோடு இந்த ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இந்தப் பயமுறுத்தலான கண்டுபிடிப்பைத் தங்களுடைய ஆய்வுரைகளிலும் கட்டுரைகளிலும் திரும்பத் திரும்பச் சொல்கிருர்கள்....

நம் சோவியத் குடியரசில் உள்ள இன்றைய விவகார நிலைமைகளோடு ஒப்பிடும் போது அரசு முதலாளித்துவம் ஒரு படி முன்னேற்றம் என்று அவர்கள் புத்தியில் படவே இல்லை. சுமார் ஆறு மாத காலத்தில் நம் குடியரசில் அரசு முதலாளித்துவம் நிலைபெற்று விடுமேயானுல், அது ஒரு பெரிய வெற்றியாகும்; ஓர் ஆண்டுக்குள் சோஷலிசம் நிரந்தரமான உறுதியான பிடிப்புப் பெற்று நம் நாட்டில் வெல்லற்கரியதாக ஆகி விடுவதற்கு அது ஒரு நிச்சயமான உத்தரவாதமாகும்.

எவ்வளவு உன்னதமான ஆத்திரத்துடன் ஓர் ''இடதுசாரிக் கம்யூனிஸ்ட்'' இந்தச் சொற்களிடமிருந்து விலகி ஓடுவான் என்பதையும் ''போல்ஷிவிக்கு வலதுசாரித் திரிபு'' பற்றித் தொழிலாளர்களிடம் எவ்வளவு ''அழிபாதகமான விமர்சனம்'' செய்வான் என்பதையும் என்னுல் கற்பனை செய்ய முடியும். என்ன இது! சோவியத் சோஷலிசக் குடியரசில் அரசு முதலாளித்துவத்துக்கு மாறிச் செல்வது ஒரு படி முன்னேற்றமா?... இது சோஷலிசத்துக்குத் துரோகமாகாதா?

''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளது'' பொருளாதாரப் பிழையின் ஆணிவேர் இங்குதான் இருக்கிறது. எனவேதான் இவ்விஷயத்தை அதிக விவரமாக நாம் கவனிக்க வேண்டும்.

முதலாவதாக, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் போகிற எந்த வகைப்பட்ட மாற்ற நிலே நமது நாட்டை சோவியத்துக்களின் சோஷலிஸ்டுக் குடியரசு என்று அழைக்க நமக்கு உரிமையும் முகாந்தரங்களும் தருகிறது என்பதை ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' புரிந்து கொள்ளவில்லே.

இரண்டாவதாக, நம் நாட்டில் குட்டி முதலாளித்துவ அம்சமே சோஷலிசத்தின் பிரதான எதிரி என்று அங்கீகரிக்காததைக் கொண்டுதான் துல்லியமாயும் அவர்கள் தங்களுடைய குட்டி முதலாளித்துவ மனேபாவத்தை வெளிப்படுத்துகிருர்கள்.

மூன்ருவதாக, ''அரசு முதலாளித்துவம்'' என்று பூச்சாண்டி காட்டுவதின் மூலமாக, சோவியத் அரசு பொருளாதார ரீதியிலே முதலாளித்துவ அரசிடமிருந்து வேறுபட்டது என்று புரிந்து கொள்ளத் தவறுவதைக் காட்டிக் கொள்கிருர்கள்.

இந்த மூன்று விஷயங்களேயும் பரிசீலிப்போம்.

ருஷ்யாவின் பொருளாதார அமைப்பு பற்றிய பிரச்சினேயைப் பயில்வதில் யாருமே அதன் மாறிக் கொண்டிருக்கிற தன்மையை மறுக்கவில்லே என்று நினேக்கிறேன். அல்லது சோவியத் சோஷலிசக் குடியரசு என்கிற தொடர் சோஷலிசத்துக்குக் கொண்டு போகும் மாற்ற நிலேயைச் சாதிப்பதில் சோவியத் ஆட்சியதிகாரத்துக்குள் உறுதியை உணர்த்துகிறதே அன்றி, புதிய பொருளாதார அமைப்பை ஒரு சோஷலிஸ்டு அமைப்பாக அங்கீகரிப்பதையல்ல என்பதையும் எந்தக் கம்யூனிஸ்டும் மறுக்கவில்லே என்றும் நினேக்கிறேன்.

ஆனால் மாற்றம் என்கிற சொல்லுக்குப் பொருள் என்ன? பொருளாதாரத்தோடு பொருத்திப் பேசும் போது சோஷலிசம், முதலாளித்துவம் ஆகிய இரண்டின் அம்சங்களும் துண்டுகளும் துணுக்குகளும் இன்றைய அமைப்பில் அடங்கியுள்ளன என்பதுதானே இதற்குப் பொருள்? இதன் பொருள் இதுதான் என்று எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால் இதை ஒப்புக் கொள்கிறவர்கள் எல்லோரும் இன்று ருஷ்யாவிலுள்ள பல்வேறு சமுதாய-பொருளாதாரக் கட்டமைப்புகளில் எதார்த்தத்தில் என்னென்ன அம்சங்கள் அடங்கியுள்ளன என்று சிந்திக்க முயல்வதில்லை. இதுவே பிரச்சினையின் அறுதிக் கூறுகும்.

இந்த அம்சங்களை விவரிப்போம்:

1) தந்தைவழி, அதாவது கணிச அளவுக்கு இயற்கை வழிப்பட்ட விவசாயியின் பயிர்த்தொழில் அமைப்பு;

2) சிறுவீதப் பண்ட உற்பத்தி (தாங்கள் சாகுபடி செய்யும் தானியத்தை விற்கிற விவசாயிகளில் பெரும்பான்மையினர் இதில் அடங்குவார்கள்);

3) தனியார் முதலாளித்துவம்;

4) அரசு முதலாளித்துவம்;

5) சோஷலிசம்.

ருஷ்யா எவ்வளவோ பெரிதாக, மிகவும் பல்வகைப்பட்டதாக இருக்கிறதினாலே இந்த வெவ்வேறான சமுதாய-பொருளாதாரக் கட்டமைப்புகளின் மாதிரிகள் எல்லாம் கலந்து நிலவுகின்றன. இதுவே நிலைமையின் பிரத்தியேக இயல்பாக அமைந்துள்ளது.

எத்தகைய அம்சங்கள் மேலோங்கி இருக்கின்றன? என்ற கேள்வி எழுகிறது. சிறு விவசாயிகளைப் பெருமளவு கொண்ட நாட்டில் குட்டி முதலாளித்துவ அம்சமே மேலோங்கியிருக்கும்; அது மேலோங்கியிருந்தே தீர வேண்டும். ஏனெனில் நிலத்தில் பாடுபடுகிறவர்களில் மிகப் பெரும்பான்மையினர் சிறுவீதப் பண்ட உற்பத்தியாளர்கள். நமது அரசு முதலாளித்துவத்தின் மேல் ஓடு (தானிய ஏகபோகம், அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், முதலாளித்துவக் கூட்டுறவாளர்கள்) ஒரு சமயம் ஓரிடத்திலும் மறு சமயம் வேறொரு இடத்திலும் கொள்ளைலாபக்காரர்களால் துளைக்கப்படுகிறது; கொள்ளைலாபமடிப்பதற்குப் பிரதானப் பொருளாக இருப்பது தானியமே.

இந்தக் களத்திலேதான் பிரதானமான போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. ''அரசு முதலாளித்துவம்'' போன்ற பொருளாதார வகைப் பிரிவுகளின் உருவில் நாம் பேசுவதானால், எந்த அம்சங்களுக்கிடையே இந்தப் போராட்டம் நடத்தப் பெறுகிறது? நான் இப்போது விவரித்த வரிசையில் நான்காவதற்கும் ஐந்தாவதற்கும் இடையிலா? நிச்சயமாக இல்லை. சோஷலிசத்தோடு சண்டை போட்டுக் கொண்டிருப்பது அரசு முதலாளித்துவமல்ல; மாறாக, குட்டி முதலாளித்துவ வர்க்கமும் தனியார் முதலாளித்துவமும் ஒருங்கே சேர்ந்து அரசு முதலாளித்துவம், சோஷலிசம் ஆகிய இரண்டையும் எதிர்த்துச் சண்டையிட்டு வருகின்றன. **ஒவ்வொரு வகைப்பட்ட** அரசுத் தலையீட்டையும் கணக்கு பதிவையும் கண்காணிப்பையும் — அது அரசு முதலாளித்துவமாக இருந்தாலும் சரியே, அரசு சோஷலிசமாக இருந்தாலும் சரியே—குட்டி முதலாளிகள் எதிர்க்கிறார்கள். இது எதார்த்தத்தின் முற்றான, கேள்விக்கிடமற்ற உண்மையாகும்; இதைப் புரிந்து கொள்ளாததுதான்''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' பொருளாதாரப் பிழையின் வேர் ஆகும். கொள்ளை லாபக்காரன், வியாபாரக் கொள்ளைக்காரன், அரசு ஏக போகத்தைச் சீர்குலைப்பவன்—இவர்கள்தான் நமது பிரதான ''உள்நாட்டு'' விரோதிகள், சோவியத் ஆட்சியின் பொருளாதார நடவடிக்கைகளின் விரோதிகள். ஒரு நூற்று இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்[30] மிகமிக ஆர்வமுள்ள, நேர்மையான புரட்சியாளர்களாகிய பிரெஞ்சுக் குட்டி முதலாளிகள் ''பொறுக்கியெடுத்த'' சிலரைத் தூக்கிலிட்டுக், கொன்றதன் மூலமாகவும் இடிமுழக்கம் போன்ற தாக்குரைகள் மூலமாகவும் கொள்ளைலாபக்காரனை நசுக்க முயன்றது மன்னிக்கக் கூடியதாய் இருந்திருக்கலாம். ஆனால் இன்று இந்தப் பிரச்சினை மீது சில இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் காட்டுகிற வெறும் சொற்கவர்ச்சிப் போக்கு ஒவ்வொரு அரசியல் உணர்வுள்ள புரட்சியாளரிடமும் வெறுப்பையும் எதிர்ப்பு உணர்ச்சியையும் தவிர வேறெதையும் எழுப்ப முடியாது. கொள்ளைலாபத் தனத்தின் பொருளாதார அடிப்படை, ருஷ்யாவில் அசாதாரணமான அளவுக்குப் பரவலாயிருக்கிற சிறு உடைமையாளர்களும் தனியார் முதலாளித்துவமும் — ஒவ்வொரு குட்டி முதலாளியும் அதன் ஏஜெண்டுதான்—ஆகிய இரண்டுமேயாகும் என்பதை நாம்

நன்ருக அறிவோம். இந்தக் குட்டி முதலாளித்துவப் பன் தலைப் பாம்பின் லட்சக் கணக்கான கொடுக்குகள் அடிக்கடி தொழிலாளர்களின் பல்வேறு பகுதிகளைச் சூழ்ந்து கவ்விக் கொள்கின்றன என்றும் அரசு ஏகபோகத்திற்குப் பதிலாகக் கொள்ளைலாபத்தனம் நமது சமுதாய-பொருளாதார அமைப் பின் ஒவ்வொரு உறுப்பமைவிலும் முட்டிக் கொண்டு வெளிப் படுகிறது என்றும் நாம் அறிவோம்.

இதைப் பார்க்கத் தவறுகிறவர்கள் தங்களுடைய குருட்டுத் தனத்தால் தாங்கள் குட்டி முதலாளித்துவக் காழ்ப்புக்களின் அடிமைகள் என்று காட்டிக் கொள்கிருர் கள். ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இப்படித்தான் இருக் கிருர்கள். அவர்கள் சொல்லளவிலே (மிக நேர்மையுடன் அப்படித்தான் அவர்கள் நம்புகிருர்கள்) குட்டி முதலாளி களின் ஈவிரக்கமற்ற எதிரிகளே; ஆனல் செயலளவிலோ எனில், அவர்கள் குட்டி முதலாளித்துவ வர்க்கத்துக்கு மட்டுமே உதவுகிருர்கள்; ஜனத் தொகையின் இந்தப் பகுதிக்கு மட்டும் சேவை செய்கிருர்கள்; அதன் கருத்தை மட்டுமே வெளியிடுகிருர்கள்; ''அரசு முதலாளித்துவத்தை'' எதிர்த்து போராடியபடி—1918ல் ஏப்ரலில்!!—மெய் இலக் கில் இருந்து பெருமளவு திரும்பி விட்டார்கள்!

''நேர்மையான'' வழியிலேயும், குறிப்பாக நேர்மையற்ற முறையிலேயும் யுத்த காலத்திலே சம்பாதித்த சில ஆயிரம் ரூபிள்களை குட்டி முதலாளிகள் பத்திரப்படுத்திக் கொண் டுள்ளனர். கொள்ளைலாபத்துக்கும் தனியார் முதலாளித்து வத்துக்கும் அடிப்படையாக விளங்குகிற தன்மைக் குறிப் பான பொருளாதார வடிவின் மாதிரியாகும் இவை. பணம் என்பது அதை வைத்திருப்பவர் சமுதாயச் செல்வத்தைப் பெறுவதற்கு உரிமையளிக்கும் ஒரு சான்றே; பல லட்சக் கணக்கிலே இருக்கிற சிறு உடைமையாளர்கள் இந்தச் சான்றை இறுகப் பிடித்து ''அரசிடமிருந்து'' இதை ஒளித்து வைத்திருக்கிருர்கள்; அவர்கள் சோஷலிசத்திலோ அல்லது கம்யூனிசத்திலோ நம்பிக்கையில்லாதவர்கள், பாட்டாளி வர்க்கப் புயல் வீசி ஓயும் வரை ''நின்று காத்திருக்கிருர் கள்''. ஒன்ரு, நாம் இந்தக் குட்டி முதலாளிகளை நமது கண்காணிப்புக்கும் கணக்கு பதிவுக்கும் கீழ்ப்படுத்த வேண் டும் (வர்க்க உணர்வுள்ள பாட்டாளிகளின் முன்னணிப் படை

யைச் சூழ்ந்து ஏழைகளை, அதாவது ஜனத் தொகையில் பெரும்பான்மையினரை அல்லது அரைப் பாட்டாளிகளைத் திரட்டி ஒழுங்கமைத்தால் இதை நாம் செய்ய முடியும்) அல்லது—சிறு சொத்து உடைமை என்கிற இத்தகைய மண்ணிலிருந்து தோன்றிய நெப்போலியன்களும் கவெனியாக்குகளும் புரட்சியைத் தூக்கியெறிந்தது போலவே—நிச்சயமாகவும் தவிர்க்க முடியாத வகையிலும் அவர்கள் நம்முடைய தொழிலாளர்களின் ஆட்சி அதிகாரத்தைத் தூக்கியெறிவார்கள். இதுதான் பிரச்சினை. ''உழைக்கும்'' விவசாயிகளைப் பற்றிய தங்களுடைய வெற்றுச் சொற்களின் பனிமூட்டத்தினூடே இருந்து கொண்டு இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மட்டுமே வெளிப்படையான பச்சையான இந்த உண்மையைப் பார்க்கத் தவறுகிறார்கள்; ஆனால் சொல்லடுக்கு ஜாலம் செய்யும் இந்த இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை யார் மதிக்கிறார்கள்?

ஆயிரக் கணக்கில் பணத்தைப் பதுக்கும் குட்டி முதலாளி அரசு முதலாளித்துவத்தின் விரோதியாவான். ஏழை மக்களுக்கு எதிராக, எல்லாவித அரசுக் கண்காணிப்புக்கும் எதிராக தன்னுடைய ஆயிரங்களை அவன் தனக்காக மட்டுமே பயன்படுத்த விரும்புகிறான். பலப்பல கோடிகளாகத் தொகை கூடும் இந்த ஆயிரங்களின் ஒட்டு மொத்தமே கொள்ளைலாபத்தனத்துக்கு அடிப்படையாகிறது; அது நமது சோஷலிச நிர்மாணத்தைப் பலவீனப்படுத்துகிறது. 1,000க்குச் சமமான மதிப்புகளை ஒரு சில நாட்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் உற்பத்தி செய்வதாக வைத்துக் கொள்வோம். பிறகு சின்னத்தனமான கொள்ளைலாபம் மூலமும் பலவிதமான கையாடல்களாலும் சிறு உடைமையாளர்கள் சோவியத் அரசாணைகளையும் விதிகளையும் ஏய்ப்பதாலும் இந்த மொத்தத்தில் 200 மறைந்து விட்டது என்றும் வைத்துக் கொள்வோம். அந்த 1,000ல் 300ஐக் கொடுப்பதின் மூலமாக இன்னமும் மேலான ஒழுங்கும் ஒழுங்கமைப்பும் பெற முடியுமாயின், தான் 200க்குப் பதிலாக 300ஐ விரும்பிக் கொடுப்பதாக ஒவ்வொரு வர்க்க உணர்வுள்ள தொழிலாளியும் சொல்வான்; ஏனெனில் பின்னால்—ஒழுங்கும் ஒழுங்கமைப்பும் நிலைநிறுத்தப் பெற்றதும், அரசு ஏகபோகத்தைக் குட்டி முதலாளி தகர்ப்பதை முற்றாக ஒழித்ததும்—இந்தக் ''கப்பத்தை'' 100 ஆகவோ

50 ஆகவோ (எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன்) குறைத்து விடுவது சோவியத் ஆட்சியின் கீழ் மிகச் சுலபமாகும்.

இந்த எளிய எண் ரூபத்திலுள்ள உதாரண விளக்கம்—எல்லோருக்கும் புரிய வேண்டுமென்பதற்காக நான் மிகவும் எளிதாக்கி இருக்கிறேன்—அரசு முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் உள்ள தற்போதைய தொடர்பாட்டை விளக்குகிறது. வேறு எதற்கும் ஒரு கோபெக்கு கூடத் தராமல் இந்த ஆயிரங்கள் அனைத்தையும் சோஷலிஸ்டு நோக்கங்களுக்கு மட்டுமே ''எடுத்துக் கொள்ளுவதற்கு'' ஏற்ற சட்டவாய்ப்புடைய அரசாங்க அதிகாரம் தொழிலாளர்கள் கைகளில் இருக்கிறது. எதார்த்தத்தில் தொழிலாளர் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் மாறியிருப்பதைச் சார்ந்துள்ள இந்தச் சட்டவாய்ப்பு சோஷலிசத்தின் ஓர் அம்சம் ஆகும்.

ஆனால் பல வழிகளிலே சிறு உடைமையாள மற்றும் தனியார் முதலாளித்துவ அம்சம் இந்தச் சட்ட நிலையைப் பலவீனப்படுத்துகிறது; கொள்ளைலாபமடிப்பதைப் புகுத்துகிறது; சோவியத் அரசாணைகளை நிறைவேற்றுவதற்குத் தடங்கல் செய்கிறது. நாம் இன்று கொடுப்பதை விட அதிகமாகக் கொடுத்த போதிலும்கூட (இதைப் பளிச்செனத் தெளிவாக்கும் பொருட்டு வேண்டுமென்றே இப்படிப்பட்ட எண் ரூபமுள்ள உதாரணத்தை எடுத்துக் கொண்டேன்) அரசு முதலாளித்துவம் ஒரு மிகப் பெரிய முன்னேற்றப் படியாக இருக்கும்; ஏனெனில் ''பாடம் கற்பதன்'' பொருட்டு அதிக விலை கொடுப்பது லாபகரமானது; தொழிலாளர்களுக்குப் பயனுள்ளது; காரணம் ஒழுங்கின்மை, பொருளாதார நாசம், கண்டிப்பின்மை ஆகியவற்றை எதிர்த்து வெல்வதுதான் மிக மிக முக்கியமான விஷயம்; சிறு உடைமையின் அராஜகம் நீடிப்பதானது மிகப் பெரிய, மிகக் கடுமையான அபாயமாகும்; அது நிச்சயமாக நமக்குக் கேடாக அமையும் (அதை நாம் வெல்லா விட்டால்). ஆனால் அரசு முதலாளித்துவத்துக்கு இன்னும் அதிக அளவில் கப்பம் கொடுப்பதால் நாம் நாசமாக மாட்டோம். அது மட்டுமல்ல, நம்மை நிச்சயமான பாதையிலே சோஷலிசத்துக்குக் கொண்டு போய் விடும். சிறு உடைமையின் அராஜகத்திலிருந்து அரசு அமைப்பை எப்படிப் பாதுகாப்பது என்று தொழிலாளி வர்க்கம் கற்றுக் கொள்ளும் பொழுது, பெருவீத உற்பத்தியைத் தேச

அளவில் அரசு முதலாளித்துவப் பாதையிலே அமைக்க அது கற்றுக் கொள்ளும் பொழுது அது தன் கையில் (இந்தச் சொல்லை நான் உபயோகிக்கக் கூடுமானால்) எல்லாத் துருப்புச் சீட்டுகளையும் வைத்திருக்கும், சோஷலிசத்தைக் கெட்டிப் படுத்துவது உறுதியாகிவிடும்.

முதலாவதாக, பொருளாதார ரீதியிலே நம்முடைய இன்றைய பொருளாதார அமைப்பை விட அளவிட முடியாத அளவுக்கு எவ்வளவோ மேலானது அரசு முதலாளித்துவம்.

இரண்டாவதாக, இதில் சோவியத் ஆட்சிக்குப் பயங்கரமானதாக ஒன்றுமில்லை; ஏனெனில் சோவியத் அரசு என்பது தொழிலாளர்களின், ஏழை மக்களின் ஆட்சி அதிகாரம் உறுதிப்படுத்தப் பெற்றுள்ள ஓர் அரசாகும். ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இந்தக் கேள்விக்கிடமற்ற உண்மைகளைப் புரிந்து கொள்ளத் தவறி விட்டார்கள்; பொதுவாகவே அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய எந்தக் கருத்துக்களையும் மண்டையிலே ஏற்றிக் கொள்ள முடியாத ஓர் ''இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்'' இவற்றை என்றைக்கும் புரிந்து கொள்ள மாட்டார்; ஆனால் அவற்றை ஒவ்வொரு மார்க்சியவாதியும் ஒப்புக் கொண்டே தீர வேண்டும். ஓர் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளரோடு விவாதிப்பதிலும் கூடப் பயனில்லை. ஒரு வாயாடியின் ''வெறுப்பூட்டும் உதாரணமாக'' அவனைச் சுட்டிக் காட்டுவதே போதுமானது. ஆனால் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டோடு'' விவாதித்தாக வேண்டும்; ஏனெனில் தவறு செய்பவன் மார்க்சியவாதி; அவனுடைய தவறைப் பகுத்தாராய்வது தொழிலாளி வர்க்கம் உண்மையான பாதையைக் கண்டு செல்வதற்கு உதவும்.

## 4

விஷயத்தை இன்னும் தெளிவாக்க நாம் அரசு முதலாளித்துவத்தின் மிகவும் திட்டவட்டமான ஓர் உதாரணத்தை முதலில் எடுத்துக் கொள்வோம். இந்த உதாரணம் எது என்று எல்லோருக்கும் தெரியும். அது ஜெர்மனிதான். இங்கே ஜங்கர்[31]-முதலாளித்துவ ஏகாதிபத்தியத்துக்குக் கீழ்ப்படுத்தப்பட்டுள்ள நவீன பெருவீத முதலாளித்துவப் பொறி இயலின் திட்டமிட்ட ஒழுங்கமைப்பின் ''மிகச் செவ்வையான வடிவத்தைப்'' பார்க்கிறோம். கொட்டை எழுத்துக்களில் உள்ள

சொற்களை அடித்து விடுங்கள்; இராணுவ, ஜங்கர், முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசுக்குப் பதிலாக இன்னொரு அரசை வையுங்கள்—ஆனால் வேறொரு சமுதாய மாதிரியைச் சேர்ந்த, வேறொரு வர்க்க உள்ளடக்கமுள்ள அரசை, ஒரு சோவியத் அரசை, அதாவது ஒரு பாட்டாளி வர்க்க அரசை வையுங்கள்; சோஷலிசத்திற்கு வேண்டிய நிலைமைகளின் ஆக மொத்தம் உங்களுக்குக் கிடைத்துவிடும்.

நவீன விஞ்ஞானத்தில் கடைசியாக வந்த கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் அமைந்த பெருவீத முதலாளித்துவப் பொறி இயல் இல்லாமல் சோஷலிசத்தைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது; உற்பத்தியிலும் வினியோகத்திலும் ஒன்றிணைக்கப்பட்ட தரத்தை மிகமிகக் கண்டிப்புடன் பின்பற்றி வருமாறு பல கோடிக் கணக்கான மக்களை வைக்கிற திட்டமிட்ட அரசு அமைப்பு இல்லாமல் அதைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது. இதைப் பற்றி மார்க்சியவாதிகளாகிய நாம் எப்போதும் பேசி வந்திருக்கிறோம். இதைக்கூடப் புரிந்து கொள்ளாதவர்களோடு (அராஜகவாதிகளும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களில் சரிபாதிப் பேரும்) பேசி இரண்டு வினாடிகள் கூட வீணாக்குவது பயனற்ற வேலை.

அதே நேரத்தில் பாட்டாளி வர்க்கத்தின் அரசாங்க ஆதிக்கம் இல்லாமல் சோஷலிசத்தைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது. இதுவும் அரிச்சுவடியே. மேலும், வரலாறு (''முழுமையான'' சோஷலிசத்தை மென்மையாக, மிருதுவாக, சுலபமாக, எளிதாக இது கொண்டுவந்து விடும் என்று முதல் தரமான மென்ஷிவிக்கு முட்டாள்களைத் தவிர வேறு யாரும் எதிர்பார்க்கவில்லை) சர்வதேச ஏகாதிபத்தியத்தின் முட்டை ஓட்டுக்குள் எதிர்காலத்திய இரண்டு கோழிக் குஞ்சுகள் இருக்கிற மாதிரி ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாது அக்கம் பக்கமாக இருந்து கொண்டிருக்கும் சோஷலிசத்தின் இரண்டு பாதிகளை 1918ல் பெற்றெடுத்திருக்கிற அளவுக்கு ஒரு வினோதமான போக்கிலே போயுள்ளது. 1918ல் ஜெர்மனியும் ருஷ்யாவும் ஒரு பக்கத்தில் சோஷலிசத்திற்குரிய பொருளாதார, உற்பத்தி ரீதியான, சமுதாய-பொருளாதார நிலைமைகளையும் இன்னொரு பக்கத்தில் அதற்குரிய அரசியல் நிலைமைகளையும் பொருளாயத முறையில் நிறைவேற்றம் செய்ததன் எடுப்பான உருவகம் ஆகும்.

ஜெர்மனியில் நிகழும் ஒரு வெற்றிகரமான பாட்டாளி

வர்க்கப் புரட்சி எந்த விதமான ஏகாதிபத்திய முட்டை யோட்டையும் உடனடியாக, வெகு சுலபமாக உடைத்தெறி யும் (அந்த முட்டை ஓடு துரதிருஷ்டவசமாக மிக நேர்த்தி யான உருக்கிலே செய்யப்பட்டது; எனவே அதை எந்த... கோழிக் குஞ்சின் முயற்சிகளாலும் உடைக்க முடியாது); எவ்விதக் கஷ்டங்களுமில்லாமல் அல்லது கொஞ்சக் கஷ்டங் களுடன்—''கஷ்டம்'' எனும் போது மிகக் குறுகிய அற்ப வாத அர்த்தத்தில் அல்லாமல் உலக வரலாற்று அளவிலே கஷ்டமானது என்கிற பொருளில் கொண்டால்—உலக சோஷ லிசத்தின் வெற்றியை நிச்சயமாகச் சாதிக்கும்.

ஜெர்மனியில் புரட்சி ''பிறப்பது'' இன்னமும் மெது வாகவே இருந்து வருகையில் ஜெர்மானியர்களின் அரசு முதலாளித்துவத்தைப் பயில்வதும் அதைப் பார்த்துப் பின் பற்றுவதில் சகல முயற்சியையும் செய்வதும் அதை பார்த்துப் பின்பற்றுவதைத் துரிதப்படுத்துவதற்கு சர்வாதிகார வழி முறைகளை மேற்கொள்ளப் பின்வாங்காமலிருப்பதும் நம் கடமையாகும். அநாகரிகத்தை எதிர்த்துப் போராட அநா கரிகமான வழிமுறைகளைப் பயன்படுத்தத் தயங்காமல் அநா கரிக நிலையிலிருந்த ருஷ்யா மேற்கத்தியப் பண்பாட்டை பார்த்துப் பின்பற்றுவதைப் பியோத்தர் மன்னன் துரிதப் படுத்தியதை விட நாம் அதிகமாகத் துரிதப்படுத்த வேண் டும். நார்ட்ஸீஸ்[32] போன்ற சிந்தனைகளில் ஆழ்ந்து ஜெர்மன் ஏகாதிபத்தியத்திடமிருந்து ''பாடம் கற்றுக் கொள்வது'' புரட்சியாளர்களாகிய நமக்குத் தகுதியல்ல என்று சொல்கிற அராஜகவாதிகளும்[33] இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் களும் இருப்பார்களேயானல் (மத்திய நிர்வாகக் கமிட்டிக்கு முன் கரேலின், கே ஆகியோரின் பேச்சுக்கள் தற்செயலாக நினைவுக்கு வந்தன), நாம் பதிலுக்குப் பின்வருமாறு சொல்ல முடியும்: இவர்களைப் பொருட்படுத்துகிற புரட்சி மீட்க முடியாதபடி அழிவுறும் (அழியத் தகுதியுடையதுமாகும்).

தற்சமயம் ருஷ்யாவில் குட்டி முதலாளித்துவ வகைப் பட்டதான முதலாளித்துவம் மேலோங்குகிறது. அதிலிருந்து ஒரேயொரு பாதைதான் பெருவீத அரசு முதலாளித்துவம், சோஷலிசம் ஆகிய இரண்டுக்கும் ''பொருட்களின் உற்பத்தி மற்றும் வினியோகம் குறித்த தேசிய ரீதியான கணக்குப் பதிவும் கண்காணிப்பும்'' எனப்படும் ஒரே இடைக்கால நிலையத்தின் மூலமாக இட்டுச் செல்கிறது. இதைப் புரிந்து

கொள்ளத் தவறுகிறவர்கள் ஒரு மன்னிக்க முடியாத பொருளாதாரப் பிழையினைச் செய்கிறார்கள்: ஒன்று, அவர்கள் வாழ்க்கையின் மெய்நடப்புகளை அறியவில்லை, உள்ளபடியே நிலவுவதைப் பார்க்கவில்லை, உண்மையை துணிவுடன் பரிசீலிக்க இயலாமலிருக்கிறார்கள்; அல்லது அவர்கள் கருத்தியலான முறையில் ''முதலாளித்துவத்தை'' ''சோஷலிசத்துடன்'' ஒப்பு நோக்குவதோடு நிறுத்திக் கொள்கிறார்கள், நம் நாட்டில் ஏற்பட்டு வருகிற மாற்றத்தின் திட்டவட்டமான வடிவங்களையும் கட்டங்களையும் பயிலத் தவறுகிறார்கள். தத்துவ ரீதியான இதே பிழைதான் நோவயா ழீஸ்ன், வ்பெரியோத் முகாமைச் சேர்ந்த தலைசிறந்த நபர்களை வழி தவறச் செய்தது என்று இடைமுறிப்பாக இங்கு சொல்லலாம். இவர்களில் மிக மோசமானவர்களும் சாதாரணப் பேர்வழிகளும் தங்களுடைய முட்டாள்தனத்தாலும் முதுகெலும்பற்ற தன்மையாலும், தாங்கள் பயபக்தியோடு பார்க்கிற முதலாளி வர்க்கத்தின் பின்னே ஒட்டிக் கொண்டு செல்கிறார்கள். சோஷலிசத்தின் போதகர்கள் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதின் ஒரு முழுக் காலகட்டத்தைப் பற்றிப் பேசியதும் புதிய சமுதாயத்தின் ''நீடித்த பேறுகால வேதனைகளைப்'' பற்றி வலியுறுத்தியதும் காரணம் இல்லாமல் அல்ல என்பதை அவர்களில் தலைசிறந்தவர்கள் புரிந்து கொள்ளத் தவறியிருக்கிறார்கள். மேலும், இந்தப் புதிய சமுதாயம் என்பதும் ஒரு கருத்தாக்கமே; அது ஏதாவதொரு சோஷலிஸ்டு அரசை உருவாக்க தொடர்ச்சியான, பல்வகையான, செவ்வைப் பாடற்ற திட்டவட்டமான முயற்சிகளைக் கடந்து செல்வதன் மூலமாகத்தான் தோன்ற முடியும்.

அரசு முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் பொதுவாயுள்ள செயற்களத்தை (தேசிய ரீதியான கணக்குப் பதிவு, கண்காணிப்பு) கடந்து செல்லாமல் இன்றிருக்கிற பொருளாதார நிலைமையிலிருந்து ருஷ்யா முன்னேற முடியாது என்ற காரணத்தினாலேதான் ''அரசு முதலாளித்துவத்தை நோக்கிப் போகிற பரிணாம முறை'' என்கிறதைக் கொண்டு (கம்யூனிஸ்ட்[34], இதழ் 1, பக்கம் 8, பத்தி 1) தங்களையும் பிறரையும் பயமுறுத்தும் முயற்சி தத்துவ ரீதியிலே முற்றான அபத்தமாகும். இது ''பரிணாம முறையின்'' உண்மையான பாதையை விட்டுச் சிந்தனைகளை ''வேறெங்கோ'' அலைந்து திரிய விடுவதாகும்; அந்தப் பாதை எது

என்று புரிந்து கொள்ளத் தவறுவதாகும். நடைமுறையிலே அது நம்மைச் சிறு உடைமை முதலாளித்துவத்தை நோக்கிப் பின்னுக்கு இழுப்பதற்குச் சமமாகும்.

அரசு முதலாளித்துவத்தைப் பற்றி இந்த ''உயர்வான'' மதிப்பீடை நான் கொடுத்திருப்பது இது முதல் தடவை அல்ல என்றும் போல்ஷிவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கு முன்பே அதைக் கொடுத்தேன் என்றும் வாசகர்களை நம்பச் செய்வதற்காக **நெருங்கி வரும் பெரும் விபத்து, அதை எதிர்த்துப் போராடுவது எப்படி** என்கிற 1917 செப்டெம் பரில் எழுதிய என்னுடைய பிரசுரத்திலிருந்து பின்வரும் பகுதியை மேற்கோள் காட்ட உரிமை எடுத்துக் கொள் கிறேன்:

''... இப்போது ஜங்கர்-முதலாளித்துவ அரசுக்குப் பதில், நிலவுடைமையாளர்-முதலாளிகள் அரசுக்குப் பதில் ஒரு **புரட்சிகர-ஜனநாயக** அரசை மாற்றீடு செய்ய முயல்வோம். அந்த அரசு புரட்சிகரமான வழியில் எல்லாத் தனி உரிமை களையும் ஒழிப்பதாயும் புரட்சிகரமான வழியில் பரிபூரண மான ஜனநாயகவாதத்தைக் கொண்டுவர அஞ்சாததாகவும் இருக்க வேண்டும். மெய்யாகவே ஒரு புரட்சிகர-ஜனநாயக அரசு இருக்குமானால், அரசு-ஏகபோக முதலாளித்துவம்தான் சோஷலிசத்தின் திசையிலான ஒரு படியாக, ஒரு படிக்கும் மேற்பட்டதாக உறுதியாகவும் தவிர்க்க முடியாதபடியும் இருப்பதை உணர்த்தும்!

''...ஏனெனில் அரசு-முதலாளித்துவ ஏகபோகத்தி லிருந்து எடுக்கப்படும் அடுத்த முன்னேற்றப் படியே சோஷ லிசம்.

''...அரசு-ஏகபோக முதலாளித்துவம் சோஷலிசத்திற் கான முழுமையான பொருளாயதத் தயாரிப்பாகும், சோஷ லிசத்தின் நுழைவாயிலாகும், வரலாற்று ஏணியில் ஒரு படியாகும். இந்தப் படிக்கும் சோஷலிசம் என்றழைக் கப்படும் படிக்கும் இடையே இடைப்பட்ட படிகள் எதுவும் கிடையாது'' (பக்கங்கள் 27, 28).

இது கேரென்ஸ்கி அதிகாரத்தில் இருந்த போது[35] எழுதப்பட்டது என்பதையும் நாம் விவாதிப்பது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றியல்ல, சோஷலிஸ்டு அரசு பற்றியல்ல, ''புரட்சிகரமான-ஜனநாயக'' அரசு பற்றியே என்பதையும் தயவு செய்து கவனியுங்கள். இந்த அரசியல்

ஏணியிலே நாம் எவ்வளவுக்கெவ்வளவு அதிக உயரத்தில் இருக்கிறேமோ, எவ்வளவுக்கெவ்வளவு அதிக முழுமையாக நாம் சோஷலிஸ்டு அரசையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் சோவியத்துக்களில் இணைத்துச் சேர்த்து விடுகிறேமோ, அவ்வளவுக்கவ்வளவு குறைவாக நாம் ''அரசு முதலாளித்துவத்தைப்'' பற்றி பயப்பட வேண்டியிருக்கும் என்று தெளிவாகவில்லையா? பொருளாயத, பொருளாதார மற்றும் உற்பத்தியின் கருத்து நிலையிலிருந்து பார்க்கையில் நாம் இன்னும் சோஷலிசத்தின் ''நுழைவாயிலில்'' அடி வைக்கவில்லை என்று தெளிவாகவில்லையா? நாம் இன்னும் எட்டாத ''நுழைவாயிலைத்'' தாண்டாமல் சோஷலிசத்தின் கதவு வழியே கடந்து செல்ல முடியாது என்று தெளிவாகவில்லையா?

பிரச்சினையை எந்தப் பக்கத்திலிருந்து அணுகினுலும், ஒரேயொரு முடிவுதான் எடுக்க முடியும்: நம்மைப் பயமுறுத்தச் சொல்லப்படுகிற''அரசு முதலாளித்துவம்'' பற்றிய ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' வாதம் பொருளாதார ரீதியில் ஒரு மோசமான பிழையாகும்; அவர்கள் குட்டி முதலாளித்துவச் சித்தாந்தத்தின் பூரண அடிமைகள் என்பதற்கு வெளிப்படையான சான்ருகும்.

## 5

பின்வருவது மிகவும் படிப்பினையளிக்கும் விஷயமே ஆகும்.

மத்திய நிர்வாகக் கமிட்டியில் நாங்கள் தோழர் புஹாரினேடு விவாதித்த போது மற்ற விஷயங்களுக்கிடையே அவர் சொன்னுர்: நிபுணர்களுக்கு உயர்ந்த சம்பளங்கள் கொடுக்கிற பிரச்சினையில் ''நாங்கள்'' (''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளையே'' அவர் குறிப்பிட்டார் என்பது தெளிவு) ''லெனினைவிட வலதுசாரியாக இருந்தோம்''; ஏனெனில் இந்த விஷயத்தில் ''நாங்கள்'' கோட்பாட்டிலிருந்தான திரிபுகள் எதையும் பார்க்கவில்லை; ''அவர்கள் அத்தனை பேரையுமே பணம் கொடுத்துச் சரிக்கட்டி விடுவது'' (அதாவது, முதலாளிகள் அத்தனை பேரையும் பணம் கொடுத்து சரிக்கட்டி விடுவது, முதலாளி வர்க்கத்திடமிருந்து நிலத்தையும் தொழிற்சாலைகளையும் உற்பத்திக் கூடங்களையும் மற்ற உற்பத்திச் சாத

னங்களேயும் விலேக்கு வாங்கிப் போடுவது) சில குறிப்பிட்ட நிலேமைகளில் தொழிலாளி வர்க்கத்துக்குச் சந்தர்ப்பப் பயனுள்ளதாகும் என்கிற மார்க்சின் சொற்களே நினேவில் வைத்திருந்தோம்.

மிகவும் அக்கறைக்குரிய இந்தக் கூற்று முதற்கண் தோழர் புஹாரின் அராஜகவாதிகளே விட, இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களே விட எவ்வளவோ உயர்ந்தவர் என்றும் சொல்லாடல் சகதியிலே நம்பிக்கைக்கிடமற்ற முறையிலே அவர் நிச்சயமாக அமுந்திக் கிடக்கவில்லே, அதற்கு மாருக முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் போகிற மாற்ற நிலேயின்—வேதனே தருகிற, கஷ்டமான மாற்ற நிலேயின்—ஸ்தூலமான இடர்ப்பாடுகளேச் சிந்தித்தறிய முயற்சிகள் எடுத்து வருகிருர் என்றும் காட்டுகிறது.

இரண்டாவதாக, இந்தக் கூற்று புஹாரினுடைய பிழையை மேலும் தெளிவாகக் காட்டுகிறது.

மார்க்சின் கருத்தைக் கவனமாகப் பார்ப்போம்.

சென்ற நூற்ருண்டின் எழுபதாம் ஆண்டுகளேச் சேர்ந்த பிரிட்டனேப் பற்றி, ஏகபோகத்துக்கு முந்திய முதலாளித்துவ வளர்ச்சியின் உச்ச நிலே பற்றி மார்க்ஸ் குறிப்பிட்டுச் சொன்ஞர். அந்தக் காலத்தில் மற்ற நாடுகளே விட ராணுவ வெறியும் அதிகார வர்க்கமும் குறைவான முனேப்புடன் இருந்த நாடாக பிரிட்டன் இருந்தது; தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்தைப் ''பணம் கொடுத்துச் சரிக்கட்டி விடுவது'' என்கிற அர்த்தத்தில் சோஷலிசத்துக்குச் ''சமாதான பூர்வமான'' வெற்றி கிடைக்கும் சாத்தியப்பாடு மிக அதிகமாக உள்ள நாடாக பிரிட்டன் இருந்தது. சில குறிப்பிட்ட சூழ்நிலேமைகளில் தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்தைப் பணம் கொடுத்துச் சரிக்கட்டி விட நிச்சயமாக மறுக்க மாட்டார்கள் என்று மார்க்ஸ் சொன்ஞர். வடிவ விவகாரங்களே பற்றி, புரட்சியை ஏற்படுத்துவதற்குரிய வழிவகைகளேப் பற்றி மார்க்ஸ் தம்மையோ, சோஷலிசப் புரட்சியின் எதிர்காலத் தலேவர்களேயோ கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பவில்லே. பெரும் எண்ணிக்கையில் புதிய பிரச்சினேகள் எழும் என்றும் புரட்சியின் போக்கிலே மொத்த நிலேமையே மாறும் என்றும் நிலேமை தீவிரமாகவும் புரட்சியின் போக்கிலே அடிக்கடியும் மாறும் என்றும் மார்க்ஸ் நன்ருகப் புரிந்து கொண்டிருந்தார்.

சரி, சோவியத் ருஷ்யாவைப் பற்றி என்ன? பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, சுரண்டு பவர்களின் ஆயுதமேந்திய எதிர்ப்பையும் நாச வேலையையும் நசுக்கிய பிறகு சில நிலைமைகள் மேலோங்கி உள்ளன, அரை நூற்றாண்டுக்கு முன் பிரிட்டனில் சோஷலிசத்துக்குரிய ஒரு சமாதான பூர்வமான மாற்றம் தொடங்கியிருந்தால் என்ன நிலைமைகள் இருந்திருக்கக் கூடுமோ அவற்றுக்குப் பொருத்த மாக இவை உள்ளன என்று தெளிவாகவில்லையா? பிரிட்ட னில் முதலாளிகள் தொழிலாளர்களுக்குக் கீழ்ப்படுவது அந்தச் சமயத்தில் பின்வரும் புற நிகழ்ச்சிகளின் காரணமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்: (1) விவசாயி மக்கள் இல்லாத தால் ஜனத் தொகையில் தொழிலாளர்களின், பாட்டாளி களின் முற்றான விஞ்சிய நிலை இருந்தது (பிரிட்டனில் எழு பதுகளில் விவசாயத் தொழிலாளர்களிடையே சோஷலிசம் மிகத் துரிதமாகப் பரவும் என்கிற நம்பிக்கை இருந்தது); (2) பாட்டாளிகள் தொழிற் சங்கங்களிலே மிக நேர்த்தியாக ஸ்தாபன ரீதியில் திரட்டப் பெற்றிருந்தது (அப்போது இந்த அம்சத்தில் பிரிட்டன் உலகத்திலேயே தலைமை ஸ்தானத்தில் இருந்த நாடாகும்); (3) நூற்றாண்டுக் காலத்திய அரசியல் சுதந்திரத்தின் வளர்ச்சியால் பயிற்றுவிக்கப்பட்டிருந்த பாட்டாளி வர்க்கம் ஒப்பு நோக்கில் உயர்ந்த பண்பாட்டுத் தரம் கொண்டிருந்தது; (4) நன்கு ஒழுங்கமைப்பு பெற்றுள்ள ஆங்கிலேய முதலாளிகள்—அந்தச் சமயத்தில் உலகத்தில் வேறெந்த நாட்டையும் விட இங்கிலாந்திலேதான் முதலாளி கள் நன்கு ஒழுங்கமைப்பு பெற்றிருந்தனர் (இந்த மேல்நிலை இப்போது ஜெர்மனிக்கு மாறிப் போயுள்ளது)—அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமரசம் மூலமாகத் தீர்க் கும் பழைய பழக்கம் பெற்றிருந்தனர். ஆங்கிலேயத் தொழி லாளர்கள் தாங்கள் நாட்டின் முதலாளிகளைச் சமாதான பூர்வமாகக் கீழ்ப்படியச் செய்வது சாத்தியமே என்கிற கருத்தை இந்தச் சந்தர்ப்பங்களே அக்காலத்தில் தோற்று வித்தன.

நம் நாட்டில் தற்சமயம் அடிப்படையான உட்பொரு ளுள்ள சில காரணங்களால் (அக்டோபரின் வெற்றி, அக் டோபரிலிருந்து பிப்ரவரி வரை முதலாளிகளின் நாச வேலை யையும் ஆயுதமேந்திய எதிர்ப்பையும் ஒடுக்கியது) இந்தக் கீழ்ப்படியச் செய்தல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால்

ஜனத் தொகையில் தொழிலாளர்களும் பாட்டாளிகளும் முற்ருன விஞ்சிய நிலையில் இருப்பதற்குப் பதிலாக, அவர் களிடையே அதி உயர்தரமான அளவிலே ஸ்தாபன அமைப்பு இருப்பதற்குப் பதிலாக ருஷ்யாவில் வெற்றிக்குரிய முக்கிய மான காரணமாக விளங்கியது ஏழை விவசாயிகளிடமிருந் தும் திடீரென்று நாசமடைந்த விவசாயிகளிடமிருந்தும் தொழிலாளர்கள் பெற்ற ஆதரவாகும். கடைசியாக, ஓர் உயர் தரமான அளவுக்குப் பண்பாடோ சமரசம் செய்து கொள்ளும் பழக்கமோ நமக்கு இல்லை. இந்த ஸ்தூலமான நிலைமைகளைக் கவனமாகப் பரிசீலித்தால், நாம் இரண்டு வழிமுறைகளை ஒரே காலத்தில் பயன்படுத்த முடியும், பயன் படுத்த வேண்டும் என்பது தெளிவாகும். ஒரு பக்கத்தில், ''அரசு முதலாளித்துவத்தோடு'' எவ்விதச் சம்பந்தத்தை யும் அல்லது எந்த விதச் சமரசத்தையும் நிராகரிக்கிற, சோவியத் சட்ட நடவடிக்கைகளின் நிறைவேற்றத்துக்குக் கொள்ளையடிப்பது மூலமும் ஏழை விவசாயிகளுக்கு லஞ்சம் கொடுப்பது மூலமும் தொடர்ந்து தடங்கல் செய்து வருகிற, பண்பாடற்ற முதலாளிகளை நாம் ஈவிரக்கமின்றி நசுக்க வேண்டும்.* மற்ருெரு பக்கத்தில், சமரசம் செய்து கொள்ளும் வழிமுறையைப் பயன்படுத்த வேண்டும்; அல்லது

---

* இந்த நிகழ்விலும் நாம் உண்மையை நேரடியாகப் பார்க்க வேண்டும்: சோஷலிசத்தின் வெற்றிக்கு இன்றி யமையாத ஈவிரக்கமின்மை நமக்கு இன்னும் குறைவாகவே இருக்கிறது; குறைவாக இருப்பதற்குக் காரணம் நமக்குத் துணிவு இல்லாதது அல்ல. நமக்குப் போதிய துணிவு உண்டு. நமக்கு இல்லாதிருப்பது எதுவெனில், போதிய எண்ணிக் கையில் கொள்ளைலாபக்காரர்களை, ஏய்த்துப் பணம் பறிப் போரை, முதலாளிகளை—சோவியத்துக்கள் நிறைவேற்றும் சட்ட நடவடிக்கைகளை மீறுகிற பேர்வழிகளை—போதியளவு வேகமாகப் பிடிக்கும் திறமையேயாகும். இதைச் செய்வதற் குரிய ''திறமையைக்'' கணக்கு பதிவையும் கண்காணிப்பை யும் நிலைநிறுத்துவதின் மூலமாக மட்டுமே பெற முடியும்! மற்ருெரு விஷயம், நீதிமன்றங்கள் போதிய அளவுக்கு உறுதி யாக இல்லை; லஞ்சம் வாங்கும் பேர்வழிகளைச் சுட்டுத் தள்ளத் தீர்ப்பளிப்பதற்குப் பதிலாக அவை ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கின்றன. இவ்விரண்டு குறைபாடு களுக்கும் ஒரே மாதிரியான வேர் உண்டு: அதுதான் குட்டி முதலாளித்துவத்தின் செல்வாக்கு, அதன் தொளதொளத் தன்மை.

''அரசு முதலாளித்துவத்துக்கு'' ஒத்துக் கொள்கிற, அதை நடைமுறையில் செயல்படுத்தும் திறமையுள்ள, கோடானு கோடி மக்களுக்குப் பண்டங்களை எதார்த்தத்தில் சப்ளை செய்கிற மிகப் பெரிய தொழிற்சாலைகளின் அறிவுள்ள, அனுபவமுள்ள ஒழுங்கமைப்பாளர்கள் என்கிற ரீதியிலே தொழிலாளி வர்க்கத்துக்குப் பயனுள்ளவர்களாயுள்ள, பண்பாடுள்ள முதலாளிகளைப் பணம் கொடுத்துச் சரிக்கட்டி விடும் வழிமுறையைப் பயன்படுத்த வேண்டும்.

புஹாரின் நன்கு படித்த ஒரு மார்க்சிய-பொருளாதார வாதி. ஆகவே, சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதைச் சுளு வாக்குவதற்காகவே பெரும் அளவு உற்பத்திக்குரிய அமைப்பை வைத்துப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தைத் தொழிலாளர்களுக்குப் போதித்த போது மார்க்ஸ் மிக அறிவாழமிக்க சரியான நிலைதான் எடுத்தார் என்பதை அவர் நினைவில் கொண்டார்; பணம் கொடுக்கப்பட்டால் முதலாளிகள் சமாதானமாகக் கீழ்ப்படிந்து பண்பாடுள்ள, ஒழுங்கமைந்த வகையில் சோஷலிசத்தின் பக்கம் வரும்படி அவர்களை நிர்பந்திக்கத்தக்க சந்தர்ப்பங்கள் இருந்தால் (ஒரு விதிவிலக்காக—அப்பொழுது இங்கிலாந்து ஒரு விதிவிலக்குதான்) முதலாளிகளுக்கு நன்ருகப் பணம் கொடுக்கும் கருத்து சிந்திக்கத்தக்கதே என்று போதித்தார் மார்க்ஸ்.

ஆனுல் புஹாரின் வழி தவறிச் சென்ருர்; காரணம், தற்சமயம் ருஷ்யாவிலுள்ள நிலைமையின் குறிப்பான இயல்புகளை அவர் போதிய ஆழத்துடன் ஆராயவில்லை. அது ஓர் அசாதாரணமான நிலைமை; அதில் ருஷ்யப் பாட்டாளி வர்க்கமாகிய நாம் நம்முடைய அரசியல் அமைப்பையும் தொழிலாளர்களின் அரசியல் அதிகாரத்தின் பலத்தையும் பொறுத்த வரையில் எந்த பிரிட்டனையும் விட, எந்த ஜெர்மனியையும் விட முன்னேறிய நிலையில் இருக்கும் போதே, ஒரு நல்ல அரசு முதலாளித்துவத்தை ஒழுங்காக அமைப்பதைப் பொறுத்த வரையில், பண்பாட்டின் தரம், சோஷலிசத்தைப் ''புகுத்துவதற்கு'' வேண்டிய பொருளாயத, உற்பத்தித் திறன் தயாரிப்பு நிலையின் அளவு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் மிகமிகப் பிற்பட்ட மேற்கு ஐரோப்பிய நாட்டையும் விட பின்தங்கி இருக்கிருேம். இன்றைய நிலைமையின் குறிப்பான தன்மையானது ஒரு குறிப்பிட்ட விதமாக ''பணம் கொடுத்துச் சரிக்கட்டுதலின்'' அவசியத்தை உண்

டாக்குகிறது; அதைத் தொழிலாளர்கள் சோவியத் அதிகாரத்தின் சேவையில் ஈடுபடவும் கூடியவரை பெரிய அளவிலே, மிகப் பெரிய அளவிலே ''அரசு'' உற்பத்தியை ஒழுங்கமைப்பதிலே நேர்மையோடு உதவி புரியவும் தயாராயிருக்கும் முதலாளிகளிடையேயுள்ள மேலான பண்பாடு கொண்ட, மேலான திறனுடைய, மிகவும் ஆற்றல் வாய்ந்த ஒழுங்கமைப்பாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று தெளிவாக வில்லையா? இந்தக் குறிப்பிட்ட நிலைமையில் இரண்டு பிழைகளை—அவ்விரண்டுமே ஒரு குட்டி முதலாளித்துவ இயல்புள்ளவை—தவிர்க்க நாம் எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும் என்று தெளிவாகவில்லையா? ஒரு பக்கத்தில், நமது பொருளாதாரச் ''சக்திகளுக்கும்'' நமது அரசியல் பலத்துக்கும் இடையே ஓர் இசைவின்மை இருக்கிறபடியால் நாம் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கக் கூடாது என்று அதிலிருந்து''பெறப்படுகிறது'' எனப் பிரகடனப்படுத்துவது ஒரு அழிவார்ந்த பிழையாக இருக்கும்.[36] அப்படிப்பட்ட ஓர் ''இசைவின்மை'' எப்போதும் இருக்கும்; இயற்கையின் வளர்ச்சியிலும் சமுதாயத்தின் வளர்ச்சியிலும் அது எப்போதும் இருந்து வருகிறது; வரிசையான முயற்சிகள் மூலமாக மட்டுமே—அவற்றில் ஒவ்வொன்றும் தனித்தனியாக எடுத்துப்பார்த்தால், ஒரு சார்பானதாக இருக்கும், சில இசைவின்மைகளைக் கொண்டதாக இருக்கும்—எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் புரட்சிகரமான ஒத்துழைப்பால் முழுமையான சோஷலிசம் உண்டாக்கப்படும் என்பதை மறக்கிற ஒரு ''கூட்டில் அடைந்த மனிதர்''[37] மட்டுமே அப்படிப்பட்ட வாதத்தை முன்வைக்க முடியும்.

இன்னொரு பக்கத்தில், ''கண்ணைப் பறிக்கும்'' புரட்சி உணர்ச்சியால் நிலைகுலைய இடம் கொடுத்து விடுகிற, ஆனல் மிகக் கஷ்டமான மாற்றக் கட்டங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்கிற, தொடர்ச்சியான, சிந்தனை பூர்வமான, நிதானப் புத்தியுள்ள புரட்சி வேலைக்குத் திறனற்ற கும்மாளிகளுக்கும் சொற்ஜாலக்காரர்களுக்கும் முழுச் சுதந்திரம் கொடுத்து விடுவதும் ஒரு வெளிப்படையான பிழையாகவே இருக்கும்.

அதிருஷ்டவசமாக, புரட்சிகரமான கட்சிகளின் வளர்ச்சி வரலாறும் அவற்றை எதிர்த்து போல்ஷிவிசம் நடத்திய போராட்டத்தின் வரலாறும் நமக்குக் கூர்மையாக வரையறை செய்யப்பட்ட மாதிரிகளின் பரம்பரையைத் தந்துள்

ளன; அதில் மோசமான புரட்சியாளர்கள் என்பதற்குத் தெளிவாகத் தெரியும் எடுத்துக்காட்டுகளாக இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் அராஜகவாதிகளும் உள்ளனர். அவர்கள் இப்போது ''வலதுசாரி போல்ஷிவிக்குகளின்'' ''சமரசத்துக்கு'' எதிராக ஐன்னிவெறிக் கூச்சல் போட்டு வருகிறுர்கள்; மூச்சுத் திணறக் கரகரத்துக் கூக்குரலிட்டு வருகின்றனர். ஆனுல் ''சமரசத்திலே'' எது மோசம் என்றும் வரலாறும் புரட்சியின் போக்கும் ஏன் ''சமரசத்தை'' நியாயமாகவே கண்டித்துள்ளன என்றும் சிந்திக்க அவர்கள் திறனற்றவர்கள்.

கேரென்ஸ்கி காலத்தில் சமரசம் என்பதற்குப் பொருள் ஆட்சி அதிகாரத்தை ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்திற்கு விட்டுக் கொடுப்பதாகும்; மேலும் ஆட்சி அதிகாரம் பற்றிய பிரச்சினேயே ஒவ்வொரு புரட்சியின் அடிப்படையான பிரச்சினேயாகும். 1917 அக்டோபர் — நவம்பர் மாதங்களில் போல்ஷிவிக்குகளில் ஒரு பகுதியினர் சமரசம் செய்து கொண்டார்கள் என்ருல் அதன் பொருள், ஒன்ரு, அவர்கள் பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதைப் பற்றி பயப்பட்டனர்; அல்லது ஆட்சி அதிகாரத்தைச் சரிசமமாக இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் போன்ற ''நம்பத் தகுதியற்ற சகபயணிகளோடு'' மட்டுமல்லாமல் எதிரிகளுடனும் செர்னேவ் வகையருக்களுடனும் மென்ஷிவிக்குகளுடனும் பங்கிட்டுக் கொள்ள விரும்பினர் என்பதேயாகும். பின்குறிப்பிட்டவர்கள், அரசியல் நிர்ணய சபையைக் கலேத்தது, பொகயேவ்ஸ்கி வகையருக்களே ஈவிரக்கமின்றி நசுக்கியது, சர்வவியாபகமாக சோவியத் ஸ்தாபனங்களே நிறுவியது மற்றும் ஒவ்வொரு பறிமுதல் நடவடிக்கையும் போன்ற அடிப்படையான விவகாரங்களில் தவிர்க்க இயலாத முறையில் நமக்குத் தடங்கல் செய்திருப்பார்கள்.

இப்போது ''நம்பத் தகுதியற்ற சகபயணிகள்'' கூட இல்லாமலே ஒரு கட்சியால், பாட்டாளி வர்க்கக் கட்சியால் ஆட்சி அதிகாரம் கைப்பற்றப்பட்டு, நிலேநிறுத்தப்பட்டு கெட்டிப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்சி அதிகாரத்தைப் பங்கிடுவது, முதலாளி வர்க்கத்தின் மேலுள்ள பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை விட்டுக் கொடுப்பது பற்றிய பிரச்சினேயே இல்லாதிருக்கையில், இருக்க முடியாத நிலேயில், இந்தச் சமயத்தில் சமரசம் பற்றிப் பேசுவது புரிந்து

கொள்ளாமல் மனப்பாடம் செய்து கொண்ட வார்த்தைகளைக் கிளிப்பிள்ளை போல் திருப்பிச் சொல்வதேயாகும். நாம் நாட்டை ஆள முடியும், ஆள வேண்டும் என்கிற நிலைமையை எட்டி விட்ட பிறகு முதலாளித்துவம் பயிற்றுவித்த மிகவும் திறமையுள்ள நபர்களைச் செலவைப் பொருட்படுத்தாமல் நம் பக்கத்திற்கு வரச் செய்யவும் சிறு உடைமையின் சிதைவை எதிர்த்து நம் தேவையில் அவர்களை எடுத்துக் கொள்ளவும் நாம் முயல்கிற விஷயத்தைச் ''சமரசம்'' என்று வர்ணிப்பது சோஷலிச நிர்மாணத்தின் பொருளாதாரக் கடமைகளைத் தீர்க்கமாகச் சிந்தித்தறிய அறவே சக்தியில்லாத் தன்மையைத்தான் வெளிப்படுத்துகிறது.

எனவே, மத்திய நிர்வாகக் கமிட்டியில் தோழர் புஹாரின் தனக்குக் கரேலினும் கேயும் செய்த ''சேவையைப்'' பற்றி உடனேயே ''வெட்கப்பட்டது'' அவருக்குப் பெருமையே என்றாலும், ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுப்'' **போக்கைப்** பொறுத்த மட்டில், அவர்களுடைய அரசியல் தோழர்களைப் பற்றிய குறியீடு இன்னமும் ஒரு கடுமையான எச்சரிக்கையாகவே இருந்து வருகிறது.

உதாரணத்துக்கு இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் பத்திரிகையான **ஸ்நாமியா த்ருதா**,[38] 1918 ஏப்ரல் 25 இதழை எடுத்துக் கொள்ளுங்கள். ''நம் கட்சியின் இன்றைய நிலை போல்ஷிவிசத்திலுள்ள மற்றொரு போக்குடன் (புஹாரின், பக்ரோவ்ஸ்கி, மற்றவர்கள்) ஒன்றாகப் பொருந்துகிறது'' என்று அது பெருமையுடன் அறிவிக்கிறது. அல்லது அதே தேதியிட்ட மென்ஷிவிக்குகளின் **வ்பெரியோத்** என்ற பத்திரிகையை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் மற்ற கட்டுரைகளுக்கிடையே அபகீர்த்தி மிக்க மென்ஷிவிக் இசூவ் எழுதிய பின்வரும் ''ஆய்வுரையைப்'' பாருங்கள்:

''தொடக்கத்திலிருந்தே ஓர் உண்மையான பாட்டாளி வர்க்கத் தன்மை இல்லாதிருக்கும் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் கொள்கை சமீப காலத்தில் மேலும் மேலும் பகிரங்கமாக முதலாளி வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்ளும் போக்கைப் பின்பற்றியுள்ளது; வெளிப்படையான தொழிலாளி வர்க்கத்துக்கு விரோதமான தன்மையைப் பெற்றுள்ளது. தொழில் துறையைத் தேசியமயமாக்குகின்ற சாக்கிலே தொழில் துறை டிரஸ்டுகளை நிலை நாட்டும் கொள்கையை அவர்கள் பின்பற்றுகிறார்கள்; நாட்டின் உற்பத்திச் சக்திகளை மீட்டு நிறுவுவதின் சாக்கிலே

அவர்கள் எட்டு மணி நேர வேலை நாளை ஒழிக்கவும் வேலைவீத ஊதியம் ஏற்பாட்டையும் டெய்லர் முறையையும் கறுப்புப் பட்டியல்களையும் குற்றஞ்சாட்டி வேலையிலிருந்து நீக்கவும் புகுத்தவும் முயல்கிறார்கள். இந்தக் கொள்கை பாட்டாளி வர்க்கத்திலிருந்து அதன் அதி முக்கியமான பொருளாதார ஆதாயங்களைப் பறிக்கவும் முதலாளி வர்க்கத்தின் வரம்பற்ற சுரண்டலுக்கு அதை இரையாக்கவும் அடிகோலுகிறது''.

பிரமாதம் இல்லையா?

ருஷ்ய முதலாளிகளுக்குப் பிரதேசங்களைப் பிடித்துச் சேர்த்துக் கொள்ள வாக்குறுதி தந்த இரகசிய உடன்படிக்கைகளுக்காக ஓர் ஏகாதிபத்திய யுத்தத்தைக் கேரென்ஸ்கியோடு சேர்ந்து நடத்திய அவருடைய நண்பர்கள், ஜூன் 11ம் தேதியன்று தொழிலாளர்களை நிராயுதபாணியாக்குவதாகப் பயமுறுத்திய த்ஸெரெத்தேலியின் கூட்டாளிகள்,[39] படாடோபமான சொற்களைக் கொண்டு முதலாளி வர்க்கத்தின் ஆட்சியைத் திரையிட்டு மறைத்த லிபெர்டான்கள்—இதே பேர்வழிகள் தாம் சோவியத் ஆட்சி ''முதலாளி வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்கிறது'' என்றும் ''டிரஸ்டுகளை நிலைநாட்டுகிறது'' (அதாவது, ''அரசு முதலாளித்துவத்தை'' நிலைநாட்டுகிறது!) என்றும் டெய்லர் முறையைப் புகுத்துகிறது என்றும் குற்றம் சாட்டுகிறார்கள்.

உண்மைதான், போல்ஷிவிக்குகள் இசூவுக்கு ஒரு பதக்கம் அளிக்க வேண்டும்; அவருடைய ஆய்வுரை ஒவ்வொரு தொழிலாளர் கிளப்பிலும் சங்கத்திலும் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்—முதலாளி வர்க்கத்தின் ஆத்திரமூட்டும் பிரசாரங்கங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக. தொழிலாளர்களுக்கு இந்த லிபெர்டான்களையும் த்ஸெரெத்தேலிகளையும் இசூவ்களையும் நன்றாகத் தெரியும்; இப்பேர்ப்பட்ட நபர்களை அனுபவத்திலிருந்து அவர்கள் தெரிந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட முதலாளி வர்க்கத்தின் அடிவருடிகள் தொழிலாளர்களை டெய்லர் முறையையும் ''டிரஸ்டுகளை நிறுவுவதையும்'' எதிர்க்கும்படித் தூண்டுவதற்குக் காரணம் என்ன என்பதைத் தொழிலாளர்கள் சிந்தித்துப் பார்ப்பது மிகவும் பயனுள்ளதாயிருக்கும்.

வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் லிபெர்டான்களின், த்ஸெரெத்தேலி வகையறாக்களின் நண்பனாகிய இசூவின் ''ஆய்வுரையையும்'' ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்''

பின்வரும் ஆய்வுரையையும் கவனமாக ஒப்பு நோக்குவார்கள்:

''தொழில் துறையில் முதலாளிகளின் நிர்வாகத்தை மீட்டு நிறுவுவது சம்பந்தமாக உழைப்புக் கட்டுப்பாடு புகுத்துவது மூலம் உழைப்பின் உற்பத்தித் திறனைக் கணிசமான அளவுக்கு அதிகப்படுத்த முடியாது; ஆனால் அது பாட்டாளிகளின் வர்க்க முன்முயற்சியையும் செயலூக்கத்தையும் ஒழுங்கமைப்பையும் குறைக்கும். அது தொழிலாளி வர்க்கத்தை அடிமைப்படுத்துவதாக அச்சுறுத்துகிறது; அது பிற்பட்ட நிலையிலுள்ள நபர்களிடையேயும் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையின் இடையேயும் அதிருப்தியை உண்டாக்கும். 'முதலாளித்துவ நாச வேலைக்காரர்களை' எதிர்த்துப் பாட்டாளி வர்க்கத்திடையே நிலவும் பகைமைக்கு எதிர்முகமாக இந்த முறையை அமுலாக்குவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சியானது, தொழிலாளிகளுக்கு எதிராகக் குட்டி முதலாளிகளைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கும்; இந்த வழியிலே அது பாட்டாளி வர்க்கத்தின் கட்சி என்ற முறையில் தன்னைத் தானே நாசப்படுத்திக் கொள்ளும்'' (**கம்யூனிஸ்ட்**, இதழ் 1, பக்கம் 8, பத்தி 2).

''இடதுசாரிகள்'' அந்தக் கண்ணியில் வீழ்ந்து விட்டார்கள்; இசூவ் வகையறுக்களும் முதலாளித்துவத்தைச் சேர்ந்த மற்ற துரோகிகளும் தங்களை ஆத்திரமூட்டிவிட இடங் கொடுத்து விட்டார்கள் என்பதற்கு இது மிகத் தெளிவான சான்றாகும். இது தொழிலாளிகளுக்கு ஒரு நல்ல பாடமாகப் பயன்படுகிறது; பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையேதான் உழைப்புக் கட்டுப்பாடு புகுத்தப்படுவதற்கு ஆதரவாக நிற்கிறது என்பதையும் குட்டி முதலாளித்துவ வர்க்கம்தான் இந்தக் கட்டுப்பாட்டைக் குலைக்கத் தன்னாலான அனைத்தையும் செய்து வருகிறது என்பதையும் அவர்கள் அறிவார்கள். ''இடதுசாரிகளின்'' மேலே எடுத்துக் காட்டிய ''ஆய்வுரை'' போன்ற உரைகள் பயங்கரமான மானக்கேடாகும்; அதன் உட்குறிப்பு கம்யூனிசத்தை நடைமுறையில் முற்றாகக் கைவிடுவது, குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் முகாமுக்கு முற்றாக ஓடிப் போய் விடுவது என்பதாகும்.

''முதலாளிகளின் நிர்வாகத்தை மீட்டு நிறுவுவது சம்பந்தமாக''—இந்த வார்த்தைகளைக் கொண்டு ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' ''தங்களைத் தற்காத்துக் கொள்ளலாம்''

என்று நம்புகிருர்கள். அறவே பயனற்ற ஒரு தற்காப்பு இது: ஏனெனில் முதலாவதாக, சோவியத் ஆட்சி அதிகாரம் முதலாளிகளின் கையில் ''நிர்வாகத்தை'' வைக்கும் போது தொழிலாளர்களின் கமிசார்களை அல்லது தொழிலாளர்களின் கமிட்டிகளை நியமிக்கிறது; அவை நிர்வாகி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கண்காணிக்கின்றன; அவை அவனுடைய நிர்வாகத்திலிருந்து அனுபவத்தைக் கற்றுக் கொள்கின்றன; அவனுடைய உத்தரவுகளுக்கு எதிராக முறையீடு செய்து கொள்ள அவற்றிற்கு உரிமை இருப்பது மட்டுமல்ல, சோவியத் ஆட்சியின் உறுப்புக்களின் மூலமாக அவனைப் பதவியிலிருந்து நீக்கம் செய்யவும் முடியும். இரண்டாவதாக, வேலை செய்கிற போது நிர்வாகக் காரியங்களுக்கு மட்டுமே முதலாளிகளிடம் ''நிர்வாகம்'' கொடுக்கப்படுகிறது; அவற்றின் நிபந்தனைகளை சோவியத் ஆட்சி நிர்ணயிக்கிறது; அவற்றை சோவியத் ஆட்சி ஒழிக்கக் கூடும், மாற்றக் கூடும். மூன்ருவதாக, சோவியத் அதிகாரம் ''நிர்வாகத்தை'' முதலாளிகளிடம் முதலாளிகள் என்கிற வகையில் அல்லாமல் தொழில் நுட்ப நிபுணர்கள் அல்லது ஒழுங்கமைப்பாளர்கள் என்கிற வகையில் தந்து அவர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்கிறது. உண்மையிலே பெருவீதமான, பிரம்மாண்டமான தொழிற்சாலைகளின், டிரஸ்டுகளின் அல்லது பிற நிறுவனங்களின் ஒழுங்கமைப்பாளர்களிலும் முதல்தரமான தொழில் நுட்ப நிபுணர்களிலும் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேர் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தொழிலாளர்கள் நன்ருக அறிவார்கள். பாட்டாளி வர்க்கக் கட்சியாகிய நாம் இவர்களைத்தான் உழைப்பின் நடப்பை ''நிர்வகிக்கவும்'' உற்பத்தியை ஒழுங்கமைக்கவும் நியமிக்க வேண்டும்; காரணம், இந்த விஷயத்தில் நடைமுறை அனுபவமுள்ள நபர்கள் வேறு யாரும் கிடையாது. ''இடதுசாரிச்'' சொற்களாலோ குட்டி முதலாளித்துவத் தனமான தொளதொளத்த சிந்தனையாலோ தவருக இட்டுச் செல்லக் கூடிய தங்களுடைய குழந்தைப் பருவத்தைக் கடந்து வந்துள்ள தொழிலாளர்கள் டிரஸ்டுகளில் முதலாளித்துவ நிர்வாகத்தின் மூலமாகத்தான், பிரம்மாண்டமான இயந்திரத் தொழில் மூலமாகத்தான், ஆண்டு தோறும் பல கோடிப் பணப் புழக்கமுள்ள தொழில் அமைப்புகள் மூலமாகத்தான்—அப்படிப்பட்ட உற்பத்தி முறையின், அப்படிப்பட்ட தொழில்

அமைப்புகளின் மூலமாகத்தான்—சோஷலிசத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் குட்டி முதலாளித்துவத் தன்மை உடையவர்களல்ல. பெருவீத ''அரசு முதலாளித்துவத்தைக்'' கண்டு அவர்கள் பயப்படவில்லை; அதை அவர்கள் தங்களுடைய, பாட்டாளி வர்க்கத்தினுடைய உற்பத்திக்குரிய ஆயுதம் என்றும் தங்களுடைய சோவியத் ஆட்சி சிறு உடைமையாளர் பாணி சிதைவுக்கும் குலைவுக்கும் எதிராக அதைப் பயன்படுத்தும் என்றும் போற்றி மதிக்கிறார்கள்.

இது வர்க்கத் தன்மை இழந்த அதன் மூலமாக முற்றாகக் குட்டி முதலாளியாகிப் போன படிப்பாளிக் கூட்டத்துக்குத்தான் புரியக் கூடியதாயில்லை; ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளிலே'' ஒசீன்ஸ்கி பின்வருமாறு எழுதும் போது இதை மாதிரியாக்கிக் காட்டுகிறார்:

''... எந்தத் தொழில் நிறுவனத்தின் அமைப்பிலும் நிர்வாகத்திலும் முன்முயற்சி முழுவதும் 'டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களுக்குச்' சொந்தமாயிருக்கும். அவர்களுக்கு நாம் கற்றுத் தரப் போவதில்லை அல்லது அவர்களைச் சாதாரணத் தொழிலாளர்களாக ஆக்கப் போவதுமில்லை; அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளப் போகிறோம்'' (கம்யூனிஸ்ட், இதழ் 1, பக்கம் 14, பத்தி 2).

இந்தப் பகுதியில் முயலப்பட்டுள்ள நையாண்டி ''டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களிடமிருந்து சோஷலிசத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்'' என்கிற எனது சொற்கள் மீது எய்ததாகும்.

இதை வேடிக்கை என்று ஒசீன்ஸ்கி நினைக்கிறார். டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களை அவர் ''சாதாரணத் தொழிலாளர்களாக'' ஆக்க விரும்புகிறார். ''என்ன, பதினைந்து வயதுதானா? அதற்கு மேல் இல்லையா?''[40] என்று கவிஞன் எழுதிய பருவத்தைச் சேர்ந்த ஒரு மனிதன் இப்படி எழுதியிருந்தால், அதில் வியப்படைய ஒன்றும் இருக்காது. ஆனால் பெருவீத முதலாளித்துவம் படைத்த தொழில்நுட்ப, பண்பாட்டுத் துறைகளின் சாதனைகளை அது பயன்படுத்தா விட்டால் சோஷலிசம் சாத்தியமேயில்லை என்று போதிக்கப்பட்டுள்ள ஒரு மார்க்சியவாதியிடமிருந்து இவற்றைக் கேட்பது கொஞ்சம் வினோதமாகத்தான் இருக்கிறது. இதில் மார்க்சியத்தின் சாயல் அறவே கிடையாது.

இல்லை. டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களிடமிருந்து கற்றுக் கொள்ளாமல் சோஷலிசத்தை உருவாக்குவதோ, புகுத்துவதோ அசாத்தியம் என்று புரிந்து கொள்கிறவர்கள் தான் கம்யூனிஸ்டுகள் என்கிற பெயருக்குத் தகுதியுடையவர்கள். காரணம், சோஷலிசம் என்பது கற்பனையின் ஒரு புனைவு அல்ல; ஆட்சியை வென்று பெற்ற பாட்டாளி வர்க்க முன்னணிப் படை டிரஸ்டுகளால் உருவாக்கப்பட்டிருப்பவற்றை தன்வயமாக்கி செயல்படுத்தப்படுவதே அது. டிரஸ்டு வழியில் பெருவீத உற்பத்தியை ஒழுங்கமைக்கும் திறமையை முதல்தரமான முதலாளித்துவ நிபுணர்களிடமிருந்து பெறுவதைத் தவிர, பாட்டாளி வர்க்கக் கட்சியாகிய நமக்கு வேறு வழி இல்லை.

முதலாளித்துவப் படிப்பாளிகளுக்குச் சோஷலிசம் ''கற்றுக் கொடுப்பது'' என்கிற சிறுபிள்ளைத் தனமான வேலையை நாம் மேற்கொண்டாலொழிய, அவர்களுக்குக் கற்றுத் தர நம்மிடம் எதுவுமில்லை. அவர்களுக்கு நாம் கற்றுத் தரலாகாது—அவர்களை உடைமை நீக்கம்தான் செய்ய வேண்டும் (ருஷ்யாவில் போதிய அளவுக்கு ''உறுதியோடு'' செய்யப்பட்டு வருவது போல); அவர்களின் நாச வேலைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்; அவர்களை ஒரு பகுதியாகவோ, குழுவாகவோ சோவியத் ஆட்சிக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். மறு பக்கத்தில், குழந்தை வயதுள்ள, குழந்தை அறிவுள்ள கம்யூனிஸ்டுகளாக நாம் இரா விட்டால்—அவர்களிடமிருந்து கற்றும் கொள்ள வேண்டும், கற்றுக் கொள்வதற்கு விஷயம் இருக்கிறது; ஏனெனில் பாட்டாளி வர்க்கக் கட்சிக்கும் அதன் முன்னணிப் படைக்கும் கோடானு கோடி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற பிரம்மாண்டமான தொழில் நிறுவனங்களை ஒழுங்கமைப்பதில் சுயேச்சையாக வேலை செய்த அனுபவம் கிடையாது.

ருஷ்யாவிலுள்ள தலைசிறந்த தொழிலாளர்கள் இதை உணர்ந்து கொண்டனர். அவர்கள் முதலாளித்துவ ஒழுங்கமைப்பாளர்களிடமிருந்தும் நிர்வகிக்கும் இஞ்சினீயர்களிடமிருந்தும் தொழில்நுட்ப நிபுணர்களிடமிருந்தும் கற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளனர்; திடமாக, எச்சரிக்கையாக சிறு விஷயங்களிலிருந்து தொடங்கி படிப்படியாக அதை விட அதிகக் கடினமான விஷயங்களுக்கும் போகிறவாறு கற்கத் தொடங்கியுள்ளனர். உலோகத் தொழிலிலும் இயந்

திர நிர்மாணத் தொழிலிலும் விவகாரங்கள் இன்னமும் மெதுவாகப் போய்க் கொண்டிருக்கின்றன என்ருல் அதற்குக் காரணம், அவை அதிகக் கடினமாக உள்ளன. ஆனுல் ஜவுளி, புகையிலைத் தொழிலாளிகள், தோல் பதனிடும் தொழிலாளிகள் ''அரசு முதலாளித்துவத்தைப்'' பற்றியோ, ''டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களிடமிருந்து கற்றுக் கொள்வது'' பற்றியோ வர்க்கத் தன்மையிழந்த குட்டி முதலாளித்துவப் படிப்பாளிக் கூட்டம் பயப்படுவது போல பயப்படவில்லை. ''பிரதான தோல் கமிட்டி'', ''மத்திய ஜவுளிக் கமிட்டி'' ஆகிய பிரதான மத்திய நிலையங்களிலுள்ள இந்தத் தொழிலாளர்கள் முதலாளிகள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவர்களிடமிருந்து கற்றுக் கொள்கிருர்கள்; டிரஸ்டுகளை நிலைநாட்டுகிருர்கள்; ''அரசு முதலாளித்துவத்தை'' நிலைநாட்டுகிருர்கள். அது சோவியத் ஆட்சியின் கீழ் சோஷலிசத்தின் நுழைவாயிலைக் குறிக்கிறது, அதன் உறுதியான வெற்றிக்கு ஒரு நிபந்தனையாக இருக்கிறது.

ருஷ்யாவின் முன்னேறிய தொழிலாளிகளின் இந்த வேலையும் உழைப்புக் கட்டுப்பாடு புகுத்தும் அவர்களின் வேலையோடு கூடவே தொடங்கி விட்டது; சந்தடியில்லாமல், ஆர்ப்பாட்டம் இல்லாமல், சில ''இடதுசாரிகளுக்கு'' எவ்வளவோ அவசியமாயிருக்கிற சத்தமும் களேபரமும் இல்லாமல் இது நடந்து கொண்டிருக்கிறது. இது நடைமுறை அனுபவத்தின் படிப்பினைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதிக எச்சரிக்கையோடு படிப்படியாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கடினமான வேலை, பெருவீத உற்பத்தியை எப்படி நிர்மாணிப்பது என்று நடைமுறையில் கற்றுக் கொள்ளும் வேலை நாம் சரியான பாதையிலேதான் செல்கிருேம் என்பதற்கு உத்தரவாதமாகும்; சிறு உடைமையாளர் பாணி சிதைவையும் சீர்குலைவையும் எதிர்த்தும் குட்டி முதலாளித்துவக் கட்டுப்பாடின்மையை* எதிர்த்தும் ருஷ்யாவின் வர்க்க

* பொருளாதாரத் துறையில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் முக்கியத்துவம் பற்றி ஒரு வார்த்தைகூட ஆய்வுரைகளின் ஆசிரியர்கள் சொல்லாமலிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்க விஷயமாகும். ''ஒழுங்கமைப்பு'' வகையரு என்று மட்டுமே அவர்கள் பேசுகிருர்கள். ஆனுல் பொருளாதார உறவுகளில் தொழிலாளர்களின் சர்வாதிகாரத்தைத் தவிர்த்து ஒதுக்குகிற குட்டி முதலாளிகள்கூட அதை ஒப்புக்

உணர்வுள்ள தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு உத்தரவாதமாகும்; கம்யூனிசத்தின் வெற்றிக்கு உத்தரவாதமாகும்.

. . . . . . . . . . . .

1918 மே மாதத்தில்
எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கங்கள் 293-312

---

கொள்கிறார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இந்த மையக் கூறை முதலாளித்துவத்தின் பொருளாதார அடிப்படைகளுக்கு எதிராக நெறியாக்கம் செய்யப்படுகிற இதை இப்படிப்பட்ட தருணத்தில் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர் என்றைக்கும் ''மறக்க'' முடியாது.

# தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை 1918 மே 26

*(தோழர் லெனினது வருகையைத் தொடர்ந்து பலத்த கரவொலி முழக்கம்.)* தோழர்களே, முதன்முதலாக மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் பேரால் தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் காங்கிரசுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(கரவொலி.)*

தோழர்களே, தேசியப் பொருளாதார உயர் கவுன்சிலுக்கு இப்போது மிகவும் கடினமான, ஆனால் மிகவும் கைம்மாறு தருகிற ஒரு பணி உள்ளது. அக்டோபர் புரட்சியின் ஆதாயங்கள் இன்னும் முன் செல்லும் அளவுக்கு, அது தொடங்கி வைத்த எழுச்சி மேலும் தீர்க்கமடையும் அளவுக்கு, சோஷலிஸ்டுப் புரட்சியின் சாதனைகள் மேலும் உறுதியாக நிலைநாட்டப்படும் அளவுக்கு, சோஷலிஸ்டு அமைப்பு கெட்டிப்படும் அளவுக்குத் தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் பங்கு அதிகமாகும், உயர்வு பெறும், அரசு நிறுவனங்களில் எல்லாம் வைத்து இவை மட்டுமே நிலைத்திருக்கும். சோஷலிஸ்டு அமைப்பு நிறுவப்படுவதை நாம் நெருக்கமாக அணுகி வரும் போது இவற்றின் நிலை மேலும் நிலைத்து நிற்கக் கூடியதாக மாற்றமுறும். முற்றிலும் நிர்வாகம் சார்ந்த பொறியமைவின், நிர்வாகத்தில் முழுமையாக ஈடுபட்டுள்ள ஒரு பொறியமைவின் தேவை குறையும். சுரண்டலாளர்களின் எதிர்ப்பு இறுதியாகத் தகர்க்கப்பட்ட பிறகு, உழைக்கும் மக்கள் சோஷலிஸ்டு உற்பத்தியை ஒழுங்கமைக்கத் தெரிந்து கொண்ட பிறகு இந்த நிர்வாகப் பொறியமைவு—இச்சொல்லின் சரியான கறாரான குறுகிய பொருளில்—பழைய அரசின் இந்தப் பொறியமைவு மடிந்தழிவது திண்ணம். அதேபோதில் தேசியப் பொருளாதார உயர்

கவுன்சில் மாதிரியான பொறியமைவு நிச்சயமாயும் வளரும், வளமுறும், வலிமையடையும், ஸ்தாபனத் திரட்சியுள்ள சமூகத்தின் எல்லாப் பிரதானச் செயல்களையும் நிறைவேற்றும்.

இதனுல்தான், தோழர்களே, நாம் நமது தேசியப் பொருளாதார உயர் கவுன்சில் மற்றும் வட்டாரக் கவுன்சில்களின் அனுபவத்தை, அவை நெருக்கமாயும் பிரிக்கவொண்ணு முறையிலும் தொடர்பு பூண்டுள்ள செயல்களுடன் சேர்த்துப் பார்க்கும் போது பல காரியங்கள் முடிவுருமல், முழுமையடையாமல், ஒழுங்கமையாமல் இருந்த போதிலும் நாம் நம்பிக்கை இன்மை சார்ந்த முடிவுக்கு வருவதற்கான அற்பமான அடிப்படை கூட இல்லை என்று நான் கருதுகிறேன். தேசியப் பொருளாதார உயர் கவுன்சில் தனக்குத்தானே வகுத்து வைத்துக் கொள்ளும் பணி, எல்லாப் பிராந்திய மற்றும் வட்டாரக் கவுன்சில்களும் தமக்குத்தாமே வகுத்து வைத்துக் கொள்ளும் பணி மிகப் பேரளவானதாயும் சர்வாம்சமானதாயும் இருப்பதன் காரணமாக, நாம் எல்லோரும் உற்று நோக்கும் இதில் கவலை தரக் கூடிய எதுவும் அறவே இல்லை. மிகப் பல தடவை—நமது கருத்து நிலையில் இருந்து நிச்சயமாயும் ஒருவேளை மிகவும் அடிக்கடி—''மூன்று முறை அள ஒரு தரம் வெட்டு'' என்ற பழமொழி பிரயோகிக்கப்படவில்லை. துரதிருஷ்டவசமாக, அந்தப் பழமொழியில் வெளியிட்டிருப்பது போன்று சோஷலிஸ்டு வழிகளில் பொருளாதாரத்தை ஒழுங்கமைப்பது சம்பந்தமான காரியம் அத்தனை எளிதானதல்ல.

சகல ஆட்சி அதிகாரமும்—இந்தத் தடவை அரசியல், பிரதானமாயும் அரசியல் ஆட்சி அதிகாரம் மட்டுமல்ல, ஆனுல் பொருளாதார ஆட்சி அதிகாரமும், அதாவது அன்றுட மானுட வாழ்க்கையின் ஆக ஆழமான அடித்தளங்கள் மீதே பாதிப்புச் செலுத்தும் ஆட்சி அதிகாரம்—ஒரு புதிய வர்க்கத்திடம் மாற்றி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வர்க்கம் மனித குல வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் தொகையின் மிகப் பெரிய பெரும்பான்மையின், உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் முழுத் திரளுக்கும் தலைவனுகத் திகழ்கிறது. இந்த நிலையில் நமது கடமைகள் மேலும் சிக்கலுறுகின்றன. கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கையின் ஆக ஆழமான அடித்தளங்களை முற்றிலும் புதிய வழிகளில் நாம் ஒழுங்கமைக்க வேண்டியுள்ள போது நம்மை எதிரிடும்

ஸ்தாபனக் கடமைகளிஃ: ஆக உயர் முக்கியத்துவமும் உயர் கடினமும் காரணமாக ''மூன்று முறை அள ஒரு தரம் வெட்டு'' என்ற பழமொழியில் கூறியுள்ளதைப் போன்று அவ்வளவு எளிதாகக் காரியங்களை ஏற்பாடு செய்வது சாத்தியமல்ல என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒரு சாதனத்தை எண்ணற்ற தடவைகள் அளந்து விட்டுப் பிறகு இறுதியாக அளக்கப்பட்டுப் பொருத்தப்பட்டதை வெட்டி விட்டுப் பொருத்தும் நிலையில் நாம் நிச்சயமாயும் இல்லை. நாம் முன்னேறிச் செல்லும் போக்கில் நமது பொருளாதாரக் கட்டமைவை நிர்மாணிக்க வேண்டும். பல்வேறு நிறுவனங்களைத் தேர்ந்து ஆராய வேண்டும்; அவற்றின் வேலையைக் கவனிக்க வேண்டும்; உழைக்கும் மக்களின் பொது அனுபவத்தால், எல்லாவற்றுக்கும் மேலாக அவற்றின் வேலையின் பலன்களை வைத்துப் பரிசீலிக்க வேண்டும். நாம் முன்னேறிச் செல்லும் போக்கில் மேலும் சுரண்டலாளர்களின் ஆவேசமான போராட்டமும் வெறித் தனமான எதிர்ப்பும் உள்ள நிலைமையில் இதை நாம் செய்ய வேண்டும். முதலாளித்துவச் சுரண்டலின் கடைசிச் சொத்தைப் பல்லைப் பிடுங்கி எடுக்கக் கூடிய தருணத்தை நாம் எந்தளவு நெருங்கி வருகிறோமோ, அந்தளவு சுரண்டலாளர்களின் வெறியாட்டமும் அதிகரிக்கிறது. ஒரு குறுகிய காலகட்டத்திற்கு உள்ளேயே தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளின் மாதிரிகள், ஒழுங்கு விதிகள், நிர்வாக அமைப்புகளைப் பல தடவைகள் நாம் மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்ட போதிலும், இந்த நிலைமைகளில் நம்பிக்கை இன்மைக்குச் சிறிதளவும் ஆதாரம் இல்லை என்பது புரிந்து கொள்ளக் கூடியதே. இருப்பினும் தமது சிறந்த உணர்வுகள் புண்படுத்தப்பட்டதாகக் கருதும் முதலாளி வர்க்கத்தினரும் சுரண்டலாளர்களும் வன்மத்துடன் வெடித்துக் குமுறுவதற்கு இது பெருமளவு இடம் தருகிறது. இந்த வேலையில்—உதாரணமாக, பிரதான தண்ணீர் வாரியத்தில்—மிகவும் நெருக்கமான மிகவும் நேரடியான பங்கு வகிப்போர் ஒழுங்கு விதிகளையும் நிர்வாகத்தின் நியதிகள் மற்றும் சட்டங்களையும் மூன்று தடவை மாற்றுவதை எப்போதும் திருப்திகரமாக இருப்பதாகக் கருத முடியாது; இத்தகைய வேலையில் இருந்து பெறும் திருப்தி பெரிதல்ல. அரசாணைகளை மிகவும் அடிக்கடி மாற்றும் நேரடியான பொல்லாங்கில் இருந்து நாம் ஓரளவுக்கு நம்மை நாமே

விலக்கிக் கொண்டும், அதன் சொந்தமான இன்னும் போதாத தாக இருக்கும் சக்திகளின் உதவி கொண்டு ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் செய்து முடிக்க வேண்டியிருக்கும் பேரளவான உலக வரலாற்று முக்கியத்துவம் உள்ள கடமையை மேலும் சற்று ஆழமாகப் பார்ப்போமானுல், பல்வேறு நிர்வாக முறைகளிலும் பல்வேறு வடிவிலான கட்டுப்பாட்டிலும் இன்னும் பல மாற்றங்களைச் செய்வதும் அவற்றை நடைமுறையில் சோதிப்பதும் தவிர்க்க முடியாதது என்பது உடனடியாகப் புரிந்து கொள்ளக் கூடியதாகும்; இத்தகைய பிரம்மாண்டமான பணியில் நாம் முன்கூட்டியே நிர்ணயம் செய்த நெறி முறைகளுக்கு ஏற்ப ஒரே அடியில் புதிய சமுதாய அமைப்பின் ஸ்தாபன வடிவங்களை உடனடியாக நிலைநாட்டி உருவாக்க முடியும் என்று என்றுமே உரிமை பாராட்டி இருக்க முடியாது: எதிர்காலத்தின் வாய்ப்புகள் குறித்து என்றேனும் எழுதியுள்ள விவேகமுள்ள சோஷலிஸ்டு எவரும் இதை ஒருபோதும் கருதி இருக்க முடியாது.

நமக்குத் தெரிந்திருந்தது அனைத்தும், முதலாளித்துவ சமூகம் பற்றிய சிறந்த நிபுணர்கள், அதன் வளர்ச்சியை முன்னறிந்து கூறிய மாபெரும் சிந்தனையாளர்கள் நமக்குத் துல்லியமாகச் சுட்டிக் காட்டியதுமான எல்லாம் என்னவெனில், இந்த மாற்றம் வரலாற்று ரீதியாகத் தவிர்க்க முடியாதது என்பதும் இது ஒரு குறிப்பிட்ட முக்கியமான வழியில் நடைபெற வேண்டும் என்பதும் உற்பத்திச் சாதனங்களிலான தனி உடைமை உரிமை வரலாற்று ரீதியில் அழிந்தே தீரும் என்பதும் அது நிச்சயம் தகர்ந்தழிய வேண்டும், சுரண்டலாளர்கள் தவிர்க்க முடியாத வகையில் உடைமை நீக்கம் செய்யப்படுவார்கள் என்பதும் ஆகும். இது விஞ்ஞான ரீதியான துல்லியத்துடன் நிலைநாட்டப்பட்டது. நாம் சோஷலிசத்தின் பதாகையைப் பற்றிக் கொண்ட போது, நாம் நம்மை சோஷலிஸ்டுகள் என்று பறைசாற்றிக் கொண்ட போது, நாம் சோஷலிஸ்டுக் கட்சிகளை நிறுவிக் கொண்ட போது, நாம் சமுதாயத்தை மாற்றி அமைத்த போது—இதை நாம் அறிந்திருந்தோம். சோஷலிஸ்டு மறு சீரமைப்பை நோக்கிச் செயல்படும் நோக்கத்துடன் நாம் ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்ட போது நாம் இதை அறிந்திருந்தோம். ஆனுல் நமக்கு மாற்றங்களின் வடிவங்கள் பற்றியோ ஸ்தூலமான மறு சீரமைப்பின் வளர்ச்சி விகிதம் பற்றியோ தெரிந்திருக்க

முடியாது. இந்த விஷயத்தில் கூட்டு அனுபவம், லட்சோப லட்சம் பேரின் அனுபவம் மட்டுமே நமக்கு நிர்ணயமான வழிகாட்டுதலை வழங்க முடியும். நமது பணிக்கு, சோஷலிசத்தை நிர்மாணிக்கும் பணிக்கு நிலப்பிரபுத்துவச் சமுதாயத்திலும் முதலாளித்துவச் சமுதாயத்திலும் வரலாற்றைப் படைத்தவர்களான அந்த உயர் பகுதிகளைச் சேர்ந்த நூறு பேர், நூறாயிரம் பேர்களின் அனுபவம் போதுமானதல்ல என்பதே இதற்குக் குறிப்பான காரணமாகும். இந்த வழியில் நாம் முன்னேறிச் செல்ல முடியாது என்பதற்குத் திட்டவட்டமான காரணம், நாம் கூட்டு அனுபவத்தை, லட்சோப லட்சம் உழைக்கும் மக்களின் அனுபவத்தைச் சார்ந்து நிற்கிறோம் என்பதாகும்.

எனவே, சோவியத்துக்களின் பிரதானமான அடிப்படையான பணியான ஸ்தாபனப் பணி மீது பரந்த அளவிலான சோதனைகள், பரந்த அளவிலான நடவடிக்கைகள், பரந்த அளவிலான மாற்றங்கள், பரந்த அளவிலான இடர்ப்பாடுகள் தவிர்க்க முடியாத வகையில் சுமத்தப்படும் என்பதையும் இதைப் பற்றிய அனுபவம் நமக்கு இல்லாததால் குறிப்பாயும், ஒவ்வொரு நபரையும் அவருக்கு உரிய சரியான இடத்தில் எப்படிப் பொருத்துவது என்ற பிரச்சினை சம்பந்தமாக இந்த இடர்ப்பாடுகள் சுமத்தப்படும் என்பதையும் நாம் அறிவோம். இங்கு ஒவ்வொரு நடவடிக்கையையும் நாமே வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பாதையில் நாம் செய்யும் தவறு எந்தளவுக்குக் கடுமையாக இருக்கிறதோ அந்த அளவுக்கு இப்பணி நிச்சயமாயும் அதிகரிக்கும். தொழிற் சங்கங்களில் அங்கத்தினர் தொகை அதிகரிக்குந்தோறும், கூடுதலாக வரும் ஒவ்வொரு ஆயிரம் பேரும், கூடுதலாக வரும் ஒவ்வொரு நூறாயிரம் பேரும் உழைக்கும் மக்களின் சுரண்டப்படும் மக்களின் முகாம்களில் இருந்து வரும் தோறும், இதுகாறும் மரபுக்கும் வழக்கத்திற்கும் ஏற்ப வாழ்ந்தவர்கள் சோவியத் அமைப்புகளை நிர்மாணிப்போர் முகாம்களில் சேர்ந்து வரும் போதும் தகுதியானோர் என்று நிரூபிக்கப்பட்டு சரியான வழியில் வேலைகளை ஒழுங்கமைக்க வேண்டியவர்களான மக்களின் தொகை அதிகரித்து வரும்.

தேசியப் பொருளாதாரக் கவுன்சில், தேசியப் பொருளாதார உயர் கவுன்சில் முன்பாக குறிப்பாயும் அடிக்கடி

எழுந்து வரும் இரண்டாம் பட்சமான பணிகளில் ஒன்றை—மு ,லாளித்துவ நிபுண ர்களைப் பயன்படுத்துவது சம்பந்தமான பணியை—எடுத்துக் கொள்வோம். சர்வதேச முதலாளித்துவம் உழைப்பின் பொருளாயத, தொழில்நுட்ப முன்தேவைகளை எந்தளவுக்கு வளர்த்திருக்கிறதோ, அதை விஞ்ஞானத்தை அடிப்படையாக்கிப் பேரளவில் ஒழுங்கமைத்து மிகப் பெருமளவிலான விஞ்ஞான போதனை பெற்ற நிபுணர்களைப் பயிற்றுவித்துள்ளதோ அந்த அளவுக்கு மட்டுமே இப்பணியை நிறைவேற்ற முடியும் என்பதை நாம் எல்லோரும்—குறைந்த பட்சம், விஞ்ஞானம் மற்றும் சோஷலிசத்தின் அடிப்படை மீது தமது நிலையை மேற்கொள்வோர்—அறிவோம். இது இல்லாமல் சோஷலிசம் சாத்தியம் அல்ல என்பதை நாம் அறிவோம். கடந்த அரை நூற்றாண்டு காலமாக முதலாளித்துவத்தின் வளர்ச்சியை உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளவர்களும் சோஷலிசம் தவிர்க்கவொண்ணாதது என்ற முடிவுக்கு மீண்டும் மீண்டும் வந்திருப்பவர்களுமான அந்தச் சோஷலிஸ்டுகளின் நூல்களை நாம் திரும்பவும் படிப்போமானால், அவர்கள் அனைவரும் எவ்விதமான விதிவிலக்கும் இன்றி விஞ்ஞானத்தை அதன் முதலாளித்துவத் தளைகளில் இருந்து, மூலதனத்துக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதில் இருந்து, நீசத் தனமான முதலாளித்துவப் பேராசையின் நலன்களுக்கு அடிமையாக இருப்பதில் இருந்து விடுவிக்க வல்லது சோஷலிசம் மட்டுமே என்று சுட்டியுரைத்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் காண முடியும். சமூக உற்பத்தியும் வினியோகமும் விஞ்ஞான பூர்வமான வழிகளில் பரவலாக விஸ்தரிக்கப்படுவதையும் அவை உழைக்கும் மக்களின் வாழ்க்கையை எளிதாக்கி கூடுமானவரை அவர்களது நல்வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்துக்கு உண்மையில் கீழடங்கியதாக இருக்கும்படிச் செய்வதும் சோஷலிசத்தால் மட்டுமே சாத்தியம்; சோஷலிசத்தால் மட்டுமே இதை அடைய முடியும். இதை அது நிச்சயம் அடைய வேண்டும் என்பதை நாம் அறிவோம். இந்த உண்மையைப் புரிந்து கொள்வதில்தான் மார்க்சியத்தின் முழுமையான பன்முகத் தன்மையும் அதன் முழுமையான வலிமையும் காணக்கிடக்கின்றன.

இதை எதிர்க்கும் நபர்களைச் சார்ந்து நிற்கும் அதே பொழுதில் இதை நாம் அடைந்தாக வேண்டும். காரணம்,

மூலதனம் எந்த அளவுக்குப் பெரிதாக மாறுகிறதோ அந்த அளவுக்கு முதலாளி வர்க்கம் தொழிலாளர்களை அதிகமாக அடக்குகிறது. இப்போது ஆட்சி அதிகாரம் தொழிலாளர் மற்றும் ஏழை விவசாயிகளின் கரங்களில் இருப்பதாலும் ஆட்சியதிகாரம் மக்களின் ஆதரவோடு தனக்குத்தானே பணிகளை வகுத்துக் கொள்வதாலும் நாம் இந்தச் சோஷலிஸ்டு மாற்றங்களை முதலாளித்துவச் சமூகத்தில் பயிற்சி பெற்ற, வேறு நிலைமைகளை அறியாத, வேறு எந்த ஒரு சமூக அமைப்பைப் பற்றியும் கருதிப் பார்க்க முடியாத முதலாளித்துவ நிபுணர்களின் உதவியுடன் சாதனையாக்க வேண்டும். எனவே இந்த நிபுணர்கள் தமது வேலையில் முற்றமுழு நேர்மையோடும் விசுவாசத்தோடும் இருக்கும் இடங்களில் கூட அவர்கள் ஆயிரக் கணக்கான முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் நிரம்பிக் கிடக்கிறார்கள்; தாமே காண வியலாத ஆயிரக் கணக்கான பந்தங்களால் முதலாளித்துவச் சமூகத்துடன் தொடர்பு பூண்டிருக்கிறார்கள். இந்த முதலாளித்துவ சமூக அமைப்பு மடிந்து வருகிறது; அழிவுற்று வருகிறது; எனவே அது மூர்க்கமான எதிர்ப்பைத் தோற்றுவித்து வருகிறது.

இந்த முயற்சிகள், சாதனைகள் சம்பந்தமான இடர்ப்பாடுகளை நாம் நம்மிடமிருந்தே மறைத்துக் கொள்ள முடியாது. இதைக் குறித்து எழுதியுள்ள சோஷலிஸ்டுகள் பலர். ஆனால் தொழிலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும் போது, மிகவும் செழுமையான வரலாற்று முறையில் தவிர்க்க முடியாத நமக்கு அவசியமான முதலாளித்துவத்தால் சேகரம் செய்யப்பட்ட கலாசாரம், ஞானம் மற்றும் தொழில்நுணுக்கக் களஞ்சியத்தின் கூட்டு மொத்தத்தையும் முதலாளித்துவத்தின் கருவி என்பதில் இருந்து சோஷலிசத்தின் கருவியாக மாற்றும் கடமையினை தொழிலாளி வர்க்க ஆட்சி தனது பணியாக மேற்கொள்ளும் போது அதை எதிரிடும் இந்த ஸ்தூலமான நடைமுறை இடர்ப்பாடு சம்பந்தமாக எதிர்கால சோஷலிஸ்டு சமூக அமைப்புப் பற்றிய எந்த ஒரு சோஷலிஸ்டின் நூலிலோ எந்த ஒரு பிரபல சோஷலிஸ்டின் கருத்திலோ சுட்டிக் காட்டப்பட்டிருப்பதைக் கண்டதாக எனக்கு நினைவு இல்லை. இதை ஒரு பொது சூத்திரத்தில், கருத்தியலான அறிவாய்வில் செய்வது எளிது. ஆனால் உடனே மடிந்துவிடாமல் மரணம் நெருங்க நெருங்க மிகவும்

மூர்க்கமான எதிர்ப்பினைத் தொடுக்கும் முதலாளித்துவத்தை எதிர்த்த போராட்டத்தில் இந்தப் பணியைச் செய்யப் பிரம்மாண்ட முயற்சிகள் தேவை. இந்தத் துறையில் சோதனைகள் நடைபெற்று ஓரளவான பிழைகளை நாம் திரும்பத் திரும்பத் திருத்திக் கொள்வோமானால் இது தவிர்க்க முடியாதது. காரணம், நாம் தேசியப் பொருளாதாரத்தின் இந்த அல்லது அந்தத் துறையில் நிபுணர்களை முதலாளித்துவத்தின் ஊழியர்களாக இருப்பதில் இருந்து உழைக்கும் மக்களின் ஊழியர்களாக, அவர்களது ஆலோசகர்களாக உடனடியாக மாற்ற முடியாது. இதை உடனடியாகச் செய்ய முடியாததால் அது மிகச் சிறிய அளவு நம்பிக்கையின்மைக்குக் கூட இடமளித்தல் கூடாது; ஏனெனில் நாம் நமக்கென ஒருங்கு வித்துள்ள பணி உலக-வரலாற்று இடர்ப்பாடும் முக்கியத்துவமும் உடைய பணியாகும். தனி ஒரு நாட்டில், ருஷ்யாவை விடக் குறைந்த அளவே பின்தங்கிய நாடாக அது இருந்த போதிலும், நாலாண்டுகள் நீடித்த முன் என்றும் கண்டிராத வேதனைமிகுந்த கடுமையான நாசகரமான போருக்குப் பிந்திய நிலைமைகளில் அன்றி மிகவும் சிறந்த நிலைமைகளில் நாம் வாழ்ந்து கொண்டிருந்த போதிலும் சரி, நாம் முற்றிலும் நமது சொந்த முயற்சிகள் மூலமே சோஷலிஸ்டுப் புரட்சியைப் பூர்த்தி செய்திருக்க முடியாது. தற்போது ருஷ்யாவில் நடைபெற்று வரும் சோஷலிஸ்டுப் புரட்சியுடன் மாறுபாடுற்று சக்திகளின் தெட்டத்தெளிவான பொருத்தக் கேடைச் சுட்டிக் காட்டும் நபர் பழமைவாதியான ''கூட்டில் அடைந்த மனிதனை'' ஒத்தவனாக இருப்பார்; அவரால் தமது இயலுணர்வுக்கு மிகையாகப் பார்க்க முடியாது; சக்திகளின் பொருத்தக் கேடுள்ள பல சம்பவங்கள் இல்லாமல் முக்கியத்துவம் உள்ள எந்த ஒரு வரலாற்று மாற்றமும் ஏற்படுவதில்லை என்பதை அவர் மறந்து விடுகிறார். சக்திகள் புரட்சி வளரும் விதத்தில் போராட்டத்தின் போக்கில் வளர்கின்றன. ஒரு நாடு ஆழமான மாற்றம் கொண்டுவரும் பாதையினை மேற்கொண்டு விட்டதெனில், அது அந்த நாட்டுக்கும் அந்த நாட்டில் வெற்றியீட்டிய தொழிலாளி வர்க்கத்தின் கட்சிக்கும் பெருமை தருவதாகும். அவை முன்னாட்களில் கருத்தியலாயும் தத்துவார்த்த முறையிலும் எழுப்பப்பட்ட பணிகளை நடைமுறைப் பாங்கில் மேற்கொள்ள வேண்டும். இந்த அனுபவம் என்றுமே மறக்கப்பட மாட்டாது. பொருள் உற்பத்தி

முழுவதையும் தேசிய அளவில் ஒழுங்கமைக்கும் நடைமுறை வேலையில் தொழிற் சங்கங்களிலும் வட்டார அமைப்புகளிலும் இப்போது ஒன்றுசேர்ந்துள்ள தொழிலாளர்கள் பெற்று வரும் அனுபவத்தை, ருஷ்யப் புரட்சியும் சர்வதேச சோஷலிஸ்டுப் புரட்சியும் கடந்து செல்லும் நிலைமாற்றங்கள் எத்துணை கடினமாக இருந்த போதிலும் சரி, பறித்துவிட முடியாது. இது வரலாற்றில் சோஷலிசத்தின் சாதனை என்று ஏற்கப்பட்டு விட்டது; இதன் மீது வருங்கால உலகப் புரட்சி தனது சோஷலிஸ்டுக் கட்டுமானத்தை நிறுவும்.

இன்னொரு பிரச்சினையை, ஒருக்கால் மிகவும் கடினமான ஒரு பிரச்சினையை, தேசியப் பொருளாதார உயர் கவுன்சில் நடைமுறைத் தீர்வு காண வேண்டிய பிரச்சினையை நான் குறிப்பிட விரும்புகிறேன். இது தொழிலாளர் கட்டுப்பாடு பற்றிய பிரச்சினையாகும். சுருக்கமாகச் சொன்னால், இந்தப் பிரச்சினையைக் குறிப்பிடும் போது குறிப்பாயும் தொழிற் சங்கங்கள்தான், தொழிலாளர்களின் ஆகப் பெரிய அமைப்புகளான உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டியும் அகில ருஷ்யத் தொழிற் சங்கக் கவுன்சிலும்தான், லட்சக்கணக்கான உழைக்கும் மக்களை ஒற்றுமைப்படுத்தியுள்ள உயர் தொழிற் சங்க அமைப்புகள்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முதலில் சுதந்திரமாக வேலை செய்யத் தொடங்கின என்பதை, இப்பிரச்சினை உலக வரலாற்று முக்கியத்துவம் உடையது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும், மன நிறைவுடன் வற்புறுத்த வேண்டும். இதைப் புரிந்து கொள்ளும் பொருட்டு நாம் அந்த ஓரளவு தோல்விகள், சிறு தோல்விகளில் இருந்தும் தனிப்பட எடுத்துக் கொண்டால் வென்று சமாளித்தற்கரியது என்று தோன்றும் நம்பற்கரிய இடர்ப்பாடுகளில் இருந்தும் நம்மை நாமே விலக்கிக் கொள்ள வேண்டும். நாம் மேலும் உயர் மட்டத்திற்கு எழுச்சியுற்று சமூகப் பொருளாதார அமைப்பு முறைகளின் வரலாற்று மாற்றங்களை ஆய்வு செய்தல் வேண்டும். இந்தக் கோணத்தில் இருந்து மட்டுமே நாம் மேற்கொண்டுள்ள பணியின் அளப்பரிய தன்மையைச் சரியாகக் கணிக்க முடியும். இது வரையில், நிலப்பிரபுத்துவ ருஷ்யாவில் 1861 வரை[41] இது தமது சொந்த விவகாரம் என்று கருதிய ஒரு சில நில உடைமையாளர்களால் தீர்வு காணப்பட்டதான இந்தப் பணியை இந்தச் சந்தர்ப்பத்தில் சமூகத்தின் ஆக

முன்னேறிய பிரதிநிதிகள், உழைக்கும் சுரண்டப்படும் மக்கள் தமது சொந்த முன் முயற்சியின் மீது தாமே மேற்கொண்டுள்ளனர் என்ற மெய் விவரத்தின் பேரளவான முக்கியத்துவத்தை இதற்குப் பிறகு மட்டுமே சரியாகக் கணிப்பது சாத்தியமாகும். அந்தச் சமயத்தில் அரசு இணைப்பாக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கொண்டுவருவது அவர்களது விவகாரமாக இருந்தது.

இந்தக் கட்டுப்பாட்டைப் பிரபுத்துவ-நிலவுடைமையாளர்கள் எப்படி உருவாக்கினுர்கள் என்பதை நாம் அறிவோம். அது பெரும்பான்மையான மக்களுக்கு ஒடுக்குமுறையாக, மானக்கேடாக, கடுங்காவல் சிறைத் தண்டனையின் நம்பற்கரிய கடும்வதையாக இருந்தது. பண்ணை அடிமை முறையில் இருந்து முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கான இந்த மாறுதல் கட்டம் முழுவதையும் நினைவுக்குக் கொண்டுவாருங்கள். நீங்கள் நேரடியாகப் பார்த்ததில் இருந்தும்—உங்களில் பெரும்பான்மையினர் நேரடியாகப் பார்த்திருக்க முடியாது என்ற போதிலும்—பழைய தலைமுறையினரிடமிருந்து நீங்கள் அறிந்து கொண்டதிலிருந்தும், 1861க்குப் பிறகு முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கான மாற்றம், பழைய நிலப்பிரபுத்துவத்தின் தண்டாயுதக் கட்டுப்பாட்டிலிருந்து ஏற்பட்ட மாற்றம், மிகவும் அறிவற்றதான ஆணவம்பிடித்த மிருகத் தனமான மானமிழக்கச் செய்யும் சொந்த வன்முறையின் கட்டுப்பாட்டில் இருந்து முதலாளித்துவக் கட்டுப்பாட்டுக்கு, பட்டினியின் கட்டுப்பாட்டுக்கு, உண்மையில் முதலாளித்துவ அடிமைத் தனத்தின் கட்டுப்பாடான கட்டற்ற கூலிக்கமர்த்தல் எனப்படுவதற்கு மாறிச் செல்வது வரலாற்று ரீதியாக எவ்வளவு எளிதாகத் தோற்றமளித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதற்குக் காரணம், மனித குலம் ஒரு சுரண்டலாளரிடமிருந்து இன்னொரு சுரண்டலாளருக்குக் கடந்து சென்றது; மக்கள் உழைப்பைச் சூறையாடும் சுரண்டும் ஒரு சிறுபான்மை மக்கள் உழைப்பைச் சூறையாடும் சுரண்டும் இன்னொரு சிறுபான்மைக்கு இடம் கொடுத்தது; பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள் முதலாளிகளுக்கு இடமளித்தார்கள்—ஒரு சிறுபான்மை இன்னொரு சிறுபான்மைக்கு இடமளித்தது; அதே போதில் உழைக்கும் சுரண்டப்படும் மக்கள் ஒடுக்கப்பட்டுக் கிடந்தனர். ஒரு சுரண்டலாளரின் கட்டுப்பாட்டிலிருந்து இன்னொரு சுரண்டலாளரின்

கட்டுப்பாட்டுக்கு மாறுவதற்கும் கூட பல ஆண்டுகள், பல பத்தாண்டுகள் பிடித்தன. இந்தக் காலப் பகுதியில் பழைய பிரபுத்துவ-நிலவுடைமையாளர்கள் எல்லாம் பாழாகி அழிந்து வருகிறது எனவும் நாட்டைப் பண்ணை அடிமை முறை இல்லாமல் நிர்வகிக்க முடியாது எனவும் முற்றிலும் உண்மையாகவே கருதினர். அதே போதில் புதிய முதலாளித்துவ அதிபர் ஒவ்வொரு படியிலும் நடைமுறை இடர்ப்பாடுகளை எதிரிட்டு தனது முயற்சியால் பலன் இல்லை என்று அதைக் கைவிடலானுர். இந்த மாறுதல் கட்டத்தின் போதான இடர்ப்பாடுகளுக்கு முக்கியமான சான்று, உருப்படியான நிருபணங்களில் ஒன்று, அந்தச் சமயத்தில் பயன்படுத்துவதற்குச் சிறந்த இயந்திரங்கள் வேண்டும் என்பதால் ருஷ்யா வெளி நாடுகளில் இருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்ததேயாகும்; மேலும், இந்த இயந்திரங்களைக் கையாள ஆட்கள் இருக்கவில்லை, நிர்வாகிகள் இல்லை என்பதும் தெரிய வந்தது. ருஷ்யா முழுதும் அருமையான இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் கிடந்ததை எவரும் பார்க்க முடியும். பழைய பிரபுத்துவக் கட்டுப்பாட்டில் இருந்து புதிய பூர்ஷ்வா-முதலாளித்துவக் கட்டுப்பாட்டுக்கு மாறிச் செல்வது இத்தனை கடினமாக இருந்தது.

எனவே, தோழர்களே, இந்த விவரத்தை இந்தக் கோணத்தில் இருந்து பார்ப்பீர்களானுல், நீங்கள் அந்தப் பேர்வழிகளால், அந்த வர்க்கங்களால், அந்த முதலாளி வர்க்கத்தினரால், அவர்களை அண்டிப் பிழைப்பவர்களால் தவருக வழிநடத்தப்பட மாட்டீர்கள். இவர்களது ஏகப் பணி பீதியை விதைப்பதும் மனச் சோர்வை விதைப்பதும் நமது வேலை முழுதையும் பொருத்தவரையில் பூரண மனச் சோர்வை ஏற்படுத்துவதும் அது பயனற்றது என்று தோன்றும் படிச் செய்வதும் ஆகும். இவர்கள் கட்டுப்பாடின்மை மற்றும் ஊழலின் ஒவ்வொரு சம்பவத்தையும் சுட்டிக் காட்டி அந்தக் காரணத்திற்காகப் புரட்சி பயனற்ற வேலை என்று அதைக் கைவிடுகின்றனர். மக்கள் ஒரு புதிய கட்டுப்பாட்டைப் படைத்து வரும் போது உலகில், வரலாற்றில் ஊழல் இல்லாத கட்டுப்பாடின்மை இல்லாத வேதனை தரும் சோதனைப் படிகள் இல்லாத உண்மையிலேயே மகத்தான தனி ஒரு புரட்சி என்றே இருந்தது போலக் கருதுகின்றனர் போலும். வரலாற்றில் இந்தத் தொடக்கக் கட்டம் முதல் தடவையாக

எய்தப் பெற்றது என்பதையும் ஒரு புதிய கட்டுப்பாடு, தொழிலாளர் கட்டுப்பாடு, தோழமைத் தொடர்பின் கட்டுப் பாடு, சோவியத் கட்டுப்பாடு லட்சக் கணக்கான உழைக்கும் சுரண்டப்படும் மக்களால் உண்மையில் படைத்துருவாக்கப் படுகிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இந்தத் துறையில் துரிதமான வெற்றி ஏற்பட்டுவிடும் என்று நாம் உரிமை பாராட்டவில்லை, எதிர்பார்க்கவும் இல்லை. இந்தப் பணி முழுமையுற ஒரு முழு வரலாற்றுச் சகாப்தம் பிடிக்கும் என்பதை நாம் அறிவோம். இந்த வரலாற்றுச் சகாப்தத்தை நாம் துவக்கி விட்டோம்; இன்னும் முதலாளித்துவ அமைப் பாக இருக்கும் ஒரு நாட்டில் முதலாளித்துவச் சமூகத்தின் கட்டுப்பாட்டை உடைத்து வரும் சகாப்தத்தை நாம் துவக்கி விட்டோம். இந்த அழிக்கும் பணியில் அரசியல் உணர்வுடைய எல்லாத் தொழிலாளர்களும் முற்ற முழுமை யான பாடுபடும் விவசாயிகள் அனைவரும் எல்லா இடங் களிலும் உதவி வருவது கண்டு பெருமை அடைகிறோம். சுரண்டல் மற்றும் அடிமை முறையினை அடிப்படையாக்கிய இந்தக் கட்டுப்பாட்டை மாற்றி அதனிடத்தில் ஒன்றுபட்ட உழைப்பின் புதிய கட்டுப்பாட்டை, கோடிக் கணக்கான மக்கள் தொகை கொண்ட நாடான ருஷ்யா முழுவதன் ஒன்றுபட்ட ஸ்தாபனத் திரட்சியுள்ள தொழிலாளர் மற்றும் உழைக்கும் விவசாயிகளின் கட்டுப்பாட்டை நிலைநாட்ட வேண்டும். இதை மேலிருந்து வரும் நெறிமுறைகள் விளை வாகவன்றி தமது சொந்த ஜீவிய அனுபவத்தின் நெறிமுறை களின் மீது மக்கள் சுயவிருப்பமாகத் தமது சொந்த முன் முயற்சியால் புரிதல் வேண்டும் என்று உணர்ந்து வரும் சகாப்தத்தை நாம் துவங்கி விட்டோம். இந்தப் பணியில் பேரளவான இடர்ப்பாடு உள்ளது. ஆனால் இது ஒரு பயனுள்ள பணியுமாகும். காரணம், இதை நாம் நடைமுறையில் நிறை வேற்றினால் மட்டுமே நாம் குழிதோண்டிப் புதைத்து வரும் முதலாளித்துவச் சமூகத்தின் சவப் பெட்டியின் மீது கடைசி ஆணியை அறைந்தவர்களாவோம். (கரவொலி.)

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கங்கள் 377-386

## மாபெரும் தொடக்கம்

(போர்முனையல்லாத உட்பகுதிகளில்
தொழிலாளர்களின் தீரம்.
"கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்"[42] குறித்து)

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

செஞ்சேனை வீரர்களது தீரத்துக்குப் பல எடுத்துக்காட்டுகள் பத்திரிகைகளில் வெளி வருகின்றன. கல்ச்சாக்கையும் தெனீக்கினையும் மற்றும் நிலப்பிரபுக்கள், முதலாளிகளுடைய பிற படைகளையும் எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் தொழிலாளர்களும் விவசாயிகளும் அஞ்சாநெஞ்சத்தையும் சகிப்புத் தன்மையையும் அடிக்கடி வெளிக்காட்டி விந்தைகள் புரிந்து சோஷலிசப் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாக்கின்றனர். கொரில்லா மனப்பாங்கும் அயர்வும் கட்டுப்பாடின்மையும் சமாளிக்கப்பட்டு வருகின்றன. மெள்ள நடந்தேறும் கடினமான நிகழ்ச்சிப் போக்கே என்றாலும் இது யாவற்றையும் மீறிக் கொண்டு மேலோங்கி வருகிறது. சோஷலிசத்தின் வெற்றிக்காகத் தாமே உணர்வு பூர்வமாக முன்வந்து தியாகங்கள் புரியும் உழைப்பாளி மக்களின் தீரம்—இதுதான் செஞ்சேனையில் நிலவும் தோழமை மிக்கப் புதிய கட்டுப்பாட்டின் அடிப்படை; இந்த அடிப்படை மீதுதான் இந்தச் சேனை புது மலர்ச்சியுற்று வலிமையடைந்து வளர்ந்து வருகிறது.

போர்முனை அல்லாத உட்பகுதிகளில் தொழிலாளர்கள் வெளிக்காட்டும் வீரமும் இதே அளவுக்குக் கவனத்துக்கு உரிய ஒன்றாகும். தொழிலாளர்கள் தாமே சொந்தமாய் முன்முயற்சி எடுத்து ஏற்பாடு செய்திருக்கும் கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள் இச்சந்தர்ப்பத்தில் மெய்யாகவே மகத்தான முக்கியத்துவம் வாய்ந்தவை. இது ஒரு தொடக்கமே என்பது வெளிப்படை; ஆயினும் தனிப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த தொடக்கம் இது. முதலாளி வர்க்கத்தை வீழ்த்திய புரட்சியைக் காட்டிலும் மிகவும் கடினமான, திட்டவட்டமான, தீவிரமான, தீர்மானகரமான ஒரு புரட்சியின் தொடக்

கம் இது; ஏனெனில் இது நம்மிடத்தே இருந்து வரும் பழமை வாத மனப்பாங்கு, கட்டுப்பாடின்மை, குட்டி முதலாளித் துவத் தன்னல நாட்டம் இவற்றின் மீதான வெற்றியா கும்; கேடுகெட்ட முதலாளித்துவம் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் மரபுரிமைச் சொத்தாய் விட்டுச் சென் றிருக்கும் பழக்கவழக்கங்களின் மீதான வெற்றியாகும். இந்த வெற்றி உறுதி செய்து கொள்ளப்படும் போது மட்டும்தான் புதிய சமுதாயக் கட்டுப்பாடு, சோஷலிசக் கட்டுப்பாடு தோற்றுவிக்கப்படும்; அப்பொழுது மட்டுமே முதலாளித்து வத்துக்குத் திரும்பிச் சரிதல் சாத்தியமற்றதாகிவிடும், கம் யூனிசம் மெய்யாகவே வெல்ல முடியாததாகிவிடும்.

''புரட்சிகர வழியிலான வேலை (கம்யூனிஸ்டு சனிக் கிழமை)'' என்ற தலைப்பில் தோழர் அ.ழ. எழுதிய கட்டுரை ஒன்றை **பிராவ்தா**[43] தனது மே 17ஆம் தேதி இதழில் வெளி யிட்டிருந்தது. இந்தக் கட்டுரை அவ்வளவு முக்கியமான தாய் இருப்பதால் இங்கு அதை அப்படியே முழுமையாய்த் தருகின்றோம்:

## புரட்சிகர வழியிலான வேலை
## (கம்யூனிஸ்டு சனிக்கிழமை)

**புரட்சிகர வழியில்** வேலை செய்வது பற்றிய ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் கடிதம் கம்யூனிஸ்டு நிறுவனங்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் சக்தி வாய்ந்த முறையில் தூண்டுதல் அளித்தது. பொது ஆர்வ அலையானது கம்யூனிஸ்டு ரயில்வேத் தொழிலாளர்கள் பலரையும் போர் முனைக்கு இட்டுச் சென்றது; ஆனால் பெரும்பாலான தொழி லாளர்களால் பொறுப்பு மிக்க தமது வேலைகளை விட்டு அக லவோ, புரட்சிகர வழியில் வேலை செய்வதற்கான புதிய வழி முறைகளைக் காணவோ முடியவில்லை. படை திரட்டும் பணி மெதுவாக நடைபெறுவது குறித்தும் சிவப்பு நாடா பரவலாயிருப்பது குறித்தும் ஆங்காங்கிலிருந்து வந்த செய்தி கள் மாஸ்கோ-கஸான் ரயில்வே வட்டாரத்தை இந்த ரயி லமைப்பு எப்படிச் செயல்பட்டு வந்தது என்பதில் கவனம் செலுத்தும்படிச் செய்தன. தொழிலாளர் பற்றாக்குறை கார ணமாகவும் உழைப்பின் குறைவான உற்பத்தித் திறன் காரண மாகவும் அவசரமான ஆர்டர்களும் ரயில் இஞ்சின் ரிப்பேர் வேலைகளும் நிறைவேறாது தடைபட்டுக் கிடந்தது தெரிய வந்தது. மாஸ்கோ-கஸான் ரயில்வே வட்டாரக் கம்யூனிஸ்டு கள், அனுதாபிகள் ஆகியோரது பொதுக் கூட்டம் மே 7ல் நடைபெற்ற போது அதில் கல்ச்சாக்கின் மீது வெற்றி

கிட்டச் செய்வதற்குத் துணை புரிவதில் சொற்களைச் செயலாக்கும் பிரச்சினை எழுப்பப்பட்டது. பின்வரும் தீர்மானம் முன்மொழியப்பட்டது:

''உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழ்நிலை கடுமையாய் இருப்பதைக் கருத்தில் கொண்டு கம்யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் வர்க்கப் பகைவனை விட வலிமை பெறும் பொருட்டு திரும்பவும் தம்மைத் தட்டி எழுப்பிக் கொண்டு தமது ஓய்வு நேரத்தை ஒரு மணி நேரம் குறைத்து, அதாவது தமது வேலை நேரத்தை ஒரு மணி நேரம் அதிகமாக்கி இந்தக் கூடுதல் நேரங்களை ஒன்றுசேர்த்துச் சனிக்கிழமையன்று கூடுதலாய் ஆறு மணி நேரம் உடல் உழைப்பில் ஈடுபட்டு உடனடிப் பயன் தரும் உண்மை மதிப்புகளைப் படைக்க வேண்டும். புரட்சியின் ஆதாயத்துக்காகத் தமது உடல்நலத்தையும் உயிரையும் அர்ப்பணித்துக் கொள்ளக் கம்யூனிஸ்டுகள் தயங்கக் கூடாதாகையால், இவ்வேலை சம்பளமின்றிச் செய்யப்படுதல் வேண்டும். கம்யூனிஸ்டு சனிக்கிழமைகள் வட்டாரமெங்கும் செயலுக்குக் கொண்டுவரப்பட்டு கல்ச்சாக்கின் மீது முழு வெற்றி கிட்டும் வரை தொடர்ந்து அனுசரிக்கப்பட வேண்டும்''.

சிறிதளவு தயங்கிய பிற்பாடு இந்தத் தீர்மானம் ஒருமனதாய் ஏற்கப்பட்டது.

மே 10ஆம் நாள் சனிக்கிழமையன்று பிற்பகல் 6 மணி அளவில் கம்யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் வேலை செய்ய ஆஜராகிப் படை வீரர்களென அணி வகுத்து நின்றனர்; அமளி, கூச்சல் எதுவுமின்றி இவர்கள் போர்மன்களால் பல்வேறு வேலைகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

புரட்சிகர வழியில் வேலை செய்ததன் பலன்கள் கண்கூடு. வேலை இடங்களையும் செய்யப்பட்ட வேலைகளின் தன்மையையும் இங்குள்ள அட்டவணையில் காணலாம்.

செய்யப்பட்ட வேலைகளின் மொத்த மதிப்பு சாதாரணச் சம்பள விகிதங்களின்படி ஐம்பது லட்சம் ரூபிளாகும்; அதிக நேர விகிதங்களின்படி ஐம்பது சதவீதம் கூடுதலாயிருக்கும்.

சரக்குப் பெட்டிகளில் சுமை ஏற்றுவதில் உழைப்பின் உற்பத்தித் திறன் வழக்கமான தொழிலாளர்களுடையதைக் காட்டிலும் 270 சதவீதம் கூடுதலாயிருந்தது. ஏனைய வேலைகளிலும் உழைப்பின் உற்பத்தித் திறன் ஏறத்தாழ இதே போலத்தான் இருந்தது.

ஆள் பற்றுக்குறை காரணமாகவும் சிவப்பு நாடா காரணமாகவும் ஏழு நாட்களிலிருந்து மூன்று மாதங்கள் வரை முடங்கிக் கிடந்த வேலைகள் (அவசரமானவை) செய்யப்பட்டன.

வேலைக் கருவிகள் பழுதாகிக் கிடந்ததையும் (எளிதில் சரி செய்யக் கூடியதே) மீறி இவ்வேலைகள் செய்யப்பட்டன. கருவிகள் பழுதாயிருந்ததால் சில வேலைக் குழுக்கள்

| வேலை இடம் | வேலையின் தன்மை | வேலை செய்தோரின் எண்ணிக்கை | வேலை செய்த நேரம் (மணிகளில்) | | செய்யப்பட்ட வேலை |
|---|---|---|---|---|---|
| | | | ஆள் ஒருவருக்கு | மொத்தம் | |
| மாஸ்கோ. பிரதான ரயில் இஞ்சின் தளங்கள் | ரயில்பாதைப் பொருட்களையும் இஞ்சின் ரிப்பேர் தளவாடங்களையும் ரயில் பெட்டிப் பகுதிகளையும் பெரோவோ — மூரம் — அலதீர் மற்றும் சீஸ்ரன் ஆகிய இடங்களுக்கு அனுப்புவதற்காக வண்டிகளில் ஏற்றுதல் | 48<br>21<br>5 | 5<br>3<br>4 | 240<br>63<br>20 | 7,500 பூடு* சுமை ஏற்றப்பட்டது; 1,800 பூடு சுமை இறக்கப்பட்டது |
| மாஸ்கோ. பயணி வண்டிமனை | ரயில் இஞ்சின்களுக்கான சிக்கல் வாய்ந்த ரிப்பேர்கள் | 26 | 5 | 130 | மொத்தத்தில் 1.5 ரயில் இஞ்சின்கள் ரிப்பேர் செய்யப்பட்டன |
| மாஸ்கோ. வண்டித் தளங்கள் | ரயில் இஞ்சின்களுக்கு நடப்பு ரிப்பேர்கள் | 24 | 6 | 144 | 2 ரயில் இஞ்சின்கள் ரிப்பேர் செய்யப்பட்டன; 4 இஞ்சின்களிலிருந்து ரிப்பேர் ஆக வேண்டிய பகுதிகள் கழற்றப்பட்டன |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாஸ்கோ. ரயில் பெட்டிப் பிரிவு | பயணிப் பெட்டிகளுக்கு நடப்பு ரிப்பேர்கள் | 12 | 6 | 72 | 2 மூன்றும் வகுப்புப் பெட்டிகள் |
| "பெரோவோ." பிரதான ரயில் பெட்டித் தளங்கள் | பெட்டிகளுக்கு ரிப்பேர்கள், சனியன்றும் ஞாயிறன்றும் சில்லறை ரிப்பேர்கள் | 46<br>23 | 5<br>5 | 230<br>115 | 12 கூண்டுப் பெட்டிகளும்<br>2 தட்டைப் பெட்டிகளும் |
| | மொத்தம் | 205 | — | 1,014 | மொத்தத்தில் 4 ரயில் இஞ்சின்களும் 16 பெட்டிகளும் முடிக்கப்பட்டன; 9,300 பூடு ஏற்றப்பட்டது, இறக்கப்பட்டது |

* —ருஷ்ய நிறுத்தல் அளவை; 16.3 கிலோகிராமுக்குச் சமம்.—ப-ர்.

முப்பதிலிருந்து நாற்பது நிமிடங்கள் வரை தடைப்பட்டு நிற்க வேண்டியதாயிற்று.

வேலைக்குப் பொறுப்பாய் விடப்பட்ட நிர்வாகம் வேலையாட்களின் வேகத்துக்கு இசைவாய் அவர்களுக்குப் புதிய வேலைகளைத் தேடித் தர முடியாமல் திணறிற்று. வர்க்க உணர்வற்ற முனைப்பில்லாத் தொழிலாளர்கள் ஒரு வாரத்தில் செய்யும்படியான வேலை இந்தக் கம்யூனிஸ்டு சனிக்கிழமையன்று செய்யப்பட்டது என வயது முதிர்ந்த போர்மன் ஒருவர் கூறியது ஒருவேளை சிறிது மிகையானதாக இருக்கலாம்.

கம்யூனிஸ்டுகளல்லாதோர், சோவியத் அரசாங்கத்தை உளப் பூர்வமாய் ஆதரிப்போர் பலரும் இந்த வேலையில் பங்கு கொண்டதாலும் மேலும் கூடுதலானோர் இனிவரும் சனிக்கிழமைகளில் பங்கு கொள்வாரென எதிர்பார்க்கப்படுவதாலும் மற்றும் மாஸ்கோ-கஸான் ரயில்வேயின் கம்யூனிஸ்டு ரயில்வேத் தொழிலாளர்களது உதாரணத்தை ஏனைய பல வட்டாரங்களும் பின்பற்ற விரும்புவதாலும் இவ்வேலையின் ஒழுங்கமைப்பு குறித்து ஆங்காங்கிருந்து கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிய வருவதை மேலும் விவரமாய் எடுத்துரைக்க வேண்டும்.

வேலையில் பங்கு கொண்டோரில் சுமார் பத்து சதவீதத்தினர் அவ்விடங்களில் நிரந்தரமாய் வேலைக்கு அமர்த்தப்பட்ட கம்யூனிஸ்டுகள். ஏனையோர் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அல்லது தேர்தல் மூலம் நிரப்பப்படும் பதவிகள் வகிப்போர்: ரயில் பாதையின் கமிசார் முதல் தனிப்பட்ட தொழில் நிலையங்களின் மற்றும் தொழிற் சங்கங்களின் கமிசார்களும் தலைமை அலுவலக மற்றும் போக்குவரத்துத் துறை மக்கள் கமிசாரகச் சிப்பந்திகளும் வரை.

வேலையின் போது வெளிப்படுத்தப்பட்ட ஆர்வமும் கூட்டு மனோபாவமும் அதியற்புதமானவை. தொழிலாளர்களும் குமாஸ்தாக்களும் தலைமை அலுவலகச் சிப்பந்திகளும் பயணி இஞ்சின் ஒன்றின் நாற்பது பூடு எடையுள்ள சக்கரக் கட்டினை ஒரு முறைகூட சபிக்கவோ வாதாடவோ செய்யாமல் தாங்கிப் பிடித்து, பிரயாசை மிக்க எறும்புகளைப் போலப் பாடுபட்டு அதை உருட்டிச் சென்று உரிய இடத்தில் பொருத்திய போது இந்தக் கூட்டு முயற்சியைக் கண்டு உள்ளத்தில் இன்பக் களிப்பு ஊற்றெடுத்தது, தொழிலாளி வர்க்கம் வெற்றி பெறுவது திண்ணமென்ற திட நம்பிக்கை மேலும் உறுதியாகியது. வெற்றிகரத் தொழிலாளர்களைச் சர்வதேசக் கொள்ளைக்காரர்களால் நசுக்க முடியாது; உள்நாட்டுச் சீர்குலைவாளர்களால் ஒரு நாளும் கல்ச்சாக்கைப் பார்க்க முடியாது.

வேலை முடிவடைந்ததும் அங்கு இருந்தோர் என்றும் காணாத அரியதொரு காட்சியைக் கண்ணுற்றனர்: சுமார்

நூறு கம்யூனிஸ்டுகள், களைத்துப் போய் ஓய்ந்தவர்களே ஆயினும், கண்களில் மகிழ்ச்சியின் ஒளி பளிச்சிட ''சர்வ தேசியக் கீதம்'' பாடி, புனித இசை முழக்கத்தால் தமது வெற்றியை வாழ்த்தினர். இந்த வெற்றிக் கீதத்தின் வெற்றி முழக்கம் சுவர்களுக்கு மேலே உயர்ந்தெழுந்து தொழிலாளி வர்க்க மாஸ்கோ மாநகரெங்கும் வீசி, குளத்திலே விழுந்த கல்லால் தோன்றும் அலை போல தொழிலாளி வர்க்க ருஷ்யா வெங்கும் பரவி, களைப்புற்றோரையும் ஓய்ந்தோரையும் குலுக்கி எழுப்புமென நினைக்கத் தோன்றிற்று.

அ. ழ.

இந்த அரிய உதாரணத்தை ''நேசப் போட்டிக்கான முன்மாதிரியாய்க் கொள்ளத்தக்க உதாரணம்'' என்று மதிப்பீடு செய்து தோழர் ந. ர. மே 20ஆம் தேதி **பிராவ்தாவில்** இதே தலைப்பில் எழுதினார்:

''கம்யூனிஸ்டுகள் இது போல வேலை செய்வது அரிய நிகழ்ச்சியல்ல. மின்விசை நிலையம் ஒன்றிலும் பல ரயில் வேக்களிலும் இது போன்ற நிகழ்ச்சிகள் நடந்திருப்பது எனக்குத் தெரியும். நிக்கலாயெவ்ஸ்கயா ரயில்வேயில் திருப்புத் தளக் குழியினுள் விழுந்துவிட்ட ரயில் இஞ்சினைத் தூக்குவதற்காகக் கம்யூனிஸ்டுகள் வேலை நேரத்துக்குப் பிற்பாடு தொடர்ந்து சில இரவுகள் வேலை செய்தனர். சேவெர்னயா ரயில்வேயில் கம்யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் குளிர் காலத்தில் ரயில் பாதையிலிருந்து வெண்பனியை ஒதுக்குவதற்காக ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை செய்தனர்; சரக்கு நிலையங்கள் பலவற்றில் கம்யூனிஸ்டுக் குழுக்கள் திருட்டைத் தடுப்பதற்காக இரவில் ரோந்து சென்று வருகின்றன. ஆனால் இவ்வேலைகள் எல்லாம் முறையாய் இல்லாமல் விட்டுவிட்டு எப்பொழுதாவதுதான் நடைபெற்று வந்தன. மாஸ்கோ-கஸான் ரயில் பாதையைச் சேர்ந்த தோழர்கள் இவற்றை முறையாகவும் நிரந்தரமாகவும் நடைபெறும் வேலைகளாக்குகின்றனர்; இது புதுமையாகும். 'கல்ச்சாக்கின் மீது முழு வெற்றி கிட்டும் வரை' என்பதாய் அவர்கள் தமது தீர்மானத்தில் கூறுகிறார்கள்; அவர்களுடைய வேலையின் முக்கியத்துவம் இதில்தான் அடங்கியிருக்கிறது. போர்க் காலம் நீடிக்கும் வரையில் ஒவ்வொரு கம்யூனிஸ்டுக்கும் அனுதாபிக்கும் தினசரி வேலை நேரத்தை ஒரு மணி கூடுதலாக்குகின்றனர்; அதே போதில் அவர்களுடைய உழைப்பின் உற்பத்தித் திறனும் முன்மாதிரியாய் இருக்கிறது.

''இந்த உதாரணத்தைப் பலர் பின்பற்றியுள்ளனர், இனியும் பின்பற்றவே செய்வர். அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேயில் கம்யூனிஸ்டுகள், அனுதாபிகளது பொதுக் கூட்டம் இராணுவ நிலைமையையும் மாஸ்கோ-கஸான் ரயில்

வேயைச் சேர்ந்த தோழர்கள் ஏற்ற தீர்மானத்தையும் விவாதித்த பின், 1) அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேயில் கம்யூனிஸ்டுகளுக்கும் அனுதாபிகளுக்கும் 'சுபோத்னிக்குகளைத்' தொடங்குவதென்றும் மே 17ல் முதலாவது சுபோத்னிக்குக்கு ஏற்பாடு செய்வதென்றும் 2) எப்படி வேலை செய்ய வேண்டுமென்றும் தற்போது உள்ள சாமான்களையும் கருவிகளையும் உணவுப் பொருட்களையும் கொண்டு உண்மையில் என்னவெல்லாம் செய்ய முடியுமெனத் தொழிலாளர்களுக்குக் காட்டும்படியான போற்றத்தக்க முன்மாதிரி வேலைக் குழுக்களில் கம்யூனிஸ்டுகளையும் அனுதாபிகளையும் ஒழுங்கமையச் செய்வதென்றும் முடிவு செய்தது.

''மாஸ்கோ-கஸான் தோழர்கள், தமது உதாரணம் மக்களை வெகுவாய்க் கவர்ந்துள்ளதாகவும் அடுத்த சனிக்கிழமையன்று கட்சி உறுப்பினரல்லாத தொழிலாளர்கள் பெரிய அளவில் வேலைக்கு வருவார்களெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறுகிறார்கள். இந்த வரிகள் எழுதப்படும் இந்நேரத்தில் அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேத் தொழிலகங்களில் கம்யூனிஸ்டுகள் வேலை நேரத்துக்குப் பிற்பாடு இன்னும் வேலை செய்யத் தொடங்கியாகவில்லை. ஆனால் அவர்கள் இவ்வாறு வேலை செய்யப் போவது பற்றிய வதந்தி பரவியதும் கட்சி உறுப்பினரல்லாத தொழிலாளர்களில் பெருந்திரளானோர் ஆர்த்தெழுந்து விட்டனர். 'நேற்று எங்களுக்குத் தெரியாமற்போய் விட்டது, இல்லையேல் நாங்களும் வேலை செய்திருப்போம்!'; 'அடுத்த சனியன்று நிச்சயம் நான் வருவேன்' என்பது போன்ற பேச்சுக்களை நாற்புறமிருந்தும் கேட்க முடிந்தது. இத்தகைய வேலையால் விளைந்திருக்கும் மன எழுச்சி மகத்தானதாகும்.

''மாஸ்கோ-கஸான் தோழர்களது உதாரணத்தை உட்பகுதிகளைச் சேர்ந்த எல்லாக் கம்யூனிஸ்டுக் குழுக்களும்—மாஸ்கோ சந்திப்பிலுள்ளவை மட்டுமின்றி, ருஷ்யாவிலுள்ள கட்சி நிறுவனம் அனைத்தும்—முன்னுதாரணமாய்க் கொண்டு செயல்பட வேண்டும். கிராமப் பகுதிகளிலுங்கூட கம்யூனிஸ்டுக் குழுக்கள் முதல் வேலையாய்ச் செஞ்சேனை வீரர்களுடைய நிலங்களைப் பயிரிட முற்பட வேண்டும்; இவ்விதம் அவை இந்த வீரர்களுடைய குடும்பங்களுக்கு உதவ வேண்டும்.

''மாஸ்கோ-கஸான் ரயில் பாதையைச் சேர்ந்த தோழர்கள் 'சர்வதேசியக் கீதம்' பாடித் தமது முதலாவது கம்யூனிஸ்டு சுபோத்னிக்கை முடித்தனர். ருஷ்யா பூராவிலும் கம்யூனிஸ்டு நிறுவனங்கள் யாவும் இந்த உதாரணத்தைப் பின்பற்றி முரணின்றி இதைச் செயல் படுத்துமாயின், ருஷ்யாவின் சோவியத் குடியரசு வரப் போகும் கடினமான மாதங்களைக் குடியரசின் உழைப்பாளி மக்கள் அனைவரும் 'சர்வதேசியக் கீதம்' பாடி எழுப்பும் சக்தி மிக்க

*இசை நாதத்துக்கிடையே வெற்றிகரமாய்ச் சமாளித்து விடும்....*

*''கம்யூனிஸ்டுத் தோழர்களே, வேலையில் இறங்குங் கள்!''*

*1919 மே 23ல்* பிராவ்தா *பின்வரும் செய்தியை அறி வித்தது:*

''அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேயில் முதலாவது கம்யூ னிஸ்டு 'சுபோத்னிக்' மே 17ல் நடைபெற்றது. அவர்களுடைய பொதுக் கூட்டத்தில் ஏற்கப்பட்ட தீர்மானத்துக்கு ஏற்ப தொண்ணூற்று எட்டுக் கம்யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் வேலை நேரத்துக்குப் பிற்பாடு சம்பளமின்றி ஐந்து மணி நேரம் வேலை செய்தனர். அவர்கள் இதற்குப் பிரதியாய்ப் பெற்றது தங்களது பணத்துக்காக இரண்டாவது தரம் சாப்பாடும், உடல் உழைப்பாளர்களானதால் தமது சாப்பாட்டுடன் கூட அரை ராத்தல் ரொட்டியும் விலைக்கு வாங்கிக் கொள்ளும் உரிமையும்தான்.''

*இந்த வேலை சரியானபடி தயாரிப்பு செய்யப்படவில்லை, ஒழுங்கமைக்கப்படவில்லை என்ற போதிலும்,* உழைப்பின் உற்பத்தித் திறன் வழக்கமான அளவைக் காட்டிலும் இரண்டிலிருந்து மூன்று மடங்கு வரை கூடுதலாய் இருந்தது.

*இதோ சில உதாரணங்கள்:*

*ஐந்து கடைசல் தொழிலாளர்கள் நான்கு மணி நேரத்தில் எண்பது அச்சு முனைகளைக் கடைந்தனர். உற்பத்தித் திறன் வழக்கமானதைப் போல் 213 சதவீதமாகும்.*

*தேர்ச்சி பெறாத இருபது தொழிலாளர்கள் மொத்தம் 600 பூடு எடையுள்ள சேதாரப் பொருட்களும் ஒவ்வொன்றும் 3 ½ பூடு எடை கொண்ட ரயில் வண்டித் தகட்டுக்கு வில்கள் எழுபதுமாய், மொத்தம் 850 பூடுகளைச் சேகரித்து வைத்தனர். உற்பத்தித் திறன் வழக்கமானதைப் போல் 300 சதவீதம்.*

*''சாதாரணமாய்த் தமது வேலை சலிப்பூட்டுவதாயும் அலுக்கச் செய்வதாயும் இருக்கும்; ஆனால் இங்கே தாம் திட சித்தத்துடன் ஆர்வமாய் வேலை செய்தோம்; இதுவே இந்த நிலைமைக்குக் காரணம் என்று தோழர்கள் விளக்கம் கூறுகிறார்கள். ஆனால் இனி அவர்கள் முறையான வேலை நேரத்தின் போது கம்யூனிஸ்டு சுபோத்னிக்கில் செய்ததை விடக் குறைவான அளவு வேலை செய்ய வெட்கப்படுவார்கள்.''*

''கட்சி உறுப்பினரல்லாத தொழிலாளர்கள் பலரும் தற்போது சுபோத்னிக்குகளில் பங்கு கொள்ள விரும்புவதாய்க் கூறுகிறார்கள். இரயில் இஞ்சின் ஊழியர்கள் சுபோத்னிக்கின் போது ரயில் இஞ்சினை 'இடுகாட்டிலிருந்து' வெளியே எடுத்துப் பழுது பார்த்துத் திரும்பவும் ஓட வைக்கத் தாமே மனமுவந்து முன்வருகிறார்கள்.

''இது போன்ற சுபோத்னிக்குகளுக்கு வியாஸ்மா ரயில் பாதைப் பிரிவிலும் ஏற்பாடு செய்யப்படும் என்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.''

இந்தக் கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளில் வேலை எப்படி நடைபெறுகிறது என்பதை ஜூன் 7ஆம் தேதி **பிராவ்தாவில்** தோழர் அ. தியாச்சென்கோ ''சுபோத்னிக் தொழிலாளியின் குறிப்புகள்'' என்ற தலைப்பில் தாம் எழுதும் கட்டுரையில் விவரிக்கிறார். இக்கட்டுரையின் பிரதான வாசகங்களை மேற்கோளாய்த் தருகின்றோம்:

''கட்சியின் ரயில்வே வட்டாரக் கமிட்டியின் முடிவுப்படி ஏற்பாடு செய்யப்பட்ட சுபோத்னிக்கில் எங்களுக்குரிய 'பங்கை' ஆற்ற ஒரு தோழரும் நானும் மிக்க மகிழ்ச்சியுடன் சென்றிருந்தோம். சிறிது நேரத்துக்கு, சில மணிகளுக்கு நான் என் தலைக்கு ஓய்வும் என் தசைநார்களுக்குக் கொஞ்சம் பயிற்சியும் தர விரும்பினேன்.... ரயில்வேத் தச்சுத் தொழிலகத்துக்கு எங்களை அனுப்பி வைத்தனர். நாங்கள் அங்கே சென்றதும் எங்கள் ஆட்களில் பலரும் இருக்கக் கண்டோம். முகமன் கூறிக் கொண்டு சற்று நேரம் பேசிய பின் எங்கள் ஆள் பலத்தைக் கணக்கிட்டோம். முப்பது பேர் இருக்கிறோம் என்பது தெரிந்தது.... எங்கள் முன்னே 'பூதம்' போன்ற ஒன்று கிடந்தது—அறுநூறு அல்லது எழுநூறு பூடுகளுக்குக் குறையாத எடையுள்ள நீராவிக் கொதிகலன் அது. நாங்கள் அதை 'நகர்த்திச் சென்றாக' வேண்டும், அதாவது கால் அல்லது மூன்றில் ஒரு வெர்ஸ்டா* தொலைவுக்கு உருட்டிச் சென்று அதன் மூலத் தளத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்தாக வேண்டும். எங்களுக்குச் சந்தேகம் எழத் தொடங்கிற்று.... ஆயினும் வேலையில் இறங்கினோம். சில தோழர்கள் கொதிகலனுக்கு அடியில் மர உருளைகளை வைத்தனர்; கொதிகலனில் இரு கயிறுகளைக் கட்டினர். நாங்கள் இழுக்க முற்பட்டோம்.... மனமின்றி கொதிகலன் அசைந்து கொடுத்தது, ஆனால் முடிவில் மெள்ள நகர்ந்தது. நாங்கள் ஆனந்தம் அடைந்தோம். நாங்கள் அதிகம் பேர்

*—ருஷ்ய நீட்டல் அளவை; 1.06 கிலோமீட்டருக்குச் சமம்.—ப-ர்.

இல்லே, மிகச் சிலர்தான்.... எண்ணிக்கையில் எங்களைப் போல் மூன்று மடங்கிருந்த கம்யூனிஸ்டுகளல்லாத தொழிலாளர்கள் ஏறத்தாழ இரு வாரங்களாய்ச் செய்த முயற்சிகளை இக்கொதிகலன் எதிர்த்து நின்றது. நாங்கள் கை வைக்கும் வரையில் எதனுலும் அதை அசைக்க முடியவில்லே.... ஒரு மணி நேரம் நாங்கள் வேலே செய்தோம்; பிரயாசையோடும் இசைவாகவும் எங்கள் 'போர்மனின்' ஆணைக்கு —'ஒன்று, இரண்டு, மூன்று'—ஏற்பவும் வேலே செய்தோம். கொதிகலன் உருண்டு நகர்ந்த வண்ணம் இருந்தது. திடுமென குழப்பமாகி விட்டது. எங்கள் தோழர்களில் பலர் விநோதமான முறையில் தரையிலே விழுந்து புரண்டனர். கயிறு 'அவர்களுக்குத் துரோகம் புரிந்து விட்டது'.... கணப்பொழுது தாமதிக்க வேண்டியதாயிற்று. மேலும் தடியான கயிறு அவசரமாய்த் தயார் செய்யப்பட்டது.... மாலேப் பொழுது. இருட்டாகி வந்தது. இன்னும் ஒரு சிறிய மேட்டைக் கடந்து சென்ருல் போதும் எங்கள் வேலே முடிவுற்றுவிடும். எங்களுக்குக் கை வலித்தது; உள்ளங்கையில் எரிச்சல் எடுத்தது; உடம்பு கொதித்தது; முழு பலத்தையும் கொண்டு இழுத்தோம்—முன்னேற்றம் கண்டு வந்தோம். 'நிர்வாகத்தினர்' பார்த்துக் கொண்டு நின்றனர். எங்களுடைய வெற்றியைக் கண்டு ஓரளவு வெட்கமுற்ற அவர்கள் கயிற்றைப் பற்றிக் கொண்டனர்: 'உதவுங்கள்! முன்னரே முன்வந்திருக்க வேண்டும்!' எங்களுடைய வேலேயைச் செஞ்சேனே வீரன் ஒருவன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கையில் அக்கார்டியன் வாத்தியம் இருந்தது. மனத்துள் அவன் நினைத்தது என்ன? யார் இவர்கள்? சனிக்கிழமை, எல்லோரும் வீட்டிலே இருக்கிருர்கள், இவர்கள் மட்டும் வேலே செய்யக் காரணம் என்ன? அவனுடைய இந்தப் புதிருக்கு விடையாக 'தோழனே, எங்களுக்குக் குதூகலப் பாட்டு ஒன்று வாசி நீ; நாங்கள் வேலேக்குப் புதியவர்களல்ல, மெய்யான கம்யூனிஸ்டுகள்; எங்கள் கை பட்டதும் வேலே எவ்வளவு வேகமாய் நடந்தேறுகிறது பார்—நாங்கள் சோம்பி நிற்கவில்லே, பலம் கொண்ட மட்டும் இழுக்கிருேம்!' என்று அவனிடம் கூறினேன். இதைக் கேட்டதும் செஞ்சேனே வீரன் தனது அக்கார்டியனே ஜாக்கிரதையாய்த் தரையில் வைத்து விட்டு வேகமாய் வந்து கயிற்று முனேயைப் பற்றிக் கொண்டான்....

''திடீரெனத் தோழர் உ. தொழிலாளர் பாடலான 'துபீனுஷ்காவைப்' பாடத் தொடங்கினுர். சிறப்பான உச்ச ஸ்தாயியில் 'ஆங்கிலிச்சானின் முத்ரெத்ஸ்!' என்று பாடினுர். அவருடன் நாங்களும் சேர்ந்து கொண்டு இந்த உழைப்புக் கீதத்தின் பல்லவியைப் பாடினேம்: 'ஏ, துபீனுஷ்கா, ஊஹ்னெம், பத்யோர்னிம், பத்யோர்னிம்....'

''இத்தகைய வேலே செய்து பழக்கமில்லாதவர்கள்

நாங்கள், தசைநார்கள் அயர்ந்து விட்டன; தோள்களும் முதுகும் வலித்தன.... ஆனால் மறு தினம் விடுமுறை நாள், எங்கள் ஓய்வு நாள். வேண்டிய மட்டும் தூங்கலாம். இலக்கை நெருங்கி வந்து விட்டோம்; சற்றே தயங்கிவிட்டுப் 'பூதம்' போன்ற எங்கள் கொதிகலன் உருண்டு அனேகமாய் அதன் தளத்தை வந்து அடைந்து விட்டது. 'அடியில் பலகைகளைக் கொடுத்து அதைத் தளத்தின் மீது உயர்த்துங்கள்; பல காலமாய் எதிர்பார்க்கப்பட்ட வேலையை அது செய்யட்டும்!' கூட்டமாய் நாங்கள் ஸ்தலக் கட்சிக் குழுவின் 'மன்ற அறைக்குச்' சென்றோம். அறையில் விளக்கொளி பிரகாசமாய் இருந்தது; சுவரொட்டிகளால் சுவர்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன; சுற்றிலும் அறையினுள் துப்பாக்கிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. உணர்ச்சி பொங்க 'சர்வதேசியக் கீதம்' பாடிவிட்டு நாங்கள் ஒரு கோப்பை தேநீரும் 'ரம்மும்' குடித்தோம். ரொட்டியும் கிடைத்தது. ஸ்தல தோழர்கள் எங்களுக்கு அளித்த இந்த விருந்து பிரயாசை மிக்க எங்களுடைய உழைப்புக்குப் பின் மிகவும் இனிமையாய் இருந்தது. எங்கள் தோழர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு அணி வகுத்து நடக்கலானோம். புரட்சிப் பாட்டுகளின் இன்னிசை இரவின் நிசப்தத்தில் உறங்கிய தெருக்களில் எதிரொலித்தது. இந்த இசையின் தாளத்துக்கு ஒப்ப நடைபோட்டோம். 'தோழர்களே, தாரைகள் ஒலிக்கின்றன' பாட்டையும் 'பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் பதறுகின்ற மனிதர்கள், எழுங்கள்' என்னும் அகிலத்தின், உழைப்பின் பாட்டையும் பாடிச் சென்றோம்.

''ஒரு வாரம் சென்றது. எங்கள் கைகளும் தோள்களும் திரும்பவும் சரியாயின. மற்றொரு 'சுபோத்னிக்குக்குச்' சென்றோம். இம்முறை ஒன்பது வெர்ஸ்டாக்களுக்கு அப்பால் சரக்கு ரயில் பெட்டிகளைப் பழுது பார்க்கச் சென்றோம். பெரோவோதான் நாங்கள் போய்ச் சேர வேண்டிய இடம். தோழர்கள் 'அமெரிக்கக்' கூண்டுப் பெட்டியின் கூரை மீது ஏறிக்கொண்டு 'சர்வதேசியக் கீதத்தை' நன்றாகவும் முழு ஆர்வத்தோடும் பாடினர். இரயிலில் சென்றவர்கள் வியப்புற்றவர்களாய் எங்கள் பாட்டைக் கேட்டனர். இரயில் சக்கரங்கள் தாளம் தட்டின. கூரை மீது ஏறத் தவறியோர் 'எதற்கும் அஞ்சாத' பயணிகளாய்ப் படிகளிலே தொத்திக் கொண்டனர். ரயில் நின்றது. இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. நீண்ட தளத்தின் வழியே சென்றோம். கமிசாரான தோழர் கி. எங்களை ஆர்வமுடன் வரவேற்றார்:

'' 'வேலை நிறைய இருக்கிறது, ஆட்கள்தான் குறைவு! நாங்கள் முப்பது பேரே இருந்தோம். ஆறு மணி நேரத்தில் பதின்மூன்று சரக்குப் பெட்டிகளுக்கு முறையான ரிப்பேர் வேலைகளை முடித்தாக வேண்டும். இரட்டைச் சக்கரங்கள் ஏற்கெனவே குறியிடப்பட்டு இதோ இருக்கின்றன. காலிச்

சரக்குப் பெட்டிகள் மட்டுமின்றி நிரப்பப்பட்ட டாங்கிப் பெட்டியும் ஒன்று இருக்கிறது....இருக்கட்டும் பரவாயில்லை! தோழர்களே, வாங்க, 'ஒரு கை பார்த்து விடலாம்'!'

''வேலை மும்முரமாய் நடந்தேறியது. ஐந்து தோழர்களும் நானும் கடப்பாரைகளைக் கொண்டு வேலை செய்தோம். அவை ஒவ்வொன்றும் அறுபதிலிருந்து எழுபது பூடு எடை கொண்ட இரட்டைச் சக்கரங்கள். எங்கள் தோள்கள், இரண்டு தூக்கிப் பொறிகள் இவற்றின் வலிவுக்கு பணிந்து, 'போர்மனின்' மேற்பார்வையில், அவை மிகக் கச்சிதமாய் ஒரு தண்டவாளப் பாதையிலிருந்து உயர்ந்தெழுந்து மற்றொன்றில் அமர்ந்தன. ஒரு ஜோடி ஓடி மறைந்ததும் மற்றொன்று உரிய இடத்துக்கு உருண்டு வந்தது.... முடிவில் யாவும் அவற்றுக்கான இடங்களை வந்தடைந்தன. தேய்ந்து போன இந்தப் பழைய சக்கரங்களை வேகமாய் நாங்கள் ஒரு கொட்டகையினுள் அனுப்பி வைத்தோம்.... ஒன்று, இரண்டு, மூன்று—இரும்பாலான சுழலும் தூக்கிப் பொறியால் இமைப் பொழுதில் அவை தூக்கப்பட்டுத் தண்டவாளங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. அங்கே இருட்டில் சம்மட்டி அடிகள் வேகமாய் விழக் கேட்டோம். சுறுசுறுப்பான தேனீக்கள் போலத் தோழர்கள் வேலை செய்தனர்; பழுதான சரக்குப் பெட்டிகளைச் சரிப்படுத்தினர். தோழர் கமிசாரும் நாங்களும் மகிழ்ச்சிப் பூரிப்பில் திளைக்கச் சிலர் தச்சு வேலைகள் செய்தனர், வேறு சிலர் வர்ணம் பூசினர், மற்றும் சிலர் கூரைகளைச் செப்பனிட்டனர். கொல்லுப் பட்டறையாளர்கள் எங்களையும் உதவிக்கு வருமாறு அழைத்தனர். நடமாடும் பட்டறை உலை ஒன்றில் இணைப்புக் கொக்கியைக் கொண்ட இரும்புத் தண்டு பழுக்கக் காய்ந்து ஒளிர்ந்து கொண்டிருந்தது. கவனக் குறைவாய் ரயில் பெட்டிகள் தள்ளப்பட்டதால் தண்டு வளைந்து நெளிந்து போயிருந்தது. வெண் சுடர்கள் சிதற அது பட்டறைக் கல் மீது வைக்கப்பட்டது. அனுபவமிக்கக் கொல்லுப் பட்டறையாளரின் மேற்பார்வையில் எங்களுடைய குறி தவறாத சம்மட்டி அடிகள் அதன் கோணலைச் சரி செய்தன. பழுக்கச் சிவந்து, பொறிகள் பறந்த நிலையிலேயே அதை நாங்கள் தோளில் சுமந்து அவசரமாய் அதற்குரிய இடத்துக்கு எடுத்துச் சென்றோம். தண்டினை அதற்குரிய பொருத்துக் குழியில் வைத்து அழுத்தினோம். இரண்டொரு சம்மட்டி அடிகள் விழுந்ததும் கெட்டியாய்ப் பொருத்தப்பட்டு விட்டது. சரக்குப் பெட்டிக்கு அடியில் தவழ்ந்து சென்றோம். பெட்டிகளின் இணைப்பு அமைப்பு தோற்றத்துக்குத் தெரிவது போல அவ்வளவு சுலபமானதல்ல. ரிவெட்டுகளையும் சுருள்வில்களையும் கொண்ட பல வகையான கட்டமைப்புகளும் இருந்தன....

''வேலைகள் மும்முரமாய் நடைபெற்றன. இரவு ஆரம்பித்து விட்டது. தீப்பந்தங்கள் முன்னிலும் பிரகாசமாய்

எரிவதாய்த் தோன்றின. திரும்புவதற்குரிய நேரம் நெருங்கி விட்டது. சில தோழர்கள் சக்கரக் கட்டுகள் மீது சாய்ந்து கொண்டு சூடான தேநீர் அருந்தியபடி 'ஓய்வு' எடுத்துக் கொண்டனர். மே மாத இரவு குளுமையாய் இருந்தது. பளிச் சிடும் அரிவாளைப் போல விண்ணிலே பிறைச் சந்திரன் எழி லுருவாய் ஒளிர்ந்தது. யாவரும் தமாஷாய்ச் சிரித்துப்பேசிக் கொண்டிருந்தனர்.

'' 'தோழர் கி., போதும், பதின்மூன்று சரக்குப் பெட்டி கள் போதும்!'

''ஆனால் தோழர் கி. திருப்தியடையவில்லை.

''நாங்கள் தேநீர் குடித்துவிட்டு வெற்றிக் கீதங்கள் பாடியவாறு கதவை நோக்கி நடைபோட்டோம்....''

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளுக்கான'' இயக்கம் மாஸ் கோவுடன் நின்றுவிடவில்லை. ஜூன் 6ஆம் தேதி **பிராவ்தா** பின்வரும் தகவலை அறிவித்தது:

''மே 31, திவேரில் முதலாவது கம்யூனிஸ்டு சுபோத்னிக் நடைபெற்றது. நூற்று இருபத்தெட்டு கம்யூனிஸ்டுகள் ரயில் வேயில் வேலை செய்தனர். மூன்றரை மணி நேரத்தில் அவர் கள் பதினான்கு பெட்டிகளில் சரக்கு ஏற்றவும் இறக்கவும் செய்தனர்; மூன்று ரயில் இஞ்சின்களைப் பழுது பார்த்தனர்; பத்து சமேன்* விறகு உடைத்தனர்; மற்றும் பல வேலைகள் செய்தனர். தேர்ச்சி வாய்ந்த கம்யூனிஸ்டுத் தொழிலாளர் களுடைய உழைப்பின் உற்பத்தித் திறன் வழக்கத்தை விட பதின்மூன்று மடங்கு அதிகமாயிருந்தது.''

திரும்பவும் ஜூன் 8ல் **பிராவ்தாவில்** படித்தோம்:

**கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்**

''சராத்தவ், ஜூன் 5. இங்கே கம்யூனிஸ்டு ரயில்வேத் தொழிலாளர்கள் தமது மாஸ்கோ தோழர்களுடைய வேண்டு கோளுக்கு ஏற்ப, கட்சியின் பொதுக் கூட்டத்தில், தேசப் பொருளாதாரத்துக்கு உதவும் பொருட்டு சனிக்கிழமை களில் சம்பளமின்றி ஐந்து மணி நேரம் வேலை செய்வதெனத் தீர்மானம் செய்தனர்.''

* * *

கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளைப் பற்றி நான் முழு அளவில் மிகவும் விவரமாய்த் தகவல் அளித்திருக்கிறேன்.

---

*—ருஷ்ய நீட்டல் அளவை; 2.13 மீட்டருக்குச் சமம். —ப-ர்.

ஏனெனில் இந்த இயக்கத்தில் சந்தேகத்துக்கு இடமின்றி கம்யூனிச நிர்மாணத்தின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றைக் காண்கிறோம். இதில் நமது பத்திரிகைகள் போதிய கவனம் செலுத்தவில்லை. நாம் எல்லோருமே இன்னமும் இதன் முக்கியத்துவத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை.

அரசியல் அதிர்வெடிகள் குறையட்டும், கம்யூனிச நிர்மாணத்தின் எளியவையே ஆயினும் உயிர் சக்தி கொண்ட உண்மைகளில், நடைமுறை வாழ்விலிருந்து எடுக்கப்பட்டவையும் அதனுல் சோதிக்கப்பட்டவையுமான இவ்வுண்மைகளில் செலுத்தப்படும் கவனம் அதிகமாகட்டும்—இதுவே நாம் எல்லோரும், நமது எழுத்தாளர்களும் கிளர்ச்சியாளர்களும் பிரசாரகர்களும் நிறுவன ஒழுங்கமைப்பாளர்களும் இன்ன பிறரும் ஓயாது திரும்பத் திரும்பக் கூற வேண்டிய கோஷமாகும்.

பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பிறகு முதலாவது கட்டத்தில் நாம் முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பை அடக்குவதென்னும் சுரண்டலாளர்களைத் தோற்கடிப்பதென்னும் அவர்களுடைய சதியை (பெத்ரோகிராதைச் சரணடையச் செய்வதற்காக ''அடிமையுடைமையாளர்கள்'' நடத்தியதை ஒத்த, கறுப்பு நூற்றுவர்[44], காடேட்டுகள் ஆகியோர் முதல் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்[45] வரையிலான அனைவரும் சம்பந்தப்பட்டிருந்தார்களே அதை ஒத்த சதியை) நசுக்குவதென்னும் பிரதானமான, அடிப்படையான பணியில் முக்கியமாய் ஈடுபட வேண்டியிருந்தது; இது இயற்கையே, தவிர்க்க முடியாததே. ஆனுல் இப்பணியுடன் கூடவே மற்றொரு பணியும் அதே போல தவிர்க்க முடியாமலும் காலம் செல்லச் செல்ல மேன்மேலும் அத்தியாவசியமாகவும் முன்னிலைக்கு வருகிறது. நேரடியாய்க் கம்யூனிசத்தை நிர்மாணம் செய்யும், புதிய பொருளாதார உறவுகளை, ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் மிகவும் முக்கியத்துவமுள்ள பணி அது.

பல சந்தர்ப்பங்களில் நான் சுட்டிக் காட்டியிருப்பது போல, ஏனைய பல சந்தர்ப்பங்களுடன்கூட மார்ச் 12ல் பெத்ரோகிராத் சோவியத்தின் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் நான் சுட்டிக் காட்டியது போல, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பது சுரண்டலாளர்களுக்கு எதிரான பலாத்காரப் பிரயோகம் மட்டுமல்ல, பிரதான

மாய்க்கூட அது பலாத்காரப் பிரயோகம் அல்ல. பாட்டாளி வர்க்கமானது உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் மேலும் உயர்வான ஒரு ரகத்தின் பிரதிநிதியும் படைப்பாளனும் ஆகும் என்பதுதான் இந்தப் புரட்சிகரப் பலாத்காரப் பிரயோகத்துக்கான பொருளாதார அடிப்படை, இதன் பயனுடைமைக்கும் வெற்றிக்குமான உத்தரவாதம். முக்கியமானது இதுவே. கம்யூனிசப் பலத்தின் ஆதாரமும், அதன் இறுதி வெற்றி தவிர்க்க முடியாதது என்பதற்கான உத்தரவாதமும் இதுவே.

சமூக உழைப்புக்கான பிரபுத்துவ ஒழுங்கமைப்பு குறுந்தடி மூலமான கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது; விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய நிலப்பிரபுக்களால் சூறையாடப்பட்டுக் கொடுங்கோன்மைக்கு உட்படுத்தப்பட்ட உழைப்பாளி மக்கள் அறியாமை இருளில் முற்றிலும் மூழ்கி ஒடுக்கப்பட்டோராய் இருந்தனர். சமூக உழைப்புக்கான முதலாளித்துவ ஒழுங்கமைப்பு பட்டினி மூலமான கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது; முதலாளித்துவக் கலாசாரமும் முதலாளித்துவ ஜனநாயகமும் எவ்வளவுதான் முன்னேறியிருப்பினும் மிகவும் முன்னேறிய, நாகரிகம் படைத்த ஜனநாயகக் குடியரசுகளிலும் மிகப் பெருந்திரளான உழைப்பாளி மக்கள் அறியாமை இருளில் மூழ்கி மிதித்து நசுக்கப்படும் திரளான கூலியடிமைகள் அல்லது ஒடுக்கப்பட்ட விவசாயிகளாகவே இருந்தனர்; விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய முதலாளிகளால் சூறையாடப்பட்டுக் கொடுங்கோன்மைக்கு உட்படுத்தப்பட்டனர். சமூக உழைப்புக்கான கம்யூனிச ஒழுங்கமைப்பு—இதற்கான முதற்படியே சோஷலிசம் எனப்படுவது—நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகிய இரு பாலரின் ஒடுக்கு முறையை வீழ்த்திவிட்ட உழைப்பாளி மக்கள் தாமே சுதந்திரமாகவும் உணர்வு பூர்வமாகவும் வகுத்துக் கொள்ளும் கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது; காலம் செல்லச் செல்ல மேலும் மேலும் அதையே ஆதாரமாய்க் கொள்ளும்.

இந்தப் புதிய கட்டுப்பாடு விண்ணிலிருந்து குதித்து விடுவதில்லை; ஆத்மார்த்திக விருப்பத்திலிருந்து பிறந்து விடுவதில்லை. பெரும் அளவு முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பொருளாயத நிலைமைகளில் மட்டுமிருந்தே இது வளர்ச்சியுறுகிறது. இந்நிலைமைகள் இல்லாமல் இது வளர்வது

சாத்தியமல்ல. வரலாற்று வழி வந்த குறிப்பிட்ட ஒரு வர்க்கமே, பெருமளவு முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்டதும் ஒழுங்கமைக்கப்பட்டதும் ஒன்றுபடுத்தப்பட்டதும் பயிற்சியளிக்கப்பட்டதும் அறிவூட்டப்பட்டதும் உறுதியூட்டப்பட்டதுமான ஒரு வர்க்கமே இந்தப் பொருளாயத நிலைமைகளுக்குரிய இருப்பிடம் அல்லது சாதனம். பாட்டாளி வர்க்கம்தான் இந்த வர்க்கம்.

''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்'' என்கிற லத்தீன் விஞ்ஞான வரலாற்று-தத்துவவியல் தொடரை எளிய மொழியில் பெயர்த்திடுவோமாயின், பின்வருவதே அதன் பொருள்:

குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தால் மட்டும்தான், அதாவது பொதுவில் நகரத் தொழிலாளர்கள், ஆலை, தொழில் துறைத் தொழிலாளர்கள் ஆகியோரால் மட்டும்தான், மூலதனத்தின் ஒடுக்கு முறையை வீழ்த்துவதற்கான போராட்டத்திலும் நடைமுறையில் இந்தப் போராட்டத்தை நடத்திச் செல்வதிலும் வெற்றியைப் பாதுகாப்பதற்கும் உறுதி பெறச் செய்வதற்குமான போராட்டத்திலும் புதிய சோஷலிச சமூக அமைப்பை உருவாக்கும் பணியிலும் வர்க்கங்களை அறவே ஒழிப்பதற்கான போராட்டம் அனைத்திலும் உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களின் பெருந்திரள் முழுவதுக்கும் தலைமை தாங்க முடிகிறது. (சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையிலுள்ள விஞ்ஞான வழிப்பட்ட வேற்றுமை என்னவெனில், முதலாவது சொல் முதலாளித்துவத்திலிருந்து தோன்றும் புதிய சமுதாயத்தின் முதற்கட்டத்தையும் இரண்டாவது சொல் மேலும் உயர்வான அடுத்த கட்டத்தையும் சுட்டுகிறவை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிடலாம்.)

''பெர்ன்'', மஞ்சள் அகிலம்[46] புரியும் தவறு என்னவெனில், அதன் தலைவர்கள் வர்க்கப் போராட்டத்தையும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் சொல்லளவில் மட்டும்தான் ஏற்றுக் கொள்கிறார்கள்; அதன் தர்க்க முடிவுக்குச் சிந்தித்துச் செல்ல அஞ்சுகிறார்கள். தவிர்க்க முடியாததான இந்த முடிவு முதலாளி வர்க்கத்துக்குக் குறிப்பாய் அச்சம் தருவதாயுள்ளது; இது அவர்களுக்குச் சிறிதும் ஏற்புடையதல்ல. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமானது வர்க்கப் போராட்டத்துக்கும் உரிய காலமாகும் என்பதை

ஒத்துக் கொள்ள அவர்கள் அஞ்சுகிருர்கள். வர்க்கங்கள் ஒழிக்கப்படாது இருக்கும் வரை வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாததாகும்; வடிவத்தில் மாற்றமுற்று அது மூலதனம் வீழ்த்தப்பட்டதும் உடனடியாய் அடுத்து வரும் காலகட்டத்தில் குறிப்பாய் மூர்க்கமடைந்து குறிப்பாய்த் தனி இயல்பு உடையதாகி விடுகிறது என்பதை ஒத்துக் கொள்ள அவர்கள் அஞ்சுகிருர்கள். பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பின் அது வர்க்கப் போராட்டத்தை நிறுத்தி விடவில்லை, வர்க்கங்கள் ஒழிக்கப்படும் வரை தொடர்ந்து நடத்தியே செல்கிறது—போராட்டம் நடைபெறும் சூழ்நிலையும் போராட்ட வடிவமும் போராட்ட வழிகளும்தான் மாறுபடுகின்றன.

''வர்க்கங்கள் ஒழிக்கப்படுதல்'' என்பதன் பொருள் என்ன? இதுவே சோஷலிசத்தின் இறுதிக் குறிக்கோள் என்பதை தம்மை சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்வோர் எல்லோருமே அங்கீகரிக்கிருர்கள்; ஆனுல் அதன் உட்பொருள் குறித்து பலரும் சிந்திப்பதில்லை. வர்க்கங்கள் என்பவை வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமூகப் பொருளுற்பத்தி அமைப்பில் அவை வகிக்கும் இடத்தாலும், உற்பத்திச் சாதனங்களுடன் அவற்றுக்குள்ள உறவாலும் (மிக பெரும்பாலும் இது சட்டத்தால் நிலைநிறுத்தப்பட்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது), உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் அவற்றுக்குள்ள பாத்திரத்தாலும், ஆகவே சமூகச் செல்வத்தில் அவற்றின் செயலாட்சிக்கு உட்படும் பங்கின் பரிமாணங்களாலும், இந்தப் பங்கை அவை சுவாதீனமாக்கிக் கொள்ளும் முறையினுலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் பெரும் மக்கள் பகுதிகளாகும். வர்க்கங்களானவை சமூகப் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட ஓர் அமைப்பில் தாம் வகிக்கும் வெவ்வேறு இடங்களின் காரணமாய் ஒன்று மற்றென்றின் உழைப்பைக் கைப்பற்றிக் கொள்ள முடியும் படியான மக்கள் பகுதிகளாகும்.

வர்க்கங்களை அறவே ஒழிப்பதற்குச் சுரண்டலாளர்களான நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் வீழ்த்திஞல் மட்டும் போதாது; அவர்களுடைய சொத்துடைமை உரிமைகளை ஒழித்தால் மட்டும் போதாது; உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை அனைத்தையும் ஒழிப்பது அவசியம், நகருக்கும் கிராமத்துக்குமுள்ள பாகுபாட்டையும் உடல்

உழைப்பாளர்களுக்கும் மூளை உழைப்பாளர்களுக்குமுள்ள பாகுபாட்டையும் ஒழிப்பது அவசியம் என்பது தெளிவு. இதற்கு நீண்ட நெடுங்காலம் தேவைப்படும். இதைச் சாதிப்பதற்கு உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் பிரம்மாண்டமான முன்னேற்றம் கண்டாக வேண்டும்; சிறிய அளவுப் பொருளுற்பத்தியின் எண்ணற்ற மீதமிச்சங்களின் எதிர்ப்பைச் சமாளிப்பது அவசியம் (அடிக்கடி சாத்துவிகத் தன்மையதான இது மிகவும் பிடிவாதமானது, இதைச் சமாளிப்பது மிகவும் கடினமானது); இந்த மீதமிச்சங்களுடன் சம்பந்தப்பட்ட பழக்கத்தின், பழைமைப்பிடிப்பின் பிரம்மாண்ட சக்தியைச் சமாளிப்பது அவசியம்.

இந்தப் பணியைச் செய்யும் ஆற்றல் ''உழைப்பாளி மக்கள்'' அனைவருக்கும் சம அளவில் உண்டெனக் கொள்ளுதல் வெறும் பேச்சே ஆகும்; அல்லது மார்க்சியத்துக்கு முற்காலத்திய, மிகப் பழங்காலத்திய சோஷலிஸ்டின் பிரமையே ஆகும். ஏனெனில் இந்த ஆற்றல் தானுகவே வந்துவிடும் ஒன்றல்ல; வரலாற்று வழியில் வளர்ந்து வருவதாகும்; பெரும் அளவு முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பொருளாயத நிலைமைகளிலிருந்து மட்டுமே வளர்வதாகும். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குச் செல்லும் பாதையின் தொடக்கத்தில் இந்த ஆற்றலைப் பெற்றிருப்பது பாட்டாளி வர்க்கம் மட்டுமேதான். அது தன்னை எதிர்நோக்கும் பிரம்மாண்டப் பணியை நிறைவேற்றும் ஆற்றலுடையதாய் இருக்கிறது. ஏனெனில் முதலாவதாக, நாகரிக சமுதாயங்களில் அதுவே மிகுந்த பலம் படைத்த மிக முன்னேறிய வர்க்கம்; இரண்டாவதாக, வளர்ச்சி பெற்ற மிகப் பெருவாரியான நாடுகளில் அது மக்கள் தொகையில் பெரும்பான்மையானது; மூன்றுவதாக, ருஷ்யாவைப் போன்ற பின்தங்கிய முதலாளித்துவ நாடுகளின் மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் அரைப் பாட்டாளி வர்க்கத்தினர், அதாவது ஆண்டில் ஒரு பகுதி முறையாய்ப் பாட்டாளி வர்க்க வழியில் வாழ்ந்து தமது ஜீவனுேபாயத்தில் ஒரு பகுதியை முறையாய் முதலாளித்துவத் தொழில் நிலையங்களில் கூலி உழைப்பாளர்களாய் வேலை செய்து சம்பாதிக்கும் மக்கள்.

சுதந்திரம், சமத்துவம், பொதுப்படையான ஜனநாயகம், உழைப்பு ஜனநாயகத்தின் சமத்துவம், இன்ன பலவற்றையும் பற்றிய பொதுவான பேச்சின் அடிப்படையில்

(காவுத்ஸ்கியும் மார்த்தவும் பெர்ன், மஞ்சள் அகிலத்தின் ஏனைய வீரர்களும் செய்வது போல) முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலுவோர், தமது குட்டி முதலாளி அற்பத்தனத்தைத்தான் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்; முதலாளி வர்க்கத்தின் வாலைப் பற்றிக் கொண்டு சித்தாந்த வழியில் அடிமைப்பட்டோராய் அதைப் பின்தொடர்ந்து செல்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்குரிய சரியான தீர்வினை அரசியல் ஆட்சியதிகாரம் வென்று பெற்ற குறிப்பிட்ட வர்க்கத்துக்கும், அதாவது பாட்டாளி வர்க்கத்துக்கும், பாட்டாளி வர்க்கத்தவர் அல்லாதோரும் மற்றும் அரைப் பாட்டாளி வர்க்கத்தவருமான உழைப்பாளி மக்கள் திரள் அனைத்துக்கும் இடையிலுள்ள குறிப்பிட்ட உறவுகளை ஸ்தூலமாய் ஆராய்வதன் அடிப்படையிலேதான் காண முடியும். இந்த உறவுகள் கற்பனுவாத இசைவு நிலவும் ''அதிசிரேஷ்ட'' நிலைமைகளில் உருவாவதில்லை; பல்வேறான மிகப் பல வடிவங்களை ஏற்கும் வெறித்தனமான முதலாளி வர்க்கத்து எதிர்ப்பின் மெய்யான நிலைமைகளில் உருவாகின்றன.

மூலதனத்தின் ஒடுக்கு முறையையும் அது நடத்தும் கொள்ளையையும் புரியும் ஒவ்வொரு வகைக் கொடுங்கோன்மையையும் ருஷ்யா அடங்கலாய் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் மக்களில் மிகப் பெருவாரியானோர், இன்னும் முக்கியமாய் உழைப்பாளி மக்களில் மிகப் பெருவாரியானோர், நேரில் தாமும் தமது உற்றார் உறவினர் மூலமும் ஆயிரக் கணக்கான முறை அனுபவித்திருக்கிறார்கள். ஏகாதிபத்தியப் போரானது, அதாவது அனைத்து உலகையும் சூறையாடுவதில் தலைமைப் பாத்திரம் செலுத்தப் போவது ஆங்கிலேய மூலதனமா அல்லது ஜெர்மன் மூலதனமா என்பதைத் தீர்மானிப்பதற்காக லட்சோப லட்ச மக்கள் கொன்று குவிக்கப்பட்ட படுகொலையானது, இந்தக் கொடிய வேதனைகளை வெகுவாய்த் தீவிரப்படுத்தியுள்ளது; அவற்றை மேலும் அதிகப்படுத்தி ஆழமாக்கியுள்ளது; மக்களை இவற்றின் பொருளை உணர்ந்து கொள்ளும்படிச் செய்துள்ளது. எனவேதான் மக்களில், குறிப்பாய் உழைப்பாளி மக்களில், மிகப் பெருவாரியானோர் தவிர்க்க முடியாத வகையில் பாட்டாளி வர்க்கத்திடம் அனுதாபம் காட்டு

கின்றனர். ஏனெனில் அது தீரமிக்க நெஞ்சுறுதியோடும் புரட்சிகரச் சீற்றத்தோடும் மூலதனத்தின் ஒடுக்கு முறையை வீழ்த்தி, சுரண்டலாளர்களைக் கவிழ்த்து, அவர்களுடைய எதிர்ப்பை நசுக்கி வருகிறது; சுரண்டலாளர்களுக்கு இடமில்லாத ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் பாதையைச் செப்பனிடுவதற்காகத் தனது இரத்தத்தைச் சிந்துகிறது.

உழைப்பாளி மக்களின் பாட்டாளி வர்க்கத்தவரல்லாத, அரைப் பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினரின் குட்டி முதலாளித்துவ ஊசலாட்டங்களும் முதலாளி வர்க்கத்தின் ''குடையின்'' கீழ் முதலாளித்துவ ''நெறிமுறைக்குத்'' திரும்ப வேண்டுமென்ற அவர்களது போக்கும் பெரிய அளவிலும் தவிர்க்க முடியாததாகவும் இருப்பினும், அவர்களால் பாட்டாளி வர்க்கத்தின் தார்மிக-அரசியல் மேலாண்மையை அங்கீகரிக்காது இருக்க முடியவில்லை. பாட்டாளி வர்க்கம் சுரண்டலாளர்களை வீழ்த்தி அவர்களுடைய எதிர்ப்பை நசுக்குவதோடு அல்லாமல், ஒரு புதிய, உயர்வான சமூகப் பந்தத்தை,சமூகக் கட்டுப்பாட்டைக் கட்டியமைத்து வருகிறது; வர்க்க உணர்வு படைத்த ஒன்றுபட்ட உழைப்பாளி மக்களின் கட்டுப்பாட்டை, தமது சொந்த ஒற்றுமையினுடையதை அன்றி, தம்மிலும் அதிக வர்க்க உணர்வு படைத்த அஞ்சா நெஞ்சங் கொண்ட உறுதிமிக்க புரட்சிகரமான, நிலையான தமது சொந்த முன்னணிப் படையினுடையதை அன்றி வேறு எந்தக் கட்டுத்தளையையும் மேலாண்மையையும் அறியாத உழைப்பாளி மக்களின் கட்டுப்பாட்டைக் கட்டியமைத்து வருகிறது.

வெற்றி பெறும் பொருட்டு, சோஷலிசத்தைக் கட்டியமைத்து அதை உறுதியாக்கும் பொருட்டு, பாட்டாளி வர்க்கம் இருபடியான அல்லது இரட்டையான ஒரு பணியை நிறைவேற்றியாக வேண்டும். முதலாவதாக, மூலதனத்துக்கு எதிரான புரட்சிப் போராட்டத்தில் அது தனது ஒப்பற்ற வீரதீரத்தால் உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களின் முழுத் திரளையும் தன் பக்கத்துக்குக் கவர்ந்து இழுக்க வேண்டும்; முதலாளி வர்க்கத்தை வீழ்த்துவதற்கும் அவ்வர்க்கத்தின் எதிர்ப்பை அடியோடு நசுக்குவதற்குமான போராட்டத்தில் இத்திரளைத் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டு ஒழுங்கமைத்து தலைமை தாங்கி அழைத்துச் செல்ல வேண்

டும். இரண்டாவதாக, உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்கள் பெருந்திரள் அனைத்துக்கும் மற்றும் குட்டி முதலாளித்துவப் பகுதிகள் யாவற்றுக்கும் தலைமை தாங்கிப் புதிய பொருளாதார வளர்ச்சிக்குரிய பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும்; ஒரு புதிய சமூகப் பிணைப்பை, ஒரு புதிய உழைப்புக் கட்டுப்பாட்டை நோக்கி, விஞ்ஞானமும் முதலாளித்துவத் தொழில்நுட்பமும் ஈட்டியுள்ள நவீன சாதனைகளைப் பெரிய அளவு சோஷலிசத் தொழில் துறையைப் படைப்பித்து வரும் வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்களது வெகுஜன ஐக்கிய அமைப்புடன் இணைக்கவல்ல ஒரு புதிய உழைப்பு ஒழுங்கமைப்பை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும்.

இரண்டாவது பணி முதலாவதைக் காட்டிலும் கடினமானது. ஏனெனில் வீர உணர்ச்சி வேகங்கொண்ட தனிப்பட்ட செயல்களால் ஒருபோதும் நிறைவேற்ற முடியாத பணி அது; **சர்வசாதாரண அன்றாட** வேலைகளில் மிகவும் நீடித்து, விடாமுயற்சியுடன் செயல்படும் மிகவும் கடினமான வெகுஜன வீரதீரம் இதற்கு அவசியமாகும். ஆயினும் இந்தப் பணிதான் முதலாவதைக் காட்டிலும் மிகவும் அத்தியாவசியமான பணி. ஏனெனில் முடிவாய்ப் பார்க்கையில், மேலும் உயர்வான ஒரு புதிய சமூகப் பொருளுற்பத்தி முறைதான், முதலாளித்துவ மற்றும் குட்டி முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குப் பதிலாய்ப் பெரிய அளவு சோஷலிசப் பொருளுற்பத்தியை நிறுவுதல்தான் முதலாளி வர்க்கத்தின் மீது வெற்றிகள் பெறுவதற்குரிய பலத்தின் மிக ஆழ்ந்த மூலாதாரமும் இந்த வெற்றிகளின் நிலைப்பாட்டுக்கும் நிரந்தரத்துக்குமான ஒரேயொரு உத்தரவாதமும் ஆகும்.

* * *

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' உழைப்பின் உற்பத்தித் திறனை வளரச் செய்வதில், புதிய உழைப்புக் கட்டுப்பாட்டைக் கைக்கொள்வதில், பொருளாதாரத்திலும் வாழ்க்கையிலும் சோஷலிச நிலைமைகளைத் தோற்றுவிப்பதில் தொழிலாளர்களுடைய உணர்வு பூர்வமான மனமுவந்த முன்முயற்சியைப் புலப்படுத்திக் காட்டுவதால்தான் அவை இவ்வளவு பிரம்மாண்ட வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றன.

இ. யாக்கபி ஜெர்மன் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளில் 1870—1871ஆம் ஆண்டுகளின் படிப்பினைகளுக்குப் பிற்பாடு தேசிய இனவெறிக்கோ தேசிய-மிதவாதத்துக்கோ மாறுமல் சோஷலிசத்துக்கு மாறிய மிகச் சிலருள் ஒருவராவார்; மிக அரிய விதிவிலக்கானேரில் ஒருவர் எனக் கூறினுல் இன்னும் பொருத்தமாயிருக்கும். ஒரேயொரு தொழிற் சங்கம் நிறுவப்பட்டதானது சதோவாப் போரை[47] விட அதிக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததென முன்பொரு தரம் அவர் கூறினர். இது மெய்தான். ஜெர்மன் தேசிய முதலாளித்துவ அரசைத் தோற்றுவிப்பதில் இரு முதலாளித்துவ முடியரசுகளில் எது முதல் நிலை வகிக்கப் போகிறது, ஆஸ்திரிய முடியரசா அல்லது பிரஷ்ய முடியரசா என்பதை சதோவாப் போர் தீர்மானித்தது. ஒரேயொரு தொழிற் சங்கம் நிறுவப்பட்டதானது முதலாளி வர்க்கத்தின் மீது பாட்டாளி வர்க்கம் உலக அளவில் வெற்றி பெறுவதற்கான வழியில் ஒரு சிறு படியாய் அமைந்தது. இதையொத்த முறையில் இப்பொழுது நாம், 1919 மே 10ல் மாஸ்கோவில் மாஸ்கோ-கஸான் ரயில்வேத் தொழிலாளர்கள் ஏற்பாடு செய்த முதலாவது கம்யூனிஸ்டு சுபோத்னிக் 1914—1918 ஏகாதிபத்தியப் போரில் ஹிண்டன்பர்க் அல்லது ஃபோஷும் ஆங்கிலேயரும் பெற்ற எந்த வெற்றியையும் காட்டிலும் அதிக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்று கூறலாம். ஏகாதிபத்தியவாதிகளின் வெற்றிகள் ஆங்கிலோ-அமெரிக்க, பிரெஞ்சுக் கோடீஸ்வரர்களுடைய லாபங்களுக்காக வேண்டி லட்சோப லட்சமாய்த் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்படுகிருர்கள் என்பதைக் குறிப்பவை; அளவு மீறி உண்டு ஊதிப் பருத்து உயிருள்ள நிலையிலே அழுகி முடைநாற்றம் வீசும் அந்திமக்கால முதலாளித்துவம் புரியும் அட்டூழியங்களைக் குறிப்பவை. மாஸ்கோ-கஸான் ரயில்வேத் தொழிலாளர்கள் ஏற்பாடு செய்த கம்யூனிஸ்டு சுபோத்னிக் மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந்தும் யுத்தங்களிலிருந்தும் உலக மக்கள் அனைவருக்கும் விடுதலை கிட்டச் செய்யும் புதிய சோஷலிசச் சமுதாயத்தின் உயிரணுக்களில் ஒன்ருய்த் திகழ்வது.

முதலாளித்துவக் கனவான்களும் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் அடங்கிய அவர்களது பரிவாரத்தினரும்—''பொது ஜன அபிப்பிராயத்தின்'' பிரதி

நிதிகளாய் இவர்கள் பல காலமாய்த் தம்மைக் கருதிக் கொண்டவர்கள்—இயல்பாகவே கம்யூனிஸ்டுகளின் நம்பிக்கைகளைக் கேலி செய்கின்றனர்; ''மலர்க் கோப்பையில் நட்ட இலவம் பஞ்சு மரம்'' என்பதாய் அவர்கள் இந்த நம்பிக்கையைக் குறிப்பிடுகிறார்கள்; திருட்டு, சோம்பல், குறைவான உற்பத்தித் திறன், மூலப் பொருட்களும் பண்டங்களும் முடிவற்று வீணாக்கப்படுதல், முதலான நிகழ்ச்சிகளின் மிகப் பெரிய எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் சுபோத்னிக்குகளின் எண்ணிக்கை அற்ப சொற்பமாய் இருப்பது குறித்து அவர்கள் ஏளனம் செய்கிறார்கள். இந்தக் கனவான்களுக்கு நாம் கூறும் பதில் இதுவே: முதலாளித்துவ அறிவாளிகள் தமது அறிவாற்றலை ருஷ்ய, அந்நிய முதலாளிகளது ஆட்சியதிகாரத்தைத் திரும்பவும் கொண்டுவரும் பொருட்டு இந்த முதலாளிகளுக்கு அளிப்பதற்குப் பதிலாய் உழைப்பாளி மக்களுக்கு உதவுவதற்காக அதை அர்ப்பணித்திருந்தார்களாயின், புரட்சி மேலும் விரைவாகவும் மேலும் சமாதான பூர்வமாகவும் நடந்தேறியிருக்கும். ஆனால் இது கற்பனையாவாதமாகும். ஏனெனில் பிரச்சினை தீர்க்கப்படுவது வர்க்கப் போராட்டத்தால். அறிவாளிகளில் பெரும்பாலோர் முதலாளி வர்க்கத்தின் பக்கம்தான் சாய்கின்றனர். பாட்டாளி வர்க்கம் வெற்றி வாகை சூடப் போவது அறிவாளிகளின் உதவியால் அல்ல, அவர்களுடைய எதிர்ப்பை மீறித்தான் (எப்படியும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இப்படித் தான்). அவர்களில் திருத்த முடியாதபடிச் சீர்கேடுற்றோரை ஒதுக்கித் தள்ளியும், சஞ்சலவாதிகளைச் சீர்திருத்தியும் மறு கல்வியும் போதனையும் அளித்தும் கீழ்ப்படிய வைத்தும், அது படிப்படியாய் அவர்களில் மேலும் மேலும் அதிகமானோரைத் தம் பக்கத்துக்கு வென்று வெற்றி வாகை சூடப் போகிறது. புரட்சிக்கு ஏற்படும் இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் கண்டு ஆர்ப்பரித்து அகமகிழ்தல், பீதியைப் பரப்புதல், கடந்த காலத்துக்குத் திரும்பிவிட வேண்டுமெனப் பிரசாரம் செய்தல்—இவை யாவும்தான் வர்க்கப் போராட்டத்தில் முதலாளித்துவ அறிவாளிகளின் ஆயுதங்களும் வழிமுறைகளும். இவற்றால் தான் ஏமாற்றப்படுவதற்குப் பாட்டாளி வர்க்கம் அனுமதிக்கப் போவதில்லை.

ஆனால் உண்மை விவரங்களைப் பரிசீலித்தால், புதிய பொருளுற்பத்தி முறை எதுவும் வரிசையாய்ப் பல தோல்வி

களும் தவறுகளும் மறுதலிப்புகளும் இல்லாமல் உடனடியாகவே உறுதியாய் நிலைபெற்றதை வரலாற்றில் எப்பொழுதாவது கண்டதுண்டா? பண்ணை அடிமை முறை ஒழிக்கப்பட்டு அரை நூற்றுண்டு கழிந்த பிறகும் ருஷ்யக் கிராமப்புறங்களில் பண்ணை அடிமை முறையின் மீதமிச்சங்கள் பலவும் இருந்தன. அமெரிக்காவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டு அரை நூற்றுண்டு ஆன பிறகும் நீக்ரோக்கள் பல சந்தர்ப்பங்களில் அரை அடிமை நிலையிலேயே இருந்தனர். மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் அடங்கலான முதலாளித்துவ அறிவாளிகள் மூலதனத்துக்குப் பணியாற்றுவதிலும் முழுக்க முழுக்கப் பொய்யான வாதங்களைத் தொடர்ந்து கையாளுவதிலும் இம்மியும் நெறி பிறழாதவர்களாகவே இருக்கின்றனர்—பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முன்பு அவர்கள் நாம் கற்பனுவாதிகளாய் இருப்பதாய்க் குற்றம் கூறினர்; இந்தப் புரட்சிக்குப் பிறகு கடந்த காலத்தின் சாயல்கள் யாவற்றையும் நாம் கற்பனு வேகத்தில் துடைத்தெறிய வேண்டுமெனக் கோருகின்றனர்!

ஆனுல் நாம் கற்பனுவாதிகள் அல்ல; முதலாளித்துவ ''வாதங்களின்'' உண்மை அர்த்தத்தை நாம் அறிவோம். புரட்சிக்குப் பிறகு சில காலத்துக்குப் பழைய அறநெறியின் சாயல்கள் புதியதன் இளங்குருத்துக்களை விஞ்சி ஆதிக்கம் புரியவே செய்யும் என்பதையும் அறிவோம். புதியது இப்பொழுதுதான் பிறந்ததாய் இருக்கையில் குறிப்பிட்ட சிறிது காலத்துக்குப் பழையது அதைக் காட்டிலும் பலம் கொண்டதாகவே இருக்கும். இயற்கையிலும் சமூக வாழ்விலும் எப்பொழுதும் இப்படித்தான். புதியதன் இளங்குருத்துக்களின் வலுவின்மையை ஏளனம் செய்தலும் அறிவாளிகளின் கீழ்த்தரமான ஐயுறவு மனப்பான்மையும் இன்ன பிறவும் சாராம்சத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான முதலாளி வர்க்கப் போராட்ட முறைகளே ஆகும்; சோஷலிசத்துக்கு எதிராய் முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதே ஆகும். புதியதன் வலுவில்லாத குருத்துக்களை நாம் கருத்துடன் ஆராய்ந்தாக வேண்டும்; அவற்றின் பால் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்; அவற்றின் வளர்ச்சியை ஓங்கச் செய்யவும் அவற்றைப் ''பேணிக் காக்கவும்'' யாவும் செய்தாக வேண்டும். அவற்றில் சில தவிர்க்க முடியாதபடி மடிந்து விடலாம். ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' தான் குறிப்பிடத்தக்க

முக்கியப் பங்காற்றப் போகிறவை என்று நாம் உறுதி மொழி கூற முடியாது. ஆனால் அதுவல்ல விவகாரம். புதியதன் குருத்துக்கள் யாவற்றையும் ஒன்று விடாது பேணி வளர்த்திடுவதே இங்குள்ள விவகாரம்; இவற்றுள் நிலைத்து வாழத்தக்கனவற்றை வாழ்க்கை தேர்ந்தெடுத்துக் கொள்ளும். மனித குலம் மேக நோயை ஒழித்துக்கட்ட உதவும் பொருட்டு ஐப்பானிய விஞ்ஞானிக்கு அறுநூற்று ஐந்து மருந்து தயாரிப்புகளைச் சோதித்துப் பார்த்துக் குறிப்பிட்ட தேவைகளுக்கு உகந்தபடி அமைந்த அறுநூற்று ஆறுவது தயாரிப்பை உருவாக்கும் பொறுமை இருந்ததென்றால், இதை விட கடினமான ஒரு பிரச்சினைக்கு, அதாவது முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டுவதென்ற பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புவோர் யாவற்றிலும் மிகப் பொருத்தமானதை உருவாக்கும் பொருட்டு நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் புதிய போராட்ட முறைகளையும் வழிகளையும் ஆயுதங்களையும் சோதித்துப் பார்க்கும்படியான விடாமுயற்சி உடையோராய் இருக்க வேண்டும் அல்லவா?

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' இவ்வளவு முக்கியமானவையாய் இருக்கக் காரணம் என்னவெனில், விதிவிலக்கான சிறந்த நிலைமைகளில் அமைந்தோராய் எவ்வகையிலும் கொள்ள முடியாத தொழிலாளர்களால் இவை ஆரம்பித்து வைக்கப்பட்டவை; சர்வசாதாரண நிலைமைகளில், அதாவது அளவு கடந்த கடின நிலைமைகளில் வாழும் பல்வேறு தேர்ச்சித் துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்களாலும் எந்தத் தேர்ச்சியுமில்லாத சாதாரணத் தொழிலாளர்களாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டவை. உழைப்பின் உற்பத்தித் திறன் சரிவதன் பிரதான காரணத்தை, ருஷ்யாவில் மட்டுமின்றி உலகெங்குமே காணக் கூடிய இந்தப் பிரதான காரணத்தை நாம் எல்லோரும் நன்கு அறிவோம்—ஏகாதிபத்தியப் போரால் விளைந்த அழிவும் வறுமையும் கசப்பும் தளர்வும்தான் இந்தக் காரணம், நோயும் பட்டினியும்தான் இந்தக் காரணம். இறுதியாகச் சொன்னதே தலையாய முக்கியத்துவம் வாய்ந்தது. பட்டினி—இதுவேதான் காரணம். பட்டினியை ஒழிக்க விவசாயத்திலும் போக்குவரத்திலும் தொழில் துறையிலும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தியாக வேண்டும். இவ்வாறு, நாம் ஒரு நச்சுச் சுழலை அடைகிறோம்: உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த

நாம் பட்டினியிலிருந்து காப்பாற்றிக் கொண்டாக வேண்டும்; பட்டினியிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள உழைப்பின் உற்பத்தித் திறனை நாம் உயர்த்தியாக வேண்டும்.

நச்சுச் சுழலை உடைப்பதே இத்தகைய முரண்பாடுகளை நடைமுறையில் தீர்ப்பதற்குரிய வழி என்பதை நாம் அறிவோம்; மக்களுடைய மனோபாவத்தில் ஒரு தீவிர மாற்றத்தை உண்டாக்குவதே, இத்தகைய தீவிர மாற்றத்தின் பகைப் புலனில் அடிக்கடி தீர்மானகரமான பங்காற்றிடும் தனிப்பட்ட கோஷ்டிகளின் வீரமிக்க முன்முயற்சியே இதற்குரிய வழி என்பதை அறிவோம். மாஸ்கோவின் தேர்ச்சியற்ற தொழிலாளர்களும் ரயில்வேயில் வேலை செய்வோரும் (இவர்களில் பெரும்பான்மையோரையே மனதில் கொண்டுள்ளோம், மிகவும் சொற்பமான லாபவேட்டைக்காரர்களையும் அதிகாரிகளையும் பிற வெள்ளைப் படைத் தரப்பினரையும் அல்லவென்பதைக் கூற வேண்டியதில்லை) படுமோசமான மிகக் கடின நிலைமைகளில் வாழும் உழைப்பாளி மக்களாவர். எந்நேரமும் போதிய உணவில்லாதவர்கள்; புதிய அறுவடைக்கு முன்பான இந்நேரத்தில், பொதுவாகவே உணவு நிலைமை மோசமாயுள்ள இப்பொழுது மெய்யாகவே பட்டினி கிடப்பவர்கள். ஆயினும் பட்டினி கிடக்கும் இந்தத் தொழிலாளர்கள், முதலாளி வர்க்கத்தாரும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் நடத்தும் கேடுகெட்ட எதிர்ப்புரட்சிக் கிளர்ச்சியால் சூழப்பெற்றுள்ள இவர்கள் ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளுக்கு'' ஏற்பாடு செய்கின்றனர்; சம்பளம் இல்லாமலே வேலை நேரத்துக்குப் பிற்பாடு வேலை செய்கின்றனர்; போதிய உணவின்றி, ஓய்ந்து போய் வேதனைக்குள்ளாகி, பலமிழந்த நிலையில் இருப்பினும், **உழைப்பின் உற்பத்தித் திறனில் மிகப் பெரிய அதிகரிப்பை** உண்டாக்கி வருகிறார்கள். அருந்திறல் வீரமல்லவா இது? உலக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாற்றத்தின் தொடக்கமல்லவா?

புதிய சமுதாய அமைப்பு வெற்றி பெற, இறுதியாய்ப் பார்க்குமிடத்து, உழைப்பின் உற்பத்தித் திறன்தான் மிக முக்கியமானது, தலைமையானது. உழைப்பின் உற்பத்தித் திறனில் பண்ணையடிமை முறை அறியாத உயர் நிலையை முதலாளித்துவம் உண்டாக்கிற்று. உழைப்பின் உற்பத்தித்

திறனில் மேலும் மிக உயர்ந்த ஒரு புதிய நிலையை உண்டாக்குவதன் மூலம் சோஷலிசமானது முதலாளித்துவத்தை அடியோடு தோற்கடிக்க முடியும், தோற்கடிக்கவும் போகிறது. இது மிகவும் கடினமான பணி; இதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஆனால் இது துவக்கப்பட்டு விட்டது — இதுவே பிரதானமாகும். பட்டினி கிடக்கும் மாஸ்கோவில் பட்டினி கிடக்கும் தொழிலாளர்களால், சோதனை வாய்ந்த நான்கு ஆண்டுக் கால ஏகாதிபத்திய யுத்தத்தையும் பிறகு மேலும் பெருஞ் சோதனையாயிருந்த ஒன்றரை ஆண்டுக் கால உள்நாட்டுப் போரையும் கடந்து வந்த இத்தொழிலாளர்களால் 1919 கோடையில் இந்த மாபெரும் பணியினைத் துவக்க முடிந்ததெனில், பிற்பாடு நாம் உள்நாட்டுப் போரில் வாகை சூடி சமாதானம் வென்று கொள்ளும் போது எப்படிப்பட்ட வளர்ச்சி ஏற்படும்?

முன்னேறிய தொழில்நுட்ப முறைகளைக் கையாளும் வர்க்க உணர்வு படைத்த ஒன்றுபட்ட தொழிலாளர்களின் மனமுவந்த உழைப்பின் உயர்வான—முதலாளித்துவத்தில் நிலவுவதுடன் ஒப்பிடுகையில்—உற்பத்தித் திறனே கம்யூனிசம். கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள் கம்யூனிசத்தின் மெய்யான தொடக்கமாய் அமைந்து அளவு கடந்த மதிப்புடையனவாகின்றன. இது அரிதினும் அரிய ஒன்று; ஏனெனில் (நமது கட்சி வேலைத்திட்டம் முற்றிலும் சரியானபடிக் கூறுவது போல) நாம் ''முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய முதல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' கட்டத்தில்தான் இருக்கிறோம்.

சர்வசாதாரணமான தொழிலாளர்கள் கடின உழைப்பைக் கண்டு அஞ்சாமல் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில், ஒவ்வொரு பூடு தானியத்தையும் நிலக்கரியையும் இரும்பையும் பிற பொருட்களையும்—நேரடியாகத் தொழிலாளர்கள் கைக்கோ அவர்களது ''நெருங்கிய'' உற்றார் உறவினர் கைக்கோ அல்லாமல் ''தொலைவான'' உற்றார் உறவினர் கைக்கு, அதாவது சமுதாயம் அனைத்தின், முதலில் தனியொரு சோஷலிச அரசிலும் பிறகு சோவியத் குடியரசுகளது ஐக்கியத்திலும் ஒன்றுபட்ட கோடானு கோடியான மக்கள் அனைவரின் கைக்கு உரியனவாகிய இவற்றை—சேதமின்றிக் காப்பதில் ஆர்வமிக்க அக்கறை காட்டுகையில் கம்யூனிசம் தொடங்குகிறது.

சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் பற்றிய ஆடம்பரமான பகட்டு ஆரவாரமான முதலாளித்துவ-ஜனநாயக உரிமை சாசனத்தை கார்ல் மார்க்ஸ் மூலதனத்தில் எள்ளி நகையாடுகிறார்; பொதுப்பட சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று பேசப்படும் சொல்வீச்சுக்கள் யாவற்றையும் அவர் எள்ளி நகையாடுகிறார். அவக்கேடு வாய்ந்த பெர்ன் அகிலத்தின் அவக்கேடு வாய்ந்த இன்றைய தலைவர்களும் அடங்கலாய் எல்லா நாடுகளின் குட்டி முதலாளி வர்க்கத்தாரையும் போலிப்பண்பாளர்களையும் இந்தச் சொல் வீச்சுக்கள் மதி மயங்கச் செய்து விடுகின்றன. இந்த ஆடம்பரமான உரிமைப் பிரகடனங்களுக்கு நேர் மாறாய்ப் பாட்டாளி வர்க்கம் பிரச்சினையை எடுத்துரைக்கும் பகட்டற்ற, நிதானமான, நடைமுறைச் செயல் சார்ந்த எளிய முறையினை மார்க்ஸ் சுட்டிக் காட்டுகிறார்—வேலை நேரத்தைக் குறைப்பதற்காக அரசுச் சட்டம் இயற்றுதல் இத்தகைய செயல் முறைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.[48] மார்க்ஸ் எடுத்துரைப்பது எவ்வளவு பொருத்தமானது, பொருட்செறிவு கொண்டது என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உள்ளடக்கம் கண்கூடாய்த் தெரியத் தெரிய மேலும் மேலும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் விளங்குகிறது. மெய்யான கம்யூனிசத்தின் ''சூத்திரங்கள்'' காவுத்ஸ்கிகளும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் பெர்ன் அகிலத்தைச் சேர்ந்த அவர்களது அருமைச் ''சோதரர்களும்'' கையாளும் ஆடம்பரமான சிக்கல் வாய்ந்த புனிதச் சொல்லடுக்குகளிலிருந்து வேறுபடுகிறவை, எப்படியெனில் யாவற்றையும் அவை உழைப்பு நிலைமைகளாய்ச் சுருக்கிக் காட்டுகின்றன. ''உழைப்பு ஜனநாயகம்'', ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'', ''மக்களாலான அரசாங்கம்'', இத்தியாதி வாய்ப் பேச்சுக்கள் எல்லாம் வேண்டாம். வர்க்க உணர்வு படைத்த இன்றைய தொழிலாளர்களும் விவசாயிகளும் முதலாளித்துவ அறிவாளிகளது இந்த ஆடம்பரச் சொல்லடுக்குகளின் அர்த்தத்தைக் கண்டு கொண்டு விடுகிறார்கள். ''தனுக்குப் பேர் வழியின்'' குறை சொல்ல முடியாத ''நேர்த்தியான'' பாவனையையும் அப்பழுக்கில்லாத தோற்றத்தையும் கண்ட மாத்திரத்திலே சாதாரண பகுத்தறிவும் அனுபவமும் உடையவர் ஒருவர் பிழையற்றவாறு ''மோசடிக்காரனைத்தான் இருப்

பான்'' என்று எடுத்த எடுப்பிலே எவ்வளவு சுலபமாய்ச் சொல்லி விடுகிருரோ, அதே போலச் சுலபமாய் இவர்கள் இதிலுள்ள சூதைக் கண்டு கொண்டு விடுகிருர்கள்.

ஆடம்பரச் சொல்லடுக்குகள் குறைய வேண்டும், சர்வ சாதாரணமான **அன்ருட** வேலையும் ஒவ்வொரு பூடு தானியத்திலும் ஒவ்வொரு பூடு நிலக்கரியிலும் காட்டப்படும் அக்கறையும் ஓங்க வேண்டும்! பட்டினி கிடக்கும் தொழிலாளர்களுக்கும் கந்தல் உடுத்தி வெறுங்காலுடன் நிற்கும் விவசாயிகளுக்கும் தேவைப்படும் இந்தப் பூடு தானியத்தையும் பூடு நிலக்கரியையும் அளித்திடுவதில் — **பேரம் பேசி அல்ல,** முதலாளித்துவ வழியில் அல்ல, மாஸ்கோ-கஸான் ரயில் பாதையைச் சேர்ந்த தேர்ச்சியில்லா வேலையாட்களையும் ஊழியர்களையும் போன்ற சாதாரண உழைப்பாளர்களின் உணர்வு பூர்வமான மனமுவந்த அளவிலா வீரம் வாய்ந்த உழைப்பின் மூலம் அளித்திடுவதில்—அக்கறை ஓங்க வேண்டும்.

புரட்சிப் பிரச்சினைகள் குறித்து முதலாளித்துவ அறிவாளிகள் அனுசரிக்கும் வாய்ச்சவடால் போக்கின் மீதமிச்சங்கள் எங்கும், நம்முடைய அணிகளிலேகூட காணப்படுகின்றன என்பதை நாம் எல்லோரும் ஒத்துக் கொண்டே ஆக வேண்டும். உதாரணமாய், நமது பத்திரிகைகள் அழுகிப் போன முதலாளித்துவ-ஜனநாயகப் பழங்காலத்தின் இந்த அழுகிப் போன மீதமிச்சங்களை எதிர்த்துப் போராட அதிகமாய் எதுவும் செய்யவில்லை; மெய்யான கம்யூனிசத்தின் ஆடம்பரமற்ற எளிய சர்வசாதாரணமான, ஆனுல் உயிர் சக்தி மிக்க குருத்துக்களை வளர்த்திட அவை அதிகமாய் எதுவும் செய்யவில்லை.

பெண்களின் நிலையை எடுத்துக் கொள்வோம். ஆட்சியதிகாரத்துக்கு வந்த முதலாவது ஆண்டிலேயே இந்தத் துறையில் நாம் செய்ததில் நூற்றில் ஒரு பங்கைக்கூட உலகில் எந்த ஜனநாயகக் கட்சியும் மிகவும் முன்னேறிய முதலாளித்துவக் குடியரசிலுங்கூட பல பத்தாண்டுகளிலும் செய்ததில்லை. பெண்களை அசமத்துவ நிலையில் வைக்கும் இழிவான சட்டங்களை, திருமண ரத்துக்கு விலங்குகளிட்டும், அருவருக்கத்தக்க வினைமுறைகளால் அதைச் சுற்றிவளைத்தும், திருமணத்துக்குப் புறம்பாய்ப் பிறந்த குழந்தைகளுக்கு அங்கீகாரம் அளிக்க மறுத்தும், அவற்றின் தந்தையரைத் தேடிப் பிடிக்கும்படி விதித்தும், இன்ன பலவாருகவும் இழிமை

செய்யும் சட்டங்களை மெய்யாகவே நாம் தகர்த்துத் தரை மட்டமாக்கினேம். இச்சட்டங்களின் எண்ணற்ற மீதமிச்சங் கள் முதலாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் வெட்கக் கேடாய் எல்லா நாகரிக நாடுகளிலும் இருக்கக் காணலாம். இத்துறையில் நாம் செய்திருப்பவை குறித்துப் பெருமை கொள்ள நமக்கு ஆயிரம் மடங்கு உரிமை உண்டு. பழைய முதலாளித்துவச் சட்டங்கள், ஏற்பாடுகளின் குப்பை கூளங்களை எவ்வளவுக்கு எவ்வளவு சுத்தமாய்க் கூட்டிப் பெருக்கி அறவே அகற்றினேமோ, கட்டியமைப்பதற்காகத் தரையைச் சுத்தம் செய்துள்ளோமே தவிர இன்னும் கட்டிய மைத்தாகவில்லை என்பது நமக்கு அவ்வளவுக்கு அவ்வளவு தெளிவாய்த் தெரிகிறது.

பெண் விடுதலைச் சட்டங்கள் யாவும் இருந்த போதிலும் தொடர்ந்து அவள் இல்லத்து அடிமையாகவே வாழ்கிருள். ஏனெனில் அற்பத் தனமான வீட்டு வேலைகள் அவளை நசுக்கி நெரித்து மழுங்க வைத்து இழிவுறச் செய்கின்றன; அடுப் படியிலும் குழந்தைத் தொட்டிலுடனும் கட்டுண்டுவிடச் செய்கின்றன. உற்பத்தித் திறனில் படுகேவலமான கீழ் நிலைக்கு உரிய அற்ப வேலைகளில், உயிரை வதைக்கும், சிந் தனையை மழுங்கச் செய்யும், நசுக்கி ஒடுக்கும் ஓயாத நச் சரிப்பு வேலைகளில் அவள் தன் உழைப்பைப் பாழாக்குகிருள். இந்த அற்பத் தனமான வீட்டு வேலை நச்சரிப்பை எதிர்த்து எங்கே, எப்பொழுது முழு முனைப்பான போராட்டம் (அரசு ஆட்சியதிகாரம் செலுத்தும் பாட்டாளி வர்க்கத்தின் தலை மையில்) தொடங்குகிறதோ, அல்லது இன்னும் சரிவரக் கூறுவோமாயின் பெரிய அளவு சோஷலிசப் பொருளாதார மாய் அதன் முழு அளவிலான மாற்றம் தொடங்குகிறதோ, அங்கேதான், அப்பொழுதுதான் மெய்யான பெண் விடுதலை, மெய்யான கம்யூனிசம் தொடங்கும்.

மறுக்க முடியாத ஒன்ருய் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் தத்து வார்த்த அளவில் கருதும் இந்தப் பிரச்சினையில் நாம் நடை முறையில் போதிய கவனம் செலுத்துகிருேமா? இல்லவே இல்லை. கம்யூனிசத்தின் குருத்துக்கள் இத்துறையில் ஏற் கெனவே இருப்பவற்றை நாம் வேண்டிய அளவு பேணிக் காக்கிருேமா? இல்லை என்றே திரும்பவும் பதிலளிக்க வேண்டி யிருக்கிறது. பொது உண்டி நிலையங்கள், பிள்ளைப் பராமரிப் பகங்கள், குழந்தைப் பள்ளிகள் — இவைதாம் இந்தக்

குருத்துக்களுக்கான உதாரணங்கள். ஆடம்பரமோ படாடோபமோ மினுக்கோ எதுவும் இல்லாத எளிய அன்றாட சாதனங்கள் இவை — பெண்களை மெய்யாகவே விடுவிக்க வல்லவை, சமூகப் பொருளுற்பத்தியிலும் பொது வாழ்விலும் பெண்களின் பாத்திரத்தைப் பொருத்தவரை ஆடவர்களுக்கு அவர்கள் சரிசமத்துவமாய் இல்லாத நிலையை மெய்யாகவே மட்டுப்படுத்தவும் ஒழிக்கவும் வல்லவை. இந்தச் சாதனங்கள் புதியவை அல்ல; (சோஷலிடத்துக்கான எல்லா முன்தேவைகளையும் போல) இவையும் பெருமளவு முதலாளித்துவத்தால் உண்டாக்கப்பட்டவையே. ஆனால் முதலாளித்துவத்தில் இவை முதலாவதாக, அரிதாகவே இருந்தன; இரண்டாவதாக — இது குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்தது — லாபமடிக்கும் நிலையங்களாய், ஊக வாணிபம், லாபவேட்டை, ஏமாற்று, மோசடி ஆகியவற்றின் படுமோசமான எல்லா இயல்புகளும் மிகுந்தவையாகவும் அல்லது ''முதலாளித்துவக் கொடையின் கழைக்கூத்துகளாகி'' சிறந்த தொழிலாளர்களது நியாயமான வெறுப்புக்கும் இகழ்ச்சிக்கும் உரியனவாகவும் இருந்தன.

நமது நாட்டில் இந்த நிலையங்களின் எண்ணிக்கை வெகுவாய் அதிகரித்திருப்பதிலும் இந்நிலையங்களின் தன்மை மாற்றமுறத் தொடங்கியிருப்பதிலும் சந்தேகமில்லை. தொழிலாளி, விவசாயிப் பெண்களிடம் நாம் உணர்வதற்கும் கூடுதலான அளவில் நிறுவன ஒழுங்கமைப்புத் திறன் இருப்பதிலும் ஏராளமான தொழிலாளர்களது பங்குடனும் இன்னும் ஏராளமான நுகர்வாளர்களது பங்குடனும் நடைமுறைப் பணிக்கு ஏற்பாடு செய்யக் கூடியவர்கள் நாம் அறிந்ததைக் காட்டிலும் மிக அதிகம் பேர் இருப்பதிலும் சந்தேகமில்லை. பெருமையடித்துக் கொள்ளும் நமது ''அறிவுத் துறையினரையோ'' அரை வேக்காட்டுக் ''கம்யூனிஸ்டுகளையோ'' ''பீடித்துக் கொண்டுவிடும்'' அபரிமிதமான வாய்ப் பேச்சும் அமளியும் சச்சரவும் திட்டங்களையும் அமைப்புகளையும் பிறவற்றையும் பற்றிய கூச்சலும் இல்லாமலே இவர்கள் இப்பணிக்கு ஏற்பாடு செய்யக் கூடியவர்கள். ஆனால் புதியதன் இந்தக் குருத்துக்களை வேண்டிய அளவுக்கு நாம் பேணி வளர்த்திடவில்லை.

முதலாளி வர்க்கத்தாரைப் பாருங்கள். அவர்களுக்குத் தேவையானதை விளம்பரப்படுத்த எவ்வளவு நன்ருய்த் தெரிந்து வைத்திருக்கிருர்கள்! ''முன்மாதிரி'' நிலையங்களாய் முதலாளிகள் கருதுகிறவற்றை அவர்களுடைய செய்தியேடுகளின் கோடிக் கணக்கான பிரதிகள் எப்படி மெச்சிப் புகழ்கின்றன பாருங்கள்! ''முன்மாதிரி'' முதலாளித்துவ நிலையங்கள் எப்படித் தேசியப் பெருமைக்குரியனவாய் ஆக்கப்படுகின்றன பாருங்கள்! நமது பத்திரிகைகள் சிறந்த உண்டி நிலையங்களையோ பிள்ளைப் பராமரிப்பகங்களையோ விவரித்துக் கூறி தினசரி வற்புறுத்தலின் மூலம் அவற்றில் சிலவற்றை முன்மாதிரிகளாய் மாறச் செய்வதற்காக முயற்சி செய்வதில்லை அல்லது மிக அரிதாகவே செய்கின்றன. நமது பத்திரிகைகள் அவற்றைப் போதிய அளவு விளம்பரப்படுத்துவதில்லை; முன்மாதிரியான கம்யூனிஸ்டுப் பணியால் எப்படி மனித உழைப்பை மிச்சப்படுத்த முடியும், நுகர்வாளர்களுக்கு வசதிகள் செய்து தர முடியும், பண்டங்களைச் சேமிக்க முடியும், இல்லத்து அடிமை வாழ்விலிருந்து பெண்களை விடுவிக்க முடியும், சுகாதார நிலைமைகளை மேம்படச் செய்ய முடியும், இச்சாதனைகளைச் சமுதாயம் அனைத்துக்கும் உழைப்பாளி மக்கள் எல்லோருக்கும் விரிந்து பரவச் செய்ய முடியும் என்பதை அவை விளக்கமாய் விவரிப்பதில்லை.

முன்மாதிரியான பொருளுற்பத்தி, முன்மாதிரியான கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள், ஒவ்வொரு பூடு தானியத்தையும் கொள்முதல் செய்வதிலும் வினியோகிப்பதிலும் முன்மாதிரியான கவனம், கடமையுணர்ச்சி, முன்மாதிரியான உண்டி நிலையங்கள், இந்தத் தொகுதியில் இந்தத் தொழிலாளர் வீட்டில் காணக் கூடிய முன்மாதிரியான சுத்தம், முதலானவை யாவற்றிலும் நமது பத்திரிகைகளும் மற்றும் தொழிலாளர்கள், விவசாயிகளின் நிறுவனம் ஒவ்வொன்றும் தற்போது செலுத்துவதைக் காட்டிலும் பத்து மடங்கு கூடுதலான கவனமும் கருத்தும் செலுத்த வேண்டும். இவை எல்லாம் கம்யூனிசத்தின் குருத்துக்கள்; இவற்றைப் பேணி வளர்த்திடுவது நமக்குரிய பொதுவான தலையாய கடமை. நமது உணவு நிலைமையும் பொருளுற்பத்தி நிலைமையும் கடினமாகவே இருப்பினும், போல்ஷிவிக்குகளின் ஆட்சியின் ஒன்றரை ஆண்டில் நிச்சயமாய் நெடுகிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது: தானியக் கொள்முதல் 3 கோடிப் பூடு

களிலிருந்து (1917 ஆகஸ்ட் 1லிருந்து 1918 ஆகஸ்ட் 1 வரை) 10 கோடிப் பூடுகளாய் (1918 ஆகஸ்ட் 1லிருந்து 1919 மே 1 வரை) உயர்ந்திருக்கிறது; காய்கறிகள் பயிரிடுதல் விரிவடைந்திருக்கிறது; பயிரிடப்படாத நிலப் பரப்பு குறைந்திருக்கிறது; எரிபொருள் இடர்ப்பாடுகள் பெருமளவில் இருந்துங்கூட ரயில் போக்குவரத்து மேம்படத் தொடங்கியிருக்கிறது; மற்றும் பலவற்றையும் குறிப்பிடலாம். இந்தப் பொதுச் சூழலிலும் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தின் ஆதரவிலும் கம்யூனிசத்தின் குருத்துக்கள் காய்ந்து கருகிவிட மாட்டா; அவை வளர்ந்து முழுமையான கம்யூனிசமாய் மலரும்.

* * *

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளின்'' முக்கியத்துவத்தில் நாம் மிகப் பெரிய அளவில் கருத்து செலுத்தியாக வேண்டும்; அப்பொழுதுதான் நாம் இந்த மாபெரும் தொடக்கத்திலிருந்து எழும் மிக முக்கிய நடைமுறைப் படிப்பினைகள் யாவற்றையும் பெற முடியும்.

முதலாவதும் முதன்மையானதுமான படிப்பினை என்னவென்றால் இந்தத் தொடக்கத்துக்கு எல்லா வழிகளிலும் உதவி புரிய வேண்டும். ''கம்யூன்'' என்னும் சொல் மிகவும் தாராளமாய்க் கையாளப்பட்டு வருகிறது. கம்யூனிஸ்டுகளால் துவக்கப்படும் அல்லது அவர்களுடைய பங்குடன் துவக்கப்படும் எந்த வகையான நிலையமும் உடனே ''கம்யூன்'' என்பதாய்ப் பறைசாற்றப்படுவது சகஜமாகி விட்டது. இது விடாப்பிடியான நீண்ட நெடிய உழைப்பால், கம்யூனிச நிர்மாணத்தில் மெய்யான நடைமுறை சாதனை காண்பதால் பெற வேண்டிய மாண்பு மிக்க பட்டம் என்பது அடிக்கடி மறக்கப்பட்டு விடுகிறது.

எனவேதான் மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் அரசாணையை ''நுகர்வாளர் கம்யூன்கள்'' என்கிற பெயரைப் பொருத்த மட்டில் ரத்து செய்வதென்ற தீர்மானம் மத்திய நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரின் மனத்தில் உருவாகி முற்றியதானது என்னுடைய அபிப்பிராயத்தில் முற்றிலும் நியாயமே. பெயர் எளியதாகவே இருக்கட்டும்—புதிய, ஒழுங்கமைப்புப் பணியின்

துவக்கக் கட்டங்களில் காணக் கூடிய தவறுகளுக்கும் குறை பாடுகளுக்குமான பழி ''கம்யூன்கள்'' மீது சுமத்தப்படாமல் (நியாயமாய்ச் செய்யப்பட வேண்டியது போல) மோசமான கம்யூனிஸ்டுகள் மீதே சுமத்தப்படும் அல்லவா? ''கம்யூன்'' என்னும் சொல்லை பொதுப் பிரயோகத்திலிருந்து விலக்கி நினைத்தவர் எல்லாம் இதை எடுத்தாளாதபடித் தடை செய்வது நல்லதுதான். தமது பணியைக் கம்யூனிஸ்டுக்குரிய பாணியில் ஒழுங்கமைத்துக் கொள்ளத்தக்கவை என்பதை நடைமுறையில் மெய்ப்பித்தும் (சுற்றிலுமுள்ள மக்கள் அனைவரின் ஒருமனதான அங்கீகாரத்தின் மூலம் நிரூபித்தும்) காட்டியுள்ள மெய்யான கம்யூன்கள் மட்டுமே இந்தப் பெயரைச் சூட்டிக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். சமுதாயத்தின் நலன்களுக்காக, உழைப்பாளி மக்கள் அனைவரின் நலன்களுக்காக ஊதியமின்றி உழைக்கக் கூடியவர் என்பதை முதலில் நிரூபித்துக் காட்டுங்கள்; ''புரட்சிகர முறையில் வேலை செய்யக்'' கூடியவர்தான், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் முன்மாதிரியான முறையில் வேலையை ஒழுங்கமைக்கவும் கூடியவர்தான் என்பதை நிரூபித்துக் காட்டுங்கள்; பிறகு ''கம்யூன்'' என்ற மாண்புமிக்க பெயரைப் பெற முன்வாருங்கள்!

இந்த விவகாரத்தில் ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' மிகவும் உயர் மதிப்புக்குரிய விதிவிலக்கானவை. எப்படியெனில் மாஸ்கோ-கஸான் ரயில் பாதையின் தேர்ச்சியில்லா வேலையாட்களும் ஊழியர்களும் தாம் கம்யூனிஸ்டுகள் போல் வேலை செய்யக் கூடியவர்கள் என்பதைச் செயல்களின் வாயிலாய் முதலில் நிரூபித்துக் காட்டிவிட்டு, பிறகு தமது முன்முயற்சிக்குக் ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' என்று பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குரிய தகுதி உண்டென்பதைக் கடினமான உழைப்பாலும் நீடித்த செயற்பாட்டில் பெறும் நடைமுறை வெற்றியாலும் முன்மாதிரியான மெய்யான கம்யூனிஸ்டு ஒழுங்கமைப்பாலும் நிரூபித்துக் காட்டாதவர் எவரும் இனி தமது நிலையம் அல்லது அலுவலகம் அல்லது ஏற்பாட்டிற்குக் கம்யூன் என்று பெயரிட்டுக் கொள்வாராயின், அவர் ஈவிரக்கமின்றி ஏளனம் செய்யப்பட்டு மோசடிக்காரர் அல்லது வாய்ச்சவடால்காரரென நிந்திக்கப்படும்படி நாம் விழிப்புடன் இருந்து உறுதி செய்தாக வேண்டும்.

மாபெரும் தொடக்கமான ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளை'' மற்றொரு காரியத்துக்காகவும், அதாவது தகாதோரை நீக்கிக் கட்சியைத் தூய்மை ஆக்குவதற்காகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புரட்சியை அடுத்து ஆரம்பக் காலத்தில், ''நேர்மையான'' குட்டி முதலாளித்துவ மனப்பாங்கினர் மிகவும் சந்தேகங்கொண்டிருந்த போது, முதலாளித்துவ அறிவாளிகள்—மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் அடங்கலாய்த்தான்—ஒருவர் பாக்கியில்லாமல் முதலாளி வர்க்கத்தாரின் அடிவருடிகளாய்ச் செயல்பட்டு சீர்குலைவு வேலைகள் புரிந்த போது சாகசக்காரர்களும் ஏனைய தீயவர்களும் ஆளும் கட்சியுடன் ஒட்டிக் கொண்டு விட்டனர்; இது சிறிதும் தவிர்க்க முடியாத நிகழ்ச்சியே. இது நடைபெறாத ஒரு புரட்சி என்றுமே இருந்ததில்லை, இருக்கவும் முடியாது. ஆளும் கட்சியானது வன்மையும் திண்மையும் வாய்ந்த முன்னேறிய வர்க்கத்தை ஆதாரமாய்க் கொண்டு தனது அணிகளிலிருந்து தகாதோரை நீக்கித் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் ஆற்றலுடையதாய் இருக்க வேண்டும்.

இந்தப் பணியை நாம் நெடுநாட்களுக்கு முன்பே தொடங்கினோம். இது முறையாகவும் அயராமலும் தொடர்ந்து நடைபெற வேண்டும். போருக்காகக் கம்யூனிஸ்டுகள் படைதிரட்டப்பட்டதானது இத்துறையில் நமக்கு உதவியாய் இருந்தது: கட்சி அணிகளிலிருந்து கோழைகளும் கயவர்களும் ஓட்டம் பிடித்தனர். இவர்கள் ஒழிந்தது நல்லதுதான்! கட்சி உறுப்பினர் தொகை இவ்வாறு குறைவதானது கட்சியின் வலிமையிலும் செல்வாக்கிலும் பிரம்மாண்ட அதிகரிப்பைக் குறிக்கிறது. தகாதோரைக் கழித்தொதுக்கும் வேலையை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும்; புதிய தொடக்கமான ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளை'' இதற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்: ''புரட்சிகர முறையில் வேலை செய்வதில்'' சில காலம், உதாரணமாய் ஆறு மாத காலம், ''சோதிக்கப்பட்ட'' அல்லது ''பரீட்சிக்கப்பட்ட'' பிறகே எவரும் கட்சியினுள் ஏற்கப்பட வேண்டும். 1917 அக்டோபர் 25க்குப் பிற்பாடு சேர்ந்து கொண்டோரும், முற்றிலும் தாம் நம்பத்தக்கவரே, பற்றுறுதி வாய்ந்தோரே, கம்யூனிஸ்டுகளாய் இருக்கத் தகுதியுடையோரே என்று விசேஷ வேலை அல்லது சேவையின் மூலம் நிரூபித்துக் காட்டாதோருமான

கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் இது போன்ற சோதனைக்கு உள்ளாக வேண்டுமென்று கோர வேண்டும்.

மெய்யான கம்யூனிஸ்டு முறையில் வேலை செய்வது குறித்து கட்சி இடையருது மேலும் மேலும் கூடுதலாய்க் கண்டிப்பான கோரிக்கைகளை வைப்பதன் மூலம் தகாதோரைக் கழித்து விடுமாயின் அரசு இயந்திரம் மேம்பாடுற்றுச் செம்மையாகும்; விவசாயிகள் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் பக்கத்துக்கு முடிவாய் மாறிவிடும் காலம் மிகவும் நெருங்கி வந்துவிடும்.

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் அரசு இயந்திரத்தின் வர்க்க இயல்பை எடுப்பாய்த் தெரியச் செய்வதை இங்கு குறிப்பிடலாம். ''புரட்சிகர முறையில் வேலை செய்வது'' குறித்து கட்சியின் மத்தியக் கமிட்டி ஒரு கடிதம் தயாரித்தது. 1,00,000லிருந்து 2,00,000 வரையிலான உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் மத்தியக் கமிட்டி ஒரு கருத்தை முன்வைக்கிறது (தகாதோரைப் பூரணமாய்க் கழித்த பின் எஞ்சும் எண்ணிக்கை இதுவாகவே இருக்குமெனக் கொள்கிறேன்; தற்போது உறுப்பினர் தொகை அதிகமாகும்).

தொழிற் சங்கங்களில் ஒன்றுதிரண்டுள்ள தொழிலாளர்கள் இந்தக் கருத்தைப் பற்றிக் கொள்கிருர்கள். ருஷ்யாவிலும் உக்ரேனிலும் இவர்களுடைய எண்ணிக்கை சுமார் நாற்பது லட்சமாகும். இவர்களில் மிகப் பெரும்பான்மையோர் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தை, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஆதரிப்பவர்கள். இரண்டு லட்சமும் நாற்பது லட்சமும், ''பற்சக்கரங்களுக்கு''—இப்படிக் கூறலாமெனில்—இடையிலுள்ள விகிதம் இவ்வாறு இருக்கிறது. பிறகு கோடானு கோடியான விவசாயிகள் உள்ளனர். இவர்கள் மூன்று பிரதான பகுதிகளாய்ப் பிரிந்திருக்கிருர்கள்: எண்ணிக்கையில் மிகுதியானதும் பாட்டாளி வர்க்கத்துக்கு மிக நெருங்கியதுமான பகுதி அரைப் பாட்டாளி வர்க்கத்தினர் அல்லது ஏழை விவசாயிகளின் பகுதி; பிறகு நடுத்தர விவசாயிகளின் பகுதி; முடிவில் எண்ணிக்கையில் மிகச் சொற்பமான குலாக்குகள்[49] அல்லது கிராமப் புற முதலாளி வர்க்கத்தினரின் பகுதி.

தானிய வியாபாரம் புரிந்து பஞ்சத்திலிருந்து லாபம் பெறுவது சாத்தியமாயிருக்கும் வரை விவசாயி பாதி உழைப்

பாளியாகவும் பாதி லாபவேட்டைக்காரனுகவும்தான் இருப்பான் (பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் சில காலத்துக்கு இது தவிர்க்க முடியாததே). லாபவேட்டைக்காரன் என்ற முறையில் விவசாயி நமக்குப் பகைமையாய், பாட்டாளி வர்க்க அரசுக்குப் பகைமையாய் இருக்கிறுன்; முதலாளி வர்க்கத்தாருடனும் அவர்களது விசுவாசமான அடிவருடிகளுடனும் — தானியத்தில் வர்த்தகச் சுதந்திரம் வேண்டுமெனக் கோரும் மென்ஷிவிக் ஷேரையும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் செர்னென்கோவையும் உள்ளடக்கி —உடன்பாடு கொள்ள விரும்புகிறுன். ஆனுல் உழைப்பாளி என்ற முறையில் விவசாயி பாட்டாளி வர்க்க அரசின் நண்பன், நிலப்பிரபுவுக்கும் முதலாளிக்கும் எதிரான போராட்டத்தில் தொழிலாளியின் மிகவும் விசுவாசமான கூட்டாளி. உழைப்பாளர்கள் என்ற முறையில் பெருந்திரளான விவசாயிகள், கோடானு கோடியான விவசாயிகள் இந்த அரசு ''இயந்திரத்தை''—பாட்டாளி வர்க்க முன்னணிப் படையின் ஒன்று அல்லது இரண்டு லட்சம் கம்யூனிஸ்டுகளால் தலைமை தாங்கப்பட்டதும், நிறுவன ஒழுங்கமைப்பு கொண்ட பத்து லட்சக் கணக்கான பாட்டாளி வர்க்கத்தாராலானதும் ஆகிய இந்த அரசு ''இயந்திரத்தை''— ஆதரிக்கின்றனர்.

இதைக் காட்டிலும் ஜனநாயகத் தன்மையதான—இச் சொல்லின் மெய்ப் பொருளில்—ஓர் அரசு, உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்கள் திரளுடன் இதைக் காட்டிலும் நெருக்கமாய் இணைந்த ஓர் அரசு இதற்கு முன் எப்போதும் இருந்ததில்லை.

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளில்'' செய்யப்படுவதைப் போன்ற இந்தப் பாட்டாளி வர்க்கத் தன்மையதான பணிதான் பாட்டாளி வர்க்க அரசுக்கு விவசாயிகளுடைய நன் மதிப்பையும் பாசத்தையும் முழு அளவில் பெற்றுத் தரப் போகிறது. இத்தகைய பணியேதான், இது மட்டுமேதான், நமது கட்சியே சரி, கம்யூனிசம்தான் சரி என்கிற உறுதியான முழு நம்பிக்கையை விவசாயிகளுக்கு உண்டாக்கி அவர்களை நமது பற்றுறுதி மிக்க கூட்டாளிகளாக்கப் போகிறது; இவ்வழியில் உணவுத் தட்டுப்பாடு அறவே ஒழிவதற்கும் தானிய உற்பத்தியிலும் வினியோகத்திலும் முதலாளித்துவத்தின் மீது கம்யூனிசம் முழு வெற்றி பெறு

*வதற்கும் கம்யூனிசம் தங்குதடையின்றி உறுதியடைவதற்கும் வழி செய்யப் போகிறது.*

*1919 ஜூன் 28*

நூல் திரட்டு,
*39, தொகுதி*
*பக்கங்கள் 1-29*

## விவசாயக் கம்யூன்கள் மற்றும் விவசாய ஆர்ட்டல்களின் முதலாவது காங்கிரசில் ஆற்றிய உரை 1919 டிசம்பர் 4

*தோழர்களே! உங்களது விவசாயக் கம்யூன்கள் மற்றும் விவசாய ஆர்ட்டல்களின் முதலாவது காங்கிரசுக்கு அரசாங்கத்தின் சார்பில் மிகுந்த மகிழ்ச்சியுடன் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறிய தனிப்பட்ட விவசாயப் பண்ணை பொதுவான, கூட்டு முறை அல்லது ஆர்ட்டல் பாணி பண்ணை முறையாக மாறுவதையும் படிப்படியாக அவ்வாறு மாற்றமடைய உதவுவதையும் நோக்கமாகக் கொண்டதான கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் பொதுவான எல்லா நிறுவனங்களுக்கும் நாம் எவ்வளவு பிரம்மாண்டமான முக்கியத்துவம் அளித்து வருகிறோம் என்பதை சோவியத் அரசாங்கத்தின் எல்லாச் செயல்பாடுகளில் இருந்தும் நீங்கள் அறிவீர்கள் என்பது திண்ணம். இந்த வகையான முயற்சிகளுக்கு உதவுவதற்காக நீண்ட காலம் முன்பே சோவியத் ஆட்சியதிகாரம் நூறு கோடி ரூபிள் தொகையை ஒதுக்கியது[50] என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ''நிலம் சம்பந்தப்பட்டதான சோஷலிஸ்டு நடவடிக்கைகள் மீதான நிரந்தரச் சட்டம்''[51] கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் நிலத்தைக் கூட்டாக சாகுபடி செய்வதற்கான எல்லா நிறுவனங்களதும் உட்பொருளைக் குறிப்பாக வலியுறுத்துகிறது; மற்றும் இந்தச் சட்டம் வெறும் காகித அளவில் மட்டும் இல்லாமல், அது என்ன அனுகூலங்களை உண்டாக்க உத்தேசித்திருந்ததோ, அந்த அனுகூலங்களை மெய்யாகவே உண்டாக்குவதை உத்தரவாதம் செய்ய சோவியத் ஆட்சியதிகாரம் சகல முயற்சிகளையும் செய்து வருகிறது.*

*இந்த வகையான எல்லா நிறுவனங்களின் முக்கியத்துவமும் பிரம்மாண்டமானது; காரணம் பழைய மோசமான வறுமைப்பட்டதான விவசாயி சாகுபடி முறை மாறுமல்*

நீடிக்குமானுல், ஓர் உறுதியான சோஷலிஸ்டுச் சமுதாயத்தைக் கட்டுவது என்பது இயலாத காரியம். நிலத்தில் பொதுவான, கூட்டு முறையிலான, கூட்டுறவுச் சங்கம், ஆர்ட்டல் வழி சாகுபடி முறையின் சாதகங்களை விவசாயிகளுக்கு நடைமுறையில் நிரூபித்துக் காட்டுவதில் வெற்றி பெறும் பட்சத்தில் மட்டுமே, கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஆர்ட்டல் முறை சாகுபடி மூலம் விவசாயிகளுக்கு உதவுவதில் நாம் வெற்றியடையும் பட்சத்தில் மட்டுமே, அரசு அதிகாரத்தை நிர்வகித்து வரும் தொழிலாளி வர்க்கம் தனது கொள்கை சரியானது என்பதை விவசாயிகளுக்கு உண்மையாகவே மெய்ப்பித்துக் காட்டி அதன் மூலம் லட்சக் கணக்கான விவசாயிகளின் உண்மையான மற்றும் நிலையான ஆதரவைப் பெற முடியும். எனவே சாகுபடியில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஆர்ட்டல் வடிவங்களை ஊக்குவிக்கும் உத்தேசத்துடனுன ஒவ்வொரு நடவடிக்கையின் முக்கியத்துவத்தையும் மிகைபடக் கூறுவது சாத்தியமல்ல. நமது நாட்டில் லட்சக் கணக்கான தனிப்பட்டோர் பண்ணைகள் உள்ளன; அவை தொலைவிலான நாட்டுப் புற மாவட்டங்கள் முழுதிலும் பரவலாயும் துண்டு துண்டாயும் கிடக்கின்றன. ஒரு உத்தரவு போடுவது மூலமோ, வெளியில் இருந்து நிர்ப்பந்தம் கொண்டு வருவது மூலமோ இந்தப் பண்ணைகளுக்குத் துரிதமான முறையில் மறு வடிவம் தர முயல்வது முற்றும் அபத்தமானது. லட்சக் கணக்கான சிறு விவசாயிப் பண்ணைகள் மீது படிப்படியாகவும் எச்சரிக்கையுடனும் மட்டுமே, வெற்றிகரமான நடைமுறை உதாரணம் மூலம் மட்டுமே செல்வாக்குச் செலுத்த முடியும் என்பதை நாம் முழுமையாக உணர்கிருேம். ஏனெனில் விவசாயிகள் மிகமிகக் காரிய நோக்குடையவர்கள்; வெறும் ஆலோசனை அல்லது ஏட்டறிவு அடிப்படையில் மட்டுமே எந்த ஒரு முக்கியமான மாற்றத்தையும் ஏற்பதற்கு இசையாமல் பழைய சாகுபடி முறைகளை மிகமிகப் பிடிவாதமாகப் பற்றி நிற்பவர்கள். அது சாத்தியமல்ல மற்றும் அபத்தமானதும் ஆகும். கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஆர்ட்டல் வடிவிலான சாகுபடி முறைக்கு மாறிச் செல்வது அத்தியாவசியமானது, சாத்தியமானது என்பதை நடைமுறையிலும் விவசாயிகள் புரிந்து கொள்ளக் கூடியதான அனுபவம் மூலமும் நிரூபிக்கப்பட்டதற்குப் பிறகு மட்டுமே நாம் இந்த விரிந்து பரந்த விவசாய நாடான ருஷ்

யாவில் சோஷலிஸ்டு விவசாயத்தை நோக்கிய ஒரு முக்கிய மான அடி எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல உரிமை யுடையவர்களாவோம். இதன் பின் விளைவாக, கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரித்தான பரந்த முக்கியத்துவம் உங்கள் எல்லோர் மீதும் விழுகிறது; பிரம்மாண்டமான அரசு மற்றும் சோஷலிஸ்டுக் கடப்பாடு ஆகிறது. மேலும், இந்த விஷயத்தை விசேஷக் கவனத்துட னும் எச்சரிக்கையுடனும் கருதிப் பார்க்க வேண்டுவது சோவியத் ஆட்சியதிகாரத்துக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் இயல்பாகவே அவசர அவசியமாகிறது.

எல்லா கூட்டுறவு, ஆர்ட்டல் விவசாய நிறுவனங்களும் சுற்றுமுள்ள விவசாயி மக்களிடம் இருந்து தனிப்படவோ, பிரிந்து செல்லவோ கூடாது எனவும் மாருக அவர்களுக்கு உதவி புரிய வேண்டுவது அவற்றின் முழுமுதற் கடமை என்றும் நாம் கருதுவதாக நிலம் சம்பந்தப்பட்டதான சோஷ லிஸ்டு நடவடிக்கைகள் மீதான நமது சட்டத்தில் கூறப்பட் டிருக்கிறது. இது சட்டத்தில் வரையப்பட்டுள்ளது; எல்லா கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுவான விதிகளில் மறுபகர்ப்பு செய்யப்பட்டுள்ளது; நமது விவசாயத் துறை மக்கள் கமிசாரகம் மற்றும் எல்லா சோவியத் ஆட்சியதிகார உறுப்பமைப்புகளின் நெறிமுறை கள் மற்றும் தீர்ப்புகளில் இடையருது வலியுறுத்தப்பட்டுள் ளது. ஆனுல் இதைச் செயல்படுத்துவதற்கான மெய்யான ஒரு நடைமுறை சார்ந்த வழிமுறையைக் கண்டுபிடிப்பது என்பதே இங்கு முழுமையான காரியம். இந்த அடிப்படை யான இடர்ப்பாட்டை நாம் வென்று சமாளித்து விட்டோம் என்று இன்னும் நான் திடமாக நம்பவில்லை. ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் வந்துள்ள பொதுவான விவ சாயத்தில் ஈடுபட்ட செயல் பாங்குள்ள ஊழியர்கள் தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு நல்கி யுள்ள உங்களது காங்கிரஸ் எல்லா சந்தேகங்களுக்கும் முடிவு கட்ட வேண்டும்; ஆர்ட்டல்கள், கூட்டுறவுச் சங்கங் கள் மற்றும் கம்யூன்களையும் பொதுவான மற்றும் கூட்டு முறையிலான விவசாயத்தின் எல்லா வடிவிலுமான நிறுவ னங்களையும் கெட்டிப்படுத்தும் பணியினை நாம் கற்றுக் கரை கண்டு வருகிருேம், நடைமுறையில் கற்றுக் கரை காணத் தொடங்கியுள்ளோம் என்பதை நிரூபிக்க வேண்டும்

என்றும் நான் விரும்புகிறேன். ஆனல் இதை நிரூபிப்பதற்கு உண்மையிலேயே நடைமுறைப் பலன்கள் தேவை.

விவசாயக் கம்யூன்களின் விதிகளேயோ, இந்த விஷயம் பற்றி விளக்கும் புத்தகங்களேயோ நாம் படிக்கும் போது அவற்றில் நாம் கம்யூன்களே ஒழுங்கமைப்பதன் அவசியம் குறித்த பிரசாரத்துக்கும் அதை தத்துவார்த்த முறையில் நியாயப்படுத்தவும் அதிகமான இடம் ஒதுக்குவது போலத் தோன்றலாம். அது அவசியம் என்பது திண்ணம்; ஏனெனில் விவரமான பிரசாரம் இல்லாமல், கூட்டுறவு விவசாயத்தின் சாதகங்களே விளக்கிக் கூருமல், இந்தக் கருத்தை ஆயிரம் ஆயிரம் தடவைகள் திரும்பத் திரும்பக் கூருமல் விவசாயி களின் விரிவான திரள் இதில் அக்கறை கொள்வார்கள் மற்றும் இதனைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளேப் பற்றிய நடைமுறை சோதனைகளே மேற்கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. பிரசாரம் அவசியம் என்பது திண்ணம்; திரும்பக் கூறுவது பற்றி அஞ்சத் தேவையில்லே; ஏனெனில் நமக்குத் திரும்பக் கூறல் என்று தோற்றமளிப் பது நூறு ஆயிரக் கணக்கான விவசாயிகளுக்குத் திரும்பக் கூறல் அன்று, மாருக முதல் தடவையாக வெளிப்படுத்தப் பட்ட உண்மையேயாகும். நாங்கள் பிரசாரத்தில் மிக அதிகக் கவனம் செலுத்தி வருவதாக கருதலாம், ஆனல் இதை விட இன்னும் நூறு மடங்கு அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கட்டாயம் கூறியாக வேண்டும். இதை நான் சொல் லும் போது நான் கொள்ளும் அர்த்தம், விவசாயிகளிடம் விவசாயக் கம்யூன்களே ஒழுங்கமைப்பதன் சாதகங்களேப் பொதுவாக விளக்கி, அதே சமயம் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஆர்ட்டல் பண்ணைகளால் அவர்களுக்குக் கிட்டப் போகும் நடைமுறை சாதகங்களே உண்மையில் எடுத்துக் காட்ட இயலாத பட்சம், அவர்களுக்கு நமது பிரசாரத்தில் எள்ளளவும் நம்பிக்கை இருக்காது என்பதாகும்.

சுற்றுப் புறத்தில் வாழும் விவசாயி மக்களுக்குக் கம் யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் உதவி புரிய வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. ஆனல் அரசு, தொழிலாளர் ஆட்சியதிகாரம் விவசாயக் கம்யூன்களுக்கும் ஆர்ட்டல்களுக்கும் உதவும் நோக்கத்துடன் நூறு கோடி ரூபிள் நிதி வழங்குகிறது. இந்த நிதியில் இருந்து எந்தக்

கம்யூனுவது விவசாயிகளுக்கு உதவுமானுல், இது விவசாயி கள் மத்தியில் ஏளனத்தை மட்டுமே எழுப்புவதாக இருக்கும் என நான் அஞ்சுகிறேன். அது முற்றிலும் நியாயமாகவே இருக்கும். ''நூறு கோடி ரூபிள் நிதி உங்களுக்குக் கிடைக் கிறதென்ருல், அதில் ஒரு சிறிதை எங்கள் பக்கம் வீசுவது உங்களுக்கு ஒரு பொருட்டல்ல என்பது சொல்லாமலே விளங் கும்'' என்று ஒவ்வொரு விவசாயியும் கூறுவான். விவசாயி சிரித்து இகழ்வான் என்று நினைக்கிறேன்; ஏனெனில் அவன் இந்த விஷயத்தில் கணிசமான அக்கறை கொண்டிருக்கிருன், இதைப் பற்றி மிகவும் அவநம்பிக்கை கொண்டு இருக்கிருன். நூற்ருண்டுகள் காலமாக அரசு அதிகாரத்திடம் இருந்து ஒடுக்குமுறையினை மட்டுமே எதிர்பார்த்து வழக்கப்பட்டிருக் கிருன் விவசாயி. எனவே அரசு கஜாஞவிடம் இருந்து வரும் எதையும் சந்தேகத்தோடு பார்ப்பது அவனுக்குப் பழக்க மாகி விட்டது. சட்டத்தினை சொல்லுக்குச் சொல் நிறைவு செய்வதற்காக மட்டும் விவசாயக் கம்யூன்கள் விவசாயி களுக்கு உதவி வழங்கும் பட்சத்தில், அத்தகைய உதவி பயனற்றது மட்டுமல்ல, தீங்கு விளைப்பதுமாகும். ஏனெனில் ''விவசாயக் கம்யூன்'' என்பது மகத்தான பெயர்; அது கம்யூனிசம் எனும் கருத்தோட்டத்துடன் இணைத்து எண்ணப் படுவது. விவசாயிகள் பயிர்த் தொழிலின் மேம்பாட்டிற் காகத் தாம் உண்மையில் காரிய நோக்குடன் பாடுபடுவதாக கம்யூன்கள் நடைமுறையில் காட்டுமானுல், இது மிகவும் நல்ல விஷயம். அது சந்தேகமின்றி கம்யூனிஸ்டுகளின், கம்யூ னிஸ்டுக் கட்சியின் மதிப்பை உயர்த்துவதாக இருக்கும். ஆனுல் விவசாயிகள் மத்தியில் எதிர்மறையான ஒரு போக் கினைத் தூண்டி விடுவதில் மட்டுமே கம்யூன்கள் வெற்றி கண்டிருப்பதும், மற்றும் சில வேளை ''கம்யூன்'' எனும் சொல் கம்யூனிசத்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு அறைகூவல் ஆகி விட்டதும் அடிக்கடி நேர்ந்துள்ள சம்பவங் களாகும். விவசாயிகளை வலுவந்தமாகக் கம்யூன்களுக்குள் சேரும்படி விரட்ட அசட்டுத் தனமான முயற்சிகள் செய்யப் பட்ட போது மாத்திரம் இவை நிகழவில்லை. இதன் அபத்தத் தன்மை கண்கூடாக இருந்தபடியால், சோவியத் ஆட்சியதி காரம் இதை நீண்ட காலம் முன்பே தடை செய்து விட்டது. இப்போது இத்தகைய கட்டாயப்படுத்தும் தனிப்பட்ட உதாரணங்கள் காணப்படுமானுல், அவை மிகவும் சொற்ப

மாகவே இருக்கும் எனவும் நீங்கள் இந்தக் காங்கிரஸைப் பயன்படுத்திக் கொண்டு இந்த அட்டூழியத்தின் கடைசி அடையாளங்கூட சோவியத் குடியரசின் பரப்பில் இருந்து துடைத்தெறியப்படும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் கம்யூனில் உறுப்பினராவது ஏதாவது ஒருவகையில் வலுவந்தப்படுத்தலுடன் தொடர்புடையது எனும் பழைய கருத்துக்கு ஆதரவாக அண்டை அயல் விவசாயி மக்கள் ஒரு சம்பவத்தைக்கூடச் சுட்டிக் காட்ட முடியாதபடிச் செய்து விடுவீர்கள் எனவும் நான் எதிர்பார்க்கிறேன்.

நாம் இந்தப் பழைய குறைபாட்டை அகற்றி இந்த அட்டூழியத்தை முழுமையாக அடக்கிய போதிலுங்கூட, நாம் செய்ய வேண்டி இருக்கும் பணியில் இது இன்னமும் ஒரு சிறு பகுதியாகவே இருக்கும். ஏனெனில் கம்யூன்களுக்கு அரசு உதவி புரிவது இன்னும் தேவையாக இருக்கும்; மற்றும் எல்லா வகையான கூட்டு முறையிலான விவசாய நிறுவனங்களுக்கும் நாம் அரசு உதவி வழங்காவிடில், நாம் கம்யூனிஸ்டுகளாகவோ, சோஷலிஸ்டுப் பொருளாதாரத்தின் தீவிர ஆதரவாளர்களாகவோ இருக்க முடியாது. இது நமது குறிக்கோள்கள் அனைத்துக்கும் பொருத்தமாக இருப்பதால் நாம் அவ்வாறு செய்ய வேண்டும். காரணம் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டு முறை நிறுவனங்கள் புதுப்புனைவுகள் என்பதையும் இவற்றுக்கு ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தொழிலாளி வர்க்கம் ஆதரவு தராவிடில் இவை வேரூன்ற முடியாது என்பதையும் நாம் முற்றும் நன்ருக அறிவோம். அவை நன்கு வேரூன்றும் பொருட்டும், அரசு அவற்றுக்கு நிதி மற்றும் இதரவகையான எல்லா ஆதரவும் தருவதன் காரணமாயும் அவை விவசாயிகளின் இடையே ஏளனத்தை எழுப்பாதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டும். விவசாயி, கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் அரசை அண்டி வாழ்பவர்கள் எனவும் அவர்கள் தனிச் சலுகைகள் பெறுவதால் மட்டுமே விவசாயிகளிடமிருந்து வேறுபடுகிருர்கள் எனவும் கூற இடமளியாதபடி நாம் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். நாம் நிலமும் கட்டிடங்கள் கட்டுவதற்கு உதவிப் பணமும் இந்த நூறு கோடி ரூபிள் நிதியில் இருந்து தருவோமாளுல், எந்த ஒரு மூடனுங்கூட சாமான்ய விவசாயியை விட மேம்பட்டு வாழ்வான் என்பது திண்ணம். இதில்

கம்யூனிஸ்டுத் தன்மை எங்கு இருக்கிறது, மேம்பாடு எங்கே இருக்கிறது? நாம் ஏன் இதை மதிக்க வேண்டும்? என்று விவசாயி கேட்பான். ஒரு சில பதின்மர் அல்லது சில நூறு தனி நபர்களைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்கு நூறு கோடி கொடுத்தீர்களானல், அவர்கள் திண்ணமாயும் வேலை செய்வார்கள்.

விவசாயிகள் மத்தியில் இத்தகைய போக்கு எழுவது மிகவும் அஞ்சத்தக்கது; இது குறித்து காங்கிரசில் கூடியுள்ள தோழர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். இந்தப் பிரச்சினைக்கு நடைமுறையில் தீர்வு காணுதல் வேண்டும். அப்போதுதான் நாம் இந்த அபாயத்தைத் தவிர்த்து விடுவது மட்டுமன்றி, விவசாயி இந்த வழியில் சிந்திப்பதற்கு இட்டுச் செல்லப்படாமல்,இதற்கு மாருக அவன் ஒவ்வொரு கம்யூனும் ஆர்ட்டலும் அரசு உதவியளித்து வரும் அமைப்புகள் என்று காணவும்,பழைய முறைகளை விடவும் சாதகமான புதிய சாகுபடி முறைகளை அவற்றில் காணவும், இவற்றை புத்தகங்கள் மற்றும் பிரசங்கங்களில் அன்றி (இவற்ருல் அவ்வளவு பயன் இல்லை) நடைமுறை அனுபவத்தில் காணவும், அதற்காகப் போராடவும் உரிய சாதனங்களைக் கண்டு விட்டோம் என்று நாம் கூற முடியும். இதனுல்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மிகவும் கடினமாக இருக்கிறது; இதனுல்தான் வெறும் வறட்டுப் புள்ளிவிவரங்கள் மட்டுமே நம் முன் இருக்கும் நிலையில் ஒவ்வொரு கம்யூனும் ஒவ்வொரு ஆர்ட்டலும் பழைய அமைப்பின் நிறுவனங்களைக் காட்டிலும் உண்மையிலேயே மேலானவை என்பதையும் தொழிலாளர் ஆட்சியதிகாரம் இங்கு விவசாயிகளுக்கு உதவி செய்கிறது என்பதையும் நாம் நடைமுறையில் நிரூபித்துக் காட்டியுள்ளோமா என்பதை நிர்ணயிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினைக்கு நடைமுறைத் தீர்வு காண்பதற்கு அண்டையில் இருக்கும் பல கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய நேரடிப் பரிச்சயம் பெற்றுள்ள நீங்கள் மெய்யான காரிய சாத்தியமான வழிமுறைகளை வகுப்பது மிகவும் விரும்பத்தக்கதாகும் என்று நான் நினைக்கிறேன். இந்த வழிமுறைகள் சுற்றும் வாழும் மக்களுக்கு விவசாயக் கம்யூன்கள் உதவி அளிக்க வேண்டும் என்று கோரும் சட்டம் அமுலாக்கப்படுவதைச் சோதித்துப் பார்க்க

உதவும். சோஷலிஸ்டுச் சாகுபடி முறைக்கான இடை மாற்றம் எந்த வழியில் செயல்படுத்தப்படுகிறது; ஒவ்வொரு கம்யூன், ஆர்ட்டல் மற்றும் கூட்டுறவுச் சங்கத்தில் இது எடுக்கும் ஸ்தூலமான வடிவம் என்ன;இது எவ்வாறு உண்மை யில் செயல்படுத்தப்படும்; இதனை எத்தனை கூட்டுறவுச் சங் கங்களும் கம்யூன்களும் உண்மையில் செயல்படுத்துகின்றன; அவ்வாறு செய்ய ஆயத்தம் மட்டுமே செய்து வருபவை எத்தனை; கம்யூன்கள் உதவி வழங்கியுள்ள சம்பவங்கள் எத்தனை; இந்த உதவிகளின் தன்மை என்ன—இரக்கத் தன்மையா அல்லது சோஷலிஸ்டுத் தன்மையா என்பவற்றை யும் சோதித்துப் பார்க்க இந்த வழிமுறைகள் உதவும்.

அரசு தமக்குத் தரும் உதவி நிதியில் இருந்து கம்யூன் களும் ஆர்ட்டல்களும் ஒரு பங்கை விவசாயிகளுக்கு ஒதுக்கு மானுல், ஒவ்வொரு விவசாயியும் கருணை உள்ளம் கொண்ட நபர்கள் தனக்கு உதவுகிருர்கள் என்று மட்டுமே நம்புவதற்கு இது முகாந்தரமாக இருக்குமே தவிர சோஷலிஸ்டு அமைப் புக்கு மாறிச் செல்வதற்கான நிரூபணமாக எவ்வகையிலும் இராது. இத்தகைய ''கருணை உள்ளம் படைத்த நபர்களை'' விவசாயிகள் காலகாலமாகச் சமுசயத்துடன் பார்த்தே வழக்கப்பட்டிருக்கிருர்கள். இந்தப் புதிய சமுதாய அமைப்பு எந்த வழியில் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறது என்பதும் நிலத்தைக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஆர்ட்டல் முறையில் சாகுபடி செய்வது எப்படி தனிப்பட்ட விவசாயி சாகுபடியை விடவும் சிறந்தது, அரசு உதவியால் மட்டுந்தான் இது சிறந்தது என்பதால் அல்ல என்பவற்றை விவசாயிகளுக்கு எந்த முறைகளில் நிரூபித்துக் காட்டப்படு கிறது என்பதும் குறித்து எப்படிச் சரிபார்ப்பது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். அரசு உதவி இல்லாமலுங்கூட இந்தப் புதிய அமைப்பு நடைமுறையில் நிறைவேற்றப்படும் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துக் காட்ட இயல வேண் டும்.

துரதிருஷ்டவசமாக, உங்களது காங்கிரஸ் முடிவடை யும் வரையில் நான் இங்கு இருக்க இயலாது; எனவே இந்தக் கண்காணிப்பு முறைகளை விரிவிளக்கம் செய்வதில் பங்கு பற்ற இயலாது. ஆனுல் நமது விவசாயத் துறை மக்கள் கமிசாரகத்துக்குப் பொறுப்பாக இருக்கும் தோழர்களின் உதவியுடன் இந்த முறைகளைக் கண்டு அறிந்து கொள்வதில்

நீங்கள் வெற்றியடைவீர்கள் என்பது திண்ணம். விவசாயத் துறை மக்கள் கமிசார் தோழர் செரெதா எழுதிய ஒரு கட்டுரையை மிகுந்த மன நிறைவுடன் நான் படித்தேன். அதில் அவர், கம்யூன்களும் கூட்டுறவுச் சங்கங்களும் சுற்றும் வாழும் விவசாயிகளிடம் இருந்து தனிப்பட்டு நிற்கக் கூடாது, ஆனால் அவர்களின் பண்ணைகளை மேம்படுத்தப் பாடு பட வேண்டும் என்று வற்புறுத்துகிறார். அது ஒரு முன்மாதிரி யாக உதவ வேண்டும், அண்டையில் வாழும் விவசாயிகள் அதனால் கவரப்பட வேண்டும் எனும் நோக்கத்திற்காகவே ஒரு கம்யூன் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். பொருட்களின் பற்றாக்குறை மற்றும் பொதுவான பொருளாதாரக் குழப் பம் எனும் சங்கடமான நிலைமைகளின் கீழ் தமது பண்ணை களை நிர்வகித்து வரும் மக்களுக்கு எவ்வாறு உதவுவது என் பதற்கு ஒரு காரிய சாத்தியமான உதாரணத்தை வகுத்த ளிக்க இயல வேண்டும். இதைச் செயல்படுத்துவதற்கான காரியகரமான முறைகளை வரையறுக்கும் பொருட்டு, மிகவும் விவரமான நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். அவை அண்டையில் வாழும் விவசாயிகளுக்கு உதவும் எல்லா வடி வங்களையும் எடுத்துரைக்க வேண்டும். இந்த நெறிமுறைகள் விவசாயிகளுக்கு உதவ அவை என்ன செய்தன என்பதை ஒவ்வொரு கம்யூனும் எடுத்து விளக்கும்படிக் கோர வேண் டும். தற்போது நிலவும் இரண்டாயிரம் கம்யூன்களிலும் கிட்டத்தட்ட நாலாயிரம் ஆர்ட்டல்களிலும் ஒவ்வொன்றும், சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் ஒரு வடிவம் என்ற முறையில் கூட்டுப் பண்ணை என்பது விவசாயிகளுக்கு அனு கூலமான ஒன்று, ஒரு குழம்பிய மனதின் சபல எண்ணமோ அல்லது வெறிப்பிதற்றலோ அல்ல எனும் வகையில் விவசாயி யின் திட நம்பிக்கையை உண்மையில் வலுப்படுத்தும் ஆற்ற லுள்ள ஒரு கருமையம் ஆவதற்குரிய வழிமுறைகளையும் இந்நெறிமுறைகள் சுட்டிக் காட்ட வேண்டும்.

கம்யூன்கள் சுற்றும் வாழும் விவசாயி மக்களுக்கு உதவி வழங்க வேண்டும் என்று சட்டம் கோருகிறது என்பதை நான் ஏற்கெனவே கூறினேன். சட்டத்தில் நாம் வேறு மாதிரி யாகக் கூறுவதோ அல்லது அதில் ஏதேனும் நடைமுறை நெறிமுறைகளை வழங்குவதோ முடியாது. பொதுவான கோட்பாடுகளை நிலைநாட்டுவதும் வட்டாரங்களில் இருக்கும் அரசியல் உணர்வுடைய தோழர்கள் இச்சட்டத்தை இம்மி

யும் பிழையாது பயன்படுத்தி ஒவ்வொரு வட்டாரத்தின் சம்பந்தப்பட்ட ஸ்தூலமான பொருளாதார நிலைமைகளில் அதை நடைமுறையில் பிரயோகிப்பதற்கான ஆயிரம் வழிகளைக் காண இயலும்படிச் செய்வதுமே நமது வேலை. ஆனால் ஒவ்வொரு சட்டத்தையும், அதை அனுசரிப்பது போன்று வேடமிட்டே தட்டிக் கழிக்க முடியும் என்பது நிச்சயம். எனவே விவசாயிகளுக்கு உதவிடும் சட்டம் இம்மியும் பிழையாது பயன்படுத்தப்படவில்லையானால், அது வெறும் விளையாட்டாகி விடலாம்; உத்தேசித்த விளைவுகளுக்கு முற்றிலும் நேர்மாறான விளைவுகளுக்கு இட்டுச் செல்லலாம்.

அவற்றுடனான தொடர்பு மூலமும் அவை தரும் பொருளாதார உதவி மூலமும் விவசாயி சாகுபடி நிலைமைகள் மாறத் தொடங்கும் அத்தகைய ஒரு வழியில் கம்யூன்கள் அபிவிருத்தி அடைய வேண்டும். ஒவ்வொரு கம்யூனும் ஆர்ட்டலும் கூட்டுறவுச் சங்கமும் இந்த நிலைமைகளில் மேம்பாடு செய்யத் தொடங்கி இந்த மாறுதல் அவர்களுக்கு அனுகூலமானதே என்று நடைமுறையில் விவசாயிகளுக்கு நிரூபித்துக் காட்டி இம்மாறுதலை உண்மையில் செயல்படுத்திட முடியும் வழியில் கம்யூன்களும் வளர்ச்சி அடைய வேண்டும்.

விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நாலாண்டு கால ஏகாதிபத்தியப் போராலும் ஏகாதிபத்தியவாதிகளால் நம் மீது திணிக்கப்பட்ட இரண்டாண்டு கால உள்நாட்டுப் போராலும்[52] ஏற்படுத்தப்பட்ட இன்றைய பொருளாதாரக் குழப்பத்தில் இருந்து வேறுபட்டதான நிலைமைகள் அவசியம் என்று நம்மிடம் கூறப்படும் என்று இயல்பாகவே நீங்கள் கருதலாம். இப்போது நமது நாட்டில் நிலவும் இத்தகைய நிலைமைகளில் விவசாயத்தில் பரந்து விரிந்த மேம்பாடு எதையேனும் பற்றி ஒருவர் எப்படிச் சிந்திக்க முடியும்—நாம் எப்படியாவது காரியம் செய்து பட்டினியால் சாகாதிருக்க ஆண்டவன் அருள்வாராக!

இந்த வகையான சந்தேகங்கள் வெளியிடப்படுவது முற்றிலும் இயல்பே. ஆனால் இத்தகைய ஆட்சேபங்களுக்கு நான் பதில் கூற வேண்டுமானால், நான் இதைத்தான் சொல்லுவேன். பொருளாதார வாழ்க்கையின் ஒழுங்கு குலைவு, பொருளாதாரக் குழப்பம், பொருட்கள் பற்றாக்குறை, மோசமான போக்குவரத்து வசதிகள், கால்நடைகளும் விவ

சாயக் கருவிகளும் நாசம் ஆகியவற்ருல் விவசாயத்தில் விரிவான மேம்பாட்டைச் செயலாக்க முடியவில்லை என்று வைத்துக் கொள்வோம். ஆனல் பல தனிப்பட்ட சந்தர்ப்பங்களில் விரிவானதல்லாவிடினும், மேம்பாடு சாத்தியம் என்பதில் சந்தேகமில்லை. இவற்றைக்கூடச் செய்ய முடியாது என்று வைத்துக் கொள்வோம். இதனுல் கம்யூன்கள் அண்டையில் வாழும் விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றங்களை உண்டுபண்ண முடியாது மற்றும் கூட்டு முறையிலான விவசாய நிறுவனங்கள் ஒரு செயற்கையான மூடு தோட்ட பாணி வளர்ச்சி அல்ல, மாருக தொழிலாளர் ஆட்சியதிகாரத்திடம் இருந்து உழைக்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஒரு புது வடிவிலான உதவி, குலாக்குகளை எதிர்த்த போராட்டத்தில் உழைக்கும் விவசாயிகளுக்குத் தரப்படும் ஓர் உதவி என்பதை விவசாயிகளுக்கு நிரூபித்துக் காட்ட முடியாது என்பது இதன் பொருளா? இந்த விஷயத்தை இந்த வழியில் கருதிப் பார்த்தாலுங்கூட, பொருளாதாரக் குழப்பம் நிறைந்த இன்றைய நிலைமைகளின் கீழ் மேம்பாடுகளைச் செயலாக்குதலின் சாத்தியமின்மையை ஒப்புக் கொண்டாலுங்கூட, கம்யூன்களிலும் ஆர்ட்டல்களிலும் உணர்வு பூர்வமான கம்யூனிஸ்டுகள் இருப்பார்களானல், மிகப் பெருமளவு சாதிக்க முடியும் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கை உண்டு.

இதனை நிரூபித்துக் காட்ட, நமது நகரங்களில் சுபோத்னிக்குகள் என்று அழைக்கப்படும் நிகழ்ச்சிகளை நான் குறிப்பிடுவேன். இது நகரத் தொழிலாளர்கள் வழக்கமான வேலை நாளுக்கு மேல் கூடுதலாக, சில சமூகத் தேவைகளுக்கு வேண்டிச் செய்யும்,சில மணி நேர, ஊதியமற்ற இலவசமான சுயவிருப்ப உழைப்புக்குத் தரப்பட்டுள்ள பெயராகும். மாஸ்கோவில் மாஸ்கோ-கஸான் ரயில்வேத் தொழிலாளர்கள் சுபோத்னிக்குகளை முதன்முதலில் துவக்கி வைத்தார்கள். போர்முனைகளில் செஞ்சேனை வீரர்கள் முன் என்றும் கண்டிராத அளவில் தியாகங்கள் புரிகின்றனர், அவர்கள் கட்டாயமாக அனுபவிக்க நேர்ந்த துன்பதுயரங்கள் இருந்த போதிலும் நமது விரோதிகளை எதிர்த்து முன் என்றும் கண்டிராத வகையில் வெற்றிகளை அடைந்து வருகிருர்கள் என்று சுட்டிக் காட்டும் சோவியத் ஆட்சியதிகாரத்தின் அறிக்கை ஒன்று, அதே சமயம் இத்தகைய வீரமும்

தன்னலத்தியாகமும் போர்முனைகளில் மட்டுமன்றிப் பின்னணியிலும் காட்டப்படுமானால் மட்டுமே நாம் நமது வெற்றிகளை விடாப்பிடியாகப் பெற முடியும் என்று சாற்றியது. இந்த வேண்டுகோளுக்கு ஆதரவு காட்டும் முறையில் மாஸ்கோ தொழிலாளர்கள் சுபோத்னிக்குகளை ஏற்பாடு செய்தார்கள். மாஸ்கோ தொழிலாளர்கள் விவசாயிகளை விடவும் அதிகமான வறுமையையும் இன்மையையும் அனுபவித்து வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை. அவர்களது வாழ்க்கை நிலைமைகள் பற்றித் தெரிந்து கொண்டு இந்த நம்பற்கரிய கடினமான நிலைமைகள் இருந்துங்கூட அவர்களால் சுபோத்னிக்குகளை ஏற்பாடு செய்ய முடிந்தது என்ற மெய்நடப்பைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தீர்களானால், மாஸ்கோ தொழிலாளர்களின் வழிமுறைகளைப் பயன்படுத்தி எந்த நிலைமையின் கீழும் எதைச் செய்ய முடியுமோ, அதனைச் செய்யாமல் இருப்பதற்குக் கடினமான நிலைமைகள் பற்றி எந்த விளக்கமும் ஒரு சாக்குப் போக்காக முடியாது என்பதை நீங்கள் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். இந்த சுபோத்னிக்குகளைப் போன்று வேறு எதுவும் நகரத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் மதிப்பை உயர்த்தவும் கம்யூனிஸ்டுகள் பால் கட்சியில் சேராத தொழிலாளர்களின் மரியாதையினை அதிகரிக்கவும் இந்த அளவுக்கு உதவவில்லை எனலாம். இந்த சுபோத்னிக்குகள் தனிமைப்பட்ட சம்பவங்களாக இருக்கவில்லை. இவை நடைபெற்ற போது கட்சி சார்பற்ற தொழிலாளர்கள் நடைமுறையில், ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர்களுக்குக் கடப்பாடுகளும் கடமைகளும் இருப்பதைக் கண்டார்கள். கம்யூனிஸ்டுகள் கட்சிக்குள் புதிய உறுப்பினர்களைச் சேர்த்தது, அவர்கள் ஆளும் கட்சி என்ற நிலையில் தொடர்ந்து வரும் சாதகங்களை அனுபவிப்பதற்காக அன்றி, மாறாக அவர்கள் மெய்யான கம்யூனிஸ்டு உழைப்புக்கு, அதாவது இலவசமாகப் புரியும் உழைப்புக்கு முன் உதாரணமாகத் திகழ வேண்டும் என்பதன் பொருட்டேயாகும் என்பதைக் கட்சி சார்பற்ற தொழிலாளர்கள் கண்டார்கள். கம்யூனிசம் சோஷலிசத்தின் வளர்ச்சியின் உச்சகட்டமாகும்; அப்போது மக்கள் பொது நன்மைக்காக வேலை செய்வதன் அவசியத்தை உணர்வதால் உழைக்கிறார்கள். நம்மால் இப்போது ஒரு சோஷலிஸ்டு அமைப்பை நிலை நாட்ட முடியாது என்பதை நாம் அறிவோம். நமது நாட்டில்

நமது குழந்தைகளின் காலத்தில் அல்லது ஒருவேளை நமது பேரக்குழந்தைகளின் காலத்தில் இது நிலைநாட்டப்பட ஆண்டவன் அருள்வாராக. ஆனால் ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் முதலாளித்துவத்தை எதிர்த்த போராட்டத்தில் விளையும் இடர்ப்பாடுகளின் மேலதிகமான பளுவைத் தாமே மேற்கொள்கிறார்கள் என்றும் ஆகச் சிறந்த கம்யூனிஸ்டுகளைப் போர்முனைக்குத் திரட்டுகிறார்கள் என்றும் இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்த முடியாதவர்களை சுபோத்னிக்குகளில் பங்கேற்கும்படிக் கோருகிறார்கள் என்றும் நாம் கூறுகிறோம்.

இந்த சுபோத்னிக்குகளை — இவை எல்லா பெரிய தொழிற்துறை நகரங்களிலும் மிகபரவலாக உள்ளன— ஏற்பாடு செய்வது மூலமும்—இன்று இவற்றில் பங்கேற்க வேண்டும் என்று கட்சி ஒவ்வொரு உறுப்பினரிடமும் கோருகிறது, இதை நிறைவேற்றாவிடில் கட்சியில் இருந்து விலக்குவது வரையிலான தண்டனை வழங்குகிறது—இந்த முறையைக் கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பயன்படுத்துவது மூலமும் நீங்கள் மிகவும் மோசமான நிலைமைகளின் கீழ்கூட விவசாயி ஒவ்வொரு கம்யூனையும் ஆர்ட்டலையும் கூட்டுறவுச் சங்கத்தையும், அவை அரசின் உதவி நிதி பெறுகின்றன என்ற மெய்விவரத்தால் அன்றி, மாறாக அவற்றின் அகத்தே மிகச் சிறந்த தொழிலாளி வர்க்க நபர்கள் ஒன்றுதிரண்டிருக்கிறார்கள், அவர்கள் மற்றவர்களுக்கு மட்டும் சோஷலிசத்தைப் பிரசாரம் செய்பவர்கள் அல்ல, ஆனால் தாமே அதை நிறைவு செய்யும் ஆற்றல் பெற்றவர்கள், மிகவும் மோசமான நிலைமைகளின் கீழில்கூட அவர்கள் தமது பண்ணைகளைக் கம்யூனிஸ்டு வழியில் நடத்தி சுற்றுமுள்ள விவசாயி மக்களுக்குச் சாத்தியமான எல்லா வழிகளிலும் உதவும் ஆற்றலுடையவர்கள் எனும் மெய்விவரத்தை வைத்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்று கருதிப் பார்க்கும்படிச் செய்ய முடியும், செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் எதையேனும் சொல்லி தப்ப இடம் இல்லை; பொருட்களின் பற்றாக்குறை, விதைகள் இல்லாமை, கால்நடை இழப்பு எனும் அத்தகைய சாக்குப் போக்குகளுக்கு இடம் கிடையாது. இது ஒரு சோதனையாக இருக்கும். எது எப்படி ஆயினும், நாம், நம் சார்பில் மேற்கொண்டிக்கும் இந்த இடர்ப்பாடான பணியை எந்தளவுக்கு நடைமுறை

யில் நிறைவேற்ற முடிந்தது என்பதைத் திட்டவட்டமாகக் கூறுவதற்கு இயலும்படி இது உதவும்.

கம்யூன்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஆர்ட்டல்களின் பிரதிநிதிகளின் பொதுக் கூட்டம் இதை விவாதிக்கும் எனவும் இந்த முறையைப் பயன்படுத்துவது கம்யூன்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் கெட்டிப்படுவதற்கான வலிமைமிக்க கருவியாக உண்மையில் விளங்கும் எனவும் விவசாயிகள் சார்பில் இருந்து கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பால் பகைமை காட்டும் தனி ஒரு சம்பவங்கூட ருஷ்யாவில் எங்குமே ஏற்படாத வகையில் அத்தகைய நடைமுறை விளைவுகளை சாதிக்கலாம் என்பதையும் இப்பிரதிநிதிகள் உணர்வார்கள் என்றும் நான் திண்ணமாகக் கருதுகிறேன். ஆனால் இது போதாது. தேவையாக இருப்பது என்னவென்றால், விவசாயிகள் இவற்றின் பால் அனுதாபமான உறவு நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். நம்மைப் பொருத்த வரை, சோவியத் ஆட்சியதிகாரத்தின் பிரதிநிதிகளான நாம் இதை ஏற்படுத்த உதவும் வகையில் நமது சக்திக்குட்பட்ட சகலத்தையும் செய்வோம்; மற்றும் உழைப்பாளர் கம்யூன்கள் அல்லது ஆர்ட்டல்கள் தமது விவசாயி அண்டைவாசிகளின் வாழ்க்கையுடன் மெய்யாகவே நெருக்கமான தொடர்புகளை நிலைநாட்டியுள்ள இடங்களுக்கு மட்டுமே நூறு கோடி ரூபிள் நிதி மற்றும் இதர ஆதாரங்களிடமிருந்து அரசு உதவி கிடைக்கும்படிப் பார்த்துக் கொள்வோம். இந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால், ஆர்ட்டல்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தரப்படும் எந்த ஒரு உதவியும் பயனற்றது என்பது மட்டுமல்ல, திட்டவட்டமாயும் தீங்கு விளைப்பதும் ஆகும் என்று கருதுகிறோம். அண்மையில் வாழும் விவசாயிகளுக்குக் கம்யூன்கள் தரும் உதவி மிகையின் காரணமாக வெறுமே தரப்பட்ட உதவியாகக் கருதப்படக் கூடாது. இந்த உதவி சோஷலிஸ்டு உதவியாக இருத்தல் வேண்டும்; அதாவது, விவசாயிகள் தமது தனித்தனியான தனி நபர் சாகுபடி முறையைக் கூட்டுறவு சாகுபடி முறைக்கு மாற்றீடு செய்து கொள்ள இயலுமாறு இது இருத்தல் வேண்டும். இதை சுபோத்னிக் முறை மூலம் மட்டுமே செய்ய முடியும்; இம்முறை பற்றி நான் ஏற்கெனவே பேசியுள்ளேன்.

விவசாயிகளை விடவும் அளவிடற்கரிய வகையில் மோச

மான நிலைமைகளில் வாழ்ந்து வந்த போதிலும், சுபோத்னிக்கு களுக்கான இயக்கத்தை முதலில் தொடங்கி வைத்த நகரத் தொழிலாளர்களின் இந்த அனுபவத்தில் இருந்து நீங்கள் படித்தறிந்து கொள்வீர்களானுல், நாங்கள் உங்களது பொது வும் ஒருமுகப்பட்டதுமான ஆதரவுடன் தக்கதோர் சூழ் நிலையை ஏற்படுத்த முடியும் என்பது நிச்சயம். இதன் கீழ் இப்போது நிலவும் சில ஆயிரம் கம்யூன்களும் ஆர்ட்டல் களும் ஒவ்வொன்றும் விவசாயிகள் மத்தியில் கம்யூனிஸ்டு எண்ணங்களையும் கருத்துக்களையும் பேணும் மெய்யான வளர்ப்பிடமாக மாறும்; மற்றும் இது இன்னும் சிறியள விலான பலவீனமான முளை உருவில் இருந்தபோதிலும், இது செயற்கையான அல்லது மூடு தோட்ட பாணியிலான முளை அல்ல, மாருக புதிய சோஷலிஸ்டு அமைப்பின் மெய்யான முளையே என்பதை நடைமுறை உதாரணம் மூலம் புலப்படுத் தும். அப்போது மட்டுமே நாம் பழைய அறியாமை, வறுமை, இன்மை ஆகியவை மீது நிலையான வெற்றியை அடைய முடியும்; அப்போது மட்டுமே நமது எதிர்காலச் செல்வழி யில் நாம் சந்திக்கவிருக்கும் எவ்வித இடர்ப்பாடுகளும் நமக்குப் பயங்கரமானதாகக் காட்சி தரா.

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 372-382

# இணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டம் குறித்து

இந்த விஷயம் பற்றிக் கூறப்பட்டிருப்பதும் எழுதப்பட்டிருப்பதும் மிகவும் வேதனையான ஒரு மனப்பதிகையையே தருகின்றன. எகனமீச்செஸ்கயா ழீஸ்ன் பத்திரிகையில்[53] லே. க்ரீட்ஸ்மன் எழுதியுள்ள கட்டுரைகளை எடுத்துக் கொள்வோம் (1—டிசம்பர் 14, 1920; 2—டிசம்பர் 23; 3—பிப்ரவரி 9; 4—பிப்ரவரி 16; 5—பிப்ரவரி 20). அவற்றில் பயனற்ற பேச்சையும் சொற்சிலம்ப சரடு விடலையும் இந்தத் துறையில் என்ன செய்யப்பட்டுள்ளது என்பதைப் பற்றிச் சிந்திக்கவோ படிக்கவோ மறுக்கும் தன்மையையும் தவிர வேறு எதுவும் இல்லை. நடப்புகள் மற்றும் புள்ளிவிவரங்களை எப்படி அணுகுவது, எப்படி ஆய்வது என்பதைப் பற்றிய ஐந்து நீண்ட சிந்தனைக் கட்டுரைகள் மெய்யான பரிசீலனைக்குப் பதில் தரப்பட்டுள்ளன!

மில்யூத்தினது ஆராய்ச்சியுரைகளையோ (எகனமீச்செஸ்கயா ழீஸ்ன், பிப்ரவரி 19) அல்லது லாரினது ஆராய்ச்சியுரைகளையோ (எகனமீச்செஸ்கயா ழீஸ்ன், பிப்ரவரி 20) எடுத்துக் கொள்ளுங்கள்; ''பொறுப்பான'' தோழர்களின் உரைகளைக் கேளுங்கள். அவை எல்லாவற்றிலும் க்ரீட்ஸ்மனின் கட்டுரைகளில் இருக்கும் அதே அடிப்படைக் குறைபாடுகளைக் காணலாம். அவை யாவும் இணைசேர்ப்பு விதி பற்றிய ஏராளமான பிதற்றல் உள்ளிட்ட மிகவும் சலிப்புத் தரும் வகைப்பட்ட பாண்டித்தியத்தை வெளிப்படுத்துகின்றன. இது நடைமுறை முயற்சிகளை முற்றாக விலக்கிய, இலக்கிய பாணி முதல் அதிகார வர்க்கப் பாணி வரை வீச்சுடைய பாண்டித்தியமாகும்.

இதில் இன்னும் படுமோசமாக இருக்கும் அம்சம் என்னவென்றால், ஏற்கெனவே செய்யப்பட்டதும் தொடர்ந்து

செய்யப்பட வேண்டியதுமான ஜீவாதாரமான வேலை விஷயத்தில் மேதாவித் தனமான அதிகார வர்க்க ஆணவப் புறக்கணிப்பாகும். மீண்டும் மீண்டும் ஆகப் பயனற்றதான ''ஆராய்ச்சியுரைகள் வரைதல்'', நமது சொந்த நடைமுறை அனுபவத்தைச் சிரமப்பட்டுச் சிந்தனையார்ந்த முறையில் ஆராய்வதற்குப் பதில் திட்டங்களையும் கோஷங்களையும் இட்டுக் கட்டுதல் ஆகியவைதான் நடந்து வருகின்றன.

இணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டம் குறித்து **ரு. சோ. சோ. கூ. குடியரசை மின்சாரமயமாக்குவதற்கான திட்டம்** எனும் காரியகரமான ஒரு நூல் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. **கோயெல்ரோ** (ருஷ்யாவை மின்சாரமயமாக்குவதற்கான அரசுக் கமிஷன்) சோவியத்துக்களின் எட்டாம் காங்கிரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கை 1920 டிசம்பரில் வெளியிடப்பட்டுக் காங்கிரசில் வினியோகிக்கப்பட்டது. இப்புத்தகம் ஓர் இணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தை உருவரை செய்கிறது. இது நமது குடியரசில் இருக்கும் சிறந்த அறிஞர்களால் அதன் ஆக உயர்ந்த அமைப்புகளின் நெறிமுறைகளின் படி — முற்றுவிக்கப்படாத தோராய நிலையில் மட்டுமே— வகுக்கப்பட்டதாகும். கம்யூனிஸ்டுப் படிப்பாளிப் பகுதியினரின் அறிவுத்திற இறுமாப்பு, பெரிய மனிதர்களின் அறியாமையிலிருந்து பிறந்த சுயதிருப்தியை எதிர்த்துப் போராடுவதில் நாம் மிகவும் அடக்கமான துவக்கத்தைச் செய்தல் வேண்டும். இந்த நூலின் கதையைச் சொல்லியும் இதன் உள்ளடக்கத்தையும் உட்பொருளையும் வருணித்தும் இதைச் செய்தல் வேண்டும்.

ஓர் ஆண்டுக்கும் முன்னதாக—1920 பிப்ரவரி 2—7ல்— அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அமர்வு நடைபெற்றது; மின்சாரமயமாக்கல் பற்றிய ஒரு தீர்மானம் ஏற்கப்பட்டது. அது கூறுவதாவது:

''...போக்குவரத்து வசதிகளை ஒழுங்கமைத்தல், எரிபொருள் மற்றும் உணவு நெருக்கடிகளைச் சமாளித்தல், கொள்ளை நோய்களை ஒழிக்கப் போராடுதல், கட்டுப்பாடுள்ள உழைப்பாளர் படைகளை அமைத்தல் போன்றதான மிகவும் உடனடியான, ஜீவாதாரமான, அவசரப் பணிகளுடன் கூடவே, மேலும் சரிசமநிலையிலான பொருளாதார அபிவிருத்தியினைத் தொடங்கவும் விஞ்ஞான பூர்வமான வழிகளில் தேசவியாபகமான அரசுப் பொருளாதாரத் திட்டத்தை வகுத்து அதை நிலையுறுதியுடன் அமுல் செய்வதற்குமான

ஒரு வாய்ப்பு இப்போது சோவியத் ருஷ்யாவுக்கு முதல் தடவையாக கிட்டியுள்ளது. மின்சாரமயமாக்கலின் தலையாய முக்கியத்துவம் காரணமாயும்...தொழில் துறை, விவசாயம், போக்குவரத்து, இத்தியாதி சம்பந்தமாக மின்சாரமய மாக்கலின் முக்கியத்துவத்தைக் கவனமாக உணர்ந்தும்... அ. ரு. ம. நி. க. தீர்மானிப்பதாவது: மின்விசை நிலையங் களின் ஒரு தொகுதியைக் கட்டுவதற்கான ஒரு திட்டத்தை விவசாயத் துறை மக்கள் கமிசாரத்துடன் சேர்ந்து வகுக்கும் படி தேசியப் பொருளாதார உயர் கவுன்சிலுக்கு அதிகார மளிக்கப்படுகிறது....''

இது போதியளவு தெளிவானதாகத் தோன்றுகிறது இல்லையா? ''விஞ்ஞான பூர்வமான வழிகளில் தேசவியாபக மான அரசுப் பொருளாதாரத் திட்டத்தை வகுப்பது'' நமது ஆக உயர் அதிகார அமைப்பினுல் ஏற்கப்பட்டதான முடிவின் இந்தத் தொடர்களைத் தவருகப் புரிந்து கொள்வது சாத் தியமா? ''நிபுணர்களின்'' முன்னுல் தமது கம்யூனிசம் பற்றி ஜம்பம் பேசும் படிப்பாளிப் பகுதியினரும் பெரிய மனிதர் களும் இந்த முடிவு பற்றி அறியாதவர்களாக இருப்பார் களானுல், நமது சட்டங்கள் பற்றிய அறியாமை ஒரு வாத மாகாது என்று நாம் அவர்களுக்கு நினைவுறுத்த வேண்டும்.

அ. ரு. ம. நி. க.இன் தீர்மானத்தை அனுசரித்து தேசியப் பொருளாதார உயர் கவுன்சில் தலைமைக் குழு 1920 பிப்ரவரி 21ஆம் நாள் மின்சார இலாகாவின் கீழ் நிறுவப்பட்ட மின் சாரமயமாக்கல் கமிஷனை ஊர்ஜிதம் செய்தது. இதற்குப் பிறகு பாதுகாப்புக் கவுன்சில் கோயெல்ரோ சம்பந்தமான நிரந்தர விதிகளை அங்கீகரித்தது. இதன் இயைபை, விவ சாயத் துறை மக்கள் கமிசாரகத்துடனுன உடன்பாடு மூலம் நிர்ணயித்து உறுதிப்படுத்தும்படி தேசியப் பொருளாதார உயர் கவுன்சிலுக்கு நெறிமுறை செய்யப்பட்டது. 1920 ஏப்ரல் 24ந் தேதி கோயெல்ரோ தனது 1ஆம் செய்தி வெளி யீட்டைக் கொண்டு வந்தது. இதில் வேலைகள் பற்றிய விரி வான திட்டமும் பல்வேறு துறைகளில் வேலைகளை நெறியாக் கம் புரியும் பல உப கமிஷன்களில் செயல்படும் பொறுப் பான நபர்கள், விஞ்ஞானிகள், இஞ்சினீயர்கள், விவசாய விஞ்ஞானிகள், புள்ளிவிவர நிபுணர்களின் பட்டியலும் ஒவ்வொருவரும் மேற்கொண்டுள்ள பிரத்தியேக வேலைப் பொறுப்புகளும் அடங்கும். நபர்களும் அவர்களது வேலைப் பொறுப்புகளும் கொண்டதான பட்டியல் இந்த செய்தி

வெளியீடு, இதழ் 1ல் பத்து அச்சடித்த பக்கங்களை நிரப்பியுள்ளது. தேசியப் பொருளாதார உயர் கவுன்சில், விவசாயத் துறை மக்கள் கமிசாரகம் மற்றும் போக்குவரத்துத் துறை மக்கள் கமிசாரகத்துக்குக் கிடைத்த சிறந்த ஆற்றல்கள் அனைத்தும் ஒன்றுதிரட்டப்பட்டன.

கோயெல்ரோ முயற்சியால் மேலே சொன்ன இந்த மிகப் பெரியதான, முதல்தரமான விஞ்ஞான வெளியீடு உருவாக்கப் பட்டது. 180க்கு மேற்பட்ட விற்பன்னர்கள் அதில் பணி புரிந்தார்கள். கோயெல்ரோவுக்கு அவர்கள் சமர்ப்பித்த படைப்புகளின் பட்டியலில் 200க்கும் அதிகமான இனங்கள் உள்ளன. இத்தொகுதியின் முதல் பகுதி 200 பக்கங்கள் கொண்டது: அ) மின்மயமாக்கலும் அரசுப் பொருளாதாரத் திட்டமும்; தொடர்ந்து ஆ) எரிபொருள் வழங்கு துறை (ரு. சோ. சோ. கூ. குடியரசுக்கு அடுத்த பத்தாண்டுகளுக்கு உரிய விவரமான ''எரிபொருள் பட்ஜெட்'' மற்றும் தேவைப் படும் மனிதச் சக்தி பற்றிய மதிப்பீட்டுடன்); இ) நீர்விசை; ஈ) விவசாயம்; உ) போக்குவரத்து; ஊ) தொழில் துறை.

இந்தத் திட்டம் சுமார் பத்து ஆண்டுகள் அளவெல்லை உள்ளது; தொழிலாளர் எண்ணிக்கை மற்றும் ஆற்றல்கள் பற்றிய (1,000 கு. ச.) அறிகுறியினைத் தருவது. இது பிழைகள் ஏற்படக் கூடியதான ஓர் உத்தேசமான நகல், ''முற்றுவிக்கப்படாத தோராய நிலையிலுள்ள'' திட்டமாகும் என்பது திண்ணம்; ஆனால் இது மெய்யான விஞ்ஞான முறையிலான திட்டமாகும். ஒவ்வொரு முக்கிய இனத்துக்கும் ஒவ்வொரு தொழில் துறைக்கும் நிபுணர்களால் செய்யப்பட்ட துல்லியமான கணக்கீடு உள்ளது. ஒரு சிறு உதாரணம் தர வேண்டுமானால், தலைக்கு இரண்டு ஜோடிகள் என்ற விகிதப்படி (30 கோடி ஜோடிகள்) தோலாலான காலணிகள் பற்றிய அவர்களது கணக்கீடு உள்ளது, இத்தியாதி. இதன் விளைவாக நம்மிடம் மின்மயமாக்கலுக்கு (சுமார் 37 கோடி உழைப்பு நாட்கள், இத்தனை பீப்பாய் சிமெண்டு, இவ்வளவு செங்கல்கள், இவ்வளவு பூடு இரும்பு, செம்பு, இதர பொருட்கள், டர்பைன் ஆற்றல்கள் ஆகிய) பொருள் வகையிலும் நிதி வகையிலும் (தங்க ரூபிள்கள்) ஆன இருப்பு நிலைக் குறிப்பு நம் வசம் உள்ளது. இது (''மிகவும் உத்தேசமான மதிப்பீட்டின்படி'') செய் பொருட்கள் உற்பத்தியில் 80 சதவிகித அதிகரிப்பையும் தோண்டும் தொழில்களில் 80—100 சதவி

கித அதிகரிப்பையும் அடுத்த பத்தாண்டுகளில் எதிர்நோக்கு கிறது. தங்க நிலுவை பாக்கிப் பற்றுக்குறை (+1,100 கோடி —1,700 கோடி, இது மொத்தம் 600 கோடி பற்றுக் குறையை விட்டுவைக்கிறது) ''சலுகைகள் மற்றும் கடன் நடவடிக்கைகள் மூலம் சரிப்படுத்தப்படும்''.

இது முதலாவது 20 நீராவி மற்றும் 10 நீர் ஆற்றல் வட்டார மின்சார நிலையங்களின் தலத்தையும் இவை ஒவ் வொன்றினதும் பொருளாதார முக்கியத்துவம் பற்றிய விவர மான விளக்கத்தையும் தருகிறது.

இதே தொகுப்பில் பொதுவான பொழிப்புரையைத் தொடர்ந்து ஒவ்வொரு பிரதேசத்துக்கும் (தனிப் பக்கங் களில்) உரிய நிலையங்கள் பற்றிய பட்டியல் தரப்படுகிறது: வடக்குப் பிரதேசம், மத்திய தொழில் துறைப் பிரதேசம் (மிகவும் செழுமையான விஞ்ஞான விவரங்களின் அடிப் படையில் இவை இரண்டும் துல்லியமான விவரங்களுடன் வகுத்துத் தரப்பட்டுள்ளன), தெற்குப் பிரதேசம், வோல்கா, உரால், காக்கஸஸ் பிரதேசங்கள் (பல்வேறு குடியரசுகளின் இடையிலான பொருளாதார உடன்பாட்டை எதிர்நோக்கி காக்கஸஸ் ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறது), மேற்கு சைபீரியா, துருக்கிஸ்தான். இந்தப் பிரதேசங் கள் ஒவ்வொன்றுக்கும் உரிய மின்சார விசை ஆற்றல்கள் முதல் நிலையங்களுக்கு அப்பாலும் திட்டமிடப்பட்டுள்ளன; இதன் பின்னால் ''கோயெல்ரோ திட்டம் அ'' வருகிறது, அதாவது தற்போது நிலவும் மின்விசை நிலையங்களை மிகவும் சீராகவும் சிக்கனமான முறையிலும் பயன்படுத்துவதற்கான திட்டம் வருகிறது. இதோ இன்னும் ஒரு சிறிய உதாரணம்: பெத்ரோகிராத் (வடக்குப் பிரதேச) நிலையங்களின் இணைப்பு பின்வரும் சிக்கனங்களைத் தர முடியும் என்று மதிப்பிடப்பட் டிருக்கிறது (வடக்குப் பிரதேசப் பிரிவு, பக்கம் 69): ஆற்றல் களில் பாதி வரை வடக்கில் இருக்கும் மரம் வெட்டும் பிர தேசங்களான மூர்மன்ஸ்க் மற்றும் அர்ஹாங்கெல்ஸ்குக்குத் திருப்பி விடப்படலாம். இதன் விளைவாக அதிகரிக்கும் வெட்டு மர உற்பத்தியும் ஏற்றுமதியும் ''உடனடி எதிர்காலத்தில் ஆண்டொன்றுக்கு 50 கோடி ரூபிள் மதிப்புடைய அன்னியச் செலாவணி வரை'' சம்பாதித்துத் தரும்.

''நமது வட திசை வெட்டுமர விற்பனையில் இருந்து பெறும் வருடாந்தர வருமானம் அடுத்த சில ஆண்டுகளில்

நமது தங்கச் சேமத்துக்குச் சமமாக இருக்கும்'' (அதே பிரிவு, பக்கம் 70). ஆனால் நாம் நிச்சயமாயும் திட்டங்கள் பற்றிப் பேசுவதை நிறுத்தி நமது விஞ்ஞானிகளால் ஏற்கெனவே வகுக்கப்பட்ட திட்டத்தை ஆராய்ந்து பிரயோகிக்கத் தொடங்க வேண்டும்!

இதர இனங்கள் பலவற்றுக்கான கருவுருவில் உள்ள ஆண்டுப் பட்டியல் வேலைத்திட்டங்கள் (எல்லாவற்றுக்கும் இல்லாவிடினும் கூட) இருக்கின்றன என்று மேலும் கூற வேண்டும். இது பொதுவான ஒரு திட்டத்தை விட அதிக மானது; 1921 முதல் 1930 வரையிலான ஒவ்வொரு ஆண்டுக்கு மான மதிப்பீடு இது—நடத்தப்படக் கூடிய நிலையங்களின் எண்ணிக்கை, இப்போதுள்ளவை விஸ்தரிக்கப்படக் கூடிய தன் பரிமாணம் குறித்த மதிப்பீடாகும். (ஆனால் நான் இப்போது கூறியது போன்று நாம் செயல்படத் தொடங்க வேண்டும். நமது அறிவுத் துறைப் படிப்பாளிகள் மற்றும் அதிகார வர்க்கப் பெரிய மனிதர்களின் வழிகளைப் பார்க்கும் போது இந்த வேலை எளிதானதல்ல.)

ஜெர்மனி மீதான ஒரு நோட்டம் இந்த கோயெல்ரோவின் முயற்சியின் பரிமாணங்களையும் மதிப்பையும் புலப்படுத்தும். அங்கே விஞ்ஞானி பல்லொத் என்பவர் இதே போன்ற படைப்பை உருவாக்கினர்; ஜெர்மனியின் தேசப் பொருளாதாரம் முழுவதையும் சோஷலிஸ்டு முறையில் புனரமைப்பதற்கான ஒரு விஞ்ஞானத் திட்டத்தைத் தொகுத்தளித்தார். ஆனால் அவரது நாடு முதலாளித்துவ நாடாக இருந்தபடியால் இந்தத் திட்டம் காரியத்தில் அமுலாகவே இல்லை. இது ஒரு தனித்த நபரின் முயற்சியாக, இலக்கியக் கட்டுரை முயற்சியாக மட்டுமே இருக்கிறது. இங்குள்ள நமக்கு இது பத்து மாதங்களுக்கு உள்ளில் (நாம் ஆதியில் திட்டமிட்டபடி நிச்சயமாயும் இரண்டு மாதங்களில் அல்ல) நூற்றுக் கணக்கான விற்பன்னர்களைத் திரட்டி விஞ்ஞான முறையில் ஓர் இணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தை உருவாக்குவது அரசு அளித்த வேலைப் பொறுப்பாகும். இந்தப் படைப்புப் பற்றி நாம் பெருமிதம் கொள்ள உரிமையுண்டு; இதை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் புரிந்து கொள்வதே இனி இருக்கும் வேலை; இந்த மெய்விவரத்தைப் புரிந்து கொள்ளத் தவறியதே இப்போது நாம் வாதிட நேர்ந்துள்ள விவகாரம்.

சோவியத்துக்களின் எட்டாவது காங்கிரசின் தீர்மானம் கூறுவதாவது: ''...இந்தக் காங்கிரஸ்... பேசியப் பொருளாதார உயர் கவுன்சில், இத்தியாதிகளின் வேலையை, சிறப்பாயும் கோயெல்ரோவின் வேலையை, ருஷ்யாவை மின்சாரமயமாக்குவதற்கான திட்டத்தை வரைந்ததை அங்கீகரிக்கிறது... மாபெரும் பொருளாதார முயற்சியில் ஒரு முதற்படி என்று இத்திட்டத்தைக் கருதுகிறது; இந்தத் திட்டத்திற்குரிய இறுதிக் கூறுகளை செப்பம் செய்து இதை மிகவும் முன்பாகவே அங்கீகரிக்கும்படி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியை, இத்தியாதிகளை அதிகாரப்படுத்துகிறது... இந்தத் திட்டத்தை மிகவும் விரிவான முறையில் பிரபலப்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் ஏற்கும்படி அதிகாரப்படுத்துகிறது... குடியரசின் எல்லாக் கல்வி நிலையங்களிலும் எவ்வித விதிவிலக்கும் இன்றி இந்தத் திட்டம் பற்றிய ஆய்வு கல்வித் திட்டத்தில் ஓர் இனமாக்கப்பட வேண்டும்'', இத்தியாதி.

நமது பொறியமைவின், விசேஷமாயும் அதன் உயர் அமைப்பின் அதிகார வர்க்க மற்றும் அறிவுத் துறைக் குறைபாடுகள் மாஸ்கோவில் இருக்கும் சிலர் இந்தத் தீர்மானத்தின் பால் மேற்கொண்ட மனோபாவத்தில், இதை முற்றாகப் புறக்கணித்துவிடும் அளவுக்கு இதைத் ''திரிப்பதற்கு'' அவர்கள் செய்த முயற்சிகள் ஆகியவற்றில் மிகவும் பச்சையாக வெளியாகியுள்ளன. இந்தத் திட்டத்தை விளம்பரப்படுத்துவதற்குப் பதிலாக படித்த பகுதியினர் ஒரு திட்டத்தை வகுப்பது எப்படி என்பது குறித்த ஆராய்ச்சியுரைகளையும் வெற்று நுண்ணாய்வுகளையும் புரிகின்றனர்! இந்தத் திட்டத்தை ''ஒப்புக் கொள்வதன்'' அவசியத்தைப் பெரிய மனிதர்கள் முற்றிலும் அதிகார வர்க்கப் பாணியில் வற்புறுத்துகிறார்கள். இதன் மூலம் அவர்கள் ஸ்தூலமான வேலைப் பொறுப்புகளை (பல்வேறு நிலையங்களைக் கட்டுவதற்கான தேதிகள், வெளி நாடுகளில் பல சாதனங்களை வாங்குவது, இத்தியாதி) குறிப்பிடவில்லை, மாறாக ஒரு புதிய திட்டத்தை வகுப்பது போன்ற சில குளறுபடியான கருத்துக்களையே வெளியிடுகிறார்கள்! இது உருவாக்கும் தவறான எண்ணம் படுமோசமானது. புதியதை வைத்துச் செயல் புரிவதற்கு முன்பாக பழையதை ஓரளவு மீட்டமைப்பது பற்றிப் பேசப்படுகிறது; மின்சாரமயமாக்கல் என்பதில் மின்சார கற்பனை ஏதோ இருப்பதாகக் கூறப்படுகிறது; வாயுமயமாக்கல் ஏன் கூடாது என்று எம்

மிடம் கேட்கப்படுகிறது; கோயெல்ரோவிலும் முதலாளித்துவ விற்பன்னர்கள் நிரம்பிக் கிடக்கிருர்கள், ஒரு சில கம்யூனிஸ்டுகளே இருக்கிருர்கள் என்றும் அவர்கள் சொல்கிருர்கள்; கோயெல்ரோ பொதுவான திட்டக் கமிஷனில் பதவிகள் வகிப்பது ஆகியவற்றைச் செய்வதற்குப் பதில் நிபுணர்களான ஊழியர்களை வழங்க வேண்டும் என்கிருர்கள்.

இந்த ஒவ்வாமை ஆபத்தானது, காரணம் இது வேலை செய்ய இயலாமையைக் காட்டுகிறது; எல்லா மெய்யான முயற்சியையும் விலக்கிய அறிவாளிகளியல்பான அதிகார வர்க்கத் தன்மையுள்ள திருப்தி மனப்பான்மை நிலவுவதை வெளிக்காட்டுகிறது. இறுமாப்புடைய அறிவில்லான் விசித்திரத் திட்டம் பற்றிய அவனது ஏளனத்தாலும் வாயுமயமாக்கல் பற்றிய அவனது கேள்விகளாலும் காட்டிக் கொடுக்கப்படுகிருன். முதல் தரமான ஒரு விற்பன்னர்களின் படையே முன்வந்து உருவாக்க வேண்டியிருந்த ஒன்றைப் பற்றி இப்படித் தயக்கமின்றி குற்றம் காண முயலும் அவர்களது துணிச்சல் என்னே! இதைச் சின்னஞ்சிறு வேடிக்கை பேசி அசட்டை செய்ய முயல்வதும் தமக்கு இதனை ''ஏற்பதைத் தவிர்க்க'' உரிமை இருப்பதாக பாவலாச் செய்வதும் வெட்கக் கேடானதல்லவா?

நாம் விஞ்ஞானத்துக்கு உரிய மதிப்பைக் கொடுத்து விளையாட்டுப் பிள்ளையின், அதிகார வர்க்கப் பேர்வழியின் ''கம்யூனிஸ்டு'' இறுமாப்பை ஒழித்துவிடும் காலம் வந்து விட்டது; நாம் முறைமையுடன் வேலை செய்யக் கற்றுக் கொள்வதற்கும் நமது சொந்து அனுபவத்தையும் பயிற்சியையும் பயன்படுத்துவதற்குமான காலம் வந்து விட்டது!

''திட்டங்கள்'' முடிவற்ற வாதம் மற்றும் சர்ச்சையைத் தோற்றுவிக்கும் என்பது நிச்சயமாயும் இயல்பே. ஆனுல் நம் முன் உள்ள ஒரே விஞ்ஞானத் திட்டத்தை ஆராய்வதில் இறங்குவதே நமது பணி என்று இருக்கும் போது அடிப்படைக் ''கோட்பாடுகள்'' பற்றிய பொதுவான அறிக்கைகள் மற்றும் விவாதங்களில் ஈடுபட இடமளித்தல் கூடாது. நடைமுறை அனுபவம், மேலும் விரிவான ஆய்வின் அடிப்படையில் நாம் அதைச் சரிப்படுத்த முயல வேண்டும். இதற்கான ''ஏற்பை அளிக்கவோ'', அல்லது ''மறுக்கவோ'' ஆன உரிமையைப் பெரிய மனிதர்கள் எப்போதும் தம் வசம் வைத்திருக்கிருர்கள் என்பது தெரிந்ததே. இந்த உரிமை பற்றிய நிதானமான

கருத்தும், பரவலான முறையில் பரப்பப்படுவதற்கென ஒப்புதல் தந்து நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தை அங்கீகாரம் செய்துள்ள எட்டாவது காங்கிரசின் தீர்மானத்தைப் பொறுப்புடன் ஆராய்வதும், இந்த ஒப்புதலின் பொருள் வரிசையாகப் பல அனுப்பாணைகளை முன்வைப்பதும் பல நெறிமுறைகளைப் பிறப்பிப்பதும் ஆகும் என்பதை காட்டுகின்றன. வாங்க வேண்டிய பொருட்கள், துவங்க வேண்டிய கட்டிடங்கள், திரட்டி அனுப்பி வைக்க வேண்டிய சாதனங்கள், இத்தியாதிகள் இதில் அடங்கும். மறு புறத்தில் அதிகார வர்க்க நோக்கு நிலையில் இருந்து ''ஏற்பு'' என்பது பெரிய மனிதர்களின் தன்னிச்சையான செயல்கள், சிவப்பு நாடா போக்கில் சுற்றித் திரிதல், விசாரணைக் கமிஷன் விளையாட்டு, நடக்கும் எதையும் கருராயும் அதிகார வர்க்கப் பாணியில் கேடுறுத்தல் எனபதாகவே பொருளபடும்.

இந்த விவகாரத்தை மேலும் இன்னொரு கோணத்தில் இருந்து பார்ப்போம். மின்சாரமயமாக்குவதற்கான விஞ்ஞானத் திட்டத்தில் இப்போதுள்ள சிறிய கால நடைமுறை திட்டங்களையும் அவற்றின் அமுலாக்கத்தையும் சேர்த்துப் பிணைக்கும் தனிப்பட்ட அவசியல் இருக்கிறது. இது செய்யப்பட வேண்டும் என்பதில் இயல்பாகவே ஐயத்திற்கு இடமில்லை. ஆனால் இதை எப்படிச் செய்வது? இந்த நடைமுறை அலுவலில் இருக்கும் நமது தவறுகளைக் கண்டறிந்து அவற்றைத் திருத்துவதற்கான வழிகளையும் காண்பது மூலம் இதைச் செய்ய வேண்டும். பொருளியலாளர்கள், படித்த பகுதியினர், புள்ளிவிவர நிபுணர்கள் இத்திட்டம் பற்றிய தமது பொதுவான பிதற்றல்களை நிறுத்தி நமது திட்டங்களின் அமுலாக்கம் பற்றி விவரமாக ஆராயத் தொடங்க வேண்டும். இல்லையேல் நாம் நமது வழியை நீண்ட காலம் தட்டித்தடவித் தேட வேண்டிவரும். நமது நடைமுறை அனுபவம் பற்றிய இத்தகைய ஆராய்வுக்குப் புறம்பாக செயலாட்சி தொழில் நுணுக்கம் எனும் சிறிய விவகாரமும் உள்ளது. திட்டக் கமிஷன்கள் நமக்குத் தேவைக்கு மேல் கூடுதலாக உள்ளன. இவான் இவானவிச்சின் கீழுள்ள இலாகாவில் இருந்து இரண்டு நபர்களை எடுத்து பாவெல் பாவ்லவிச்சின் கீழுள்ள இலாகாவில் இருந்து எடுத்த ஒரு நபருடன் சேர்த்து இணைப்பீர் அல்லது பின்னவரை முன்னவருடன் இணைப்பீர். பொதுவான திட்டக் கமிஷனின்

ஓர் உப கமிஷனுடன் அவர்களை இணைப்பீர். இவை யாவும் செயலாட்சி தொழில் நுணுக்கத்தின் மட்டத்துக்குக் குறுக்கப்படும். பல்வேறு இணைப்புகளைப் பரிசீலித்து ஆகச் சிறந்ததைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இது ஆரம்ப பாடம்.

நாம் இன்னும் அணுகும் கலையினைக் கற்றறிந்து துடிப் பான முயற்சிக்குப் பதில் அறிவுஜீவி இயல்பான, அதிகார வர்க்கத் தன்மையதான தோரணை வழியை மாற்றீடு செய் வதைத் தடுக்க இயலாத நிலையில் உள்ளோம் என்பதே முழு மையான உண்மை. நம்மிடம் குறுகிய கால உணவு மற்றும் எரிபொருள் திட்டங்கள் இருக்கின்றன, ஏற்கெனவே இருந் தன. இரண்டிலும் வெளிப்படையான தவறுகள் உள்ளன. இது மறுக்க முடியாதது. ஆனால் திறமை மிக்க பொருளிய லாளர் வெற்று ஆராய்ச்சியுரைகளைத் தீட்டிக் கொண்டிருப் பதற்குப் பதில் மெய்நடப்புகளையும் விவரங்களையும் ஆராயத் தொடங்கி நமது சொந்த நடைமுறை அனுபவத்தைப் பகுத் தாய்வார். அவர் தவறுகளைச் சுட்டிக் காட்டி ஒரு பரிகாரத் தைத் தெரிவிப்பார். இந்த வகையான ஆய்வு, முன்மொழி வதற்கோ அல்லது செயல்படுத்துவதற்கோவான நபர் மாற்றங்கள், கணக்கு முறைகளில் மாறுதல்கள், யந்திரத்தைப் புதுப்பித்தல், இத்தியாதிகள் பற்றிய யோசனைகளைத் திறமை மிக்க நிர்வாகிக்கு வழங்கும். இந்த முறையில் எதையும் இணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டம் குறித்து நாம் செய்யவில்லை.

கம்யூனிஸ்டுகளுக்கும் விற்பன்னர்களுக்கும், நிர்வாகி களுக்கும் விஞ்ஞானிகள் மற்றும் எழுத்தாளர்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய தவறான அணுகுமுறையே இங்கு முக்கிய குறைபாடாக இருக்கிறது. இதர பொறுப்புப் பணி எதையும் போலவே, இணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தின் சில அம்சங்கள் நிர்வாக அணுகுமுறையினையே கோருகின்றன அல்லது கம்யூனிஸ்டுகள் மட்டுமே முடிவுகள் செய்ய வேண்டும் என்று கோருகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. இந்த வகையான புதிய அம்சங்கள் எப்போதும் முன்னணிக்கு வரக் கூடும் என்றும் நான் சேர்த்துக் கொள் கிறேன். இது விவாதத்திற்கு அப்பாற்பட்டது. ஆனால் முற்றி லும் தெளிவற்றது. இப்போது நேரில் நமது கம்யூனிஸ்டு எழுத்தாளர்களும் நிர்வாகிகளும் அறவே தவறான அணுகு முறையினை அனுசரித்து வருகிறார்கள், காரணம் இந்த விஷயத்

தில் நாம் முதலாளித்துவ விற்பன்னர்கள் மற்றும் விஞ்ஞானி கள் இடமிருந்து நம்மால் இயன்றதனைத்தையும் பயின்று கொள்ள வேண்டும், நிர்வாகத் துறை விளையாட்டைக் கையாளுவதை நிறுத்த வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளத் தவறி விட்டார்கள். நாம் இந்தக் கணத்தில் பெறு வதற்குச் சாத்தியமான ஒரே இணைக்கப்பட்ட பொருளா தாரத் திட்டம் கோயெல்ரோ தான். நன்கு பரிசீலிக்கப்பட்ட நடைமுறை அனுபவத்தின் வழி காட்டுதலில் இது வளப் படுத்தப்பட்டு, விரிவிளக்கம் செய்யப்பட்டு, திருத்தம் செய்யப்பட்டு பிரயோகிக்கப்பட வேண்டும். இதற்கு எதி ரான கருத்து, நமது கட்சியின் வேலைத்திட்டம் குறிப்பிடுவது போன்று மற்றும் ''போலித் தீவிரவாத இறுமாப்பாகக் குறுகி விடுகிறது, உண்மையில் அறியாமையே தவிர வேறு எதுவு மல்ல''. கோயெல்ரோ உடன் கூடுதலாக ரு. சோ. சோ. கூ. குடியரசில் இன்னொரு பொதுவான திட்டக் கமிஷனையும் வைத்திருக்கலாம் எனும் கருத்து அறியாமையையும் இறு மாப்பையும் அதே அளவுக்கு வெளிப்படுத்துகிறது. இதன் அங்கத்துவத்தில் ஓரளவுக்கான காரியார்த்தமான மாற்றங் கள் செய்வதால் சில சாதகங்களைப் பெறலாம் என்பது இதனுல் மறுக்கப்படவில்லை. இந்த அடிப்படையில் மட்டுமே, எது தொடங்கப்பட்டிருக்கிறதோ அதைத் தொடர்வது மூலம் பொதுவான பொருளாதாரத் திட்டத்தில் முக்கியமான எந்த ஒரு மேம்பாட்டையும் செய்வது சாத்தியமாகும். வேறு செல்வழி எதுவும், பச்சையாகச் சொல்லும் பட்சத்தில், நம்மை நிர்வாகச் சூதாட்டத்தில் அல்லது தன்முனைப்பான செயலில் சிக்க வைத்துவிடும். கோயெல்ரோவின் உள்ளே கம்யூ னிஸ்டுகளின் பணி மிகச் சொற்பமான உத்தரவுகளையே பிறப் பிப்பதாகும், ஓரளவுக்கு எவ்வித உத்தரவும் பிறப்பிக்காமல் தவிர்ப்பதும், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுணுக்க விற் பன்னருடனுன காரியங்களில் மிகவும் விவேகத்துடன் நடந்து கொள்வதுமாகும் (ரு.க.க. வேலைத்திட்டம் கூறுவதாவது: ''அவர்களில் பெரும்பாலோர் தவிர்க்க முடியாத வகையில் வலுவான முதலாளித்துவப் பழக்கங்கள் கொண்டவர்கள், காரியங்களை முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் பார்ப்பவர் கள்''). அவர்களிடமிருந்து படித்தறிந்து கொள்வதும் குறிப் பிட்ட துறையிலான சாதனைகளின் அடிப்படையில் அவர் களது உலகப் பார்வையினை விரிவாக்கிக் கொள்ள உதவு

வதும் நம் பணியாகும். கம்யூனிசத்தை நோக்கி வருவதற்கான ஓர் இஞ்சினீயரின் பாதை ஒரு தலைமறைவுப் பிரசாரகர் அல்லது எழுத்தாளரின் பாதையில் இருந்து வேறுனதாகும் என்பதை எப்போதும் மனதில் இருத்த வேண்டும். அவர் தனது சொந்த விஞ்ஞானத்தின் சான்றிஞல் வழி நடத்தப் படுகிருர். அதன்படி விவசாய விஞ்ஞானி, வனத் துறை நிபுணர், இத்தியாதியர் ஒவ்வொருவருக்கும் கம்யூனிசத்தை நோக்கி நடைபோடுவதற்கு அவர்களது சொந்தப் பாதை உள்ளது என்பது தெளிவாகும். விஷயத்தின் அக மையத்துக்கே சென்று அதை விவரமாகப் படித்தாய்ந்து விற்பன்னர்களை அடக்க உணர்வுடன் ஒன்றுதிரட்டி அவர்களது வேலைக்கு வழிகாட்டுவதில் தனது ஆற்றலை நிரூபிக்கத் தவறும் கம்யூனிஸ்ட் பேரிடர் உண்டாக்கும் செயல் விளைவை ஏற்படுத்தக் கூடியவராவார். நம் மத்தியில் இத்தகைய கம்யூனிஸ்டுகள் பலர் உள்ளனர்; டஜன் கணக்கான அவர்களை மனச்சாட்சியுடைய தகுதிகள் பெற்ற ஒரு முதலாளித்துவ விற்பன்னருக்காக மகிழ்வுடன் மாற்றம் செய்து கொள்ளுவேன்.

கோயெல்ரோவுக்கு வெளியே இருக்கும் கம்யூனிஸ்டுகள் இணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தை நிறுவவும் அமுலாக்கவும் இரண்டு வழிகளில் உதவ முடியும். அவர்களில் பொருளியலாளர், புள்ளிவிவரவியலாளர் அல்லது எழுத்தாளர்களாக இருப்போர் நமது சொந்த நடைமுறை அனுபவத்தை ஆராயத் தொடங்கி அவற்றின் மெய்விவரங்களை விரிவாக ஆராய்ந்த பிறகு மட்டுமே திருத்தங்கள் மற்றும் மேம்பாடுகள் செய்வது பற்றிய யோசனைகளை முன்வைக்க வேண்டும். புத்தாராய்ச்சி என்பது விஞ்ஞானியின் அலுவலாகும். நாம் இனிமேல் பொதுவான கோட்பாடுகளை அல்லமாருக நடைமுறை அனுபவம் பற்றி எடுத்துக் கவனிக்கப் போவதால், ''ஒரு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுணுக்க விற்பன்னரிடமிருந்து'' — அவர் முதலாளித்துவ வகைப்பட்டவராக இருப்பினும் கூட — ஒரு கணம் முன்னறிவிப்பில் ''ஆராய்ச்சியுரைகளை'' எழுதவும் ''கோஷங்களைப்'' பிறப்பிக்கவும் பொருளற்ற கருத்தாக்கங்களை உருவாக்கவும் தயாராக இருக்கும் ஓர் இறுமாப்புடைய கம்யூனிஸ்டிடமிருந்து பெறுவதை விடவும் அதிகமான நன்மையைப் பெற முடியும். மேலும் அதிகமான மெய்விவரங்கள்

கொண்ட அறிவும், மெய்ப்புக்கான கம்யூனிஸ்டுக் கோட்பாடுகளுடையவை போன்ற சொற்பமான சர்ச்சைகளுமே நமக்குத் தேவை.

மேலும் மறு புறத்தில் கம்யூனிஸ்டு நிர்வாகியின் பிரதானக் கடமை உத்தரவுகள் போடுவதில் தான் வசமிழந்து போகாதபடிப் பார்த்துக் கொள்வதாகும். விஞ்ஞானத்தின் சாதனைகளைப் பார்ப்பது மூலம் அவர் வேலையைத் தொடங்கப் பயில வேண்டும்; மெய்விவரங்களைச் சரிபார்ப்பதை வற்புறுத்தியும் தவறுகளை இனங்கண்டு ஆராய்ந்தும் திருத்தங்கள் எதுவும் செய்வதற்கு முன்பாக (அறிக்கைகள், பத்திரிகைக் கட்டுரைகள், கூட்டங்கள் வாயிலாக) செயல்பட வேண்டும். தீத் தீத்திச்[54] மாதிரி (''நான் விரும்பும் பட்சத்தில் எனது ஒப்புதலைத் தரலாம்'') உத்திகளுக்குப் பதில் நமது தவறுகளை மேலும் நடைமுறையில் ஆராய வேண்டுவது அவசியம்.

மனிதர்களின் தீக்குணங்கள் பெரும்பாலும் அவர்களது நற்குணங்களுடன் பிணைக்கப்பட்டே இருக்கும் என்பது நெடு நாட்களாக அறிந்த விஷயம். இது உண்மையில் பல தலைமைக் கம்யூனிஸ்டுகளுக்குப் பொருந்தும். முதலாளி வர்க்கத்தை வீழ்த்த வேண்டும் என்று பிரசாரம் செய்தும் முதலாளித்துவ நிபுணர்களை நம்பக் கூடாது என்று மக்களுக்குப் போதித்தும் அவர்களை அம்பலப்படுத்தவும் ஆட்சி அதிகாரத்தை இழக்கும்படிச் செய்யவும் அவர்களது எதிர்ப்பை நசுக்கவும் கோரியும் பல பத்தாண்டுகளாக இந்த மாபெரும் லட்சியத்துக்காகப் பாடுபட்டு வருகிறோம். இது உலகளாவிய முக்கியத்துவம் உள்ள வரலாற்றுச் சிறப்புடைய லட்சியமாகும். ஆனால் உச்ச மேதையில் இருந்து உறுமடமைக்கு ஒரு படி மட்டுமே எனும் முதுமொழியினை நிரூபிக்க ஒரு சிறிது மிகைப்படுத்தினால் போதும். ருஷ்யாவுக்கு நாம் திட நம்பிக்கையூட்டிவிட்ட இந்த கட்டத்தில், ருஷ்யாவை சுரண்டலாளர்களிடமிருந்து பறித்து உழைக்கும் மக்களிடம் தந்துள்ள இந்த நேரத்தில், சுரண்டலாளர்களை ஒடுக்கிவிட்ட நிலையில் நாம் நாட்டை நிர்வாகம் செய்யப் பயில வேண்டும். இதற்கு அடக்கமும் திறமை சாலிகளான ''விஞ்ஞானம் மற்றும் தொழில் நுணுக்க விற்பன்னர்'' பால் மரியாதையும் நமது பல நடைமுறை தவறுகளைக் காரியார்த்த முறையிலும் கவனமாகவும் பகுத்தாய்வதும் அவற்றைப்

படிப்படியாக ஆனல் உறுதியாகத் திருத்திக் கொள்வதும் அவசியமாகும். இந்த அறிவுஜீவிகளியல்பான, அதிகார வர்க்கத் தன்மையதான திருப்திமனப்பான்மை குறையட்டும், மத்தியிலும் வட்டாரங்களிலும் பெற்று வரும் நமது நடைமுறை அனுபவம் மற்றும் கிட்டியுள்ள விஞ்ஞான சாதனைகள் பற்றிய பரிசிலனை ஆழமுறுவதாக.

*1921 பிப்ரவரி 21*

நூல் திரட்டு,
தொகுதி 42,
பக்கங்கள் 339-347

# ரு.க.க.(போ.)இன் பத்தாவது காங்கிரசில் ஆற்றிய உபரி தானிய சுவீகரிப்பு முறைக்குப் பதிலாக பண்ட வடிவிலான வரியை மாற்றீடு செய்வது குறித்த அறிக்கை 1921 மார்ச் 15

என்பதிலிருந்து

...தனிப்பட்ட பண்டப் பரிவர்த்தனை குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். கட்டற்ற பரிவர்த்தனை என்று நாம் கூறும் போது தனிப்பட்ட பண்டப் பரிவர்த்தனையையே கருதுகிறோம். இது மறு புறம் குலாக்குகளை ஊக்குவிப்பதாகப் பொருள்படும். நாம் என்ன செய்வது? உபரிகளை சுவீகரிப்பதில் இருந்து வரிக்கு மாறிச் செல்வது என்பது புதிய அமைப்பின் கீழ் மேலும் அதிகக் குலாக்குகள் என்பதாகிவிடும் என்ற மெய்நடப்பை நாம் காணுமல் இருக்க முடியாது. அவர்கள் முன்னுட்களில் தோன்ற முடியாமல் இருந்த இடங்களில் இப்போது தோன்ற முடியும். இதைத் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் எதிர்த்துப் போராடக் கூடாது, மாறாக அரசு ஆதரவின் கீழிலான இணைவு கொள்வது மூலமும் மேலிருந்து அரசாங்க நடவடிக்கைகள் மூலமும் எதிர்க்க வேண்டும். விவசாயிக்கு யந்திரங்கள் கொடுக்க முடியுமானல் அவன் வளர்ச்சியடைய உதவ முடியும்; யந்திரங்கள் அல்லது மின் சக்தி வழங்கப்படும் போது பத்து நூறு ஆயிரக் கணக்கான சிறு குலாக்குகள் துடைத்தழிக்கப்படுவர். அவை எல்லாவற்றையும் வழங்க முடியும் வரையில் ஓரளவுக்குப் பண்டங்களை வழங்கியே தீர வேண்டும். உங்களிடம் பண்டங்கள் இருந்தால் உங்களிடம் ஆட்சி அதிகாரம் இருக்கும்; அத்தகைய எந்த ஒரு சாத்தியப்பாட்டையும் விலக்கவோ மறுக்கவோ துறக்கவோ செய்தால் எல்லாப் பரிவர்த்தனையும் காரியசாத்தியமற்றதாகிவிடும், நடுத்தர விவசாயிகளைத் திருப்திப்படுத்த முடியாது, அவர்களுடன் ஒத்துப் போவது என்பதும் சாத்தியமற்றதாகிவிடும். ருஷ்யாவிலுள்ள விவசாயிகளில் மேலதிகமான விகிதாச்சாரத்தினர் நடுத்தர விவசாயிகளாகி விட்டனர்; எனவே தனிப்பட்ட அடிப்படையிலான பரிவர்த்தனை

குறித்து பயப்பட வேண்டிய முகாந்தரம் இல்லை. எல்லோருமே பரிவர்த்தனையாக அரசுக்குச் சிலவற்றைத் தர முடியும். ஒருவர் தமது உபரி தானியத்தைத் தரலாம்; இன்னொருவர் தமது தோட்ட விளைவைத் தரலாம்; மூன்றுமவர் தமது உழைப்பைத் தரலாம். அடிப்படையில் நிலைமை இதுவே: நாம் பொருளாதார முறையில் நடுத்தர விவசாயியைத் திருப்தி செய்ய வேண்டும், கட்டற்ற பரிவர்த்தனைக்கு மாறிச் செல்ல வேண்டும்; இல்லையேல் உலகப் புரட்சி தவக்கமடைவதன் காரணமாக ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க ஆட்சியை நீடித்துப் பேணி வைத்திருப்பது சாத்தியமல்ல, பொருளாதார முறையில் சாத்தியமல்ல. இதை நாம் தெளிவாக உணர்தல் வேண்டும்; இதைச் சொல்வதற்கு அஞ்சக் கூடாது. உபரி சுவீகரிப்பு அமைப்பு முறையின் இடத்தில் பண்டவகை வரியை மாற்றீடு செய்வது குறித்த நகல் முடிவில் (இதன் வாசகம் உங்களிடம் தரப்பட்டுள்ளது) நீங்கள் பல இசைவின்மைகளையும் முரண்பாடுகளையும் கூடக் காண்பீர்கள். இதனால்தான் இந்தச் சொற்களை இறுதியில் சேர்த்திருக்கிறோம்: ''உபரி தானிய சுவீகரிப்புக்குப் பதில் பண்டவகை வரியை மாற்றீடு செய்வதற்கு என்று மத்தியக் கமிட்டியால் சமர்ப்பிக்கப்பட்டதான பிரேரணைகளைச் சாராம்சத்தில் (இது மிகப் பெருமளவிலான பின்னணியைத் தழுவி நிற்கும் சற்றே தொளதொளப்பான சொல் ஆகும்) ஒப்புக் கொள்ளும் இந்தக் காங்கிரஸ் இந்தப் பிரேரணைகளை உச்சபட்சமான விரைவுடன் ஒருங்கிணைக்கும்படிக் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு நெறியாணை செய்கிறது''. அவை இன்னும் ஒருங்கிணைக்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம், காரணம் அவ்வாறு செய்வதற்கான கால அவகாசம் நமக்கு இருக்கவில்லை; நாம் விவரங்களுக்குள் போகவில்லை. இந்த வரியை வசூலிக்கும் வழிகள் விரிவாக வகுக்கப்பட்டு அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி மற்றும் மக்கள் கமிசார்களின் கவுன்சில் பிறப்பிக்கும் ஒரு சட்டம் மூலம் அமுலாக்கப்படும். இதில் உருவரை செய்யப்பட்டுள்ள நடைமுறை இதுவாகும்: இந்த நகலை இன்று நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களானால், அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் ஆக முதல் அமர்விலேயே இதற்கு ஒரு முடிவின் வன்மை வழங்கப்படும்; இந்த அமர்வு ஒரு சட்டத்தைப் பிறப்பிக்காது, மாறாக திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகளைப் பிறப்பிக்

கும்; மக்கள் கமிசார்களின் கவுன்சிலும் உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சிலும் இதைப் பின்னுல் சட்டமாக்கும்; இதை விட அதிக முக்கியமானது என்னவெனில், இதற்கான நடைமுறை நெறியாணைகளைப் பிறப்பிக்கும். வட்டாரங்களில் இருக்கும் மக்கள் இதன் உட்பொருளைப் புரிந்து கொண்டு நமக்கு உதவ வேண்டுவது முக்கியமானது.

உபரி சுவீகரிப்புக்குப் பதிலீடாக ஒரு வரியை வைப்பதேன்? உபரி சுவீகரிப்பு என்பது எல்லா உபரிகளையும் பறிமுதல் செய்தலையும் கட்டாய அரசு ஏகபோகம் நிலைநாட்டப்படுவதையும் உணர்த்துகிறது. நாம் வேறு வழியில் எதுவும் செய்ய முடியாது; நமது தேவை மிகவும் மிகுதியானது. தத்துவார்த்த முறையில் கூறினுல், சோஷலிசத்தின் நலன்களின் நோக்கு நிலையில் இருந்து அரசு ஏகபோகம் இன்றியமையாத வகையில் ஆகச் சிறந்த அமைப்பு முறை என்பதில்லை. ஒரு தொழில் துறையை வைத்திருக்கும் ஒரு விவசாய நாட்டில் —இந்தத் தொழில் துறை இயங்குமானுல்—ஓரளவுக்கான பண்டங்கள் கிடைக்கக் கூடுமானுல், இடைமாறுதல் கட்ட நடவடிக்கை என்ற முறையில் ஒரு வரிவிதிப்பு அமைப்பும் கட்டற்ற பரிவர்த்தனையும் பயன்படுத்தப்படலாம்.

பரிவர்த்தனை என்பது ஓர் ஊக்குவிப்பு, விவசாயிக்கு ஒரு தூண்டுகோல். அவரது உபரி உற்பத்திப் பண்டம் எல்லாம் அவரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது எனவும் அவர் ஒரு வரியை மட்டுமே செலுத்த வேண்டும் எனவும் அது எப்பொழுதெல்லாம் சாத்தியமோ அப்போது முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டுவிடும் எனவும் தெரிந்து கொள்ளும் போது ஓர் உடைமையாளர் தனது சொந்த நலன் கருதியே நிச்சயமாயும் ஒரு முயற்சி செய்ய முடியும், கட்டாயம் செய்வார். அடிப்படையான காரியம் சிறு விவசாயிக்கு நிலத்தைப் பண்படுத்துவதற்கான ஓர் ஊக்குவிப்பும் ஒரு தூண்டுதலும் தரப்பட வேண்டும் என்பதே. நமது அரசுப் பொருளாதாரத்தை நாம் நடுத்தர விவசாயியின் பொருளாதாரத்துக்குத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். இதை மூன்ருண்டுகளில் திருத்தி அமைக்க நம்மால் முடியவில்லை, இன்னெரு பத்தாண்டுகளில் இதைத் திருத்தி அமைக்க முடியாது.

உணவுத் துறையில் அரசு திட்டவட்டமான பொறுப்புகளை எதிரிட வேண்டி இருந்தது. இதன் காரணமாக தானிய

ஒதுக்கீடு கோட்டாக்கள் சென்ற ஆண்டில் அதிகரிக்கப்பட்டன. வரி சிறிதளவில் இருக்க வேண்டும். சரியான தொகைகள் வரையறுக்கப்படவில்லை, வரையறுக்கப்படவும் முடியாது. பபோவின் சிற்றேடான **சோவியத் மற்றும் கூட்டாட்சி குடியரசுகளின் தானிய உற்பத்தி**, நமது மத்தியப் புள்ளிவிவர போர்ட் வெளியிட்ட சரியான விவரங்களைத் தருகிறது, விவசாய உற்பத்தி ஏன் குறைந்து விட்டது என்பதைப் புலப்படுத்துகிறது.

பயிர் சாவியாகிப் போனால், உபரிகளைத் திரட்ட முடியாது, காரணம் உபரிகள் எதுவும் இராது. அப்போது விவசாயிகளின் வாயில் இருந்துதான் எடுக்க வேண்டியிருந்தது. பயிர் விளைச்சல் இருந்தால், எல்லோரும் மட்டான பசியுடன் இருப்பர், அரசு பாதுகாக்கப்படும்; அல்லது சாமான்யமாக வயிறு நிறையச் சாப்பிடாத மக்களிடமிருந்து எடுத்துக் கொள்ளாவிடில் அரசு அழியும். விவசாயிகள் மத்தியிலான நமது கிளர்ச்சியில் நாம் இதைத் தெளிவாகக் கூற வேண்டும். நல்ல அறுவடை என்றால் ஐம்பது கோடி பூடுகள் உபரி கிடைக்கும். இது நுகர்வாளர் தேவைகளை நிறைவு செய்வதோடு ஓரளவுக்குச் சேமத்தையும் வழங்கும். விவசாயிகளுக்கு ஒரு பொருளாதார ஊக்குவிப்புத் தர வேண்டும் என்பதே இங்கு முக்கியமான விஷயம். ''உடைமையாளர் என்ற முறையில் உற்பத்தி செய்வது உங்கள் கடமை, அரசு ஒரு குறைந்த பட்ச வரியை எடுத்துக் கொள்ளும்'' என்று சிறு உடைமையாளரிடம் கூறிவிட வேண்டும்.

**நூல் திரட்டு,**
தொகுதி 43,
பக்கங்கள் 69-71

# தற்போதும் சோஷலிசத்தின் முழுநிறை வெற்றிக்குப் பிற்பாடும் தங்கத்தின் முக்கியத்துவம்

மாபெரும் ஒரு புரட்சியின்[55] ஆண்டுவிழா கொண்டாட, அதன் தீர்வு பெருத பிரச்சினைகளில் கவனத்தை ஒன்றுகுவிப்பதுதான் மிகச் சிறந்த வழி. அந்தப் புரட்சி இன்னமும் தீர்வு அளிக்காத அடிப்படை பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கும் ஒரு நேரத்தில், இந்தப் பிரச்சினைகளின் தீர்வுக்காக நாம் புதிய ஒன்றை (அந்தப் புரட்சி இது காறும் காதித்திருப்பதன் கண்ணோட்டத்தில்) கற்றுப் பாண்டித்தியம் பெற வேண்டியுள்ள ஒரு நேரத்தில் இப்புரட்சியை இந்த வழியில் கொண்டாடுவது மிக்கப் பொருத்தமாய் இருப்பதோடு அவசியமும் ஆகும்.

பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ''சீர்திருத்தவாத வழியிலான'', படிப்படியான, எச்சரிக்கையான, சுற்றிவளைந்து செல்லும் போக்கு தேவைப்படுவதானது தற்போது நமது புரட்சிக்குப் புதிய ஒன்ருகும். இந்தப் ''புதுமையானது'' தத்துவம், நடைமுறை ஆகிய இரண்டிலும் பல கேள்விகளையும் திகைப்புகளையும் ஐயுறவுகளையும் எழச் செய்கிறது.

ஒரு தத்துவார்த்தப் பிரச்சினை: ஒட்டுமொத்தமாய்ப் புரட்சி வெற்றிகரமாய் முன்னேறிக் கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் ஒரே துறையில் மிகமிகப் புரட்சிகரமான வரிசையான பல செயல்களிலிருந்து மிகமிகச் ''சீர்திருத்தவாத வழியிலான'' செயல்களுக்கு மாறிச் செல்ல வேண்டியிருப்பதற்கு எப்படி நாம் விளக்கம் கூறுவது? ''நிலைகளை விட்டுக் கொடுக்கிருேம்'', ''தோல்வியை ஒத்துக் கொள்கிருேம்'' அல்லது இதையொத்த ஒன்றினைக் குறிப்பதாய் இருக்குமோ இது? ஆம், அப்படித்தான் என்று கூறுகின்றனர் நமது பகைவர்கள்—அரைப் பிரபுத்துவ வகைப்பட்ட பிற்போக்காளர்களிலிருந்து மென்ஷிவிக்குகள் அல்லது இரண்டரையாவது

அகிலத்தின்[56] ஏனைய வீரர்கள் வரையில். சாக்கு கிடைக்கும் தோறும், எந்தச் சாக்கும் இல்லாத போதுங்கூட இது போல எதாவது கூச்சல் எழுப்பவில்லையானல் அவர்கள் பகைவர்களாய் இருக்க மாட்டார்களே. பிரபுத்துவப் பிற்போக்காளர்களிலிருந்து மென்ஷிவிக்குகள் வரையிலான எல்லாக் கட்சிகளிடையிலும் இந்தப் பிரச்சினை குறித்து நிலவும் இதமான கருத்து ஒருமைப்பாடானது இந்த எல்லாக் கட்சிகளும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு விரோதமான ''ஒரு பிற்போக்குத் திரளே'' (எங்கெல்ஸ் 1875, 1884ல் பெபெலுக்கு எழுதிய கடிதங்களில்[57] முன்னறிந்து கூறியது போலவென இடைக்குறிப்பாய்ச் சொல்லலாம்) என்பதற்கு மற்றொரு சான்றே அன்றி வேறல்ல.

ஆனல் நண்பர்களிடத்தும் ஓரளவு ''திகைப்பு''—எனலாமா—இருந்து வருகிறது.

பெருவீதத் தொழில் துறையைப் புனரமைத்து அதன் பண்டங்கள் சிறு விவசாயியின் பயிர்த்தொழிலின் விளை பொருட்களுடன் நேரடியாய்ப் பரிவர்த்தனையாவதற்கு ஏற்பாடு செய்து இவ்வழியில் பின்னது சமுதாய உடைமை யாவதற்கு உதவு. பெருவீதத் தொழில் துறையைப் புனரமைப்பதற்காக விவசாயிகளிடமிருந்து உபரியை வசூலித்துக் கொள்வதன் மூலம் ஓரளவு உணவுப் பொருட்களும் மூலப் பொருட்களும் கடனய் வாங்கிக் கொள்—இதுவே மூன்று ஆண்டுகளுக்கு மேலாய் 1921 வசந்தம் வரையில் நாம் அனுசரித்த திட்டம் (அல்லது முறை, செயல் வழி). பிரச்சினையை இது புரட்சிகர வழியில் அணுகுவதாகும்—பழைய சமூக-பொருளாதார அமைப்பினை ஒரேயடியாய் அறவே நொறுக்கி அதற்குப் பதில் ஒரு புதிய அமைப்பை எழுப்பும் வழி இது.

1921 வசந்தம் முதலாய் இந்த அணுகலுக்கு, திட்டத்துக்கு, முறைக்கு அல்லது செயல் வழிக்குப் பதிலாய் முற்றிலும் மாருன ஒரு முறையை, சீர்திருத்தவாத வகைப்பட்ட முறையை அனுசரித்து வந்திருக்கிருேம் (இன்னும் நாம் ''அனுசரித்துவிட''வில்லை, ''அனுசரித்துக் கொண்டிருக்கிருேம்'', இன்னும் இதனைப் பூரணமாய்ப் புரிந்து கொள்ளவில்லை): பழைய சமூக-பொருளாதார அமைப்பை—வர்த்தகம், சிறு உற்பத்தி, தனியார் பண்ணை, முதலாளித்துவம் இவற்றை — **நொறுக்குவதற்குப் பதிலாய்** வர்த்தகத்தை, சிறு உற்பத்தியை, முதலாளித்துவத்தைப் **புத்துயிர்** பெறச்

செய்து அதே போது விழிப்புடனும் படிப்படியாகவும் இவற்றின் மீது மேல்நிலை பெறுதல் அல்லது அவை புத்துயிர் பெறும் அளவுக்கு மட்டும் அவற்றை அரசின் ஒழுங்கியக்கத்துக்கு உட்படுத்த வகை செய்தல் என்னும் ஒரு முறையை அனுசரித்து வந்திருக்கிறோம்.

பிரச்சினையை முற்றிலும் புதியதொரு வழியில் அணுகுவதாகும் இது.

முந்தைய, புரட்சிகர முறையிலான அணுகலுடன் ஒப்பிடுகையில் இது சீர்திருத்தவாத முறையிலான அணுகலாகும் (புரட்சி என்பது பழைய அமைப்பினை அதன் அடிநிலைகளோடு நொறுங்கச் செய்யும் மாற்றமாகுமே அன்றி, கூடுமான வரை நொறுங்காதபடிப் பார்த்து எச்சரிக்கையாய், மெதுவாய், படிப்படியாய் அதைத் திருத்தியமைப்பதல்ல).

இங்கு எழும் கேள்வி இதுவே: புரட்சிகர முறைகளைக் கையாண்டு பார்த்து அவை தோற்றுவிட்டதைக் கண்டு சீர்திருத்தவாத முறைகளை நீங்கள் அனுசரிப்பீர்களாயின், புரட்சி செய்தது பொதுவிலேயே தவறெனப் பிரகடனம் செய்கிறீர்கள் என்பதைத்தானே அது நிரூபிக்கிறது? நீங்கள் புரட்சியை ஆரம்பித்திருக்கக் கூடாது, சீர்திருத்தங்களைத் தொடங்கி அவற்றுக்குள்ளேயே உங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்பதை இது நிரூபிக்கவில்லையா?

இதுவே மென்ஷிவிக்குகளும் அவர்களையொத்த ஏனையோரும் வந்தடையும் முடிவு. ஆனால் இந்த முடிவு குதர்க்கவாதம் அல்லது தோல் தடித்துவிட்ட அரசியல்வாதிகள் புரியும் பித்தலாட்டமாகும், அல்லது அரசியல் கற்றுக்குட்டிகளின் சிறுபிள்ளைத்தனமாகும். புரட்சிகர முறைகள் ஏற்றவையாய், அவை வெற்றிகரமாய்க் கையாளத்தக்கனவாய் இருக்கும் வரம்புகளையும் நிலைமைகளையும் கவனியாது ஒதுக்கிவிடும் புரட்சிவாதத்தை மிகைப்படுத்துவதால் உண்டாகும் அபாயம்தான் மெய்யான புரட்சியாளருக்கு உண்டாகக் கூடிய மிகப் பெரிய—ஒரேயொரு என்று கூடச் சொல்லலாம்—அபாயமாகும். உண்மையான புரட்சியாளர்கள் ‘‘புரட்சியைக்’’ கொட்டை எழுத்திட்டு எழுதத் தொடங்கியதும், ‘‘புரட்சியை’’ ஏறத்தாழ தெய்வீகமான ஒன்றின் நிலைக்கு உயர்த்த முற்பட்டதும், நிதானம் தவற ஆரம்பித்ததும், எந்தத் தருணத்தில், எந்தச் சூழ்நிலைமைகளில், எந்தச் செயல் துறைகளில் புரட்சிகர வழியில் செயல்

பட வேண்டுமென்பதையும் எந்தத் தருணத்தில், எந்தச் சூழ்நிலைமைகளில், எந்தச் செயல் துறைகளில் சீர்திருத்த வாதச் செயலில் இறங்க வேண்டுமென்பதையும் மிகமிக அமைதியாகவும் கொஞ்சமும் விருப்புவெறுப்பின்றியும் சிந்தித்துச் சீர்தூக்கி நிர்ணயிப்பதற்கான ஆற்றலை இழக்கத் தொடங்கியதும் பெரும்பாலும் அதோகதியாகியுள்ளனர். நிதானக் கண்ணோட்டத்தைத் துறந்து ''மாபெரும், வெற்றி கர உலகப்'' புரட்சி எல்லா நிலைமைகளிலுமே எல்லாச் செயல் துறைகளிலுமே எல்லாப் பிரச்சினைகளுக்கும் புரட்சி கர வழியிலேதான் தீர்வு காண முடியும், தீர்வு காணவும் வேண்டுமென்று நினைக்க முற்படும்போதுதான் மெய்யான புரட்சியாளர்கள் அழிந்துபடுவர் (வெளியிலிருந்து தோற் கடிக்கப்பட்டு விடுவர் என்பதல்ல, அவர்களுடைய பணி உள்ளிருந்தே தகர்வுக்கு உள்ளாகிவிடும்); அவர்கள் இதைச் செய்வார்களாயின் அவர்கள் அழிந்துபடுவது உறுதி.

இத்தகைய கருத்துக்களை மண்டையில் ஏற்றிக் கொள் பவர் எவரும் அழிந்துபடுவார்; ஏனெனில் அடிப்படையான ஒரு பிரச்சினை குறித்து அவர் அசட்டுக் கருத்துக்கள் கொண்ட வர். கொடூரமான ஒரு போரில் (புரட்சியானது மிகமிகக் கொடூர வகைப்பட்ட போரே ஆகும்) அசட்டுத் தனத் துக்குத் தண்டனை தோல்விதான்.

''மாபெரும், வெற்றிகர உலகப்'' புரட்சி புரட்சிகர மான முறைகளை மட்டும்தான் கையாள முடியும், கையாள வேண்டும் என்று கொள்வதற்கு ஆதாரம் உண்டா? எந்த ஆதாரமும் கிடையாது. இவ்வாறு கொள்வது முற்றிலும் போலியான முடிவே ஆகும். நாம் மார்க்சியத்திலிருந்து பிறழாது செல்வோமாயின் முற்றிலும் தத்துவார்த்த முதற் கோள்களைக் கொண்டு இதனை நிரூபித்துக் காட்டலாம். நமது புரட்சியின் அனுபவமும் இது போலியான முடிவே ஆகு மென்பதைத் தெளிவுபடுத்துகிறது. தத்துவார்த்தக் கண் ணோட்டத்திலிருந்து முட்டாள் தனமான காரியங்கள் ஏனைய காலத்தில் செய்யப்படுவது போலவே புரட்சிக் காலத்திலும் செய்யப்படுகின்றன என்று எங்கெல்ஸ் கூறினார்.[58] அவர் கூறியது முழுக்கவும் சரியானதே. முட்டாள் தனமான காரி யங்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவாய்ச் செய்ய முயல வேண்டும்; செய்யப்பட்டவற்றை எவ்வளவு சீக்கிர மாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய்ச் சரிசெய்து கொண்டு

விட வேண்டும். எந்த ஒரு நேரத்திலும் எந்தப் பிரச்சினைகளுக்குப் புரட்சிகர முறைகளில் தீர்வு காண முடியும், எவற்றுக்கு முடியாது என்பதை நாம் கூடுமான அளவுக்கு நிதானமாய் மதிப்பிட்டாக வேண்டும். நமது நடைமுறை அனுபவத்தின் கண்ணேட்டத்திலிருந்து பிரேஸ்த் சமாதானம்[59] எவ்விதத்திலும் புரட்சிகரமல்லாத செயலுக்குரிய ஓர் உதாரணம். அது சீர்திருத்தவாதச் செயலாகும், இன்னுங் கூட மோசமானதாகும். ஏனெனில் அது பின்வாங்குதலாகும். ஆனல் சீர்திருத்தவாதச் செயலானது பொதுவாய் மெள்ள மெள்ள, எச்சரிக்கையோடு, படிப்படியாய் முன்னேறுகிறதே அன்றி பின்னேக்கிச் செல்வதில்லை. பிரேஸ்த் சமாதானம் செய்து கொண்டதில் நம்முடைய போர்த்தந்திரம் பிழையற்றதாகும் என்பது முழுநிறைவாகவும் எல்லோருக்கும் விளங்கும்படியும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும்படியும் நிரூபிக்கப்பட்டுவிட்டதால், இது குறித்து மேலும் கூறத் தேவையில்லை.

நமது புரட்சியின் முதலாளித்துவ-ஜனநாயகப் பணி மட்டும்தான் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்துப் பெருமிதம் கொள்ள நமக்கு முழு உரிமை உண்டு. புரட்சியின் பாட்டாளி வர்க்க அல்லது சோஷலிசப் பணியை மூன்று பிரதானக் கூறுகளில் சுருக்கமாய்த் தொகுத்துக் கூறலாம்: 1) ஏகாதிபத்திய உலகப் போரிலிருந்து புரட்சிகரமாய் வெளியேறுதல்; முதலாளித்துவக் கொள்ளைவெறியர்களின் இரு உலகக் கோஷ்டிகளும் ஏற்பாடு செய்திருக்கும் கொலைத் தாண்டவத்தை அம்பலப்படுத்துவதும் நிறுத்துவதும்—நம் தரப்பைப் பொறுத்தவரை இப்பணி பூரணமாய்ச் செய்யப்பட்டு விட்டது; முன்னேறிய நாடுகள் பலவற்றிலும் புரட்சி ஏற்பட்டிருந்தால், இப்பணி அதன் எல்லாக் கூறுகளிலும் செய்து முடிக்கப்பட்டிருக்கலாம். 2) பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குரிய ஒரு வடிவமாய் சோவியத் அமைப்பினை நிறுவுதல். சகாப்தகர முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முதலாளித்துவ-ஜனநாயக நாடாளுமன்ற முறையின் சகாப்தம் முடிவடைந்து விட்டது. உலக வரலாற்றிலே ஒரு புதிய அத்தியாயம்—பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரச் சகாப்தம்—ஆரம்பமாகியுள்ளது. சோவியத் அமைப்பும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் எல்லா வடிவங்களும் பல நாடுகளின் முயற்சிகளால்தான் முத்

தாய்ப்பு அளிக்கப்பட்டு நிறைவு செய்யப்படும். இத்துறையில் இன்னும் நாம் செய்யாதிருப்பவை மிகமிகப் பலவும் உள்ளன. இதைப் பார்க்கத் தவறுவது மன்னிக்க முடியாததாகும். மீண்டும் மீண்டும் நாம் இப்பணியைச் செம்மை செய்துச் செல்ல வேண்டியிருக்கும், திரும்பிச் செய்ய வேண்டியிருக்கும், தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கும். நமது உற்பத்திச் சக்திகளையும் நமது கலாசாரத்தையும் வளர்த்திடுவதில் முன்னேக்கியும் மேல்நோக்கியும் நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையுடனும் கூடவே நமது சோவியத் அமைப்பை மேம்படுத்துவதற்கும் மாற்றுவதற்குமான பணிகளும் நடைபெற்றுக வேண்டும்—பொருளாதாரம், கலாசாரம், இவற்றின் அளவுநிலையில் இன்னமும் நாம் கீழ் மட்டத்தில்தான் இருக்கிறோம். மிகுதியான பலவும் மாற்றப்பட்டாக வேண்டும்; இது குறித்து ''கூச்சப்படுவது'' அபத்தமும் (இன்னுங்கூட மோசமானதும்) ஆகும். 3) சோஷலிச அமைப்புக்கான பொருளாதார அடித்தளம் படைப்பிக்கப்பட்டாக வேண்டும். இந்தத் துறையில் மிகவும் முக்கியமானதன், மிகவும் அடிப்படையானதன் பிரதான கூறுகள் இன்னும் பூர்த்தி செய்யப்பட்டாகவில்லை. இவற்றைச் செய்வதே நமக்குரிய பிழையற்ற பணி—கோட்பாட்டின் கண்ணேட்டத்திலும் நடைமுறைக் கண்ணேட்டத்திலும் இன்றைய ரு.சோ.சோ.கூ. குடியரசினது கண்ணேட்டத்திலும் சர்வதேசக் கண்ணேட்டத்திலும் பிழையற்றதாகும்.

இந்தப் பணியின் பிரதான கூறுகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லையாதலால், நமது கவனம் அனைத்தையும் இவற்றில் ஒன்றுகுவித்தாக வேண்டும். இங்குள்ள இடர்ப்பாடு மாறிச் செல்வதற்குரிய வடிவம் சம்பந்தப்பட்டதாகும்.

1918 ஏப்ரலில் **சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்** என்பதில் நான் எழுதினேன்: ''பொதுப்பட புரட்சியாளரும் சோஷலிஸ்டு ஆதரவாளரும் ஆகவோ, கம்யூனிஸ்டாகவோ இருந்தால் மட்டும் போதாது. குறிப்பிட்ட ஒவ்வொரு தருணத்திலும் சங்கிலியில் எந்த ஓர் இணைப்பை உங்கள் முழு பலத்தையும் கொண்டு பற்றிக் கொண்டால் முழுச் சங்கிலியையும் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளவும் அடுத்த இணைப்புக்கு மாறிச் செல்வதற்குத் திடமான முறையில் தயாரிப்பு செய்யவும் முடியும் என்பதை நீங்கள் கண்டு கொள்ளும் ஆற்றலுடையவராய் இருக்க வேண்டும். வர

லாற்று நிகழ்ச்சிகளின் சங்கிலியில் இணைப்புகளின் வரிசையும் அவற்றின் வடிவமும் அவை ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும் முறையும் ஒன்றுக்கொன்று அவை வேறுபடும் விதமும் கொல்லுப் பட்டறையாளரால் செய்யப்பட்ட சாதாரண சங்கிலியில் இருப்பதைப் போல் அவ்வளவு எளிதாகவும் அவ்வளவு அர்த்தமற்றவையாகவும் இருப்பதில்லை''.

நாம் பரிசீலிக்கும் செயல் அரங்கில் தற்போது இந்தக் கரணை, தக்கபடியான அரசு ஒழுங்கு முறையின் (நெறி முறையின்) கீழ் உள்நாட்டு வர்த்தகத்தைப் புத்துயிர் பெற்றெழச் செய்வதே ஆகும். வரலாற்று நிகழ்ச்சிகளது சங்கிலியில், 1921-22ல் நமது சோஷலிசக் கட்டுமானத்தின் இடைக்கால வடிவங்களில், வர்த்தகம்தான் பாட்டாளி வர்க்க அதிகாரமான நாம், ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சியான நாம் ''நமது சக்தி முழுவதையும் கொண்டு பற்றிக் கொள்ள வேண்டிய'' ''கரணையாகும்''. இப்பொழுது நாம் போதிய அளவு உறுதியுடன் இந்தக் கரணையைப் ''பற்றிக் கொள்வோம்'' ஆயின், மிக அருகாமையிலான வருங்காலத்தில் சங்கிலி அனைத்தின் மீதும் நிச்சயமாய் நாம் கட்டுப்பாடு செலுத்துவோம். பற்றிக் கொள்ளாவிடில், சங்கிலி அனைத்தின் மீதும் நாம் கட்டுப்பாடு செலுத்தப் போவதில்லை, சோஷலிச சமூக-பொருளாதார உறவுகளுக்கான அடித்தளத்தைப் படைப்பிக்கப் போவதுமில்லை.

கம்யூனிசமும் வர்த்தகமுமா?! விநோதமாய்த்தான் தோன்றுகிறது. இரண்டும் தொடர்பில்லாதனவாய், ஒவ்வாதனவாய், துருவங்களைப் போல விலகி நிற்பனவாய்த் தோன்றுகின்றன. ஆனால் பொருளியலின் கண்ணோட்டத்திலிருந்து நாம் ஆராய்வோமாயின், கம்யூனிசமானது சிறு விவசாயியின் தந்தைவழி மரபிலான பயிர்த்தொழிலிலிருந்து விலகி இருப்பதைக் காட்டிலும் அதிகமாய் இவை இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று விலகியிருக்கவில்லை என்பதைக் காண்போம்.

உலக அளவில் நாம் வெற்றி ஈட்டியதும் தங்கத்தை உலகின் மிகப் பெரிய நகரங்கள் சிலவற்றின் தெருக்களில் பொதுக் கக்கூசுகள் கட்டுவதற்காக உபயோகிப்போம் என்று நினைக்கிறேன். ''சுதந்திரத்துக்கான மகத்தான'' போர் என்பதாய் 1914-18ல் நடைபெற்ற போரில், எந்த சமாதானம் மோசமானது — பிரேஸ்த் சமாதானமா, வெர்சேய் சமாதானமா[60] — என்கிற பெரும் பிரச்சினையைத் தீர்மானிப்பதற்

காக நடைபெற்ற அந்தப் போரில் தங்கத்துக்காக வேண்டி எப்படி ஒரு கோடிப் பேர் கொல்லப்பட்டனர், மூன்று கோடிப் பேர் முடமாக்கப்பட்டனர் என்பதை மறந்து விடாத தலை முறைகளுக்கும், எப்படி இதே போலத் தங்கத்துக்காக வேண்டி உதாரணமாய் 1925லோ, 1928லோ உதாரண மாய் ஜப்பானுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குமோ, பிரிட்டனுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குமோ, இதை யொத்த இரு நாடுகளுக்குமோ நடக்கக் கூடிய போரில் இரண்டு கோடிப் பேரைக் கொல்லவும் ஆறு கோடிப் பேரை முடமாக்கவும் நிச்சயமாய்த் திட்டமிடுகிறார்கள் என்பதைக் காண்போருக்கும் இது அனுகூலமாய்த் தங்கத்தை உப யோகிப்பதற்கான ''நேர்மை மிக்க'' முறையாகவும் கல்வி போதமளிக்கும் முறையாகவும் இருக்கும்.

ஆனால் தங்கத்தை இந்தக் காரியத்துக்காக உபயோகிப் பது எவ்வளவு ''நேர்மை மிக்கதாயும்'' பயனுள்ளதாயும் அல்லது மனிதாபிமானம் கொண்டதாயும் இருப்பினும், இந்த நிலையை வந்தடையும் பொருட்டு நாம் இன்னும் பத்து, இருபது ஆண்டுகளுக்கு 1917-21ஆம் ஆண்டுகளின் கட்டத் தில் செய்தது போலவே அதே கடுமையுடனும் அதே அளவு வெற்றியுடனும் மேலும் மிக விரிவான துறையிலே பாடு பட்டாக வேண்டுமெனக் கூறுகிறோம். இதற்கிடையில் ரு. சோ. சோ. கூ. குடியரசில் நாம் தங்கத்தை மீத்துச் சேமிக்கவும் மிக உயர்ந்த விலைக்கு விற்கவும் அதைக்கொண்டு மிகக் குறைந்த விலைக்குப் பண்டங்கள் வாங்கவும் வேண்டும். ஓநாய்களிடையே வாழும் போது ஓநாயைப் போல ஊளை யிடத்தான் வேண்டும்; எல்லா ஓநாய்களையும் ஒழித்துக் கட்டு வதைப் பொறுத்த மட்டில்—அறிவு வழிப்பட்ட மனித சமு தாயத்தில் இவற்றை ஒழித்துக் கட்டத்தான் வேண்டும்— ''பெருமைப் பேச்சுக்கு நேரம் போருக்குப் பிற்பாடே அன்றி முன்னதாய் அல்ல'' என்கிற அறிவார்ந்த ருஷ்ய முதுமொழி யின் பிரகாரம் நடந்து கொள்வோம்....

கோடிக் கணக்கான சிறு விவசாயிகளுக்கும் பெருவீதத் தொழில் துறைக்கும் இடையில் வர்த்தகம்தான் சாத்திய மான ஒரேயொரு பொருளாதார இணைப்பு—இந்த விவ சாயிகளுடன் கூடவே சிறந்த சாதனங்களையும் மின்விசைக் கம்பிவழிகளது வலைப்பின்னல் அமைப்பையும் கொண்ட பெருவீத இயந்திரத் தொழில் துறை இல்லையேல், சிறு

விவசாயிகளுக்குச் சிறந்த பண்டங்களை முன்னிலும் கூடுதலான அளவுகளிலும் மேலும் சீக்கிரமாகவும் மலிவாகவும் வழங்கும் திறன் பெறுவதற்குப் போதுமான தொழில்நுட்பச் சாதனங்களும் ஒழுங்கமைப்பு ''மேற்கட்டுமானங்களும்'' பிற கூறுகளும் கொண்ட தொழில் துறை இல்லையேல்... வர்த்தகம்தான் சாத்தியமான ஒரேயொரு பொருளாதார இணைப்பு. உலக அளவில் இந்த ''இல்லையேல்'' என்னும் நிபந்தனை ஏற்கெனவே சாதிக்கப் பெற்றுவிட்டது; இந்த நிபந்தனை ஏற்கெனவே இருப்பதாகி விட்டது; ஆனால் முன்பெல்லாம் மிகவும் பிற்பட்ட முதலாளித்துவ நாடுகளில் ஒன்றாய் இருந்த நாடு தொழில் துறைக்கும் விவசாயத்துக்கும் இடையே அனேகமாய்ப் புத்தம்புதிய இணைப்புகளைத் தனித்து நின்று நேரடியாய் ஒரே அடியில் தோற்றுவிக்கவும் பயன்படுத்தவும் ஒழுங்கமைக்கவும் முயற்சி செய்தது; ''நேரடித் தாக்குதல்'' மூலம் இந்தப் பணியை நிறைவேற்றத் தவறிவிட்டது; இப்பொழுது அது மெதுவான, படிப்படியான, எச்சரிக்கையுடனான ''முற்றுகை'' நடவடிக்கைகள் பலவற்றின் மூலம் இப்பணியை நிறைவேற்ற முயற்சி செய்தாக வேண்டும்.

பாட்டாளி வர்க்க அரசாட்சி வர்த்தகத்தைக் கட்டுப்பாடு செய்து அதனை நெறிப்படுத்திக் குறிப்பிட்ட வழிகளிலே செலுத்தி குறிப்பிட்ட வரம்புகளுக்குள் அதைச் செயல்பட வைக்க முடியும். ஒரு சிறு, மிகச் சிறிய ஓர் உதாரணம் தருகிறேன்: தனேத்ஸ்க் நிலக்கரிப் பிரதேசத்தில் பொருளாதாரம் சிறிதளவு, இன்னமும் மிகச் சிறிதளவே ஆன, ஆனால் சந்தேகத்துக்கு இடமில்லாதபடிப் புத்துயிர் பெற்றிருக்கிறது. இதற்கு, பெரிய அரசாங்கச் சுரங்கங்களில் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட உயர்வு ஓரளவும், விவசாயிகளின் சிறிய சுரங்கங்கள் குத்தகைக்கு விடப்பட்டது ஓரளவும் காரணமாகும். இதன் விளைவாய்ப் பாட்டாளி வர்க்க அரசாங்கத்துக்குக் கூடுதலாய்ச் சிறிதளவு (முன்னேறிய நாடுகளில் கிடைப்பதுடன் ஒப்பிட்டால் அற்ப சொற்ப அளவே என்றாலும் வறுமை வாய்ப்பட்ட நமது நிலைமையைக் கருதும் போது குறிப்பிடத்தக்க அளவிலான) நிலக்கரி கிடைத்து வருகிறது. இதன் அடக்க விலை 100 என்பதாய் வைத்துக் கொள்வோம். இந்த நிலக்கரியை அது பல்வேறு அரசாங்க இலாகாக்களுக்கு 120 என்கிற விலைக்கும்

தனி நபர்களுக்கு 140 என்கிற விலைக்கும் விற்று வருவதாய்க் கொள்வோம். (நான் தரும் புள்ளிகள் முற்றிலும் கற்பித மானவை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு கூற வேண்டும்; ஏனெனில் முதலாவதாக, சரியான விலைகள் எனக்குத் தெரி யாது; இரண்டாவதாக, தெரிந்தாலுங்கூட இப்பொழுது அவற்றை நான் பகிரங்கப்படுத்த மாட்டேன்.) மிகவும் மித மான அளவுகளில்தான் என்றாலும் தொடங்கி விட்டோம் என்பதாய் இதிலிருந்து தெரிகிறது: தொழில் துறைக்கும் விவசாயத்துக்கும் இடையே பரிவர்த்தனையைக் கட்டுப்பாடு செய்ய, மொத்த வர்த்தகத்தைக் கட்டுப்பாடு செய்ய, இருக்கக் கூடிய சிறிய, பிற்பட்ட தொழில் துறையை அல்லது பலவீனமுற்றுவிட்ட பாழ்பட்ட நிலையிலுள்ள பெருவீதத் தொழில் துறையை நிர்வகிக்கும் பணியைச் சமாளிக்கத் தொடங்கி விட்டோம் என்பதாய்த் தெரிகிறது; தற்போதைய பொருளாதார அடிப்படையில் வர்த்தகத்துக்குப் புத்து யிருட்டவும் சாதாரண நடுத்தர விவசாயியை (அதாவது, வகை மாதிரியாய்க் கொள்ளத்தக்க விவசாயியை, பெருந்திரளுக்கு உதாரணமான, பெருந்திரளானோரின் மனப்பாங்குக்கு மெய் யான பிரதிநிதியான விவசாயியை) பொருளாதாரம் புத்து யிர் பெறுவதன் அனுகூலத்தை உணரும்படிச் செய்யவும் மேலும் முறையாகவும் விடாப்பிடியாகவும் மேலும் விரிவாக வும் வெற்றிகரமாகவும் பெருவீதத் தொழில் துறையைப் புனரமைப்பதற்காக இதைப் பயன்படுத்திக் கொள்ளவும் தொடங்கி விட்டோம் என்பதாய்த் தெரிகிறது.

வர்த்தகத்தின் பால் பரம அலட்சியப் போக்கு கொண்ட ''உணர்ச்சி வயப்பட்ட சோஷலிசத்துக்கோ'', பழைய ருஷ்ய, பகுதியளவு பிரபுக்குலத்து, பகுதியளவு நாட்டுப் புறத்து, தந்தைவழிச் சமூகத்து மனப்பான்மைக்கோ நாம் சரணடையப் போவதில்லை. இடைக்காலப் பொருளாதார வடிவங்கள் யாவற்றையும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்; இது அவசியமென்பதால் பயன்படுத்தக் கற்றுக் கொண்டாக வேண்டும். விவசாயிகளுக்கும் பாட்டாளி வர்க் கத்துக்கும் இடையிலான இணைப்பை வலிமையாக்கும் பொருட்டு, நாசமாகிவிட்ட அவதிக்குள்ளான நமது நாட் டின் பொருளாதாரத்தை உடனடியாக உயிர் பெற்றெழச் செய்யும் பொருட்டு, தொழில் துறையை மேம்படுத்தும் பொருட்டு, மின்னூக்கம் செய்வது போன்ற வருங்காலத்துக்

குரிய மிகவும் விரிவான ஆழ்நிலை செயற்பாட்டுக்குரிய நடவடிக்கைகளுக்குப் பாதையைச் செப்பனிடும் பொருட்டு இவையாவற்றையும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும், பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

புரட்சியின் பால் சீர்திருத்தங்களுக்குள்ள உறவினை மார்க்சியம் ஒன்றுல் மட்டுமே துல்லியமாகவும் பிழையின்றியும் வரையறுக்க முடிந்துள்ளது. அதே போதில் மார்க்ஸ் இந்த உறவை ஒரு கோணத்தில் மட்டுமிருந்துதான்—ஒரே நாட்டில்தான் என்றுலும் பாட்டாளி வர்க்கத்தின் ஓரளவுக்கு நிரந்தரமான நீடித்து நிலவும் முதலாவது வெற்றிக்கு முற்பட்டதான நிலைமைகளில் மட்டும்தான்—கண்ணுற முடிந்தது. இந்த நிலைமைகளில், பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்தின் இடைவிளைவே சீர்திருத்தங்கள் என்பதுதான் சரியான உறவுக்குரிய அடிப்படையாய் இருந்தது. முதலாளித்துவ உலகு முழுவதிலும் இந்த உறவுதான் பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரப் போர்த்தந்திரத்தின் அடிப்படையாகும், இரண்டாவது அகிலத்தின் ஊழல் மலிந்த தலைவர்களும் இரண்டரையாவது அகிலத்தின் போலிப் புலமையும் பொய் மினுக்கும் கொண்ட வீரர்களும் திரித்துப் புரட்டியும் மூடிமறைத்தும் வரும் அரிச்சுவடிப்பாடமாகும். பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்குப் பிற்பாடு — ஒரேயொரு நாட்டில்தான் இந்த வெற்றி என்ற போதிலும் — புரட்சியின் பால் சீர்திருத்தங்களுக்குள்ள உறவினில் புதியதொன்று இடம் பெறுகிறது. கோட்பாட்டினில் அது முன்பு போலவேதான் இருக்கிறது. ஆனுல் வடிவத்தில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது—மார்க்சினுலுங்கூட முன்னறிந்து கொள்ள முடியாத மாற்றம். ஆயினும் மார்க்சியத்தினுடைய தத்துவஞானத்தின் அரசியலின் அடிப்படையிலேதான் இதைப் புரிந்து கொள்ள முடியும். பிரேஸ்த் பின்வாங்குதலை நம்மால் வெற்றிகரமாய் நடத்த முடிந்தது ஏன்? ஏனென்றுல் பின்வாங்குவதற்கு இடமிருக்கும்படி அந்த அளவுக்கு நாம் முன்னேறிச் சென்றிருந்தோம். அப்படித் தலைதெரிக்கும் வேகத்தில், ஒருசில வாரங்களுக்குள், 1917 அக்டோபர் 25லிருந்து பிரேஸ்த் சமாதானத்துக்குள், நாம் சோவியத் அரசைக் கட்டியெழுப்பினேம், ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து புரட்சிகர முறையில் வெளியேறினேம், முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை

நிறைவுறச் செய்தோம்; ஆகவே பின்னேக்கி அமைந்த அந்தப் பெரிய நடையும்கூட (பிரேஸ்த் சமாதானம்) நாம் இந்த ''இடை ஓய்வைப்'' பயன்படுத்திக் கொள்ளவும் கல்ச்சாக்கையும் தெனீக்கினேயும் யுதேனிச்சையும் பில்சூட்ஸ்கியையும் விராங்கெலேயும் எதிர்த்து வெற்றிகரமாய் முன்னேறிச் செல்லவும் நமக்குப் போதுமான இடம் விட்டுவைத்தது.

பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு முன்பு சீர்திருத்தங்கள் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் இடைவிளைவாய் இருக்கின்றன. வெற்றிக்குப் பிற்பாடு (சர்வதேச அளவில் இன்னமும் ''இடைவிளைவாகவே'' இருப்பினும்) வெற்றி ஈட்டப் பெற்ற நாட்டுக்கு மூச்சு விடுவதற்கான அவசியமும் நியாயமுமான சிறிது நேர இடைவெளியாக அமைகின்றன; மிகவும் கடுமையாய்ப் பிரயாசையில் ஈடுபட்டிருந்ததைத் தொடர்ந்து இப்பொழுது ஏதேனும் சில மாற்றமைவுகளைப் புரட்சிகர வழியில் சாதிக்கப் போதுமான பலம் இல்லை என்பது தெளிவாகிறது. வெற்றியானது பலவந்தப் பின்வாங்குதலிலுங்கூட உறுதியுடன் நிற்க, பொருளாயத வழியிலும் ஆன்மீக வழியிலும் உறுதியுடன் நிற்க ''உள்ளார்ந்த பலத்தைப்'' படைக்கிறது. பொருளாயத வழியில் உறுதியுடன் நிற்பதென்பதற்கு, படு தோல்வி அளித்துவிடாதபடிப் பகைவனைத் தடுப்பதற்குப் போதுமான அளவுக்குப் பலத்தில் மேல் நிலையைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என்று அர்த்தம். ஆன்மீக வழியில் உறுதியுடன் நிற்பதென்பதற்கு, நாம் மனந் தளர்ந்துவிடவும் ஒழுங்கு குலைந்துவிடவும் இடந்தராதிருத்தல், நிலைமையைப் பற்றிய நிதானம் தவருதிருத்தல், உத்வேகத்தையும் மன உறுதியையும் பாதுகாத்து நெடுந் தொலைவு—ஆனல் அளவு மீருமலும், தக்க தருணத்தில் பின்வாங்குதலை நிறுத்தித் தாக்குதலுக்குத் திரும்பும்படியும்—பின்வாங்க முடியும்படியாய் இருத்தல் என்று அர்த்தம்.

நாம் அரசு முதலாளித்துவத்துக்குப் பின்வாங்கினேம். ஆனல் அளவு மீறி நெடுந்தொலைவு பின்வாங்கவில்லை. இப்பொழுது வர்த்தகத்தில் அரசாங்க ஒழுங்கியக்கத்துக்கு நாம் பின்வாங்கிச் செல்கிறேம். ஆனல் அளவு மீறிப் பின்வாங்கிவிடப் போவதில்லை. இந்தப் பின்வாங்குதல் முடிவுறும் நிலைக்கு வருகிறது என்பதற்குக் கண்கூடான அறிகுறிகள் தெரிகின்றன; அதிக தொலைவிலில்லாத வருங்காலத்

தில் நாம் இந்தப் பின்வாங்குதலை நிறுத்திவிட முடியும் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. அவசியமாயுள்ள இந்தப் பின்வாங்குதலை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு உணர்வு பூர்வமாகவும் ஒருமனதாகவும் தப்பெண்ணங்களிலிருந்து விடுபட்டும் செய்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு இதை நாம் சீக்கிரமாகவே நிறுத்த முடியும்; அவ்வளவுக்கு அவ்வளவு இதனை அடுத்து நமது வெற்றிகர முன்னேற்றம் நிலையானதாகவும் வேகமுடையதாகவும் விரிவானதாகவும் இருக்கும்.

*1921 நவம்பர் 5*

நூல் திரட்டு,
தொகுதி 44,
பக்கங்கள் 221-229

# கூட்டுறவு குறித்து

## 1

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. தற்போது, அக்டோபர் புரட்சி நடைபெற்றது முதலாய், புதிய பொருளாதாரக் கொள்கையையும்[61] அன்னியில் (இதற்கு மாறாய்ப் புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாய் என்றே இச்சந்தர்ப்பத்தில் நாம் கூற வேண்டும்), கூட்டுறவு இயக்கம் மிகுந்த முக்கியத்துவமுடையதாகி விட்டதை எல்லோரும் புரிந்து கொள்வதாய்ச் சொல்வதற் கில்லை. பழைய கூட்டுறவாளர்களுடைய[62] கனவுகளில் கற்பனைப் புனைவுகள் மிகுதியாய் உள்ளன. அடிக்கடி அவை நகைக்கத்தக்க அளவுக்குக் கற்பனைப் புனைவுகளாய் அமைந்து விடுகின்றன. அவை நம்ப முடியாத கற்பனைகளாய் இருக்கக் காரணம் என்ன? காரணம் என்னவெனில், சுரண்டலாளர் களுடைய ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காக நடைபெறும் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் அடிப்படை யான, ஆழ்மட்டத்து முக்கியத்துவத்தை இவர்கள் புரிந்து கொள்வதில்லை. நாம் சுரண்டலாளர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்தி விட்டோம்; ஆகவே பழைய கூட்டுறவாளர் களுடைய கனவுகளில் கற்பனையாகவும் ஏன் புத்தார்வ மனப் பாங்காகவும் கொச்சையாகவும் கூட இருந்தவை பலவும் இப்பொழுது அப்பட்ட எதார்த்த உண்மையாகி வரு கின்றன.

அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு வந்து விட்டதால், உற்பத்திச் சாதனங்கள் யாவும் இந்த அரசியல் ஆட்சியதிகாரத்துக்குச் சொந்தமாகி விட்ட தால், இனி மக்கள் எல்லோரையும் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரளச் செய்வதுதான் நமக்குள்ள ஒரே பணி என்றாகி விட்டது. வர்க்கப் போராட்டத்தை நடத்துவதும் அரசியல்

ஆட்சியதிகாரத்துக்காகப் போராடுவதும் இன்ன பிறவும் அவசியமென்று பிழையற்ற முறையில் கருதியோர், நியாய மாகவே நகைப்புக்கும் இகழ்ச்சிக்கும் ஏளனத்துக்கும் உரிய தாய்க் கொண்ட அந்தச் சோஷலிசம் இப்பொழுது மக்கள் தொகையில் மிகப் பெருவாரியானோர் கூட்டுறவுகளில் ஒன்று திரட்டப்பட்டதும் தானாகவே தனது குறிக்கோளை நிறை வேற்றிக் கொண்டுவிடும். ஆனால் இப்பொழுது ருஷ்யாவின் மக்கள் எல்லோரையும் கூட்டுறவு சங்கங்களில் ஒன்றுதிரளச் செய்வது எவ்வளவு பிரம்மாண்ட, எண்ணிலடங்கா மடங்கு முக்கியத்துவமுடையதாகும் என்பதை எல்லாத் தோழர் களும் உணர்வதில்லை. புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றதன் மூலம் நாம் வியாபாரியாய்ச் செயல்படும் விவ சாயிக்கு, தனியார் வர்த்தகமெனும் கோட்பாட்டுக்கு ஓரளவு விட்டுக் கொடுத்தோம். இதே காரணத்தால் (சிலர் நினைப் பதற்கு நேர்மாறாய்) கூட்டுறவு இயக்கம் இன்று இந்தப் பிரம்மாண்ட முக்கியத்துவம் பெறுகிறது. புதிய பொருளா தாரக் கொள்கையின் கீழ் நாம் செய்ய வேண்டியதெல்லாம் போதுமான அளவுக்கு விரிவாய் ருஷ்யாவின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதுதான். ஏனெனில் இப்பொழுது நாம் தனியார் நலத்தை, தனியார் வர்த்தக நலத்தை, அந்த நலத்தின் மீதான அரசு மேற்பார்வையுடன், கண்காணிப்புடன் எந்த அளவுக்கு இணைக்க வேண்டுமென்று கண்டு கொண்டு விட்டோம்; அதைப் பொது நலன்களுக்கு எந்த அளவுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டுமென்று கண்டு கொண்டு விட்டோம். பல சோஷலிஸ்டுகளுக்கும் முன்பு முட்டுக் கட்டையாய் இருந்த இதனை நாம் கண்டு கொண்டு விட்டோம். எல்லாப் பெருவீத உற்பத்திச் சாதனங்களும் அரசின் ஆட்சியதிகாரத்தின் கீழ் இருத்தல், அரசியல் ஆட்சி யதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கையில் இருத்தல், இந்தப் பாட்டாளி வர்க்கம் கோடிக் கணக்கான சிறிய, மிகச் சிறிய விவசாயிகளுடன் கூட்டணி கொண்டிருத்தல், பாட்டாளி வர்க்கம் விவசாயிகளுக்குத் தலைமை தாங்குதல் உறுதி பெற் றிருத்தல் முதலான இவைதானே கூட்டுறவுகளைக் கொண்டு —கூட்டுறவுகளை மட்டுமே கொண்டு—முழுநிறை சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவைப்படுகிறவை? முன்பு நாம் இந்தக் கூட்டுறவுகளை லாபவேட்டை அடிப்படையாய் இழித்துக் கூறினோம். இப்பொழுதுங்கூட புதிய பொருளா

தாரக் கொள்கையின் கீழ் இவற்றை ஓரளவுக்கு இவ்வாறு இழித்துக் கூற நமக்கு உரிமை உண்டு. இந்தக் கூட்டுறவு களிலிருந்து முழுநிறை சோஷலிச சமுதாயத்தைக் கட்டி யெழுப்ப வேண்டியதெல்லாம் மேற்கூறியவைதானே? இன்னும் இது சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைப்பது ஆகிவிடாது என்ருலுங்கூட, சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவையானதும் போதுமானதும் இது தானே.

இதைத்தான் நமது செய்முறை ஊழியர்கள் பலரும் குறைத்து மதிப்பிட்டு விடுகிருர்கள். நமது கூட்டுறவுச் சங் கங்களை அவர்கள் ஏளனமாய்க் கருதுகிருர்கள். அதன் தனி முக்கியத்துவத்தை—முதலாவதாய், கோட்பாட்டின் கண் ணேட்டத்திலிருந்தும் (உற்பத்திச் சாதனங்கள் அரசுக்குச் சொந்தமாயிருக்கின்றன), இரண்டாவதாய், மிகவும் எளிய, சுலபமான, விவசாயிக்கு மிகவும் ஏற்புடையதான வழிகளில் புதிய அமைப்புக்கு மாறிச் செல்லும் கண்ணேட்டத்தி லிருந்தும் அவற்றுக்குள்ள தனி முக்கியத்துவத்தை— அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

இதுவும் அடிப்படை முக்கியத்துவத்துக்குரியதே. எல்லா வகையான தொழிலாளர் சங்கங்களைக் கொண்டும் சோஷ லிசத்தைக் கட்டியமைப்பது குறித்து விபரீதத் திட்டங்களை வகுப்பது ஒன்று; ஆனுல் நடைமுறையில் சோஷலிசத்தைக் கட்டுவது, ஒவ்வொரு சிறு விவசாயியும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும்படியான முறையில் சோஷலிசத்தைக் கட்டுவது முற்றிலும் வேருென்று. இப்பொழுது நாம் வந்தடைந்திருப் பது இதே கட்டத்தைத்தான். இதை வந்தடைந்த பின் நாம் இதைச் சொற்ப அளவுக்கே பயன்படுத்திக் கொள்கிருேம் என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையைக் கைக்கொண்ட போது நாம் அளவு மீறிச் சென்று விட்டோம்; தடை யில்லாத் தனியார் தொழில், தடையில்லா வாணிபம் என்னும் கோட்பாட்டுக்கு மிதமிஞ்சிய இடம் அளித்தோம் என் பதாலல்ல, கூட்டுறவுகளைக் கருதத் தவறி விட்டோம், கூட்டுறவுகளைக் குறைத்து மதிப்பிட்டோம்; மேற்கூறிய இரு கண்ணேட்டங்களிலும் கூட்டுறவுகளுக்குள்ள மிகுந்த முக்கியத்துவத்தை ஏற்கெனவே மறக்கத் தொடங்கி விட்டோம் என்பதால் நாம் அளவு மீறிச் சென்ருேம்.

இந்தக் ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் அடிப்படையில் நடைமுறையில் என்ன செய்யலாம், என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இப்பொழுது வாசகருடன் விவாதிக்கப் போகிறேன். ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் சோஷலிசப் பொருள் எல்லோருக்கும் தெளிவாய்ப் புலப்படும் வண்ணம் உடனடியாய் இக்கோட்பாட்டை நாம் எவ்வழிகளில் வளர்க்க முற்படலாம், முற்படவும் வேண்டும்?

கூட்டுறவானது பொதுவாகவும் எப்பொழுதும் சில தனிச் சலுகைகள் பெற்றிருப்பதோடன்றி, இந்தத் தனிச் சலுகைகள் முற்றிலும் பொருளாயதத் தன்மையனவாகவும் (சலுகைக்குரிய வங்கி வட்டி விகிதம், முதலானவை) இருக்கும் படியான அரசியல் வழியில் அது ஒழுங்கமைக்கப்பட வேண்டும். தனியார் தொழில் நிலையங்களுக்கு நாம் அளிக்கும் கடன்களைக் காட்டிலும், கனரகத் தொழிலுக்கும் பிறவற்றுக்கும் அளிப்பதையும் காட்டிலும் அதிகமான, சிறிதளவேனும் அதிகமான, அரசாங்கக் கடன்கள் கூட்டுறவுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் நிதி ஆதரவு இருந்தால் தான் ஒரு சமுதாய அமைப்பு தோன்ற முடியும். ''தடையில்லா'' முதலாளித்துவம் பிறப்பதற்கு நூறு கோடிக் கணக்கான ரூபிள் தொகை செலவிட வேண்டியிருந்ததைக் குறிப்பிடத் தேவையில்லை. தற்போது நாம் வழக்கத்தை விட அதிகமாய் உதவி அளிக்க வேண்டிய சமுதாய அமைப்பு கூட்டுறவு அமைப்பே என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்; மெய்யாகவே நாம் இந்த உதவியை அளித்தாக வேண்டும். அச்சொல்லின் மெய்ப்பொருளில் அது உதவியாய் இருத்தல் வேண்டும்; அதாவது எந்த வகையான கூட்டுறவு வர்த்தகத்துக்கும் அளிக்கப்படும் உதவியாய் அதை அர்த்தப்படுத்தினுல் போதாது; உதவி அளிக்க வேண்டும் என்று கூறும் போது மெய்யாகவே பெருந்திரளான மக்கள் தொகையினர் நடைமுறையில் பங்கெடுத்துக் கொள்ளும் கூட்டுறவு வர்த்தகத்துக்கு உதவுவதையே அது குறிக்க வேண்டும். கூட்டுறவு வர்த்தகத்தில் பங்கு கொள்ளும் விவசாயிக்கு போனஸ் தருவது சரியானதோர் உதவி முறைதான்; ஆனுல் பிரதான விவகாரம் என்னவெனில், விவசாயி எடுத்துக் கொள்ளும் இந்தப் பங்கின் இயல்பையும் அதில் அடங்கியுள்ள உணர்வையும் அதன் தன்மையையும் சரிபார்த்து உறுதி செய்து

கொள்ள வேண்டும். சுருக்கமாய்ச் சொல்வதெனில், கூட்டுற வாளர் ஒருவர் கிராமத்துக்குச் சென்று கூட்டுறவுப் பண்டக சாலை திறந்தால், மக்கள் அதில் எந்தப் பங்கும் எடுத்துக் கொள்வதில்லை; ஆயினும் தமது சொந்த நலன்களால் உந்தப் பட்டு அதில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ள முன்வரவே செய்வர்.

இந்தப் பிரச்சினைக்கு மற்றோர் அம்சமும் இருக்கிறது. ''அறிவொளி படைத்த'' (பிரதானமாய் எழுத்தறிவு படைத்த) ஐரோப்பியரின் கண்ணோட்டத்தின்படிக் கூட்டுறவுச் செயற்பாடுகளில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் தன்முனைப்பில்லாத முறையிலல்ல, முழு முனைப்புடன் பங்கெடுத்துக் கொள்ளும்படித் தூண்டுவதற்கு நாம் மேலும் செய்ய வேண்டியுள்ளது அதிகமில்லை. சுருக்கமாய்க் கூறுகையில் நாம் மேலும் செய்ய வேண்டியிருப்பது ''ஒன்றே ஒன்று தான்'': கூட்டுறவுகளில் எல்லோரும் பங்கெடுத்துக் கொள் வதன் அனுகூலங்களை நம் மக்கள் புரிந்து கொள்ளும்படியும் இவ்வாறு எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யும்படியும் அவர்களை ''அறிவொளி பெறச் செய்வது தான்'' அது. இந்த ''ஒன்றே ஒன்றுதான்'' மேலும் செய்ய வேண்டியதெல்லாம். சோஷலிசத்துக்கு முன்னேறிச் செல் வதற்குத் தற்போது வேறு வழிமுறைகள் தேவைப்பட வில்லை. ஆனால் இந்த ''ஒன்றே ஒன்றைச்'' செய்து முடிப் பதற்கு ஒரு பெரும் புரட்சியே நடந்தேறியாக வேண்டும்— மக்கள் அனைவரும் கலாசார வளர்ச்சி பெறுவதற்குரிய ஒரு கட்டத்தைக் கடந்தாக வேண்டும். ஆகவே, தத்துவார்த்தம் பேசுவதையும் கரணமடித்து வித்தை புரிவதையும் கூடுமான அளவுக்குக் குறைத்துக் கொள்வதென நாம் விதி செய்து கொண்டாக வேண்டும். இவ்விதத்தில் புதிய பொருளாதாரக் கொள்கை ஒரு முன்னேற்றமாகும்; ஏனெனில் இது சர்வ சாதாரண விவசாயியின் நிலைக்கு ஏற்றதாகக் கூடியதாய் இருக் கிறது; இந்த நிலைக்கு உயர்வானது எதையும் அது விவசாயி யிடமிருந்து கோரவில்லை. ஆனால் மக்கள் தொகையினர் அனை வரையும் புதிய பொருளாதாரக் கொள்கையின் வாயிலாய்க் கூட்டுறவுகளில் பங்கு கொள்ளச் செய்வதற்கு ஒரு முழு வரலாற்றுச் சகாப்தமே வேண்டியிருக்கும். யாவும் நன்கு அமையின் இதைச் சாதிப்பதற்குப் பத்து, இருபது ஆண்டு களாவது ஆகும். ஆயினும் இது ஒரு தனி வரலாற்றுச்

சகாப்தமே ஆகும். இந்த வரலாற்றுச் சகாப்தம் இல்லாமல், அனைத்து மக்களும் எழுத்தறிவு பெருமல், போதிய அளவு விவேகமுடையோராய் இராமல், புத்தகம் படிக்கும் பழக்கம் ஏற்படப் போதிய அளவுக்கு மக்கள் பயிற்சி பெருமல், இதற்குரிய பொருளாயத அடித்தளம் இல்லாமல், உதாரணமாய் அறுவடை மோசமாகி விடுதல், பஞ்சம் போன்ற பலவற்றிடமிருந்தும் பாதுகாப்பு பெறுவதற்கு வேண்டிய ஓரளவு நிறைவு நிலை இல்லாமல் — இவையாவும் இன்றி நாம் நமது குறிக்கோளை அடைய முடியாது. செயல்களில் விரிவான புரட்சிகர வீச்சை நாம் வெளிப்படுத்திக் காட்டி — மிகுதியாய் வெளிப்படுத்திக் காட்டி — முழு அளவில் வெற்றி ஈட்டியுள்ள புரட்சிகர ஆர்வத்தை விவேகமுள்ள, அறிவு பெற்ற வர்த்தகருக்குரிய திறனுடன் இணைக்கத் தெரிந்து கொள்வதுதான் இப்பொழுது தலையாயதாகும். சிறந்த கூட்டுறவாளராவதற்கு விவேகமும் அறிவுமுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் இருந்தால் போதும். வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் என்பதன் மூலம் நான் பண்பாடுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றலையே குறிப்பிடுகிறேன். வர்த்தகம் புரிகிரும் என்பதால் தாம் நல்ல வர்த்தகர்களே என்பதாய்க் கற்பனை செய்து கொள்ளும் ருஷ்யர்கள் அல்லது விவசாயிகள் இதைத் தெளிவாய்ப் புரிந்து கொண்டாக வேண்டும். முன்னதிலிருந்து பின்னது பெறப்பட்டுவிடவில்லை. அவர்கள் வர்த்தகம் புரிவது மெய்தான்; ஆனல் பண்பாடுடைய வர்த்தகர்களாய் இருப்பதற்கும் அதற்கும் நெடுந்தூரம். இப்பொழுது அவர்கள் ஆசிய முறையில் வர்த்தகம் புரிகின்றனர்; ஆனல் நல்ல வர்த்தகராய் இருக்க வேண்டுமாயின், ஐரோப்பிய முறையில் வர்த்தகம் புரிந்தாக வேண்டும். அந்த நிலையிலிருந்து அவர்கள் ஒரு முழுச் சகாப்தம் பின்தங்கியோராய் இருக்கின்றனர்.

முடிவுரையாய்க் கூறவேண்டியது: சோஷலிச அரசு கூட்டுறவுகளுக்குப் பல பொருளாதார, நிதித் துறை, வங்கித் துறை சலுகைகளை வழங்க வேண்டும்—மக்களை ஒன்றுதிரட்டுவதற்குரிய புதிய கோட்பாட்டுக்கு ஆதரவளிக்க இதுவே வழி. ஆனல் இது இப்பணியின் பொது உருவரையே தவிர, நடைமுறைப் பணியின் முழு உள்ளடக்கத்தையும் வரையறுத்து விவரமாய் எடுத்துரைக்கவில்லை; அதாவது, கூட்டுறவு

களில் சேருவதற்காகத் தர வேண்டிய ''போனசின்'' வடிவம் என்ன (இதை நாம் எந்த நிபந்தனைகளின் பேரில் தருவது), கூட்டுறவுகளுக்கு நாம் போதுமான அளவில் உதவுவதற்கு வேண்டிய போனசின் வடிவம் என்ன, பண்பாடுடைய கூட்டுறவாளரை உருவாக்கக் கூடிய போனசின் வடிவம் என்ன என்பதை நாம் கண்டறிந்து கொண்டாக வேண்டும். உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமை இருக்குமாயின், பாட்டாளி வர்க்கமானது முதலாளி வர்க்கத்தின் மீது வர்க்க வெற்றி பெற்று விடுமாயின், பண்பாடுடைய கூட்டுறவாளர்களது அமைப்புதான் சோஷலிச அமைப்பு.

*1923 ஜனவரி 4*

## 2

புதிய பொருளாதாரக் கொள்கை குறித்து நான் எழுதிய போதெல்லாம் 1918ல் அரசு முதலாளித்துவத்தைப் பற்றி நான் எழுதிய கட்டுரையை* எப்பொழுதுமே மேற்கோளாய்க் குறிப்பிட்டேன். பன்முறை இது சில இளந்தோழர்களது மனதில் சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது. ஆனால் இவர்களுடைய சந்தேகங்கள் பிரதானமாய்க் கருத்தியலான அரசியல் விவகாரங்களைப் பற்றியவையே.

அரசு முதலாளித்துவம் என்னும் தொடரை உற்பத்திச் சாதனங்கள் தொழிலாளி வர்க்கத்தின், அரசியல் ஆட்சியதிகாரம் வகிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருக்கும் ஓர் அமைப்பைக் குறிப்பதற்கு உபயோகிக்கக் கூடாதென இவர்கள் நினைத்தனர். ஆனால் ''அரசு முதலாளித்துவம்'' என்னும் தொடரை நான் முதலாவதாக, நமது தற்போதைய நிலையை இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்[63] என் போருடன் நடைபெற்ற எனது வாக்குவாதத்தில் ஏற்கப்பட்ட நிலையுடன் வரலாற்று வழியில் இணைத்துக் காட்டுவதற்காக உபயோகித்தேன் என்பதை இவர்கள் கவனிக்கவில்லை. தவிரவும் அப்பொழுது நான் அரசு முதலாளித்துவம் தற்போதுள்ள நமது பொருளாதாரத்தைக் காட்டிலும் மேம்பட்டதாய் இருக்கும் என்று வாதாடினேன். சாதாரண அரசு முதலாளித்துவத்துக்கும் புதிய பொருளாதாரக் கொள்

* வி. இ. லெனின், ''இடதுசாரி'' சிறுபிள்ளைத் தனமும் குட்டி முதலாளித்துவ மனோபாவமும் என்னும் நூலைப் பார்க்க.—ப-ர்.

கையை வாசகருக்கு அறிமுகம் செய்கையில் நான் குறிப்பிட்ட அசாதாரணமான—மிகமிக அசாதாரணமான என்று கூட சொல்ல வேண்டும்—அரசு முதலாளித்துவத்துக்கும் இடையிலுள்ள தொடர்பைக் காட்டுவது எனக்கு முக்கியமானதாய் இருந்தது. இரண்டாவதாக, நடைமுறைக் குறிக்கோள் எப்பொழுதுமே எனக்கு முக்கியமானதாய் இருந்தது. சலுகை உரிமைக் குத்தகைகள் தருவதே நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் நடைமுறைக் குறிக்கோள். நடப்பிலுள்ள சூழ்நிலையில் நமது நாட்டில் சலுகை உரிமைகள் சந்தேகத்துக்கு இடமில்லாமல் அரசு முதலாளித்துவத்தின் கலப்பற்ற சுத்தமான ஒரு வடிவமாகவே இருக்கும். அரசு முதலாளித்துவம் குறித்து இப்படித்தான் நான் வாதாடினேன்.

ஆனால் இந்த விவகாரத்தின் மற்றோர் அம்சமும் இருக்கிறது. இதற்கு அரசு முதலாளித்துவம் தேவைப்படலாம்; அல்லது குறைந்தது அதனுடனே ஒப்பிடலாவது தேவைப்படலாம். கூட்டுறவுகள் பற்றிய பிரச்சினையே இந்த அம்சம்.

முதலாளித்துவ அரசில் கூட்டுறவுகள் கூட்டு முதலாளித்துவ நிலையங்களாகும் என்பதில் ஐயமில்லை. நமது தற்போதைய பொருளாதார நிலைமைகளில், தனியார் முதலாளித்துவத் தொழில் நிலையங்களை—தேசவுடைமையாக்கப்பட்ட நிலத்தில் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல், தொழிலாளி வர்க்க அரசின் கண்காணிப்பின் கீழ் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல் — முழுக்க முழுக்க சோஷலிச வகையிலான தொழில் நிலையங்களுடன் (உற்பத்திச் சாதனங்களும் இந்நிலையங்கள் அமைந்திருக்கும் நிலமும் மற்றும் இந்நிலையங்கள் பூராவும் அரசின் உடைமையாய் இருப்பவை) இணைத்திடும் மூன்றாவது வகையிலான நிலையங்களைப் பற்றிய பிரச்சினை, அதாவது கூட்டுறவுகளைப் பற்றிய பிரச்சினை எழுவதிலும் ஐயமில்லை. முன்பெல்லாம் கூட்டுறவுகள் ஏனைய நிலையங்களிலிருந்து அடிப்படையாகவே மாறுபடும் சுயேச்சையான ஒருதனி வகை நிலையங்களாய்க் கருதப்படவில்லை. கூட்டுத் தொழில் நிலையங்கள் எப்படித் தனியார் தொழில் நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றனவோ, அதே போல தனியார் முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலையங்கள் முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன. அரசு முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலையங்கள் அரசு முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன; ஏனெனில்

முதலாவதாக, அவை தனியார் நிலையங்கள், இரண்டாவதாக, அவை கூட்டு நிலையங்கள். நம்முடைய தற்போதைய அமைப்பில் கூட்டுறவு நிலையங்கள் தனியார் முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபாடுகின்றன; ஏனெனில் அவை கூட்டு நிலையங்கள்; ஆனால் அவை அமைந்துள்ள நிலமும் அவற்றில் உற்பத்திச் சாதனங்களும் அரசுக்கு, அதாவது தொழிலாளி வர்க்கத்துக்குச் சொந்தமாயிருக்குமாயின் அவை சோஷலிச நிலையங்களிலிருந்து மாறுபடுகிறவை அல்ல.

கூட்டுறவுகள் குறித்து விவாதிக்கையில் இந்த நிலைமை போதிய அளவுக்குக் கவனிக்கப்படுவதில்லை. நமது அரசியல் அமைப்பினுடைய தனி இயல்புகளின் காரணமாய் நமது கூட்டுறவுகள் முற்றிலும் தனிவகைப்பட்ட முக்கியத்துவம் பெறுவது மறக்கப்பட்டு விடுகிறது. சலுகை உரிமைகளை நாம் ஒதுக்கி விடுவோமாயின் — எவ்விதத்திலும் இவை கணிச அளவில் வளர்ந்துவிடவில்லை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிடலாம்—நமது நிலைமைகளில் கூட்டுறவானது அனேகமாய் எப்பொழுதும் முழு அளவுக்கு சோஷலிசத்துக்கு ஒத்ததாகி விடுகிறது.

நான் நினைப்பதை விளக்கமாய்க் கூறுகிறேன் கேளுங்கள். ராபர்ட் ஓவன் போன்ற பழைய கூட்டுறவாளர்களுடைய திட்டங்கள் விபரீதமான கற்பனைகளாய் இருந்தது ஏன்? ஏனெனில் அவர்கள் வர்க்கப் போராட்டம், தொழிலாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல், சுரண்டும் வர்க்கத்தினுடைய ஆதிக்கத்தை வீழ்த்தல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைக் கருதாமலே அக்காலத்திய சமுதாயத்தைச் சமாதான வழியில் சோஷலிசமாய்த் திருத்தியமைக்கலாமெனக் கனவு கண்டனர். எனவேதான் நாம் இந்தக் ''கூட்டுறவு'' சோஷலிசத்தை முற்றிலும் கற்பனை மயமானதென்றும், நாட்டின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதாலேயே வர்க்கப் பகைவர்களை வர்க்க ஒத்துழைப்பாளர்களாகவும், வர்க்கப் போரை வர்க்க அமைதியாகவும் (சமூக அமைதி என்பதாய்க் கூறப்பட்டது) மாற்றிவிடலாம் என்ற கனவைப் புத்தார்வ மனப்பாங்காகவும் கொச்சையானதாகவும் கூட கருதுவதில் பிழை ஏதுமில்லை.

தற்போதுள்ள அடிப்படைப் பணியின் கண்ணோட்டத்தின்படி இவ்வாறு கருதுவது முற்றிலும் சரியே; ஏனெனில் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதற்கான வர்க்கப் போராட்

டம் இல்லாமல் சோஷலிசத்தை நிறுவிவிட முடியாது.

ஆனால் இப்பொழுது அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு மாறியதால், சுரண்டலாளர்களுடைய அரசியல் ஆட்சியதிகாரம் வீழ்த்தப்பட்டதால், உற்பத்திச் சாதனங்கள் யாவும் (தொழிலாளர் அரசு தானே விரும்பி குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் குறிப்பிட்ட காலத்துக்குச் சலுகை உரிமைகளின் வடிவில் சுரண்டலாளர்களிடம் விட்டு வைப்பதைத் தவிர்த்து) தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருப்பதால் நிலைமை எப்படி மாறி விட்டது பாருங்கள்.

நமக்குக் கூட்டுறவின் வளர்ச்சியே முற்றிலும் சோஷலிசத்தின் வளர்ச்சிக்கு ஒப்பானதாகி விட்டது (மேற்கூறிய "சிறிய" விதிவிலக்கைத் தவிர்த்து) என்று இப்பொழுது நாம் முழு உரிமையுடன் கூறலாம். அதே போது சோஷலிசத்தைப் பற்றிய நமது கண்ணோட்டம் அனைத்திலும் ஒரு தீவிர மாற்றம் ஏற்பட்டிருப்பதையும் நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும். முன்பு நாம் அரசியல் போராட்டத்தையும் புரட்சியையும் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதையும் இன்ன பிறவற்றையுமே பிரதானமாய் வலியுறுத்தி வந்தோம், வலியுறுத்தி வரவும் வேண்டியிருந்தது. வலியுறுத்தலானது இப்பொழுது சமாதான வழியிலான ஒழுங்கமைப்பு வகைப்பட்ட "கலாசாரப்" பணிக்கு இடம் பெயர்ந்து மாறி வருகிறது. நமது சர்வதேச உறவுகளையும் உலக அளவில் நாம் நமது நிலைக்காகப் போராட வேண்டியிருப்பதையும் கருதத் தேவை இல்லையாயின், வலியுறுத்தல் கலாசாரப் பணிக்கு மாறிச் செல்லுகிறது என்று நான் கூற வேண்டியிருக்கும். ஆனால் இதைக் கருதாது ஒதுக்கி விட்டு உள்நாட்டுப் பொருளாதார உறவுகளுடன் நிறுத்திக் கொள்வோமாயின், நமது பணியில் வலியுறுத்தலானது நிச்சயமாய்க் கலாசாரத் துறைக்கே இடம் பெயர்ந்து மாறிச் செல்கிறது.

இரண்டு பிரதான பணிகள் நம்மை எதிர்நோக்குகின்றன. இந்தச் சகாப்தமே இவ்விரு பணிகளாலுமானதுதான். முதலாவது, நமது அரசின் இயந்திரத்தைத் திருத்தியமைத்தல். இந்த இயந்திரம் முற்றிலும் உபயோகமற்றதாகும்; முந்திய சகாப்தத்திலிருந்து முழுமையாய் இவ்வியந்திரத்தை நாம் பெற்றுக் கொண்டோம். போராட்டத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த இயந்திரத்தைத் தீவிரமாய்த் திருத்திய

மைக்கவில்லை, திருத்தியமைக்க முடியவும் இல்லை. நமது இரண்டாவது பணி விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணி. விவசாயிகளைக் கூட்டுறவுகளில் ஒன்று திரளச் செய்வதே, விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணியின் பொருளாதார நோக்கம். விவசாயிகள் அனைவரும் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டப்பட்டிருப்பார்களாயின், இப்பொழுது நாம் சோஷலிசத்தில் இரு கால்களையும் ஊன்றிக் கெட்டியாய் நின்று கொண்டிருப்போம். ஆனால் விவசாயிகள் அனைவரையும் கூட்டுறவுகளில் ஒன்று திரட்டும் முன் விவசாயிகளுடைய (மிகப் பெருவாரியான மக்கள் திரளான விவசாயிகளுடைய) கலாசார நிலையை உயர்த்தியாக வேண்டும். கலாசாரப் புரட்சி இல்லாமல் உண்மையில் இப்பணியை நிறைவேற்ற முடியாது.

போதிய அளவு கலாசார வளர்ச்சி பெறாத ஒரு நாட்டில் நாம் சோஷலிசத்தை நாட்ட முற்பட்டது குருட்டுத் துணிச்சலான காரியமாகுமென நமது எதிராளிகள் திரும்பத் திரும்பக் கூறினர். தத்துவத்தால் (எல்லா வகையான பகட்டுப் புலமையாளர்களது தத்துவத்தால்) விதிக்கப்பட்டதற்கு எதிர் முனையிலிருந்து நாம் தொடங்கியதால், அவர்களுக்கு இந்தத் தவறான எண்ணம் ஏற்பட்டது. ஏனெனில் நமது நாட்டில் அரசியல், சமுதாயப் புரட்சி கலாசாரப் புரட்சிக்கு முன்னதாகவே நடைபெற்றது. இப்பொழுது நம்மை இதே கலாசாரப் புரட்சி எதிர்நோக்குகிறது.

இந்தக் கலாசாரப் புரட்சி இப்பொழுது நம் நாட்டை முழுநிறை சோஷலிச நாடாக்குவதற்குப் போதுமானதாகும். ஆனால் இப்புரட்சி முற்றிலும் கலாசாரத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் நாம் எழுத்தறியாதோராய் இருக்கிறோம்) முற்றிலும் பொருளாயதத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் கலாசார வளர்ச்சி பெறுவதற்கு நாம் பொருளாயத உற்பத்திச் சாதனங்களில் குறிப்பிட்ட ஓர் அளவு வளர்ச்சி அடைந்தாக வேண்டும், குறிப்பிட்ட ஒரு பொருளாயத அடித்தளத்தைப் பெற்றாக வேண்டும்) மிகப் பெரிய அளவில் உண்டாக்குகிறது.

*1923 ஜனவரி 6*

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 369-377

# பதிப்பாளர் குறிப்புகள்

1 அரசும் புரட்சியும். அரசைப் பற்றிய மார்க்சியத் தத்துவமும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும் என்ற புத்தகத்தை வி. இ. லெனின் 1917 ஆகஸ்ட்—செப்டெம்பரில் எழுதினர். அப்போது அவர் முதலாளி வர்க்க இடைக்கால அரசாங்கத்தின் அடக்குமுறை காரணமாகத் தலைமறைவாக இருந்தார்.—7.

2 பாரிஸ் கம்யூன்—1871ல் நடந்த புரட்சியின் விளைவாக பாரிஸ் நகரத் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட தொழிலாளி வர்க்க அரசாங்கம். வரலாற்றில் இது முதலாவது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமாக விளங்கிற்று; மார்ச் 18 முதல் மே 28 வரை நீடித்தது. இது மாதாக்கோயிலை அரசிடமிருந்தும் பள்ளியை மாதாக்கோயிலிடமிருந்தும் பிரித்தது; நிரந்தர ராணுவத்திற்குப் பதிலாக மக்களை முற்றிலுமாக ஆயுதந்தரித்தது; நீதிபதிகளும் அதிகாரிகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறையை அமல்படுத்தியது; அதிகாரிகளின் ஊதியம் தொழிலாளர்களின் ஊதியத்தை விடக் கூடுதலாக இல்லாதிருக்குமாறு நிலைநாட்டியது; தொழிலாளர்கள் மற்றும் நகர்ப் புற ஏழை மக்கள் ஆகியோரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.—9.

3 நிலம் பற்றிய அறிக்கை 1917ஆம் ஆண்டு அக்டோபர் 25—26 (நவம்பர் 7—8) தேதிகளில் பெத்ரோகிராதில் நடைபெற்ற தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் வி. இ. லெனினல் ஆற்றப்பட்டது.

காங்கிரஸ் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தைத் தூக்கியெறியப்பட்டதாக அறிவித்து ருஷ்யாவில் அரசு ஆட்சியதிகாரத்தைத் தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகளது பிரதிநிதிகளின் சோவியத்துக்களுக்கு அளித்தது.—10.

4 *1917ஆம் ஆண்டு அக்டோபர் 25ஆம் தேதி (நவம்பர் 7) ருஷ்யாவில் நடைபெற்ற சோஷலிசப் புரட்சி இங்கு குறிப்பிடப்படுகிறது.—10.*

5 **மென்ஷிவிக்குகள்**—*ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் குட்டி முதலாளித்துவச் சந்தர்ப்பவாதப் போக்கினர். 1903 ஆகஸ்டில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் கட்சியின் மத்திய அமைப்புகளுக்காக நடந்த தேர்தல்களில் வி. இ. லெனின் ஆதரவாளர்கள் பெரும்பான்மை பெற்றனர். இவர்கள் ''போல்ஷிவிக்குகள்'' (''பெரும்பான்மையோர்'') என்று அழைக்கப்படலாயினர்; சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மையினராகி ''மென்ஷிவிக்குகள்'' (''சிறுபான்மையினர்'') என்று பெயர் பெற்றனர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் மென்ஷிவிக்குகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பிரவேசித்தனர்; அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர். 1917ல் நடைபெற்ற அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் எதிர்ப்புரட்சிக் கட்சியாக ஆயினர். சோவியத் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்துவதற்கான சதித் திட்டங்களையும் ஏற்பாடு செய்தனர்; அவற்றில் பங்கு பற்றினர்.*

**சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்** — *1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் ருஷ்யாவில் நிறுவப்பட்ட குட்டி முதலாளித்துவக் கட்சியின் உறுப்பினர்கள். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பிரவேசித்தனர்; அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் முதலாளி வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள் மற்றும் அன்னியத் தலையீட்டாளர்களுடன் சேர்ந்து கொண்டு சோவியத் ஆட்சி அதிகாரத்தினை எதிர்த்து விடாப்பிடியாகப் போராடினர்.—10.*

6 *1917 பிப்ரவரி முதல் அக்டோபர் வரை ருஷ்யாவில் இருந்த இடைக்கால அரசாங்கம் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுவது பற்றித் தனது 1917 மார்ச் 2 (15) பிரகடனத்தில் அறிவித்தது. அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களை செப்டெம்பர் 17 (30)ந் தேதி நிர்ணயித்து அது குறித்த தீர்மானத்தை இடைக்கால அரசாங்கம் ஜூன் 14 (27)ந் தேதி நிறைவேற்றியது. ஆனால் ஆகஸ்டில் அது இத்தேர்தல்களை நவம்பர் 12 (25) வரை ஒத்திவைத்தது. அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள்*

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகே நவம்பர் 12 (25)ல் முன்னர் நிர்ணயத்தபடி நடைபெற்றன; அக்டோபர் புரட்சிக்கு முன்னதாக தயாரிக்கப்பட்டிருந்த பட்டியல்களுக்கு ஏற்பவே நடத்தப்பட்டன; புரட்சிக்குப் பிறகு நாட்டில் ஏற்பட்ட சக்திகளின் புதிய அணிசேர்க்கையைப் பிரதிபலிக்கவில்லை. அரசியல் நிர்ணய சபையில் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் காடேட்டுகளும் பெரும்பான்மை இடங்களைப் பெற்றனர். சோவியத் அரசாங்கம் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டியது. அதன் கூட்டம் 1918 ஜனவரி 5 (18)ந் தேதி பெத்ரோகிராதில் ஆரம்பமாயிற்று. அரசியல் நிர்ணய சபையில் இருந்த எதிர்ப்புரட்சியாளர் பெரும்பான்மை, ''உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை'' நிராகரித்தது; சோவியத் ஆட்சியை அங்கீகரிக்க மறுத்தது. 1918 ஜனவரி 6 (19)ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் ஆணைப்படி முதலாளித்துவ அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டது.—11.

7 **இஸ்வேஸ்தியா வ்ஸேரொசிய்ஸ்கவோ சவேத்தா க்ரெஸ்தியான்ஸ்கிஹ் தெப்புத்தாத்தவ்** (''விவசாயிகள் பிரதிநிதிகளின் அகில ருஷ்ய சோவியத்தின் செய்திகள்'')—தினசரிப் பத்திரிகை; விவசாயிகள் பிரதிநிதிகளின் அகில ருஷ்ய சோவியத்தின் ஏடு; 1917 மே முதல் டிசம்பர் வரை பெத்ரோகிராதில் வெளியிடப்பட்டது.—12.

8 **மன்னர் குடும்ப உறுப்பினர்களின் நிலங்கள்**—ஜாரின் குடும்பத்தினருக்குச் சொந்தமான நிலங்கள்.

**மன்னர் நிலங்கள்**—ஜாரின் சொந்த உடைமையான நிலங்கள்.

**ஆலை நிலங்கள்**—ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கென அரசு ஆலை, தொழிற்சாலை உடைமையாளர்களுக்கு வழங்கும் நிலங்கள். அவர்கள் தமது ஊதியத்திற்குப் பதிலாக இந்த நிலங்களில் வேலை செய்தார்கள்.

**தலைமுறை நிலங்கள்** — தடை செய்யப்பட்ட நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகள். வமிச முறையில் ஒதுக்கீடு இன்றி தலைமுறை உரிமையாகப் பெறப்படுபவை.—12.

9 **உழைப்புத் தரம்** — குடும்பத்தில் உள்ள வேலை செய்யும் திறன் வாய்ந்த நபர்களின் எண்ணிக்கை அடிப்படையில் விவசாயிகளின் மத்தியில் நிலத்தைப் பகிர்ந்தளித்தல்.

**பிழைப்பூதியத் தரம்** — ''நபர்களின்'' எண்ணிக்கையின் அடிப்படையில் விவசாயிகளின் மத்தியில் நிலத்தைப் பகிர்ந்தளித்தல்.—14.

10 கசாக்குகள் — விசேஷ நிபந்தனைகளின் பேரில் அரசுக்கு இராணுவ சேவை செய்தவார்கள். புரட்சி இயக்கத்துக்கு எதிராக விசேஷப் படைப் பிரிவுகளை அமைக்க ஜார் அரசாங்கம் அவர்களைச் சேர்த்துப் பயன்படுத்திக் கொண்டது. —*15*.

11 ''நோவயா ழீஸ்ன்'' ஆதரவாளர்கள் — மென்ஷிவிக்கு-சர்வதேசியவாதிகளின் ஒரு பிரிவு. இது ''நோவயா ழீஸ்ன்'' (''புதிய வாழ்வு'') என்ற செய்திப் பத்திரிகையை வெளியிட்டது. இப்பத்திரிகை *1917* ஏப்ரல் *18* (மே *1*) முதல் *1918* ஜூலை வரையில் பிரசுரிக்கப்பட்டது. இப்பத்திரிகை அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியையும் சோவியத் ஆட்சி அதிகாரம் நிலைநாட்டப்பட்டதையும் பகைமை உணர்வுடன் எதிரிட்டது.—*19*.

12 *1875*ஆம் ஆண்டு மே *5*ஆம் தேதி கா. மார்க்ஸ் பிராக்கேக்கு எழுதிய கடிதம் மேற்கோள் காட்டப்படுகிறது. —*28*.

13 ஜெர்மானிய எழுத்தாளர் இ. வோ. கேதேயின் (*1749*—*1832*) ''பாவுஸ்ட்'' எனும் சோகப் படைப்பிலிருந்த வரிகளை வி. இ. லெனின் மேற்கோள் காட்டுகிறுர்.—*28*.

14 **சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்** எனும் வி.இ. லெனினுடைய நூல் கையெழுத்துப் பிரதி வடிவத்தில் இருக்கும் போது ''தற்போது சோவியத் அரசாங்கத்தின் முன்னுள்ள பணிகளைப் பற்றிய ஆய்வுரைகள்'' என்றழைக்கப்பட்டது. லெனினுடைய ''ஆய்வுரைகள்'' *1918*ஆம் ஆண்டு ஏப்ரல் *26*ஆம் தேதி கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. மத்தியக் கமிட்டி அவைகளை ஒருமனதாக ஆதரித்து, கட்டுரை வடிவில் மத்தியப் பத்திரிகைகளில் வெளியிடவும் தனிப் பிரசுரமாக வெளியிடவும் முடிவு செய்தது.—*32*.

15 **பிரேஸ்த் சமாதானம்** இங்கு குறிப்பிடப்படுகிறது. *1918*ஆம் ஆண்டு மார்ச்சில் சோவியத் அரசாங்கத்தால் ஜெர்மனியுடனும் அதன் கூட்டாளிகளுடனும் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் ருஷ்யாவிற்கு மிகக் கடுமையான நிபந்தனைகளில் அமைந்திருந்தது: பால்டிக் பிரதேசம் ஜெர்மனியின் கீழ் வர வேண்டியிருந்தது; உக்ரேன் ஜெர்மனியைச் சார்ந்திருக்கக் கூடிய அரசாக மாற்றப்பட்டது; இத்தியாதி. சோவியத் அரசாங்கம் இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது; ஏனெனில்

பழைய ஜார் ராணுவம் சிதறிப் போயிருந்தது, புதிய ராணுவம் இன்னமும் தோற்றுவிக்கப்படவில்லை. பிரேஸ்த் சமாதானம் நாட்டிற்குத் தேவைப்பட்ட இடைவெளியைத் தந்தது; போரிலிருந்து ஒருசில காலத்திற்கு வெளியே வர வழிகோலியது. ஜெர்மனியில் நடைபெற்றப் புரட்சிக்குப் பின் (நவம்பர் 1918) பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டது.—32.

16 குறிப்பு 5 பார்க்க.—34.

17 **காடேட்டுகள் (அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சியினர்)**—ருஷ்ய மிதவாத-முடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் முதன்மையான கட்சியாக இருந்தது. இக்கட்சி 1905 அக்டோபரில் நிறுவப்பட்டது. முதலாளி வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள், முதலாளித்துவ அறிவுத் துறையினர் ஆகியோர் இதில் சேர்ந்திருந்தனர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு (1917) காடேட்டுகள் சோவியத் ஆட்சிக்குத் தீவிர பகைவர்களாயினர்; ஆயுதமேந்திய எல்லா எதிர்ப்புரட்சி எழுச்சிகளிலும் வெளிநாட்டுப் படையெடுப்புகளிலும் பங்குபெற்றூர்கள்.—36.

18 குறிப்பு 2 பார்க்க.—47.

19 வி. இ. லெனினுடைய முன்முயற்சியால் மக்கள் கமிசார்களின் கவுன்சில் 1917ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் தேதி (டிசம்பர் 1) ''மக்கள் கமிசார்கள், உயர் மட்ட உத்தியோகஸ்தர்கள் மற்றும் அதிகாரிகளின் சம்பள விகிதங்களைப் பற்றியத்'' தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தத் தீர்மான நகல் லெனிஞல் எழுதப்பட்டது. தீர்மானத்தின் படி மக்கள் கமிசார்களின் அதிக பட்ச மாதச் சம்பளம் தொழிலாளியின் சராசரி ஊதியத்தை ஒத்து இருந்தது. ஆனல் தேவையேற்பட்டால் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப நிபுணர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு மேல் ஊதியமளிப்பதை இந்த அரசாணை தடுக்கவில்லை.—47.

20 **வேலைவீத ஊதியம்**—இம்முறையில் தொழிலாளியால் உற்பத்தி செய்யப்பட்டப் பொருளின் அளவிற்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படும் மாருக வேலை நேரத்திற்குத் தக்க ஊதிய முறையில் எவ்வளவு நேரம் வேலை செய்தார்களோ அதற்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.—62.

21 அமெரிக்கப் பொறியியலர் டெய்லர் உருவாக்கிய வேலை ஒழுங்கமைப்பு முறை இங்கு குறிப்பிடப்படுகிறது. டெய்லர் முறை நவீனத் தொழில்நுட்பத்தின் முற்போக்கு அம்சங்களையும் தொழிலாளர்களை இரக்கமற்றுச் சுரண்டும் வழிகளையும் ஒன்றிணைத்தது.—62.

[22] குலாக்குகள்—''வேலையாட்களைக் கூலிக்கு அமர்த்தியோ, பணத்தை வட்டிக்கு விட்டோ, இது போன்ற இதர வழிகளிலும் பிறர் உழைப்பைச் சுரண்டி வாழும் பணக்கார விவசாயிகள்'' (வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', ஐந்தாம் ருஷ்யன் பதிப்பு, தொகுதி 37, பக்கம் 479).—65.

[23] சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் இடதுசாரிப் பிரிவு (குறிப்பு 5 பார்க்க) 1917ஆம் ஆண்டு நவம்பரில் பிளவுபட்டு தனியான இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் கட்சியை உருவாக்கியது. 1917 டிசம்பர் முதல் 1918 மார்ச் வரை இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் பிரதிநிதிகள் சோவியத் அரசாங்கத்தில் இடம் பெற்றிருந்தனர். 1918 மார்ச்சில் ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதும் (குறிப்பு 15 பார்க்க), சமாதானத்தை எதிர்த்து ஜெர்மனியுடன் ''புரட்சிப் போர்'' நடந்த வேண்டும் என்று கோரிய இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறினர். 1918 ஜூலையில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஜெர்மானிய தூதுவரைக் கொலை செய்து சோவியத் ஆட்சிக்கு எதிராக எதிர்ப்புரட்சிக் கலகம் விளைவித்தனர்; இது ஒரே நாளில் அடக்கப்பட்டது.—76.

[24] நோவயா ழீஸ்ன் (''புதிய வாழ்வு'')—குறிப்பு 11 பார்க்க.

வ்பெரியோத் (''முன்னேக்கி'') — மார்ச் 1917 முதல் பிப்ரவரி 1919 வரை மாஸ்கோவில் இருந்து பிரசுரிக்கப்பட்டு வந்த மென்ஷிவிக்குகளின் தினசரிப் பத்திரிகை.

தியேலோ நரோதா (''மக்கள் இலட்சியம்'')—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி நாளேடு; 1917 மார்ச் முதல் 1918 ஜூலை வரை பெத்ரோகிராதில் வெளிவந்தது.

நாஷ் வெக் (''நமது யுகம்'')—காடேட்டுகளின் எதிர்ப்புரட்சிக் கட்சியின் மத்திய ஏடான ''ரேச்'' (''பேச்சு'') பத்திரிகையின் பெயர்களில் ஒன்று; இது 1906 பிப்ரவரி முதல் 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8) வரை வெளிவந்தது; பின்னுல் (ஆகஸ்ட் 1918 வரை) வேறு பெயர்களில் வெளிவந்தது.—79.

[25] 1905ஆம் ஆண்டு அக்டோபரில் அனைத்து ஆலைகள், தொழிற்சாலைகள், போக்குவரத்து, முனிசிபல் நிறுவனங்கள் போன்றவற்றின் வேலைகளை ஸ்தம்பிக்கச் செய்த பொது அரசியல் வேலைநிறுத்தம் நடைபெற்றது. அக்டோபர் வேலைநிறுத்தம்தான் 1905—1907ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற முதல் ருஷ்ய முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் மிகப் பரபரப்பான கட்டமாக இருந்தது.

**1917ஆம் ஆண்டு பிப்ரவரி** இறுதியில் ருஷ்யாவில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி நடைபெற்றது; இது ஜாரிசத்தை முறியடித்து முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்தியது.

**1917ஆம் ஆண்டு அக்டோபர் 25இல்** நடைபெற்ற சோஷலிசப் புரட்சி நாட்டின் அரசு அதிகாரத்தை தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகளது பிரதிநிதிகளின் சோவியத்துக்களுக்கு அளித்தது.—82.

26 பி. எங்கெல்ஸ் ''டூரிங்குக்கு மறுப்பு'' எனும் நூலை வி.இ. லெனின் மேற்கோள் காட்டுகிறார்.—86.

27 குறிப்பு 6 பார்க்க.—86.

28 **இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்** என்று கம்யூனிஸ்டுக் கட்சியில், 1918இல் கட்சியின் கொள்கைகளை எதிர்த்த நி.இ. புஹாரினின் தலைமையிலிருந்த கோஷ்டி அழைக்கப்பட்டது. ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையை (குறிப்பு 15 பார்க்க) எதிர்த்தனர்; ஜெர்மனிக்கு எதிராகப் ''புரட்சிப் போர்'' நடத்த வேண்டுமெனக் கோரினார்கள். மேலும் பொருளாதாரக் கட்டுமானப் பிரச்சினைகளிலும் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' கட்சியை விமரிசித்தனர்.—92.

29 1917ஆம் ஆண்டின் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிந்தைய முதல் வாரங்களில், ஆட்சி அதிகாரம் சோவியத்துக்களின் கைகளில் வந்ததற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகத் தனிப்பட்ட அதிகாரிகளின் குழுக்களாலும் முதலாளித்துவ அறிவுத் துறையினராலும் செய்யப்பட்ட நாச வேலையைப் பற்றி இங்கு பேசப்படுகிறது. 1918ஆம் ஆண்டின் துவக்கத்திலேயே நாச வேலை தவறானது என்பதை உணர்ந்த இவர்களில் கணிசமானோர் சோவியத் ஆட்சியுடன் ஒத்துழைக்கத் தயார் என அறிவித்தனர்.—93.

30 1789—1794 பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சி இங்கு குறிப்பிடப்படுகிறது.—97.

31 **ஜங்கர்**—பிரஷ்ய நிலவுடைமைப் பிரபுக்குலம்.—101.

32 **நார்ட்ஸீஸ்**—தொன்மையான கிரேக்க புராணக் கதையில் வரும் ஒரு பாத்திரம். தனது சொந்த நிழலில் மோகம் கொண்ட ஓர் அழகிய வாலிபனைக் குறிப்பது. சுய மோகம் கொண்ட நபர் என்பதன் சித்திரம்.—103.

33 **அராஜகவாதிகள்**—குட்டி முதலாளித்துவ சமூக-அரசியல் போக்கின் ஆதரவாளர்கள்; வெகுஜனங்களின் தன்னிச்சையான கிளர்ச்சியின் பயனாய் சகலவித அரசு ஆட்சியையும்

உடனடியாக ஒழிக்க வேண்டும் என்ருர்கள்; தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டம், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், அரசியல் கட்சிகள் ஆகியவற்றை மறுத்தார்கள்.—*103*.

34 **கம்யூனிஸ்ட்**—கட்சி எதிர்ப்புக் குழுவாகிய ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' வார இதழ்; *1918* ஏப்ரல் முதல் ஜூன் வரை மாஸ்கோவில் வெளிவந்தது.—*104*.

35 அதாவது, அ. ஃபி. கேரென்ஸ்கியின் தலைமையிலிருந்த முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் காலத்தில். —*105*.

36 அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்திற்கும் எதிராயிருந்த மென்ஷிவிக்குகளின் அடிப்படைக் கருத்து நிலைகளில் ஒன்றை வி. இ. லெனின் குறிப்பிடுகிருர். மென்ஷிவிக்குகள், ருஷ்யாவின் பொருளாதார மற்றும் கலாசாரப் பின்தங்கிய நிலையின் காரணமாக ஆட்சியைக் கைப்பற்றுவது ''அகாலமானது'' என்றும் சோஷலிசத்திற்குச் சாத்தியமான அளவு உற்பத்திச் சக்திகள் வளராதது போன்றும் கூறிஞர்கள்.—*111*.

37 **கூட்டில் அடைந்த மனிதன்** — ருஷ்ய எழுத்தாளர் அ.பா.சேகவின் (*1860*—*1904*) இதே பெயரைக் கொண்ட கதையில் அதிகாரியாக வரும் ஒரு பாத்திரம். இவரது உலகம் தனது அலுவலகக் கடமைகளோடு குறுகியது; இவர் சுயமாகச் சிந்திப்பதையும் உணர்வதையும் நிறுத்திவிட்டவர்; புதியன அனைத்தையும் கண்டு, அவரது அலுவலக வாழ்க்கையில் உறுதியாக நிலைநாட்டப்பட்டுள்ள நயத்தை மாற்றக் கூடிய எல்லாவற்றையும் கண்டு அஞ்சக் கூடியவர்.—*111*.

38 **ஸ்நாமியா த்ருதா** (''உழைப்புக் கொடி'')—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் பெத்ரோகிராத் கமிட்டியின் நாளேடு. இது *1917* ஆகஸ்ட் *23* (செப்டெம்பர் *5*) முதல் *1918* ஜூலை வரை வெளிவந்தது.—*113*.

39 மென்ஷிவிக் த்ஸெரெத்தேலி தொழிலாளர்கள், படையாளர்களது பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டியின் கூட்டத்தில், போல்ஷிவிக்குகளின் கோஷங்களின் கீழ் நடைபெற்ற பெத்ரோகிராத் தொழிலாளர்களின் சமாதான ஆர்பாட்டத்தைப் பற்றியப் பிரச்சினையின் விவாதத்தில், தொழிலாளர்களை ஆயுதக் களைப்புச் செய்வது பற்றி அச்சுறுத்தும் வகையில் பேசிஞர்.—*114*.

40 ருஷ்யக் கவிஞர் வசீலி ல்வோவிச் பூஷ்கினின் (1770—1830) பரிகாசப் பாடலிலிருந்து வி. இ. லெனின் மேற்கோள் காட்டுகிறார்.—117.

41 1861ஆம் ஆண்டு ருஷ்யாவில் பண்ணையடிமை உரிமை மாற்றப்பட்டது.—129.

42 **கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்**—உழைப்பாளிகள் உழைப்பின் பாலுள்ள தமது கம்யூனிச உறவு முறையைக் காட்டும் முகமாக வேலை நாளிலில்லாத நாட்களில் தாமாகவே முன்வந்து இலவசமாக வேலை செய்தல். முதல் கம்யூனிஸ்டு சுபோத்னிக் மாஸ்கோ-கஸான் ரயில்வே தொழிலாளர்களால் 1919ஆம் ஆண்டு மே 10ஆம் தேதி மாஸ்கோவில் நடத்தப்பட்டது.—133.

43 **பிராவ்தா** (''உண்மை'')—சட்ட பூர்வமான போல்ஷிவிக்குகளின் தினசரிப் பத்திரிகை; இதன் முதல் இதழ் 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் தேதி (மே 5) பீட்டர்ஸ்பர்கில் வெளிவந்தது. ''பிராவ்தா'' போலீசாரின் இடையறாக் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டது; ஜார் அரசாங்கத்தால் பன்முறை மூடப்பட்டது; ஆனால் மீண்டும் வேறு பெயர்களில் வெளிவந்தது. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு (1917) பின் பத்திரிகை தனது முந்தைய பெயரில் வெளிவரத் துவங்கியது.—134.

44 **கறுப்பு நூற்றுவர்** — புரட்சி இயக்கத்துடனான போராட்டத்திற்காக ஜார் போலீசால் அமைக்கப்பட்ட முடியாட்சி ஆதரவாளர் கும்பல். கறுப்பு நூற்றுவர்கள் புரட்சியாளர்களைக் கொன்றனர்; முற்போக்கு அறிவுஜீவிகளைத் தாக்கினார்கள்; யூத படுகொலைகளில் ஈடுபட்டனர்.—147.

45 காடேட்டுகள், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களைப் பற்றி குறிப்புகள் 5 மற்றும் 17 பார்க்க.—147.

46 **பெர்ன், மஞ்சள் அகிலம்** என்று வி.இ. லெனின், 1914ஆம் ஆண்டு இயங்குவதை நிறுத்தி, 1919ஆம் ஆண்டு பிப்ரவரி பெர்னில் நடைபெற்ற சமூக-தேசிய இனவெறி, மத்தியவாதக் கட்சிகளின் மாநாட்டில் புனரமைக்கப்பட்ட இரண்டாம் அகிலத்தை அழைத்தார்.—149.

47 **சதோவாப் போர்** 1866 ஜூலை 3ல் நடைபெற்றது. ஆஸ்திரிய-பிரஷ்ய யுத்தத்தின் முடிவை நிர்ணயித்த போராகும் இது. அப்போரில் பிரஷ்யா முழு வெற்றி பெற்று ஆஸ்திரியாவை முறியடித்தது.—155.

48 இங்கு கா. மார்க்சின் ''மூலதனம்'' நூலில் 8ஆம் அத்தி

யாயம் 7ஆம் பத்தியை வி. இ. லெனின் மேற்கோள் காட்டுகிறார்.—161.

49 குறிப்பு 22 பார்க்க.—169.

50 **நூறு கோடி ரூபிள் நிதி** 1918 நவம்பர் 2ந் தேதிய மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் அரசாணைப்படி நிறுவப்பட்டது. ''விவசாயத்தை மேம்படுத்தி வளர்ப்பதும் அதனை ஆகத் துரிதமாக சோஷலிஸ்டு வழிகளில் புனரமைப்பதுமே இதன் நோக்கம்.'' இந்த நிதியில் இருந்து உதவி நிதிகளும் கடன்களும் விவசாயக் கம்யூன்கள், விவசாயிகளின் உழைப்பு இணைப்புகள், கிராமிய சங்கங்கள் மற்றும் தனி நபர் சாகுபடியில் இருந்து கூட்டுறவுப் பண்ணைகளுக்குச் சென்ற விவசாயிகளின் குழுக்கள் ஆகியவற்றுக்கு வழங்கப் பட்டன.—172.

51 ''நிலம் சம்பந்தப்பட்டதான சோஷலிஸ்டு நடவடிக்கைகள் மற்றும் சோஷலிஸ்டு சாகுபடி முறைக்கு மாறிச் செல்வதற்கான நடவடிக்கைகள் மீதான நிரந்தரச் சட்டம்'' 1919 பிப்ரவரியில் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் ஏற்கப்பட்டது.—172.

52 1914—1918ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற முதல் உலகப் போரும் 1918—1920ஆம் ஆண்டுகளில் ருஷ்யாவில் நடைபெற்ற உள்நாட்டு போரும் இங்கு குறிப்பிடப்படு கின்றன.—181.

53 **எகனமீச்செஸ்கயா ழீஸ்ன்** (''பொருளாதார வாழ்க்கை'') எனும் பத்திரிகை 1918 முதல் 1937 வரை மாஸ்கோவில் வெளிவந்தது.—187.

54 **தீத் தீத்திச்**—அ. நி. ஒஸ்திரோவ்ஸ்கியின் (1823—1886) ''அயலார் தொல்லையைத் தனதாகக் கொள்ளுதல்'' எனும் நகைச்சுவை நாடகத்தில் வரும் முரட்டுப் பிடிவாத வியாபாரி. இந்தப் பெயர் இப்போது இவ்வியல்பைக் குறிக்கும் பொதுப் பெயராகி விட்டது.—199.

55 1917 ஆண்டு அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் நான் காம் ஆண்டுவிழா குறிப்பிடப்படுகிறது.—205.

56 **இரண்டரையாவது அகிலம்** 1921 பிப்ரவரியில் வியென்னா வில் கூடிய மாநாட்டில் அமைக்கப்பட்டது. இதன் தலைவர்கள் இரண்டாவது அகிலத்தைக் கண்டித்து விமர் சனம் செய்தனர், ஆனால் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் எல்லாப் பிரதான பிரச்சினைகளிலும் சந்தர்ப்பவாத, பிளவுபடுத்தும் கொள்கையைப் பின்பற்றினர். 1923 மே

மாதத்தில் இரண்டாவது இரண்டரையாவது அகிலங்கள் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம் என்பதான ஒரே நிறுவனமாக இணைந்தன.—206.

57 1875ஆம் ஆண்டு மார்ச் 18—28 தேதிகளிலும் 1884ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதியிலும் பி. எங்கெல்ஸ் ஔ. பெபெலுக்கு எழுதிய கடிதங்கள்.—206.

58 பி. எங்கெல்ஸ், ''வெளியேறியோர் இலக்கியம். கம்யூனின் பிளான்கிஸ்டுக் குடிபெயர்ந்தோரின் இரண்டாவது வேலை திட்டத்தைப்'' பார்க்க.—208.

59 குறிப்பு 15 பார்க்க.—209.

60 **வெர்சேய் சமாதான உடன்படிக்கை** — 1914-18ஆம் ஆண்டுகளது முதல் உலகப் போரை முடிவுறச் செய்த இந்த ஒப்பந்தம் வெர்சேய் நகரில் 1919 ஜூன் 28ல் ஒரு புறம் அமெரிக்க ஐக்கிய நாடுகள், கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகியவற்றாலும் இவற்றின் நேச நாடுகளாலும், மறு புறத்தில் ஜெர்மனியாலும் கையெழுத்திடப்பட்டது.—211.

61 **புதிய பொருளாதாரக் கொள்கை** — முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய கட்டத்தின் போது பாட்டாளி வர்க்க அரசு கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கை. 1918—1920ஆம் ஆண்டுகளிலான அந்நியத் தலையீடும் உள்நாட்டுப் போரும் இந்தக் கொள்கை நடைமுறைக்கு வர முடியாதபடி தடுத்தன. அந்நியத் தலையீடும் உள்நாட்டுப் போரும் நடைபெற்ற காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட ''போர்க் காலக் கம்யூனிசம்'' என்பதான கொள்கையிலிருந்து வேறுபடுத்துவதற்காக இது ''புதிய'' கொள்கை என்றழைக்கப்பட்டது. போர்க் கால நிலைமைகளின் நிர்ப்பந்தம் காரணமாய் அவசியமாகியிருந்த ''போர்க் காலக் கம்யூனிசக்'' கொள்கையின் தனி இயல்புகள் என்னவெனில், பொருட்களின் உற்பத்தியையும் வினியோகத்தையும் அது வெகுவாய் மையப்படுத்தியிருந்தது, வாணிபச் சுதந்திரத்துக்குத் தடை விதித்திருந்தது, விவசாயிகள் உபரியாகத் தம்மிடமிருந்த விளைபொருட்கள் யாவற்றையும் அரசிடம் தந்துவிட வேண்டுமென விதித்தது (உபரி தானிய சுவீகரிப்பு).

உபரி தானிய சுவீகரிப்பு கைவிடப்பட்டுப் பண்ட வடிவிலான வரி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. விவசாயிகள் தம்மிடமிருந்த உபரி விளைபொருட்களைத் தடையின்றிப் பட்டுவாடா செய்வதற்கும் சந்தையில் விற்

பதற்கும் அவசியமான செய்பொருட்களைச் சந்தையின் மூலம் பெறுவதற்கும் இவ்விதம் வகை செய்யப்பட்டது.
புதிய பொருளாதாரக் கொள்கை குறிப்பிட்ட சிறிது காலத்துக்கு, குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டு முதலாளித்துவக் கூறுகள் இருப்பதற்கு அனுமதித்தது. ஆனால் அதே போது கேந்திரப் பொருளாதார நிலைகள் பாட்டாளி வர்க்க அரசின் கையிலேதான் இருந்தன. நாட்டின் உற்பத்திச் சக்திகளை வளரச் செய்வதும் விவசாயத்தை ஓங்கச் செய்வதும் புதிய பொருளாதாரக் கொள்கையின் நோக்கம்.—*218.*

62 முதலாளித்துவ அரசையும் முதலாளித்துவ சமூக-பொருளாதார உறவுகளையும் அப்படியே வைத்து மக்களைக் கூட்டுறவில் ஈடுபடுத்தும் வழியின் மூலமாக மட்டுமே சோஷலிசத்தை வந்தடையலாம் என்று தவருகக் கருதிய சோஷலிஸ்டு-கற்பனுவாதிகளைப் பற்றி இங்கு பேசப்படுகிறது.—*218.*

63 குறிப்பு 28 பார்க்க.—*224.*

# பெயர்க் குறிப்பகராதி

அவ்க்சேன்தியெவ், நிக்கலாய் திமீத்ரியெவிச் *(1878—1943)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் 1917 ஜூலை—ஆகஸ்டில் உள்துறை அமைச்சராக இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சிக் கலகங்களை ஏற்பாடு செய்தார்; வெள்ளை வெளியேறியானார்.—10.*

அ. மூ.—*134, 139.*

இசூவ், இயோசிஃப் அந்திரேயெவிச் *(1878—1920)—சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். முதல் உலகப் போரின் போது பாதுகாப்புவாதி. 1917ஆம் ஆண்டு மென்ஷிவிக்குகளின் மாஸ்கோ கமிட்டி உறுப்பினர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் உழைப்பைப் பற்றியக் காட்சிக் கூடத்தில் பணியாற்றினார்.—113, 114, 115.*

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1895)—விஞ்ஞானக் கம்யூனிசத்தின் ஆசான்களில் ஒருவர்; சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர், ஆசிரியர்.—85, 206, 208.*

ஒசின்ஸ்கி (ஒபோலென்ஸ்கி), வலெர்யான் வலெர்யானவிச் *(1887—1938) — பொருளாதார நிபுணர், இலக்கிய கர்த்தா; 1917—1918ஆம் ஆண்டுகளில் தேசியப் பொருளாதார உயர் கவுன்சிலின் தலைவர். பிரேஸ்த் பேச்சுவார்த்தைகள் காலத்தில் ''இடதுசாரிக் கம்யூனிஸ்ட்''. 1920—1921ஆம் ஆண்டுகளில் ''ஜனநாயக மத்தியத்துவம்'' என்ற சந்தர்ப்பவாதக் குழுவில் தீவிரப் பங்கேற்றார்; 1923ஆம் ஆண்டில் திரோத்ஸ்கி எதிர்க் கட்சியுடன் சேர்ந்தார்.—117.*

ஓவன் [Owen], ராபர்ட் *(1771—1858)—மாபெரும் ஆங்கிலேயக் கற்பனாவாதச் சோஷலிஸ்ட்.—226.*

**ஃபோஷ் [Foch], ஃபெர்டினண்டு** *(1851—1929)—பிரெஞ்சு ராணுவ இயலாளர், மார்ஷல். முதல் உலகப் போரின் போது பிரெஞ்சு ராணுவத் தலைமையகத் தலைவர், ஆன்டான்டு ஆயுதப் படைகளின் பிரதம தளபதி. 1918—1920ல் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீட்டைத் தீவிரமாக ஏற்பாடு செய்தவருள் ஒருவர்.—155.*

**கரேலின், விளதீமிர் அலெக்சாந்தரவிச்** *(1891—1938)—இடதுசாரிச் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் தலைவர்களில் ஒருவர். ஜெர்மனியுடனை பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையை எதிர்த்தவர். 1918ஆம் ஆண்டு (ஜூலையில்) சோவியத் ஆட்சிக்கு எதிராக இடதுசாரிச் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் கலகத்தை ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர். அயல் நாட்டிற்குக் குடிபெயர்ந்த வெண்படையினர்.—103, 113.*

**கர்னீலவ், லாவ்ர் கியோர்கியெவிச்** *(1870—1918)—ஜார் அரசின் ஜெனரல், முடியரசுவாதி. 1917ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற எதிர்ப்புரட்சிச் சதியைத் தலைமை தாங்கி நடத்தினர்; பெத்ரோகிராதைக் கைப்பற்றி போல்ஷிவிக்குகளின் கட்சியைச் சிதறடித்து சோவியத்துக்களை அழித்து நாட்டில் ராணுவச் சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவது இதன் நோக்கமாக இருந்தது. போல்ஷிவிக்குகளின் தலைமையில் தொழிலாளர்களும் போர் வீரர்களும் கலகத்தை அடக்கினர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் கர்னீலவ் வெண்படையாகிய ''தானகவே அமைந்த ராணுவத்திற்குத்'' தலைமை தாங்கினர்.—56, 60, 62, 67, 70, 73, 80, 83.*

**கல்ச்சாக், அலெக்சாந்தர் வசீலியெவிச்** *(1873—1920)—ஜார் காலத்திய கடற்படைத் தலைவர், முடியரசுவாதி. 1918ல் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்சின் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடன் ருஷ்யாவின் தலைமை அதிபதியாகத் தம்மைப் பிரகடனம் செய்து கொண்டு உரால், சைபீரியா மற்றும் தொலை கிழக்குப் பகுதிகளில் ராணுவ முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவச் சர்வாதிகாரத்திற்கு தலைமை தாங்கினர். செஞ்சேனையின் முன்னேற்றமும் புரட்சிகர கொரில்லா இயக்கமும் கல்ச்சாக்கின் எதிர்ப்புரட்சிக்கு முடிவு கட்டின.—133, 134, 135, 138, 139, 216.*

**கவெனியாக் [Cavaignac], லுயீ எழேன்** *(1802—1857)—பிரெஞ்சு ஜெனரல், பிற்போக்கு அரசியல் பிரமுகர்;*

1848 மே மாதம் முதல் ராணுவ அமைச்சர். 1848 ஜூனில் பாரிஸ் தொழிலாளர் எழுச்சியை மிகக் கொடூரமாக நசுக்கியவர்.—70, 99.

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் (1854—1938)—ஜெர்மானிய சமூக-ஜனநாயகம் மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவர்கள், தத்துவகர்த்தாக்களில் ஒருவர்; மத்தியத்துவச் சித்தாந்தவாதி, முதல் உலகப் போரின் துவக்கத்திலிருந்து மார்க்சியத்தை விட்டு கட்சிமாறியவர்; சோவியத் ருஷ்யாவின் விரோதி.—152, 161.

கிரஸ்னோவ், பியோத்தர் நிக்கலாயெவிச் (1869—1947)—ஜார் ராணுவ ஜெனரல். 1917ஆம் ஆண்டு பெத்ரோகிராதில் புரட்சியை ஆயுத பலத்தைக் கொண்டு அடக்க முயன்றார்; முறியடிக்கப்பட்டார். 1918ஆம் ஆண்டு தோன் கசாக்குகளை சோவியத் குடியரசிற்கு எதிராகக் கலகம் செய்யும்படி தூண்டி விட்டார்; 1918ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் செஞ்சேனையால் த்சரீத்சின் (வோல்காகிராத்) அருகே துரத்தியடிக்கப்பட்டார். அயல் நாட்டிற்குக் குடிபெயர்ந்த வெண்படையினர்.—44.

கிஷ்கின், நிக்கலாய் மிஹாய்லவிச் (1864—1930)—காடேட்டுகளது கட்சியின் தலைவர்களில் ஒருவர். இடைக்கால முதலாளித்துவ அரசாங்கத்தின் உறுப்பினர்.—36.

கெகெச்கோரி, யெவ்கேனி பெத்ரோவிச் (1881—1954)—மென்ஷிவிக். 1918ஆம் ஆண்டு ஜார்ஜியாவின் எதிர்ப்புரட்சி மென்ஷிவிக்குகளின் அரசாங்கத்தில் அயல் விவகாரத் துறை அமைச்சர். வெண்படையைச் சேர்ந்தவர், அயல் நாட்டிற்குக் குடிபெயர்ந்தார்.—44, 45, 73, 80, 83.

கே (கோல்பெர்க்), அலெக்சாந்தர் (1879—1919)—ருஷ்ய அராஜகவாதி. முதல் உலகப் போரின் போது சர்வதேசியவாதியாக இருந்து அராஜகவாதிகளான தேசிய இனவெறியர்களுக்கு எதிராகப் போரிட்டார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியின் ஆதரவாளர், அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர்.—103, 113.

கேரென்ஸ்கி, அலெக்சாந்தர் ஃபியோதரவிச் (1881—1970)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப்

பின் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் அமைச்சராகவும் பிற்பாடு அமைச்சர்-அதிபராகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டார்; 1918ல் வெளி நாடு போய் விட்டார்.—*36, 38, 39, 44, 60, 62, 67, 80, 105, 112, 114.*

**கோகல், நிக்கலாய் வசீலியெவிச்** *(1809—1852)*—மாபெரும் ருஷ்ய எழுத்தாளர்.—*20.*

**கோட்ஸ், அப்ராம் ரஃப்பயீலவிச்** *(1882—1940)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியைத் தொடர்ந்து சோவியத் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டார்.—*44, 67, 73, 80, 83.*

**க்ரீட்ஸ்மன், லேவ் நதானவிச்** *(1890—1938)*—பொருளாதார நிபுணர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பொருளாதாரத் துறையில் தலைமைப் பதவியில் இருந்தார்.—*187.*

**சாவின்கவ், பரீஸ் விக்தரவிச்** *(1879—1925)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சித் தலைவர்களில் ஒருவர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு உதவி ராணுவ அமைச்சர், பிறகு பெத்ரோகிராதின் ராணுவ கவர்னர்-ஜெனரல். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சிக் கலகங்களை ஏற்பாடு செய்தார்.—*44, 45, 73.*

**செரெதா, செமியோன் பஃப்னூதியெவிச்** *(1871—1933)*—கம்யூனிஸ்ட். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் சோவியத் அரசிலும் பொருளாதாரத் துறைகளிலும் பதவிகளில் இருந்தார். 1918—1921ஆம் ஆண்டுகளில் ரு. சோ. சோ. கூ. கு.இன் விவசாயத் துறை மக்கள் கமிசார்; பின்னர் அரசு திட்டக் கமிஷன், தேசியப் பொருளாதார உயர் கவுன்சிலின் தலைமைக் குழு ஆகியவற்றில் உறுப்பினர்; 1930ஆம் ஆண்டிலிருந்து ரு. சோ. சோ. கூ. கு.இன் அரசு திட்டக் கமிஷனின் துணைத் தலைவர்.—*180.*

**சொர்னிஷேவ்ஸ்கி, நிக்கலாய் கவ்ரீலவிச்** *(1828—1889)*—ருஷ்ய புரட்சிகர ஜனநாயகவாதி, பொருள்முதல்வாதத் தத்துவவியலாளர், எழுத்தாளர், இலக்கிய விமர்சகர், ருஷ்யாவின் 1860ஆம் ஆண்டுகளின் புரட்சிகர-ஜனநாயக இயக்கத்தின் தலைவர்.—*88.*

**செர்னென்கோவ், ப. நி.** *(பிறப்பு: 1883)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். 1919ஆம் ஆண்டு "மக்கள்" எனும் குழுவில் இடம் பெற்றிருந்தார்; இக்குழு சோவியத் ஆட்சியுடனை ஆயுதப் போராட்டத்தில் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் கலந்து கொள்வதற்கு எதிராகப் போரிட்டது.—170.

**செர்னேவ், விக்தர் மிஹாய்லவிச்** *(1876—1952)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவருள், தத்துவாளருள் ஒருவர். 1917 பிப்ரவரி புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் விவசாயத் துறை அமைச்சராக இருந்தார். நிலப்பிரபுக்களின் நிலங்களை எடுத்துக் கொண்ட விவசாயிகளை எதிர்த்து மூர்க்கமான அடக்கு முறைக் கொள்கையை அமுல் நடத்திஞர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் எதிர்ப்பு கலகங்களை ஏற்பாடு செய்தார். 1920க்குப் பிறகு நாடுகடந்த வெண்காவலர்.—36, 70, 112.

**டான், ஃபியோதர் இவானவிச்** *(1871—1947)*—மென்ஷிவிசத்தின் தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டார். 1922ஆம் ஆண்டு எதிர்ப்புரட்சி நடவடிக்கைக்காக நாட்டிற்கு வெளியே அனுப்பப்பட்டார்.—10, 114.

**டெய்லர் [Taylor], பிரெடெரிக் வின்ஸ்லோ** *(1856—1915)*—அமெரிக்க பொறியியலர், "டெய்லரிசம்" எனும் பூர்ஷ்வா உழைப்பு முறையை உருவாக்கியவர்.—62, 63, 114.

**தப்ரலியூபவ், நிக்கலாய் அலெக்சாந்தரவிச்** *(1836—1861)*—ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, இலக்கிய விமர்சகர், தத்துவஞானி, பொருள்முதல்வாதி.—88.

**தியாச்சென்கோ, அந்திரேய் பாவ்லவிச்** *(1875—1952)*—1917 முதல் போல்ஷிவிக்குகளின் கட்சி உறுப்பினர். 1919 மாஸ்கோ-கஸான் ரயில் பாதை அமைப்பில் டாக்டரின் உதவியாளராக இருந்தார்.—142.

**துர்கேனெவ், இவான் செர்கேயெவிச்** *(1818—1883)*—ருஷ்ய எழுத்தாளர்.—88.

**தூத்தவ், அலெக்சாந்தர் இலியீச்** *(1864—1921)*—ஜாரிஸ்டு ராணுவத் தலைமையக கர்னல், ஒரென்புர்க் கசாக்குகளது படைகளின் தலைவர். 1917—1920ஆம் ஆண்டுகளில்

உராலில் சோவியத் ஆட்சிக்கு எதிராக ஒருசில எதிர்ப் புரட்சிப் போராட்டங்களை ஏற்பாடு செய்தவர்.—*44, 80, 83.*

தெனீக்கின், அன்தோன் இவானவிச் *(1872—1947)*—ஜார் ராணுவ ஜெனரல். *1919*ஆம் ஆண்டு ஆங்கிலேய, அமெரிக்க, பிரெஞ்சு ஏகாதிபத்தியாளர்களின் உதவியுடன் ருஷ்யாவின் தெற்கிலும் உக்ரேனிலும் பூர்ஷ்வா-நிலச்சுவாந்தர் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தினர். *1919* ஆம் ஆண்டு கோடையிலும் இலையுதிர் காலத்திலும் மாஸ்கோவைத் தாக்க முற்பட்டார். *1920*ஆம் ஆண்டின் துவக்கத்தில் செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டார்.—*133, 216.*

த்ஸெரெத்தேலி, இராக்லி கியோர்கியெவிச் *(1882—1959)*—மென்ஷிவிசத்தின் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது மத்தியவாதி. *1917*ஆம் ஆண்டு பிப்ரவரி புரட்சிக்குப் பின் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் தபால் மற்றும் தந்தித் துறை அமைச்சராகவும் பின் உள்நாட்டு அமைச்சராகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் ஜார்ஜியாவிலிருந்த எதிர்ப்புரட்சி மென்ஷிவிக்குகளின் அரசாங்கத் தலைவர்களில் ஒருவர். அயல் நாட்டிற்குக் குடிபெயர்ந்த வெண்படையினன்.—*36, 70, 114.*

ந. ர.—*139.*

நெப்போலியன் முதலாவது (போனப்பார்ட்) *(1769—1821)*—பிரான்சின் பேரரசர் *(1804—1814* மற்றும் *1815).* —*99.*

நெப்போலியன் மூன்றுவது (லுயீ போனப்பார்ட்) *(1808—1873)*—பிரான்சின் பேரரசர் *(1852—1870).*—*99.*

பக்ரோவ்ஸ்கி, மிஹயீல் நிக்கலாயெவிச் *(1868—1932)*—*1905*ஆம் ஆண்டிலிருந்து ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர், போல்ஷிவிக், பிரபல வரலாற்று அறிஞர், *1929*ஆம் ஆண்டிலிருந்து விஞ்ஞானப் பேரவையின் உறுப்பினர். *1918*ஆம் ஆண்டு ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' குழுவுடன் சேர்ந்திருந்தார்.—*113.*

பபோவ், பாவெல் இலியீச் *(1872—1950)*—கம்யூனிஸ்ட். *1920—1921*ஆம் ஆண்டுகளில் மத்தியப் புள்ளிவிவர போர்டின் நிர்வாகியாக இருந்தார்.—*204.*

**பல்லொத்** [Ballod], **கார்ல்** *(1864—1931)—ஜெர்மானிய பொருளாதார நிபுணர், ''எதிர்கால அரசு'' என்ற நூலின் ஆசிரியர்.—192.*

**பியோத்தர் முதலாவது** *(1672—1725)—ருஷ்ய மன்னர் (1682—1725), முதலாவது அனைத்து ருஷ்யப் பேரரசர். —103.*

**பில்சூட்ஸ்கி** [Pilsudski], **யோசப்** *(1867—1935) — பிற்போக்கு போலந்து அரசுப் பிரமுகர். 1918—1922ஆம் ஆண்டுகளில் போலந்து பூர்ஷ்வா-நிலச்சுவாந்தர் அரசின் ''தலைமையதிகாரி'' (சர்வாதிகாரி); புரட்சி இயக்கத்தை ஈவிரக்கமின்றி ஒடுக்கினார். 1920ஆம் ஆண்டு இங்கிலாந்து, பிரெஞ்சு அரசாங்கங்களின் உதவியோடு சோவியத் ருஷ்யாவிற்கு எதிராகப் போர் தொடுத்தார்; இதில் போலந்து ராணுவம் தோல்வியுற்றது.—216.*

**புஹாரின், நிக்கலாய் இவானவிச்** *(1888—1938)—1906லிருந்து ரு. ச. ஜ. தொ. கட்சியின் உறுப்பினர். அரசு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், தேசங்களின் சுயநிர்ணய உரிமை ஆகிய பிரச்சினைகளிலும் பிற பிரச்சினைகளிலும் லெனினியத்திற்கு எதிரான நிலையில் நின்றார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு 1918ல் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளது'' கட்சி எதிர்ப்புக் கோஷ்டிக்குத் தலைமை தாங்கினார். 1928ல் கட்சியில் வலதுசாரி எதிர்த்தரப்புக்குத் தலைமை தாங்கினார். 1937ல் கட்சிக்குப் பகைமையான நடவடிக்கைகளுக்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—106, 107, 110, 113.*

**பெபெல்** [Bebel], **ஒளகுஸ்ட்** *(1840—1913)—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாம் அகிலம் ஆகியவற்றை ஸ்தாபித்தவர்களில் ஒருவர்; அதன் பிரபலப் பிரமுகர். ஜெர்மானிய தொழிலாளர் இயக்கத்தில் திருத்தல்வாதம், சீர்திருத்தவாதம் ஆகியவற்றிற்கு எதிராகப் போரிட்டார்.—206.*

**பெலஞூசவ் (பெலேவ்ஸ்கி), அலெக்சேய் ஸ்தனிஸ்லாவவிச்** *(1859—1919) — பத்திரிகையாசிரியர், அரசியல் பிரமுகர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியின் விரோதி.—68.*

**பெலீன்ஸ்கி, விசரியோன் கிரிகோரியெவிச்** *(1811—1848)—ருஷ்ய புரட்சிகர ஜனநாயகவாதி, இலக்கிய விமர்சகர், பொருள்முதல்வாதத் தத்துவவியலாளர்.—20.*

பொகயேவ்ஸ்கி, மித்ரஃபான் பெத்ரோவிச் *(1881—1918)— 1917—1918ஆம் ஆண்டுகளில் தோன் பிரதேசத்தில் நடைபெற்ற எதிர்ப்புரட்சியின் தலைவர்களில் ஒருவர். 1918ஆம் ஆண்டு மார்ச் மாதத் துவக்கத்தில் சோவியத் ஆட்சியால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் முடிவின்படிச் சுட்டுக் கொல்லப்பட்டார்.—36, 44, 83, 112.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)—விஞ்ஞானக் கம்யூனிசத்தின் ஆசான்களில் ஒருவர்; சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர், ஆசிரியர்.—28, 70, 72, 107, 110, 161, 215.*

மார்த்தவ் (ஸெதர்பாவும்,) யூலி ஓசிப்பவிச் *(1873—1923)— மென்ஷிவிக்குத் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது மத்தியவாத நிலையை அனுசரித்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியதிகாரத்தின் பகிரங்க விரோதிகளுடன் சேர்ந்து கொண்டார். 1920ல் நாட்டை விட்டு ஓடினார்.—67, 68, 70, 87, 152.*

மில்யூத்தின், விளதீமிர் பாவ்லவிச் *(1884—1938)—1910ஆம் ஆண்டிலிருந்து போல்ஷிவிக்குகளின் கட்சி உறுப்பினர். 1918ஆம் ஆண்டிலிருந்து பொருளாதாரத் துறைகளிலும் சோவியத் அரசிலும் பொறுப்புள்ள பதவிகளில் இருந்தார்: தேசியப் பொருளாதார உயர் கவுன்சிலின் துணைத் தலைவர், சோவியத் யூனியனின் மத்தியப் புள்ளி விவர போர்டின் நிர்வாகி, சோவியத் யூனியனின் அரசு திட்டக் கமிஷனின் துணைத் தலைவர்.—187.*

யாக்கபி [Jacoby], இயோஹன் *(1805—1877)—ஜெர்மன் பத்திரிகையாளர், அரசியல் பிரமுகர், பூர்ஷ்வா ஜனநாயகவாதி. 1872ஆம் ஆண்டு சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தார்; அதிலிருந்து 1874ஆம் ஆண்டு ஜெர்மன் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.—155.*

யுதேனிச், நிக்கலாய் நிக்கலாயெவிச் *(1862—1933)—ஜார் ராணுவ ஜெனரல். சோவியத் ஆட்சி நிலைநாட்டப்பட்டதும் எதிர்ப்புரட்சியை ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர். 1919ஆம் ஆண்டு எதிர்ப்புரட்சிப் படைகளின் தலைமையில் இரு முறை பெத்ரோகிராதைக் கைப்பற்ற முயன்றார், ஆனால் செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டார். அயல் நாட்டிற்குக் குடிபெயர்ந்த வெண்படையினன்.—216.*

**லாரின் (லுர்யே), மிஹயீல் அலெக்சாந்தரவிச்** *(1882—1932)—சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். 1907—1910ல் கலைப்புவாதி. 1917 ஆகஸ்டில் போல்ஷிவிக்குகளின் கட்சியில் சேர்ந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் சோவியத் அரசிலும் பொருளாதாரத் துறைகளிலும் பணியாற்றினர்.—187.*

**லிபெர் (கோல்ட்மன்), மிஹயீல் இசாக்கவிச்** *(1880—1937)—புந்த் தலைவருள் ஒருவர். முதல் உலகப் போரின் போது சமூக-தேசிய இனவெறியர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு தொழிலாளர், படையாளரின் பிரதிநிதிகளது பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினராயும் மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைமைக் குழு உறுப்பினராயும் இருந்தார். அக்டோபர் புரட்சியின் பால் பகைமை காட்டினர். பிறகு பொருளாதாரப் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.—114.*

**லெனின், விளதீமிர் இலியீச்** *(1870—1924)—106.*

**விராங்கெல், பியோத்தர் நிக்கலாயெவிச்** *(1878—1928)—ஜாரிஸ்டு ஜெனரல். 1920 ஏப்ரலில் இருந்து நவம்பர் வரை ''தென் ருஷ்யாவின் படைகளது'' தலைமைத் தளபதியாக இருந்தார். இந்தப் படைகள் செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டதும் நாட்டை விட்டு ஓடினர்.—216.*

**ஷெய்டெமன்** [Scheidemann], **ஃபிலீப்** *(1865—1939)—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் கடைகோடியான வலதுசாரிப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். 1919 பிப்ரவரி—ஜூன் கட்டத்தில் ஜெர்மன் முதலாளித்துவ அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கினர்; 1918—1921ல் ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தை எதிர்த்து மூர்க்கமான அடக்கு முறையை ஏற்பாடு செய்தவருள் ஒருவர்.—87.*

**ஷேர், வசீலி விளதீமிரவிச்** *(1884—1940)—மென்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பொருளாதாரத் துறையில் பணி புரிந்தார்.—170.*

**ஹிண்டன்பர்க்** [Hindenburg], **பாவுல்** *(1847—1934)—ஜெர்மன் ஜெனரல், முடியரசுவாதி. 1916—1917ஆம் ஆண்டுகளில் ஜெர்மன் ராணுவத்தின் தலைமைத் தளபதியாக இருந்தார். 1925 முதல் 1933 வரை ஜெர்மனியின் ஜனதிபதியாக இருந்தார். 1933ஆம் ஆண்டு அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பை ஹிட்லருக்கு அளித்தார்; இதன் மூலம் ஆட்சியதிகாரம் முழுவதும் பாசிஸ்டுகளின் கைகளுக்கு அதிகார பூர்வமாக அளிக்கப்பட்டது.—155.*

## வாசக நேயர்களுக்கு

*இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும்* முன்னேற்றப் பதிப்பகம் *மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.*

*தங்கள் கடிதங்களை* "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" *என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.*

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

*41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.*

ஷோ-ரூம்

*136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.*

கிளைகள்

*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.*
*87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.*
*சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.*
*செர்ரி ரோடு, சேலம்—636001.*

விற்பனை நிலையங்கள்

*3—22—75—D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன்.*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.*

В. И. Ленин

ВОПРОСЫ СОЦИАЛИСТИЧЕСКОЙ ОРГАНИЗАЦИИ
НАРОДНОГО ХОЗЯЙСТВА

*На тамильском языке*

**V. I. Lenin**

QUESTIONS OF THE SOCIALIST ORGANIZATION
OF THE ECONOMY

*in Tamil*